In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளியீடு எண் 245.

அத்வைதம்

திருவாவடுதுறை ஆதீனம்
1969

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

CSS

வெளியீடு எண் 245.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

அத்வைதம்

இஃது
திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
வெளியிடப்பெற்றது

T. R. NATARAJA IYER MEMORIAL LIBRARY & PUBLICATIONS
Curators:
Kavingar Trilokasitaram &
T. N. Ramachandra
Date ... 1825 ...
14-A SELVAM NAGAR.
THANJAVUR.

திருவாவடுதுறை ஆதீனம்
1969

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்

முன்னுரை

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

'அத்வைதம்' என்ற ஒரு சொல்லின் பொருளாராய்ச்சி இந்நூல். இதன் முற்பகுதி அடியேன் நெல்லையில் ஆசிரியனுயிருந்து நடத்திய 'சமயசாதனம்' என்னும் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. அந்தச் சொல்லின் மெய்ப்பொருள் இதுவென விளக்கியது ஸ்ரீ மெய்கண்ட சந்தானமே. ஞானராஜதானி எனப் பெரியோர் நாளிது வரைப் போற்றிப் புகழ்ந்து வருகின்ற திருவாவடுதுறை ஆதீனமே அம்மெய்கண்ட பரம்பரை. அங்கே உபதேசங் கேட்டுத் திருவருள் வசத்தராய் விளங்கியவர்கள் ஸ்ரீமத் சிவஞானசுவாமிகள். அவர்களே சிவஞானபோத திராவிட மஹாபாஷ்ய கர்த்தராய்த் தமிழில் மஹாபாஷ்யம் இல்லாத குறையை நீக்கியவர்கள். அதனை மறந்து திரியுஞ் சைவத் தமிழன் செய்ந்நன்றி கொன்றவனேயாவன்.

அந்த மஹாபாஷ்யத்தின் அடிச்சுவடு பற்றி 'அத்வைதம்' என்ற சொல்லின் மெய்ப்பொருள் ஆராய்ச்சியை அடியேன் தொடங்கிச் சிறிது விரிந்த நூலாகப் பூர்த்தி செய்தேன். சைவ சமயத்திற் பற்றுக்கொண்ட ஒவ்வொரு தமிழனும் அச்சொற்பொருளை அறிந்திருக்க வேண்டாமா? அதிலும் ஒப்புநோக்கு முறையில் அறிந்திருக்க வேண்டுவது அவசியம். அதுவே சத்தி பதிந்த சிவபக்தியிற் செலுத்தும். சைவத்தமிழர் அத்தகைய பக்தசிரேட்டர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆவதே விரும்பத்தக்கது. இந்நூல் அவ்வகையில் பெரி தும் உபகரிக்கும்.

தருக்கமும் இலக்கணமும் இரண்டு கண்கள். 'எண் ணெழுத்திகழேல்' என்றது ஆத்திசூடி. எண் – தருக்கம். எழுத்து – இலக்கணம். கண் பொருளைக் காண்பதற்குக் கருவியாதல்போல இலக்கண தருக்கங்கள்பற்றிய அறிவே தத்துவ சாத்திரப்பொருளை அறியக் கருவியாய் உதவும். சிந்தனைக்கு இடங்கொடாத சுவடிகளைப் படித்து அவ்வள வில் மகிழ்ந்துபோவது கல்வி எனப்படாது.

இந்நூலைச் சாவதானமாகப் படித்தால் மனிதன் சிந்திப்பான், தெளிவு பெறுவான், அப்பொருளைப் பற்றி யொழுகுவான், பிறவிப் பயனைப் பெறுவான் என்பது அடியேன் உள்ளத்தில் உதித்த உறுதியான எண்ணம்.

சைவ சமயத்தவருக்குச் சிவபக்தியை ஊட்டவல்ல புத்தக வெளியீடுகள் துறைசை ஆதீனத்திலிருந்து நூற்றுக்கணக்காக வெளிவந்துகொண்டு இருக்கின்றன. இது அவ்வாதீன குருமணிகள் சைவசமூகத்துக்கு ஆற்றி வருகின்ற பேருபகாரம், பெரும் பாக்கியம். இப்போது துறைசையில் இருபத்திரண்டாவது மகாசந்நிதானமாய் எழுந்தருளி அருட்செங்கோலோச்சிவருகிற ஸ்ரீ – ல – ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகளும் அவ்வெளி யீட்டுபகாரத்தைத் தொடர்ந்து செய்து நாட்டைப் பண் படுத்திவருவதை யாவரும் அறிவர்.

சில மாதங்களுக்குமுன் குருமகா சந்நிதானமவர்கள் நெல்லை யாத்திரையின்போது கல்லிடைக்குறிச்சிக்கு விஜயம் செய்திருந்தார்கள். அங்குள்ள ஆதீன மடத்தில் அவர்களைத் தரிசிக்கச்சென்ற அடியார்கூட்டத்தில் அடியே னும் ஒருவனானேன். அவர்கள் அருட்கண்ணும் மலர் முகமும் இன்சொல்லும்கொண்டு அடியேனை அருகழைத்து அநுக்கிரகம் புரிந்தார்கள். 'இதுவரை அச்சான உன் புத்தகங்களில் சிலவற்றை யாம் பார்வையிட்டோம். வரம் பழியாதன அவை. நீ ஆக்கி அச்சிடாமல் வைத்திருக்கிற புத்தகங்களை நம்மாதீனத்தில் கொண்டுவந்துசேர். அவை ஆதீனத்தின்மூலம் அச்சிட்டுப் புத்தகமாக்கி வெளியிடப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'படும்' என்பது அவ்வநுக்கிரகங்களுள் ஒன்று. அடியேனும் அம்மகா சந்நிதானமவர்களின் திருவடிகளை வணங்கி மகிழ்ந்தேன்; இந்நூலை அவர்கள் திருமுன் கொண்டு வந்து சமர்ப்பித்தேன். அவர்கள் திருக்கரத்தால் இதனை வாங்கித் திருக்கண் சாத்தி இருபத்தொன்றுவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள் அவர்களின் இரண்டாவது ஆண்டு குருபூசை நினைவு மலராக அச்சிட்டு உபகரித்தருளினார்கள். அவர்களுடைய சரணாரவிந்தங்களை அடியேன் வணங்கிக்கொள்கிறேன்.

நுணங்குஞ் சமய நூற்றலைமை
    நுவலுந் தகைத்தாய் நந்திமுனி
கணங்கட் களித்த சிவஞான
    போதக் கதிநூ னெறிகாட்டிப்
பணங்கொ ளரவர் துறைசையில்வாழ்
    பஞ்சாக் கரதேசிகன் மலர்த்தாள்
வணங்க வழுத்த மனத்திருத்த
    வாய்த்த பிறப்பை வாழ்த்துவாம்.

ஊத்துமலை,
12—8—69

சித்தாந்த பண்டித பூஷணம்
ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை
துறைசை ஆதீன வித்துவான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஓதரிய வாய்மைச் சிவாகமங் கட்கெலாம்
உற்றபே ராகரமதாய்
ஓங்குதிரு வாவடு துறைப்பதியில் அற்புதத்
தொருவடிவு கொண்டருளியே
பேதமுறு சமயவா திகளுள மயக்கைப்
பெயர்க்கும்ரச குளிகையாகிப்
பிரியமுட னேவந் தடுத்தவர்க் கின்பப்
பெருங்கருணை மேருவாகி
ஆதரித் தடியேங்கள் உண்ணத் தெவிட்டாத
அமிர்தசா கரமாகியே
அழகுபொலி கலைசைச் சிதம்பரே சுரரடிக்
கதிமதுர கவிதைமாரி
மாதவர் வழுத்தப் பொழிந்தருளி யென்றுமவர்
மன்னிவளர் சந்நிதியிலோர்
மணிவிளக் கெனவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்குவாமே.

— தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணியமுனிவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எடுத்தாண்ட நூல்களின் குறிப்பு விளக்கம்

1	அ - வு	...	அத்வைதவுண்மை
2	மு - மை	...	முதற்குறளுண்மை அல்லது முதற்குறள்வாத நிராகரண சததூஷணி
3	வே - தீ	...	வேதாந்த தீபிகை
4	பஞ்ச	...	பஞ்சதசப்பிரகரணுபாச விளக்க சண்டமாருதம்
5	து - வா	...	துவிதாத்துவிதவாதம்
6	து - ம	...	துவிதசைவ மறுப்பு
7	மு - வா	...	முதற்குறள்வாதம்
8	பே - தி	...	பேதவாத திரஸ்காரம்
9	திரு - வி	...	திருமந்திர விசாரணை
10	ஜீ - பரி	...	ஜீவான்மாவின் பரிமாணம்
11	அ - வி	...	அத்வைத விளக்கம்
12	தி - தி - வி	...	திருக்கு திருசிய விவேகம்
13	ப் - வி	...	ப்ரம்ம வித்தியா (பத்திரிகை)
14	பா - இ	...	பாஷிய இருதயம்
15	வே - நி	...	வேதாந்த சங்கை நிவாரணம்
16	ச - சு	...	சதசுலோகி
17	ஆ - நா	...	ஆஸ்திக நாஸ்திகம்
18	மா - ச	...	மாயாவாத சைவ சண்டமாருதம்
19	நாநா	...	நாநாசீவ வாதக்கட்டளை
20	சிவ - பா	...	சிவஞான பாஷ்யம்
21	முண்	...	முண்டகோபநிஷத்
22	பரி	...	பரிபூரணுனந்தபோதம்
23	ஐத	...	ஐதரேயோபநிஷத்
24	பைங்	...	பைங்களோபநிஷத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25 ஆத் ... ஆத்மபோதோபநிஷத்
26 வரா ... வராஹோபநிஷத்
27 ஸர்வ ... ஸர்வஸாரோபநிஷத்
28 கடோ ... கடோபநிஷத்
29 மைத் ... மைத்ரேயோபநிஷத்
30 முக் ... முக்திகோபநிஷத்
31 திருமு ... திருமுறை
32 குறள் ... திருக்குறள்
33 கூர்ம ... கூர்மபுராணம்
34 கந்த ... கந்தபுராணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

		பக்க எண்
1.	நூல் செய்யக் காரணம்	1
2.	ந என்பதன் பொருள்	3
3.	அபாவம்	5
4.	சாதிருசியம்	,,
5.	த்வைதம்	,,
6.	கேவலாத்வைதம்	,,
7.	விசிஷ்டாத்வைதம்	6
8.	பிற அத்வைதங்கள்	,,
9.	பிரவர்த்தகர்	,,
10.	மெய்கண்டாரை அறியாமை	7
11.	சகசீவ பரங்கள்	,,
12.	(1) தாய் பிள்ளை	8
13.	(2) பால் தயிர்	9
14.	(3) மண் கடம்	10
15.	பிரபஞ்சத் தோற்றம்	11
16.	அத்தோற்றத்தின் பொருந்தாமை	13
17.	(4) பிம்பப் பிரதிபிம்பம்	14
18.	(5) கயிற்றரவு	21
19.	(6) கானல்நீர்	41
20.	சத்தைகள்	44
21.	(7) கனவுலகு	46
22.	சீவன்	78
23.	நான்	81
24.	மஹாவாக்கியம்	86
25.	சமானுதிகரணம்	89
26.	ஆகாயம்	90
27.	விட்டுவிடாத இலக்கணை	92
28.	முத்திநிலை	93
29.	சங்கரமுனிவர் மதம்	99
30.	சாதிருசியார்த்தம்	100
31.	அநிர்வசனீயம்	104
32.	நிர்க்குணம்	110
33.	திரிமதஸ்தர்	115

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

34.	சம்பந்தம்	116
35.	அபேதம், ஒன்ருதல், உடலுயிர்	117
36.	பேதம், வேருதல், கண்ணருக்கன்	118
37.	பேதாபேதம், உடனுதல், அறிவொளி	,,
38.	உயிருக்கு அவ்வத்வைத நிலேயில்லே	119
39.	சுத்தாத்வைதமே வைதிகம்	,,
40.	தடை விடைகள்	124
41.	கண்ணெளி	125
42.	ஒளி இருள்	127
43.	பால் நீர்	130
44.	சொற்பொருள் பேதாபேதம்	,,
45.	எள்நெய்	132
46.	சிலந்திப்பூச்சி	135
47.	உடலுயிர்	138
48.	பங்கஜம்	140
49.	கடல்	141
50.	இரண்டு சத்துக்களின் இருப்பு	143
51.	மும்மத முரண்	147
52.	வேதப் பிரமாணம்	148
53.	சிவாகமப் பிரமாணம்	156
54.	ஆதிசைவர்	170
55.	சைவாசிரியன்மார்	181
56.	சுமார்த்தரின் தெய்வம்	189
57.	முடிப்புரை	195

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க

அத்வைதம்

காப்பு

சித்தி விநாயகன் சேவடி தொழுதிவ
ணத்து விதப்பொரு ளறைகுவன் யானே.

நூல்செய்யக்காரணம்

இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என நான்கு பகுப்புடையது வேதம். அது பயிலுமிடம் இப்பாரததேசம். அப்பயிற்சியால் இத்தேசம் புண்ணிய பூமி எனப்பட்டது. அந்த நூலைப் பிரமாணமாகக்கொண்ட சமயம் சித்தாந்த சைவம். வைணவம், மாயாவாதம் முதலியவும் தம்மை வைதிகமெனச் சொல்லிக்கொள்ளும். அந்நூலில் அத்வைதம் என்றொரு சொல் வருகின்றது. அச்சொல்லையும், அதன் பொருளையும் ஆராய்ந்தனர் அச்சமயங்களின் பிரவர்த்தகர். அவருள் சங்கர முனிவர், இராமானுஜமுனிவர், மத்வமுனிவர், சிவஞான முனிவர் என்பார் செய்த ஆராய்ச்சி ஈண்டு எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்நால்வருள் முதல்மூவரின் ஆராய்ச்சி நூல்கள் வடமொழியிலும், நாலாமவரின் ஆராய்ச்சி நூல்கள் தமிழிலும் உள்ளன. அவ்விருமொழி நூல்களும் பலப்பல. அவரது தெள்ளறிவை அளக்கும் உரைகல்லாயிருப்பது அத்வைதமென்னும் அச்சொல். அதனைத் தீர விசாரித்து அதன் மெய்ப்பொருளைக் கண்டவரே அவ்வேதத்தின் உட்கிடையையுங் கண்டவராவார்.

சில ஆண்டுகளுக்குமுன் இத்தமிழ்நாட்டில் வைதிக சைவ சண்டமாருதம் சோமசுந்தரநாயகர், யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர், துறைசை ஆதீனத்து மகாவித்துவான் சபாபதி நாவலர், மாயாவாத தும்ஸகோளரி நா. கதிரைவேற்பிள்ளை, மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, அம்பலவாண நாவலர், சாமிநாதபண்டிதர், சோளங்கிபுரம் சிவ - அருணகிரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலியார், பாம்பன்சுவாமி, சபாரத்ந முதலியார், ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை, சாமக்குளம் சுப்பிரமணிய சர்மா, குளித்தலை அரங்கசாமி ஐயர், காசிவாசி செந்திநாத ஐயர் முதலியோர் வாழ்ந்துவந்தனர். அவரெல்லாம் ஏறக்குறைய சம காலத்தவராய்ச் சித்தாந்த சைவச் சார்பினராயிருந்தனர். 'ப்ரம்ம வித்யா' என்பதொரு பத்திரிகை. அது மாதம் இரு முறை புத்தகவடிவில் வெளியாகிக்கொண்டிருந்தது. அதன் தொடக்கம் 1887-ல் அல்லது முந்திய வருஷத்தில் இருக்கலாம். அது நின்று பல வருடங்களாயின. அதற்கு ஆசிரியராயிருந்தவர் பரசமய பஞ்சானன பாஞ்சஜன்ய பண்டித ஸ்ரீநிவாச சாஸ்திரி யென்பார். அவரைச் சார்ந்தார் சிலர். அவரெல்லாம் இந்து, ஆரியன், துவிதமத திரஸ்காரி, சுதேசி என்பனவாய புனைபெயர்களை வைத்துக்கொண்டனர். இவர் அதே காலத்தவராய் அந்நாயகர் சார்பினருக்கு எதிர்ச்சார்பினராய் மாயாவாதிகளா யிருந்தனர். இவ்விரு சார்பினரும் தமிழ் வடமொழிகளில் வல்லார், தர்க்க வியாகரண பண்டிதர், வேதாகமமாதி சமயப்பிரமாண சாத்திரவிற்பன்னர், தத்தம் சமயபரிபாலனத்தில் முனைந்தவர். அம்முதற் சார்பினர் சிவஞான முனிவரின் பக்கத்தார். அவ்வெதிர்ச் சார்பினர் சங்கர முனிவரின் பக்கத்தார். அங்ஙனம் பிரிந்து நின்ற அவ்விரு சார்பினரும் ஐந்தாறுவருடங்கள் ஒருபோர் நிகழ்த்திவந்தனர். அப்போர் பத்து வருடங்கள் நடந்ததென்றுகூடச் சொல்லப் படுகிறது.

> 'ஐந்து வருஷ காலமாய்க் காரியம் பொய்யென...பலபேர் நிலைநாட்டியிருக்கவும்' (அ – வு. 13),

> 'காரியம் பொய்யென ஆறு வருஷமாக இப்பிரம வித்தையின் கண்...வாதித்து வரவும்' (அ – வு. 22),

> 'சுமார் பத்து வருஷ காலமாக இவர் மதஸ்தர்க்கும் வேதாந்திகளுக்கும் நடந்த பற்பல பத்திரிகா வாதங்களில்' (வே – தீ 16, 17)

என்றது காண்க. சமயம்பற்றிய வாதப்போர் அது. அத்வைத பதப்பொருள் விசாரம் அதில் பெரும்பகுதி இடம்பெற்றிருந்தது. அவரால் எழுதி வெளியிடப்பட்ட வாதப் பிரதிவாத நூல்கள் மிகப் பல. அக்காலப் பத்திரிகைகள் பலவற்றிலும் அன்ன பல கட்டுரைகளைப் பார்க்கலாம். அவை பெரும்பாலுந் தமிழ் அறிவு வளர்ச்சிக்கும், சமய உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கும் உதவுவன. ஆனால் அவை இப்பொழுது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிடைப்பது அரிதாகிவிட்டது. ஆயினும் அந்தப் பிரதிகள் சில ஆங்காங்குச் சிலரிடமிருக்கலாம்.

சாஸ்திரியார் பக்கத்துத் தமிழ் நூல்கள் கிடைத்தற்கரிய வாயினும் நஷ்டம் அதிகமில்லை. அவர் சாராருள் வழி வழி வடமொழி வல்லாராயிருப்பவர் பலர். அவ்வடமொழி நூல் களைப் படித்துத் தம் கொள்கையிற் பற்றை வளர்த்துக்கொள்ள அவரால் முடியும். ஆனால் நாயகர் பக்கத்துத் தமிழ் நூல்கள் மறைந்த நஷ்டம் ஈடுசெய்ய முடியாதது. அச்சாராரின் வழி யினரிடம் வடமொழிப் பயிற்சி அநேகமாக இப்பொழுது சூனியம். ஒரு சிலர் அப்பயிற்சி உடையராயிருக்கலாம். அவரும் அம்மொழியிலுள்ள காவிய நாடகமாதி உவர்க்கடலில் வீழ்ந்து எழமாட்டாதவராயினர். வேத சிவாகமமாதி சாத்திர ஆராய்ச் சிக்கு அப்பயிற்சி உதவுதல்வேண்டும். அவர்பால் அஃதில்லை. அவ்வழியினரிடம் தமிழ்மொழிவெறி புகுந்து வருவது மற்றொரு கேடு. அதனாலும் சமய ஞானத்துக்கு அவர் தூரமாய்ப் போகின்றனர்.

அத்வைதச் சொற்குச் சங்கரமுனிவர்கொண்ட பொருளே பாரததேசத்திற் பரந்துகிடக்கிறது. அப்பொருள்தான் உண் மையா? அல்லது உண்மைப்பொருள் வேறா? அஃதெது? அதனை ஆராய்ந்து காணவேண்டும் என்ற ஆசை எனக்கு வந்தது. அதனால் அவ்விருசாராரின் வாதப் பிரதிவாத நூல் களுட் பலவற்றையும், ஏனைப் பிரமாண நூல்களையும் என்னால் முடிந்தமட்டில் நான் பலமுறை சாவதானமாய்க் கூர்ந்து படித்தேன். ஒப்புநோக்கு முறையில் ஓரம்போகாமல் ஆய்ந் தேன். சங்கரமுனிவர் கொண்டபொருள் சரியன்று, சிவஞான முனிவர்கொண்ட பொருளே சரி என்பது என்னறிவுக்குப் புல னாயிற்று. அதனை உலகிற்கு எடுத்துக்காட்டவும் நான் விரும் பினேன். அதுவே இந்நூல் வெளிவரக்காரணம். இராமா னுஜர், மத்வர்கொண்ட பொருள் இதில் சுருங்கச் சொல்லி விலக்கப்பட்டது. விரிவுக்கான விசேடம் அவ்விருவர்செய்த வற்றில் ஒன்றுமில்லை.

ந என்பதன் பொருள்

அத்வைதம் என்பது வடசொல். ஆகலின் அம்மொழியியல் பற்றி அப்பதத்தை ஆராயவேண்டும். ந, த்வைதம் என்பன சேர்ந்து அத்வைதம் என்றசொல் வந்தது. 'ந' வை 'நஞ்' என்றுஞ் சொல்வதுண்டு. நஞ் என்ற நகாரத்துக்கு ஆறு பொருள்கள் சொன்னார் பதஞ்சலி முனிவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

' தத் ஸாத்ருச்ய மபாவச்ச ததந்யத்வம்
ததல்பதா அப்ராசஸ்த்ய விரோதச்ச
நஞர்த்தா ஷ்ஷட் ப்ரகீர்த்திதா: '

என்றது அவர் வாக்கு.

அவற்றுள் :

முதலாவது 'தத் ஸாத்ருச்யம்' என்பது. அதற்கருத்தம் 'அதற்குச் சமமானது' என்பது. 'அநச்வம்' என்பது உதாரணம். அசுவமல்லாதது அதாவது (அசுவம் போன்றதாகிய) கோவேறுகழுதை என்பது அவ்வுதாரணத்துக்குத் தமிழ்.

இரண்டாவது 'அபாவம்' என்பது. அதற்கருத்தம் 'இன்மை' என்பது. அச்ருங்க: மநுஷ்ய:' என்பது உதாரணம். மனிதன் கொம்பில்லாதவன் என்பது அவ்வுதாரணத்துக்குத் தமிழ்.

மூன்ருவது 'நதந்யத்வம்' என்பது. அதற்கருத்தம் 'அதற்கு வேருனது' என்பது. 'அநாகாச: பூ:' என்பது உதாரணம். பூமி ஆகாயத்தினும் வேறு என்பது அவ்வுதாரணத்துக்குத் தமிழ்.

நாலாவது 'ததல்பதா' என்பது. அதற்கருத்தம் 'குறைவு' என்பது. 'அநுதரா கந்யா' என்பது உதாரணம். வயிறு சிறுத்த கன்னி என்பது அவ்வுதாரணத்துக்குத் தமிழ்.

ஐந்தாவது 'அப்ராசஸ்த்யம்' என்பது. அதற்கருத்தம் 'பெருமையி (அதிகமி)ன்மை' என்பது. 'அமரா: தேவா:' என்பது உதாரணம். தேவர் மரணமில்லாதவர் அதாவது மனிதர் போன்று கடுந்துயரப்படுவதும் இடையிடையே நேர்வதாகிய சாக்காடும் பொறுத்தலி (தேவர் அவற்றை அதிகமி)ல்லாதவர் என்பது அவ்வுதாரணத்துக்குத் தமிழ்.

ஆருவது 'விரோத:' என்பது. அதற் கருத்தம் 'எதிர்மறை' என்பது. 'அபுண்யம்' என்பது உதாரணம். (புண்ணியத்துக்கு எதிர்மறையாகிய) பாவம் என்பது அவ்வுதாரணத்துக்குத் தமிழ்.

இங்கே ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்படுவன மூன்று. அவை சாதிருசியம், அபாவம், விரோதம் என்பன. மற்றவை விடப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அபாவம்

அபாவம் நான்கு. அத்யந்தாபாவம், பிராகபாவம், பிரத்வம்சாபாவம், அந்யோந்யாபாவம் என்பன அவை. முற்றுமின்மை, முன்னின்மை, அழிவுபாட்டின்மை அல்லது பின்னின்மை, ஒன்றினென்றின்மை என்பன அவற்றின் தமிழ். அந்நான்கினையுமே அபாவம் என்பதிலுள்ள நகாரத்துக்குப் பொருளெனக் கொள்ளலாமா? கொண்டால் அபாவம் நான்கு, மற்றவை ஐந்து ஆக ஒன்பது பொருள்கள் ந என்பதற்கு உளவென்ருகும். ஆனல் பதஞ்சலியார் நகாரப் பொருள்கள் ஆறென்றே கணக்கிட்டார். ஆகலின் மூன்றபாவங்களை அவர் ஓதுக்கினுரெனல் தெரிகின்றது. பிராகபாவமும், பிரத்வம்சாபாவமும் முக்கியமல்ல. அந்யோந்யாபாவமோ ததந்யத்வம் என்றதிலடங்கும். எஞ்சியுள்ளது அத்யந்தாபாவம். அதுவே அவ்வாறனுட்பட்ட அபாவமாகும். அத்யந்தாபாவமே அபாவமென்னும் சொற்குப் பெருவழக்கான பொருளாயுமிருந்து வருகிறது. அதனையுங்காண்க.

சாதிருசியம்

அபாவத்துக்கு அவ்வின்மைப் பொருள் கொண்டது போலச் சாதிருசியத்துக்கு அன்மைப்பொருள் கொள்ளலாமா? ஆகாது. ஏன்? அழிவுபாட்டபாவமே அன்மையாகும். அந்த அன்மைக்கும், சாதிருசியத்துக்கும் சம்பந்தமில்லை.

த்வைதம்

'த்வி' என்பது இரண்டு. 'த்விதா' என்பது இரண்டின் தன்மை. 'த்வைதம்' என்பது இரண்டின் தன்மையைத் துணிந்து சொல்வது. ஆகவே த்விதா என்னும் இரண்டின் தன்மையே த்வைதம் என்பதற்குப் பொருள். இரண்டின் தன்மையாவது இரண்டு என்னும் எண்ணின் தன்மை.

கேவலாத்வைதம்

த்வைதம் (இரண்டின் தன்மை) இல்லாமை யென்பதே அத்வைதம் என்ற சொல்லுக்குப்பொருள். பிரமம்போற் சீவன்களும் சேதனம். ஆகலின் பிரமத்துக்கு அவை தன்னினம். அவையும் பிரமமேயென வேதாதிகள் துணிந்து கூறுகின்றன. ஆகலின் சீவன்கள் அசத்தியம். சடங்கள் அசேதனம். ஆகலின் அவை பிரமத்துக்குப் பிறவினம். கானல் நீருக்குக் கானல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபாதானம். அப்படியே சடப்பிரபஞ்சத்துக்குப் பிரமம் உபாதானம். ஆகலின் அச்சடங்களும் பிரமமே. அந் நீர்போல் அவையும் அசத்தியம். அங்ஙனம் அசத்தியங்களாகிய தன்னின (சஜாதீய) பிறவின (விஜாதீய)ங்களாகிய வேற்றுமைகள் இல்லாத பொருளே பிரமம். பிரமம் அத்வைதம் என்பதற்குப் பொருள் அது. அவ்வத்வைதந்தான் கேவலாத்வைதமென்பது.

விசிஷ்டாத்வைதம்

விசிஷ்ட, அத்வைதம் சேர்ந்து விசிஷ்டாத்வைதமென்பது வந்தது. விசிஷ்டம் என்பதற்கு ஒரு பொருளுடன் கூடியது என்பது பொருள். சீவனுகிய தூலசித்தும், புலன்களும், அவற்றுக்கு விஷயமாகும் பொருள்களும் ஆகிய தூல அசித்தும், வேதாதி பிரமாணங்களால் அறியப்படும் பொருள்களாகிய சூக்கும சித்தும், ஈசனுடைய அருட்டிருமேனியாகிய சூக்கும அசித்தும் ஆகிய நான்கும் விசேஷணங்கள்.

பிரமம் அத்வைதம் அதாவது ஒன்றே. அது அந்த விசேஷணங்களோடு கூடிய விசிஷ்டமாயிருப்பது. அப்படிச் சொல்வதற்கு விசிஷ்டாத்வைதம் என்பது பெயர். அவ்விசேஷணங்களை நீக்கிப் பார்த்தால் பிரமப்பொருள் ஒன்றேயாம். அவ்விசேஷணங்களோடு கூடிய அவ்விசிஷ்டப் பிரமமே உலகத்துக்கு முதற்காரணம். ஆயினும் குடம் மண்ணைவிட்டு வேருகவில்லை. அப்படியேஉலகிற்கும் பிரமத்திற்கும்வேற்றுமை கிடையாது. அங்ஙனங் கொள்ளும் விசிஷ்டாத்வைதம்.

பிற அத்வைதங்கள்

பாவனுத்வைதம், ஸமானுதிகரண சுத்தாத்வைதம், வியதிகரண சுத்தாத்வைதம் என்பனவும் சில. ஆக அத்வைதங்கள் ஐந்தாதல் காண்க.

பிரவர்த்தகர்

கேவலாத்வைதத்துக்குச் சங்கரரும், விசிஷ்டாத்வைதத்துக்கு இராமானுஜரும், பாவனுத்வைதத்துக்குப் பலதேவரும், ஸமானுதிகரண சுத்தாத்வைதத்துக்கு வல்லபரும் வியதிகரண சுத்தாத்வைதத்துக்கு மெய்கண்டாரும் பிரவர்த்தகராவார்.

'ந என்பதன் பொருள்' என்ற தலைப்பின் கீழுள்ளது முதல், 'பிரவர்த்தகர்' என்ற தலைப்பின் கீழுள்ளது முடியவுள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்குதி 'முதற்குற ளுண்மை' என்ற (மாயாவாத) நூலிலுள்ள 'அத்துவித விசாரம்' என்ற தலைப்பின் கீழுள்ளதன் சுருக்க மாகும்.

மெய்கண்டாரை அறியாமை

நகாரத்துக்கு இன்மையே மெய்ப்பொருள். வேதத்தில் உள்ளது அதுவே. அதனுற்றுன் சங்கரர், இராமானுஜர், பல தேவர், வல்லபர் ஆகிய நால்வரும் அப்பொருள்கொண்டார். மெய்கண்டார்கொண்டது அன்மைப்பொருள். அது வேத விரோதம். இப்படியும் அவ்விசாரம் சொல்லுகிறது. ஆனுல்,

> 'பாவனுத்துவிதம் என்பதற்கு உண்மையில் வேற்றுமை யிருக்கவும் அதற்கு அவ்வேற்றுமை யின்றென்று பாவிக்க வேண்டுமென்பது பொருளாம்' (மு-மை 199) என்றது அவ்விசாரம்.

அவ்வத்வைதிதான் பலதேவர். அவ்விசாரத்தில்,

> 'இப்பூர்வபட்சியார் மதமும் பாவனுத்துவிதமாம் என்ப தற்கு அடியில்வரும் வாக்கியம் சாட்சிபகரும். இதனுல் சுத்தாத்துவிதமும் பாவனுத்துவிதமும் ஒன்றென்பதா யின' (மு - மை 199) என்றது.

கீழ்க்குறிப்பொன்று: பூர்வபட்சியார் ஆவார் இங்கே மெய் கண்டார். இப்படி அவரை வியதிகரண சுத்தாத்வைதப் பிர வர்த்தகரென ஓரிடத்திலும் பாவனுத்வைதியென இன்னே ரிடத்திலும் அவ்விசாரம் சொன்னது. அது முரண். அந்த விசாரம் அவரைச் சரியாக அறியவில்லை என்பதற்கு அம் முரணே சான்று.

சக சீவ பரங்கள்

மாயாவாதத்தில் சகம், சீவன், பரம் என முப்பொருள் களின் பிரஸ்தாபமுண்டு. அவை சதசத் விலக்ஷண அநிர் வசனீய அல்லது பிராதிபாலிக சத்தையாகி பிரமத்தில் தோன்றி, அதிலே விளங்கி, அதிலேயே ஒடுங்கும் என்பாரவர்.

> 'ஜக ஜீவ பரங்களைச் சதசத் விலக்ஷண அநிர்வசனீயம் என்று சொல்வது தகுதியாம்' (ப் - வி - 7 - 15 - 6),

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'வினு - ப்ராதிபாலிக சத்தாவதென்னவெனின்? விடை - பிரதிபலித்தலாகிய செக, சீவ, பரம் சகலத்திற் சத்தியப் பொருளாகக் காண்டல்' (தி - தி - வி 35),

'ப்ரம்மம் ... இடத்தினின்றும் தோன்றி அதிலே விளங்கி அதிலேயே ஒடுங்கும் ஜகஜீவ பரங்கள்' (ப்-வி 7-15-6),

'வேதாந்த நூல்கள் பிரமம் நித்திய முத்த சச்சிதாநந்தம் என்றும் ஜகஜீவபரங்கள் அதற்கு மாறுன இலக்கண முடையன என்றும், பிரமத்தில் ஜகஜீவபரங்கள் ஆரோபமான தோற்றல் மாத்திரமென்றும் அதற்குபமானங்கள் கயிற்றரவு. கானனீர் - - என்றும் ஆதலால் பிரமத்தின் கண் ஜகஜீவபரங்கள் விவர்த்தபக்ஷம் என்றும், ஆரம்ப பரிணுமமன்றென்றும் கூறுகின்றன' (அ - வு 37)

என்றது காண்க. அப்பிரமத்துக்கும் சக சீவ பரங்களுக்கு முள்ள சம்பந்தத்தை அவர் விளக்க முனைந்து எடுத்தாண்ட திருட்டாந்தங்கள் ஏழு. அவற்றை ஆராயவேண்டும். அதிற் புகலாம்.

1. தாய் பிள்ளை

தாயினிடமிருந்து பிள்ளை பிறக்கின்றது. அதுபோல் பிரமத்தினிடமிருந்து பிரபஞ்சம் உதிக்கும். இஃது அவர்தந்த விளக்கம். அது சரியன்று, ஏன்? தாய் ஒரு பொருள். பிள்ளை வேருெரு பொருள். அன்றியும் தாய் கண்டப்பொருள். இஃது அவ்வுவமான நிலை. ஆனுல் பிரமமும் பிரபஞ்சமும் அவர் கருத்துப்படி வேறுவேறு பொருள்களல்ல. அன்றியும் பிரமம் அகண்ட பரிபூரணப்பொருள். இஃது அவ்வுவமேய நிலை. அங்ஙனமாக, அவ்வுவமான வுவமேயங்கள் தம்முள் இயைகின்றனவா? இல்லை. ஆனுல்,

'உலகமே பொருளென்றும் அதற்குக் காரணம் பிறிதொரு பொருளில்லை என்றும் கூறும் சித்தாந்தத்தை மறுக்கவேண்டி இதற்குமேல் பொருளொன்று உண்டெனத் தாய் பிள்ளை உவமானம் கூறினதே அன்றி அதுவே சித்தாந்தமன்று' (வே - தீ. 26) என்றூரவர்.

அஃது அவர் மதத்துக்கே பாதகமாம். எப்படி? 'உலகமே' என்றவிடத்தில் 'பிரமமே' என்பதையும், 'இதற்குமேல்' என்ற விடத்தில் 'இவர் பிரமத்துக்குமேல்' என்பதையும் வைத்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாக்கியத்தை வாசித்துப் பார்க்க. அப்பிரமத்துக்கும் மேல் ஒரு பொருள் உண்டு எனக்கொள்வார் அத்தாய் பிள்ளை உவமானத்தையே கூறித் தம் கொள்கையைச் சாதிக்கலாம். இவ் வாக்கியத்தைக்கொண்டே நாத்திகர் மாயாவாதரை மறுக்க முடியும். அதனை அம்மாயாவாதர் கருதிலர். அது கிடக்க, தாயின் கண்டத்தன்மையும், பிரமத்தின் பரிபூரணத்தன்மையும் இயையாவென்பதை மாத்திரம் அவர் அறிந்து அந்தத் தாய் பிள்ளையைக் கைவிட்டார்.

2. பால் தயிர்

பால் தயிராகிறது. அதுபோல் பிரமம் பிரபஞ்சமாயிற்று. பால் தன் அளவு கெடாமல் தயிராவதுபோல் பிரமமும் தன் பரிபூரணத்தன்மை கெடாமல் பிரபஞ்சமாயிற்று என்பது. இவ் வுவமானத்தால் பிரமத்தின் பரிபூரணத்தன்மை பாதிக்கப் படாமை காண்க. இஃது அவர் தந்த விளக்கம். இதிலுள்ள தவறு என்னை ? பாலின் அளவில் ஏறுமல் குறையாமல் அதில் பரிணமித்த தயிர் இருக்கும். அப்படியே பிரமத்தின் அளவில் ஏறுமல் குறையாமல் பிரபஞ்சம் இருக்கவேண்டும். அஃது உண்டா? ஆமெனின், பிரபஞ்சமும் பரிபூரணந்தான். இல்லை யெனின், பாலில் ஒருபகுதியே தயிராயிற்றெனல் வேண்டும். அஃதாகாது. இவ்வுவமானத்தில் பாலளவு பரிபூரணமாகும் அதன் பரிணமத் தயிர். ஆனல் உவமேயத்தில் பிரமத்தளவு பரிபூரணமன்று அதன் பரிணமப் பிரபஞ்சம். ஆகலின் உவமான உவமேயங்கள் பொருந்தில. இன்னும் பாலுந் தயிரும் பொரு ளால் இரண்டல்ல, ஒன்றே. அதாவது பிரமமே உலகம் என்று சொல்வதற்காக அவ்வுவமானங் கொள்ளப்பட்டதென்றுரவர்.

> ' நாம்அபரிபூரணதோஷம் வராமற்பொருட்டும், இரண்டு பொருள்களல்ல வென்பதற்கும் பால் தயிரென்னும் உவமானங் கூறினதேயன்றி அதுவே சித்தாந்தமாக வன்று ' (வே - தீ 27)

என்றது காண்க. அதுவும் பொருந்தாது. பால் ஏதேனுங் களங்கஞ் சேர்ந்தே தயிராகும். அக்களங்கத்தை விட்டுப் பாலுந் தயிருமாத்திரம் பொருளா லொன்றென்பது உண்மை யன்று. அக்களங்கமும் தயிரிலுண்டு. அதனை அவர் அறிக. மேலும் பால் தயிர் என்பது பரிணமபட்சம். அவரோ விவர்த்த பட்சி. அவர் அவ்வுவமானத்தைத் தம் கொள்கைக்குச் சாதக மாகக் கொண்டார். அது சரியா ? இன்னும் பால் கெட்டுத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தயிராகிறது. தயிர் மீண்டும் பாலாகாது. அப்படியே பிரமங் கெட்டுப் பிரபஞ்சமாயிற்ரு? பிரபஞ்சம் மீண்டும் பிரமம் ஆகாதா? அச்சந்தேகம் அவருக்கு வந்தது. அதனல் வேருேருவமானத்தைப் பிடித்தாரவர்.

3. மண்கடம்

மண் கடமாகிறது. அதுபோல் பிரமம் பிரபஞ்சமாயிற்று. கடமாகும்போது மண் கெடவில்லே. பிரபஞ்ச மாகும்போது பிரமமுங்கெடாது. கடம் மீண்டும் மண்ணுகும். பிரபஞ்சம் மீண்டும் பிரமமாகலாம். இஃது அவர் தந்த விளக்கம்.

> 'பால் கெட்டுத் தயிராவதுபோல் மண்கெட்டுக் கடமாவதில்லே யென்பதற்கும், தயிர் மீண்டும் பாலாகாமற் போவதுபோ லன்றிக் கடம் மீண்டும் மண்ணுகுமென்பதற்கும் இவ்வுவமானமே அன்றி மற்றப்படி அன்று' (வே - தீ 27) என்றது காண்க.

இவ்வுவமானத்திலும் இயைபில்லே. ஏன்? கடமாகிய காரியத்தில் மண்ணுகிய காரணமுங் காணப்படுகிறது. ஆகையால் கடமுடைந்தால் மண்ணுகும் என்பதுசரி. ஆனல் பிரபஞ்ச காரியத்திலோ பிரமமாகிய காரணம் காணப்பட்டிலது. ஆகலின் பிரபஞ்சம் அழிந்தால் மீண்டும் பிரமமாகுமென்ற நிச்சயம் ஏது? அஃதென்ன ஆகுமோ? மண்ணுகியகாரணத்தைக் காட்டிக்கொண்டிருத்த லென்பது கடத்திலுண்டு. பிரமமாகிய காரணத்தைக் காட்டிக்கொண்டிருத்தலென்பது பிரபஞ்சத்திலில்லே. ஆகலின் அவ்விரண்டற்குமுள்ள பொதுத்தன்மை இயைந்திலது. மேலும் மண்கடவுவமை ஆரம்பபட்சம். ஆரம்ப பட்சமென்பதும் காரணகாரிய பட்சமென்பதும் ஒன்று.

> 'ஒரு பொருள் மற்ருெரு பொருளாவது மூன்றுவிதத்தில் அடக்கிச் சொல்லலாம். ஆரம்பம் பரிணமம் விவர்த்த மாகவாம். ஆரம்பத்திற்கு மண்குடமும், பரிணமத்திற்குப் பால் தயிரும், விவர்த்தத்திற்குக் கயிறு அரவும் சொல்லப்படுகின்றன' (அ - வு 39),

> 'மண் கடம்போல் காரண காரிய வாதம்' (மா - ச 149)

என்றது காண்க. விவர்த்த பட்சியாகிய அவர் அதை எடுத்தாளலாமா? ஆனல் மண் விகாரித்துக் கடமாகிறது. பிரமமோ விகாரியாமலே பிரபஞ்சம் ஆயிற்று. ஆகலின் மண்போல் இல்லேயே பிரமம் என்ற சிந்தனே அவருக்கு உண்டாயிற்று. அதனல்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

> 'இனி விகாரப்படாத உவமானம் உரைக்கின்ரூேம். அஃதாவது சூரியனும் பிரதி பிம்ப சூரியனும்போல. சூரியன் விகாரப்படாமல் எப்படிப் பிரதி பிம்பிக்கிருனே அப்படியே பரமும் விகாரப்படாமல் பிரதிபிம்பிக்கிறது' (வே - தீ 27) என்ருர் அவர்.

பிம்பப் பிரதிபிம்ப உவமானம் அவருக்கு உதவவந்தது.

பிரபஞ்சத்தோற்றம்

மாயாவாதப்படி பிரபஞ்சம் எப்படித் தோன்றுகிறது? அதைத் தெரிந்துகொள்ளவேண்டும். பிறகுதான் பிம்பப் பிரதி பிம்ப முதலிய மற்ற உவமானங்களின் ஆராய்ச்சி தெளிவு தருவதாகும்.

சுத்தப் பிரமம் ஒன்று. அதனிடம் உள்ளது ஒரு சக்தி. அது லட்சண சூனிய மானது, தீயிற் சூடு போல்வது. அப்பிர மத்தின் சன்னிதானத்தில் அச்சக்தியிடம் சத்துவ இராசத தாமத குணங்கள் உளவாயின. அம்முக்குணங்களும் அவி கிருதம். அச்சக்தியில் அக்குணங்கள் உளவானது புருஷ சந்நிதானத்தில் ஸ்திரீக்கு இன்பம் சனிப்பதுபோலும். அம் மூன்று குணங்களும் சுத்தம். அந்த அவிகிருதமான சுத்த சத்துவ, சுத்த இராசத, சுத்ததாமத குணங்களோடு அச்சுத்தப் பிரமம் கூடினது. அப்போது அது அகண்ட பரிபூரணப்பிரம மாயிற்று.

அப்பரிபூரணப் பிரமத்தில் ஒரு சக்தி யுண்டு. அதற்கு மூலப்பிரகிருதியென்பது பெயர். அதுவும் சத்துவ இராசத தாமத குணங்களுடன் கூடியதாயிருக்கும். அம்முக்குணங்களும் விகிருதம். அம்மூலப்பிரகிருதியின் விகிருதமாகிய சத்துவ குணமே மாயை. அம்மாயையில் அப்பூரணப்பிரமம் சுலட்சண மாகப் பிரதிபிம்பிக்கும். அப்பிரதிபிம்ப சைதன்னியம் ஈசுரன் எனப்படும். அப்பிரதி பிம்பம் நிர்மலசலப் பிரதிபிம்பம் போல் இருக்கும்.

அம்மூலப் பிரகிருதியின் விகிருதமாகிய சத்துவகுணமென் னும் மாயையிலிருந்து சத்துவம் இராசதம் தாமதம் என முக் குணங்கள் உளவாயின. அந்த ஈசுரன் அச்சத்துவத்தில் சத்துவமாகிய குணத்தில் பிரதிபிம்பிப்பான். அப்பிரதிபிம்பம் விஷ்ணு. அந்த ஈசுரன் அச்சத்துவத்தில் இராசதமாகிய குணத்தில் பிரதிபிம்பிப்பான். அப்பிரதிபிம்பம் பிரமன். அந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈசுரன் அச்சத்துவத்தில் தாமதமாகிய குணத்தில் பிரதிபிம்பிப்பான். அப்பிரதிபிம்பம் உருத்திரன்.

அம்மூலப் பிரகிருதியின் விகிருதமாகிய இராசதகுணம் அநேக ரூபங்களாகப் பிரியும். அந்த ரூபங்களே அவித்தைகள். அவை ஒன்றற்கொன்று தாரதம்மியப்படும். அப்பூரணப் பிரம சைதன்யம் அவற்றிற் பிரதிபிம்பிக்கும். அப்பிரதி பிம்பங்களே சீவன்கள். அப்பிரதிபிம்பங்கள் மலினசலப் பிரதிபிம்பங்கள் போல் இருக்கும். அந்த இராசதகுணத்திலும் சத்துவம், இராசதம், தாமதம் என முக்குணங்கள் உளவாகும். அவற்றுள் இராசத சத்துவப் பிரதான பிரதிபிம்ப சீவன் ஞானநிஷ்டனுவான். இராசத இராசதப் பிரதான பிரதிபிம்ப சீவன் கர்ம நிஷ்டனுவான். இராசத தாமதப் பிரதான பிரதிபிம்ப சீவன் சோம்பல் நித்திரை மயக்கம் ஆகிய இவற்றை உடையனுவான்.

அம்மூலப் பிரகிருதியின் விகிருதமாகிய தாமதகுணத்தில் ஆவரணம், விக்ஷேபமென இரண்டு சத்திகள் உள. ஆவரணமாவது சம்சாரபந்தம். விக்ஷேபமாவது ஆகாச முதலிய தத்துவங்களின் காரணம். விக்ஷேபம் - பிரபஞ்ச சிருட்டியாகிய பரப்பு.

இப்படித் தோன்றும் பிரபஞ்சம். இத்தோற்ற முறைதான் பிம்பப் பிரதிபிம்பபட்சம். இதில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட இன்னும் சிலவகைகளுள.

'விம்பப் பிரதிவிம்ப பாவபக்ஷ மெப்படியென்றுவர;— சந்திரன் போலேயும், சூரியன்போலேயும், முகம்போலேயும் பரமாத்மா. ஜலசந்திரன் போலேயும், ஜல சூரியன்போலேயும், கண்ணுடியிலே பிரதிமுகம்போலேயும் சீவன். அஃதெப்படி யென்றுவர;— மாயாப் பிரதி விம்ப சைதன்னிய மீசுரனென்பார்கள். பிரமசைதன்னிய மவித்தையா வந்தக்கரணப் பிரதிவிம்ப சீவனென்பார்கள் இவைக ளிரண்டுவிதமாய்க் கற்பிக்கிறது. இனி மூன்றுவிதமாய்க் கற்பிக்கிறது யாதென்ருல்? மஹாகாசம், கடாகாசம், ஜலாகாசம்போல மாயாப்பிரதிவிம்ப சைதன்னிய மீசுரன். அவித்தையாப் பிரதிவிம்ப சைதன்னியங் கூடஸ்தர். அவித்தையென்றும், பிரகிருதியென்றும் இரண்டு மொன்றுதானே. அந்தக்கரணப் பிரதிவிம்ப சைதன்னியம் சீவர். இனி நாலுவிதமாய்க் கற்பிக்கிறதாவதேதென்ருல்? போதமயர் பரமாத்மா. மஹாகாசம்போலே மாயாப் பிரதிவிம்ப சைதன்னிய மீசுரர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேகாகாசம்போலே அவித்தையாப் பிரதிவிம்ப சைதன்னியங்கூடஸ்தர். கடாகாசம்போலே வந்தக்கரணப் பிரதிவிம்பசைதன்னியம் சீவன். சிலபேர் பெரியவாள் கடசலாகாசம்போலே, மாயையிலே பிரமப் பிரதிவிம்பித மீசுரர். அவித்தையிலே ஈசுரப் பிரதிவிம்பிதங் கூடஸ்தர். அந்தக்கரணத்திலே கூடஸ்த பிரதிவிம்பிதம் சீவர். இந்தப் பட்சத்திலே; - பிரமத்தினிடத்திலே மாயையினலே ஈசுரர் கற்பிதர். ஈசுரரிடத்திலே அவித்தையினலே கூடஸ்தர் கற்பிதர். கூடஸ்தரிடத்திலே அந்தக் கரணத்தினலே சீவன் கற்பிதனென்று சொல்லுவார்கள். முன்சொன்ன மதத்திலே பிரமத்தினிடத்திலே மாயையினலே ஈசுரர் கற்பிதர். பிரமத்தினிடத்திலே யவித்தையினலேகூடஸ்தர் கற்பிதர். பிரமத்தினிடத்திலே அந்தக் கரணத்தினலே சீவன் கற்பிதன். இப்படி விம்பப் பிரதிவிம்பத்தன்மையாயிற்று' (பா - இ 141, 142) என்றதுகாண்க.

மாயாவாதத்தில் பிரபஞ்சத் தோற்றத்துக்கு இப்பிம்பப் பிரதிபிம்ப பட்சம்போல் அம்சாம்சி பாவபட்சம், அவச்சின்னப் பட்சம் என வேறும் இருபட்சங்கள் உள.

அத்தோற்றத்தின் பொருந்தாமை

சுத்தப்பிரமத்தில் அடங்கியிருக்கும் சத்தியை இலட்சண சூனியமென்றுரவர். அதற்கு அவர் காட்டியது தீயிற்சூடு என்ற உவமை. அச்சூடுதீக்கு இலட்சணமே. ஆகலின் அவர் அச்சத்தியை இலட்சண சூனியமெனச் சொல்லிக்கொண்டு அதற்குத் தீயிற் சூட்டை உவமையாக்கியது சரியன்று.

அச்சத்திக்கு அப்பிரமத்தினுடைய சன்னிதானத்தில் அவிகிருத குணங்களுளவானது புருஷ சமுகத்திலே ஸ்திரீக்கு இன்பம் சனித்ததுபோலும் என்றுரவர். ஸ்திரீ சமுகத்திலே புருஷனுக்கு இன்பம் சனிப்பதுதான் பெரும்பான்மை. அது கிடக்க. சன்னிதானம் என்றல் என்ன? சுத்தப் பிரமத்துக்கு அஃதிருக்கமுடியுமா? அன்றியும் அச்சத்தி சேதனமா? அசேதனமா? சேதனமென அவர் சொல்லார். ஆனல் ஸ்திரீ சேதனம். அவளுக்கு அவ்வின்பம் சனிக்கலாம். அவள் செத்துக் கிடந்தால் அது சனிக்குமா? செத்தவள் அசேதனம். அதுபோல் அச்சத்தி அசேதனமானல் அக்குணங்களும் சனியா. ஆகலின் ஸ்திரீயுவமை சாலாது. அப்பிரமத்துக்கு வேருனதொரு பொருளுமிருந்து அப்பிரமம் சங்கற்பித்தால் அப்பொருளினிடமுள்ள பலகுணங்கள் காரியப்படலாம், அதாவது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளிப்படலாம், அதாவது சனிக்கலாம். ஆனுல் அவர் மதத்தில் அப்பொருளுக்கிடங்கிடையாது. ஆகலின் பிரபஞ்சத்தின் அத்தோற்றமுறை அடியற்றதாயிற்று முதற்கோணல் முற்றுங் கோணல் என்பது முதுமொழி.

4. பிம்பப் பிரதிபிம்பம்

சூரியன் பிரதிபிம்பிக்கிறது. அதுபோல் பிரமமும் பிரதிபிம்பிக்கிறது. சூரியன்போல்வது பிரமம். சூரியப் பிரதிபிம்பம் போல்வது பிரபஞ்சம். கடமாகும்போது மண் விகாரிப்பது போல் பிரதிபிம்பிக்கும்போது சூரியன் விகாரிப்பதில்லை. பிரபஞ்சமாகப் பிரதிபிம்பிக்கும்போது பிரமமும் அச்சூரியன்போல் விகாரியாது. இஃது அவர் தந்த விளக்கம். இதுவும் பிழை. என்னை? அவருட்பட்ட அம்சாம்ச பாவ பட்சிகள் அப்பிம்பப் பிரதிபிம்ப பட்சத்தை

> 'இந்தப் (பிம்பப் பிரதிபிம்ப) பக்ஷத்திலே பிரதிவிம்பமாயிருக்கிற ஜீவன் மித்தியாபூதனுனபடியினுலே அவனுக்குக் கர்த்துருத்துவம் கூடாது. போக்துருத்துவமும் கூடாது. இதுமாத்திரமல்ல பிரதிவிம்ப ஜீவனுக்குப் பந்தமென்றும், சுத்தாத்மாவுக்கு மோக்ஷமென்றும், பந்தமோக்ஷங்கட்குக் கர்த்தா இரண்டாகவரும். கற்பித ஜீவனுக்குச் சமுசாரித்துவங் கூடாதென்று வருவதால் விம்பப் பிரதிவிம்ப பாவபக்ஷம் போராது; நல்லதல்ல. இதற்கு அம்சாம்ச பாவபக்ஷ நல்லது' (பா - இ 142, 143)

என்று கூறி மறுத்திருப்பதொன்று.

இனிச் சூரியன் நீரில் பிரதிபிம்பிக்கிறது. அப்பிரதிபிம்பத்துக்கு நீர் ஆதாரம். பிரமம் பிரதிபிம்பிப்பதற்கும் அன்னதோர் ஆதாரம்வேண்டும். அஃதில்லை. அன்றியும் சூரியன் கண்டப்பொருள். பிரமம் பரிபூரணப்பொருள். கண்டப்பொருள் தான் பிரதிபிம்பிக்கும். பூரணப்பொருள் பிரதிபிம்பிக்க மாட்டாது. உவமான உவமேயங்கள் அங்ஙனம் இயையாமலிருப்பதை அவருங்கண்டார். அதனுல்,

> 'பிம்பப் பொருள் பிரதிபிம்பிக்கிறதற்கு ஆதாரமொன்று வேண்டும். சூரியன் பிரதிபிம்பிப்பதற்கு ஜலம் எப்படி ஆதாரமோ, அப்படியே பரம்பொருள் பிரதிபிம்பிப்பதற்கு ஆதாரமொன்றுவேண்டும். எது மற்ருெரு ஆதாரத்தில் பிரதிபிம்பிக்கின்றதோ, அது அபரிபூரணப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளாய் இருக்கவேண்டுமே அன்றி, ஒருபோதும் பரிபூரணப் பொருளாகாது ... சூரியன் ... ஓரிடத்திலும், ஜலம்...பிறிதொரு இடத்திலும் இருக்கின்றமையால், பிம்பப் பிரதிபிம்ப உவமானம் அப்பரிபூரணப் பொருளுக்கே பொருந்துமென்றவாறு ஆயிற்று' (வே - தீ 27) என்றார் அவரும்.

அவ்வுவமானத்தைக் கொண்டு பிரமத்துக்குப் பிரதிபிம்பமோ, அவிகாரமோ கூடும் எனப் பேசலாமா?

சூரியன் நீரில் பிரதிபிம்பிக்கிறது. ஆயினும் அசைதல் முதலிய விகாரங்கள் சூரியனுக்கில்லை, அப்பிரதிபிம்பத்துக்குள. அப்படியே பிரமமும் மாயையிற் பிரதிபிம்பிக்கிறது. அப்பிரதிபிம்பமே சீவன்கள். சூரியன்போல் பிரமமும் விகாரமடையாது. அதன் பிரதிபிம்பமாகிய சீவன்கள் விகாரிக்கும். பிரமம் பிரதிபிம்பிக்கும்போது சூரியன்போல் விகாரியாது என்னும் அளவுக்கு அத்திருட்டாந்தங் கொள்ளப்படும். இப்படி அவர் சொல்வர்.

'சூரியன் விகாரப்படாமல் எப்படிப் பிரதிபிம்பிக்கின்றனோ அப்படியேபரமும் விகாரப்படாமல் பிரதிபிம்பிக்கின்றது. - - - பிம்பப் பிரதிபிம்ப திருஷ்டாந்தம் பரவஸ்து விகாரப்படுவதில்லை யென்பதற்குமாத்திரமே' (வே - தீ 27) என்றதுகாண்க.

அது சரியன்று. ஏன் ? சூரியன் உருவுடையது. அவ்வுரு அதன் பிம்பம். அது நீரில் தோன்றுகிறது. அத்தோற்றம் அதன் பிரதிபிம்பம். பிம்பமும் பிரதிபிம்பமும் ஒன்றுபோல் இருக்கும். இல்லாவிட்டால் எவனுந் தன்முகத்தைக் கண்ணாடியிற்பார்க்கமாட்டான். சூரியபிம்பம் அசையவில்லை. அதன் பிரதிபிம்பம் அசைகிறது என்பது உண்மை. ஆனால் அசையும் பிரதிபிம்பம் தன்பிம்பத்துக்கு மாறானதொன்றாகத்தோன்றுமா? நீரில் அசைவதேபற்றிச் சூரியனது பிரதிபிம்பம் சந்திரனாகவும், குதிரையின் பிரதிபிம்பம் குள்ளநரியாகவும் தோன்றா. அன்றியும் ஒருபிம்பம் பலவிபரீத தோற்றங்களாகப் பிரதிபிம்பிப்பதுமில்லை. ஆனால் பிரமப் பிரதிபிம்பமும் சீவப் பிரதிபிம்பமும் முற்றிலும் விபரீதமாயிருப்பன. அங்ஙனம் குதிரைப் பிரதிபிம்பமுங் குள்ளநரிப் பிரதிபிம்பமும்போலப் பிரமபிம்பமுஞ் சீவப் பிரதிபிம்பமும் முற்றிலும் மாறுபாடா யிருப்பதைக் கண்டும் சீவன்களைப் பிரதிபிம்பமெனப் பேசிப் பிரமம் அவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாகப் பிரதிபிம்பிக்கிற தென்றும். அதுபற்றி விகாரியா தென்றும், அந்த அளவுக்குப் பிம்பப் பிரதிபிம்ப வுவமானங் கொள்ளப்படு மென்றும் வாதிப்பதில் பயனில்லை. எந்தப் பிம்பமும் அழுக்கு நீரிலோ, அசையும் நீரிலோ பிரதிபிம்பித்தாலும் அப்பிரதி பிம்பத்தைக்கொண்டு அதன் பிம்பத்தைக் கண்டு விடலாம். ஆனால் சீவப் பிரதிபிம்பத்தைக்கொண்டு பிரமபிம்பத்தைக் காண முடியாது., ஆகலின் சீவன்கள் பிரமத்தின் பிரதிபிம்பமல்ல வென்பதே உண்மை. சாமியமின்றிப் பிம்பப் பிரதிபிம்பங்கள் அறியப்படா.

மேலும் சூரியனுடைய பிரதிபிம்பங்கள் எத்தனையாக இருந்தாலும் சூரியப் பிரதிபிம்பங்களெனச் சொல்வதுதான் வழக்கு. அப்படியே பிரமத்தின் பிரதிபிம்பங்களையும் பிரமப் பிரதிபிம்பங்களென்றுதான் சொல்லவேண்டும். சக சீவன்களென ஏன் சொல்லவேண்டும்? அப்பெயர் வேற்றுமையாலும் சகசீவன்கள் பிரமத்தின் பிரதிபிம்பங்களல்ல என்பது தெளிவு.

சூரியன் நீரில் பிரதிபிம்பிக்கிறது. பிரமம் எதில் பிரதி பிம்பிக்கிறது? நீரின் ஸ்தானத்தில் பிரமசத்தியென ஒன்றை அவர் வைக்கின்றனர். அதுவே மாயையென்பது. அது பலவாகவும் இருக்குமாம். மாயை பிரமத்துக்குச் சத்தியாயின் அது பிரமத்தின் குணமே. ஒரு குணத்தில் அக் குணத்தை யுடையபொருள் பிரதிபிம்பிக்குமா? ஆமெனின் திருஷ்டாந்தம் வேண்டும்.

இனிச் சூரியனும் நீரும் வெவ்வேறிடத்திலிருக்கும் வேறு வேறு பொருள்கள். அங்கே பிரதிபிம்பங்கூடும். பிரமத்திற்குனே மாயையிருப்பதாயின் பிரமந்தன்னிற் பிரதிபிம்பித்ததாய் முடியும். அதற்கு அவர் காட்டிய திருட்டாந்தம் விரோதம். சூரியன் தன் சத்தியில் பிரதிபிம்பிக்கவில்லை.

சுத்தப் பிரமத்தின் சத்தி ஒன்று. அதுவே ஒன்றிலிருந்து ஒன்று தோன்றிப் பலவாகும். இப்படி அவர் சொல்வர். ஆனால் அப்பிரமம் சங்கற்பரஹிதம் என்பது அவர் மதம். அங்ஙனமாயின் அச்சத்தியாகிய மாயையிலிருந்து அப்பலவுந் தாமே உளவாயினவாகும். அவற்றிற்கு அச்சுதந்தரம் இருக்கலாமா?

அவர் காட்டிய பிம்பப் பிரதிபிம்ப உவமானம் அபரிபூரணப் பொருளுக்கே பொருந்தும் என அவர் சொன்னது முன் காட்டப்பட்டது. ஆனால் பரிபூரணப் பொருளும் பிரதி பிம்பிக்கலாமென அவர் வேறோரிடத்திற் கூறித்தடம்புரண்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'அகண்டமான ஆகாயத்தில் அடங்கியிருந்த வாயு தேயு அப்பு பிருதிவிகள் ஷை ஆகாயத்தினின்றும் சிருட்டி காலத்தில் தோன்றி ஷை வாயுவாதிகளில் ஒன்றான (பிருதிவியின் காரியமான) கடத்தில் இருக்கும் மேற்படி வாயுவாதிகளிலொன்றான நீரில் மேற்படி ஆகாயம் பிரதிபலித்தலேயாம். இதைப்போலவே பிரமத்தில் அடங்கியிருந்த மூலப்பகுதியின் ரஜோ குணமான அவித்தையானது வெளிப்பட்டு அதில் பிரமம் பிரதி பலித்ததென்க. அந்தப் பிரதி பலனமே ஜீவனென்ப தாம். பிரமத்துக்கு வேறாய் ஒரு பொருளிருந்து அதிற் பிரமம் பிரதிபலிக்கு மென்கிறாரே இது என்ன விவே கம்!...... பிரமம் பிரதிபிம்பிப்பதற்குப் பிரமத்திற்கு வேறாய் ஒருபொருள் அவசியமில்லை' (ப்-வி 7-16-6),

'ஆகாயத்திற்குள் அடங்கியிருந்து அதற்கு மீறாமல் அதினின்றுந்தோன்றிய நீரில் அவ்வாகாயம் பிரதி பலிக்க வில்லையா? அவ்வாறே பிரமமும் தன்னிடத்தில் நின்றும் வெளிப்பட்ட அவித்தையிற் பிரதிபலித்ததென் றால் குற்றமென்னை?' (ப்-வி. 7-16-6) என்றது காண்க.

அகண்டமானது ஆகாயம். அதிலிருந்து வாயுவும், வாயுவி லிருந்து தேயுவும், தேயுவிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிருதிவியும் தோன்றின. ஆகலின் ஆகாயத்திலிருந்து பரம் பரையில் தோன்றி அதற்கு வேறல்லாமலிருப்பது நீர். அவ் வாகாயம் அந்நீரில் பிரதிபிம்பிக்கிறது. அவ்வாகாயம் பிரதி பிம்பிப்பதற்கு அந்தநீர் அந்த ஆகாயத்தின் வேறல்லாத ஆதாரம். அதுபோல் பரிபூரணமானது பிரமம். அதிலிருந்து தோன்றி அதற்கு வேறல்லாமலிருப்பது மாயை. அப்பிரமம் அம்மாயையிற் பிரதிபிம்பிக்கலாம். அம்மாயை பிரமத்துக்கு வேறான ஆதாரமாயிருத்தல் வேண்டாம். இஃது அவர் மதம், அவர் தடம்புரண்டவிதம். ஆனால் பூதங்களின்தோற்றம் அவர் சொல்கிறபடி அன்று. ஆகாயம் முதலிய ஐந்தும் பூதங்கள். சப்தம் முதலிய ஐந்தும் தன்மாத்திரைகள். சப்தத்தில் ஆகாய மும், ஸ்பரிசத்தில் வாயுவும், ரூபத்தில் தேயுவும், ரஸத்தில் அபபுவும, கந்தத்தில் பிருதிவியுந் தோன்றின. அதுவே சுருதி சம்மதம. ஆகாயம் பிரதிபிம்பிக்கும் நீர் ஆகாயத்துக்கு வேறான பொருளென்பது அதனால் போதரும். இன்னும் அவர் மதப்படி நீரில் தோன்றியது பிருதிவி. அப்பிருதிவி தனக்கு முதலான நீரில் பிரதிபிம்பிக்கிறது. அதுபோல் பிரமத்தில் தோன்றிய ஆகாயம் தனக்கு முதலான பிரமத்திற் பிரதிபிம்பிக்குமா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரதிபிம்பியாது. ஆகவே ஆகாயம் தன் காரியமென அவர் கூறும் நீரில் பிரதிபிம்பிக்குமென்ற அவர் சொல்லே விவேக மற்றதென்க.

மேலும் அகண்டமாகிய ஆகாயம் நீரிற் பிரதிபிம்பிப்பதை அவர் கண்டிருக்கின்றனரா ? ஆகாயத்தில் காணப்படும் நீலமும், சட்டி கூடாரமுமே நீரிற் பிரதிபிம்பிக்கின்றன. அவையா ஆகாயம் ? இல்லை. அந்நீலம் ஒரு நிறம். அச்சட்டி கூடாரம் ஒருவடிவம். நிறமும், வடிவமும் உருவங்களே. அவற்றின் பிரதிபிம்பத்தை ஆகாயத்தின் பிரதிபிம்பமென்றல் மயக்கம்.

> ‘ஆகாசம் நீலநிறமாகவும், சட்டி கூடாரமாயும் ...... அத்தியாசத்தினுல் தோன்றுவதுபோல’ (பஞ்ச 14)

> ‘ஆகாசத்தில் நீலாதிகள் தோன்றுவதுபோன்று, பரமாத்துமாவினிடத்தில் சிற்சட பேதங்கள் தோன்றும்’ (பஞ்ச 14) என்றுரவரும்.

கண்டப்பொருளே பிரதி பிம்பிக்குமென முன்சொன்ன அவர் ஆகாயமும் பிரதிபிம்பிக்குமென இங்குச் சொன்னுர். ஆகாயமோ அகண்டம், பூரணம். அது பிரதிபிம்பிக்கமாட்டாது. பிரமமும் அப்படித்தான். அன்றியும் ஆகாயமாவது யாது ? அதற்கு அவர் தந்துள்ள விடை பின்னர் விசாரிக்கப்படும்.

சூரியன் ஒளியுடையது. அவ்வொளி சந்திரனிலும், வெண்கலம் முதலிய பிறவற்றிலும் பிரதிபலிக்கிறது. சூரியவொளி சூரியனில் நிரம்பியும், அதிற்காட்டிலும் சந்திரனிற் சுருங்கியும், வெண்கலம் முதலியவற்றில் இன்னுஞ் சுருங்கியும் இருக்கிறது. அப்படியே பிரமசைதனியம் பிரமத்திற் பூரணம். அது சந்திரன்போன்ற புத்தியிலும், வெண்கலம் போன்ற பிறவற்றிலும் பிரதிபலிக்கிறது. சந்திரவொளி சிறிதே விளக்குவதுபோல் புத்தியிற் பிரதிபலித்த பிரமசைதனியமும் சிறிதே விளக்குவதாயிற்று. இப்படி அவர்சொல்வர்.

> ‘இங்ஙனம் ஜீவனுனவன் ஆன்மாவின் பிரதிபிம்பமாயின் அவன் வேறு வஸ்துக்களையறிவிப்பது எங்ஙனமெனில் கூறுகின்ருர். சந்திரபிம்பத்தில் பிரதிபிம்பித்த துகளான சூரியகிரணங்கள் இரவிலுண்டான அல்லது வீட்டில் உண்டானஅதிகமானஇருளைப்போக்குகின்றது. வெண்கலப் பாத்திரத்திலும் பிரதிபிம்பித்தாலங்ஙனமே. அத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்மைபோல் புத்தியில் பிரதிபிம்பித்த துகளான ஆன்மாவின் ஒளிகள் புலன்கள் வழியாக ரூபம் முதலிய பதார்த்தங்களை விளக்குகின்றன' (ப்-வி-சார்வரி. ஆனி 20-376) என்றது காண்க.

அதுவுந் தவறு. எப்படி? சூரியனொளி சந்திரனிற் பிரதிபலித்துச் சந்திரனொளியாகிறது. அதுபோல் பிரமசைதன்யம் புத்தியிற் பிரதிபலித்துப் புத்தி சைதன்யம் அதாவது சீவன் ஆகிறது. ஆனால் அச்சந்திரனொளியும் கண்ணாடியிற் பிரதிபலித்துக் கண்ணாடி ஒளியாகிறது. அதுபோல் அச்சீவ சைதன்யமும் வேறொரு பொருளிற் பிரதிபலித்து அப்பொருளின் சைதன்யம் ஆகுமா? ஆகுமெனின், அப்பொருளுஞ் சேதனப் பொருளாக வேண்டும். ஆனால் அப்படியானதொரு பொருளில்லை. சைதன்யம் பிரதிபலிக்கமாட்டாது. எதன் பிரதிபலனமும் சைதன்யமாகாது என்பன அதனாற் புலனும். பிரம சைதன்யமும் எதனிலும் பிரதிபலித்தலில்லை. ஆன்மாவின் ஒளிகள் - பிரமசைதன்னியம். விளக்குகின்றன - அறிகிறது.

சூரியகிரணம் மேகத்தில் பிரதிபிம்பித்துப் பலநிறமாகத் தோன்றுகிறது; அதுவே வானவில் என்றாரவர்.

'வானத்தில் தோன்றும் சூரியகிரணப் பிரதிபிம்பமாய விற்போன்ற பன்னிற உருவை' (ப் - வி. 12–17–330)

என்றது காண்க. அதுவும் பிழை. மேகமண்டலத்துக்கு மேல் உள்ளது சூரியன். அதன் கிரணம் மேகத்தை ஊடுருவுகிறது. கீழுள்ள நாம் அதைப் பன்னிறமுள்ள வில்லாகப் பார்க்கின்றோம். இரசம் பூசிய கண்ணாடியில் நம் உருவம் நமக்குத் தோன்றும். அது பிரதிபிம்பமாகும். இரசம் பூசாத கண்ணாடியில் நமது உருவம் அக்கண்ணாடிக்கு மறுபுறத்தில் இருப்பவருக்கும். அங்கிருப்பவர் உருவம் இப்புறமிருக்கும் நமக்குந் தெரியும். அப்படியே சூரியகிரணத்தில் பலநிறம் சூக்குமமாயிருக்கிறது. அதனை விஞ்ஞானமும் ஏற்கிறது. அந்நிறம் மேகமண்டலத்தை ஊடுருவித் தூலநிலையையெய்தி நமக்கு வானவில்லாகப் புலப்படுகிறது. அது அக்கிரணத்தின் பிரதிபிம்பமன்று, ஊடுருவலேயாம். அவ்வில் அந்நிறத்தின் தூலநிலை. அந்நிறம், சூரியகிரணத்தின் சூக்குமமாயில்லையாயின் அவ்வில்லில் தூலமாய் வருதலுமில்லை. அன்றியும் ஆகாயத்தின் வேறாகாதது நீர் என்பாரவர். அதுபோல் சூரியனில் வேறாகாததா மேகம்?

மனிதன் அறிவுடையவன். அவன் கண்ணாடி முதலியவற்றில் பிரதிபிம்பிக்கிறான். அந்தப் பிரதிபிம்பத்துக்கு அறி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வுண்டா? இல்லை. சேதனங்கள் பிரதிபிம்பித்தாலும் அப்பிரதி பிம்பங்களுக்கு அறிவிராது. ஆனால் சீவன்கள் பிரமசைதனி யத்தின்பிரதிபிம்பமென்றூரவர். அஃதுண்மையானுல் அச்சீவன் களும் அறிவற்றனவாகவேயிருக்கும். ஆனுல் அவற்றிற்கு அறி விருக்கிறது. அதனுல் அவை எந்தப்பொருளின் பிரதிபிம்பமு மல்லவென்பது நிச்சயம். ஆனுல் சிவபிரானின் பிரதிபிம்பம் சுந்தரர், பூரணப் பொருளாகிய சிவபிரானுக்குப் பிரதிபிம்ப முண்டா? பிரதிபிம்பமாகிய சுந்தரர் மெய்ப்பொருளாயும் அறி வுடைப் பொருளாயும் இருந்தாரென்பது வரலாறு. அவர் அப்படியிருத்தல்கூடுமா? கூடுமெனின், சீவன்களும் அறிவுடை யனவாய் ஏன் இருக்கமாட்டா? இப்படி வினவுவாரவர். அவ் வினச் செல்லாது. ஏன்? எதன் பிரதிபிம்பமும் சேதனமா யிருப்பதேயில்லை. சுந்தரர் சம்பவமும் அந்த உண்மையை மாற்ருது. அந்தச் சம்பவத்துக்குத் தாற்பரியம் உண்டு. சிவபிரான் பூரணரே. பூரணத்துவம் அவருக்குச் சொரூப லட்சணம். அந்நிலையில் அவருக்குப் பிரதிபிம்பமில்லை. திருமேனி தாங்குதலாகிய தடத்த லட்சணமும் அவர்பால் உள்ளது. அந்நிலையில் அவர் பிரதிபிம்பிக்கலாம். அவர் தமக்கு வேருன ஒரு கண்ணுடியிற்ருன் பிரதிபிம்பித்தார். அப் பிரதிபிம்பத்தை நோக்கிச் சுந்தரா வா என்ருர். சுந்தரரும் வெளிப்பட்டார். சைவர் சொல்லும் பிரதிபிம்ப இலக்கணப்படி கண்ணுடியில் பிரதிபிம்பம் கிடையாது. கண்ணொளி கண்ணுடி யிற்பட்டு மீண்டு பிம்பத்தையே பார்க்கிறது. ஆகையால் சிவபிரான் தம்மிடத்திலிருந்து சுந்தரரைத் தந்தாரென்பது தான் தாற்பரியம். சிவபிரான் தம்மிடத்திலிருந்து தெளிவு பெற்றதொரு சீவனையே சுந்தராவென விளித்து வெளிப்படுத் தினுர் என்பதது. அச்சுந்தரர் மெய்ப்பொருளாய், அறிவுடைய ராய்த் திகழ்ந்தாரென்பது பொருந்துவதே. ஆனுல் மாயா வாதியர் பட்சப் பிரதிபிம்பம் வேறு. அப்பிரதிபிம்பத்துக்கு உண்மைத்தன்மையும் அறிவும் இருத்தல் முடியாது. அதனைச் சேதனமென்றல் அனுபவ விரோதம்.

இப்பிம்பப் பிரதிபிம்ப உவமானம் இன்னும் பல பொருந் தாமைகளையுடையது. அத்துர்ப்பலம் அவருக்குந்தெரியும். ஆகலின் இவ்வுவமானத்துக்கும்.

> ‘ அத்வைதிகள் பிம்பப் பிரதிபிம்பவாதம் பூர்வபக்ஷமாய்க் கூறுகின்றனரேயன்றிச் சித்தாந்தமன்று’ (ப்.வி-7-16-7)

எனக்கூறி விடைகொடுத் தனுப்பினுர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர் மதத்தில் விக்ஷேபம் என்றொரு சத்தி சொல்லப்பட்டது. அச்சத்தியே சடப்பிரபஞ்ச தோற்றத்துக்குக்காரணம். அத்தோற்றத்தின் பொருட்டு அச்சத்தியில் பிரமசைதனியம் பிரதிபிம்பித்ததாகத் தெரியவில்லை. பிரதிபிம்பித்திருக்குமாயின் கடபடாதிகளிலும் சிறிதளவாவது சைதனியம் காணப்பட வேண்டும். அஃதில்லை.

5. கயிற்றரவு

பிம்பப் பிரதிபிம்ப வாதத்தால் பிரமத்துக்கு அபரிபூரண தோஷம் வருகிறது. அது நீங்கவேண்டும். அதற்கு உதவுவது கயிற்றரவு உவமானம். கயிறு தன்னளவிற் பூரணமுடையது. பூரணமாவது அதன் இயற்கைத் தன்மை. அது கெடாமல் கயிறு தன்பால் பாம்பைத் தோற்றுகிறது. அப்படியே பிரமமும் பரிபூரணவஸ்து. அப்பூரணத்துவங் கெடாமல் அப்பிரமமும் தன்பால் ஜக சீவன்களைத் தோற்றுகிறது. இது அவர்தந்த விளக்கம். பிரம பூரணத்துவங் கெடவில்லையென்ற அளவுக்கு இத்திருட்டாந்தம் ஆகும் என்றாரவர்.

> ‘அபரிபூரண தோஷமில்லாமைக்கு வேறு திருஷ்டாந்தம் உரைக்கின்றோம். அது கயிற்றில் பாம்பு ... எப்படித் தோற்றமோ, அப்படியே பரத்தினிடத்துச் சிற்சடமான உலகு தோற்றமேயாம்’ (வே - தீ 27)

என்றது காண்க. இதிலுள்ள தவறென்னை? கயிறு பாம்பைத் தோற்றும்போது கயிற்றின் ஏகதேசத்திலல்லாமல் அதனளவு வரை பாம்பாகிறது. அதுபோல் பிரமம் பிரபஞ்சத்தைத் தோற்றும்போது பிரமத்தின் ஏகதேசத்தில் அல்லாமல் அதனளவு வரை பிரபஞ்சமாதல்வேண்டும். ஆகிறதா? இல்லை.

> ‘பூரணமாதல் ஒன்றுக்கு இலக்கணமாயின், பூரணமே யளவும் வரம்புமாம்’ (அ-வு 42) என்றாரவர்.

பூரணமான பிரமத்துக்குப் பூரணமே அளவும் வரம்புமாயிருந்தால் அதில்தோன்றிய பிரபஞ்சத்துக்கும் பூரணந்தானே அளவும் வரம்புமாகும்? இல்லையென்றால் கயிற்றரவு உவமானம் செல்லாது.

மெய்க்கயிற்றில் பொய்ப்பாம்பைக் காண்பது அக்கயிற்றில் அப்பாம்பை ஆரோபிப்பதாகும். ஆனால் மெய்யான பாம்பை ஒருவன் முதலில் கண்டிருக்கவேண்டும். அவன்தான் கயிற்றில் பாம்பை ஆரோபிப்பான், மற்றவனால் அது முடியாது. அது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போல் மெய்ப் பிரமத்தில் பொய்ப் பிரபஞ்சத்தை ஒருவன் ஆரோபிப்பாளுயின், அவன் அதற்குமுன் மெய்ப் பிரபஞ்ச மொன்றைக் கண்டவனுயிருக்கவேண்டும். அப்பிரபஞ்சம் எது? அதற்கு விடையாகப் பொய்ப் பிரபஞ்சத்தை ஆரோபிப்பதற்கு முன் மெய்ப் பிரபஞ்சக்காட்சி அவசியமில்லை. பொய்ப் பிரபஞ் சத்தைக் கண்டே பொய்ப் பிரபஞ்சத்தை ஆரோபிக்கலாம் என்பாரவர். அதற்கு அவர் கூறுங்கதை.

'ஒரு புருஷன் உண்மையான மாமரத்தைப் பார்த்ததில்லை. ஆனுல் இந்திரசாலக்காரனுல் காட்டப்பட்ட பொய்ம் மாமரத்தைப் பலமுறையும் பார்த்திருக்கிருன். இதுதான் மாமரமெனப் பன்முறையும் அச்சாலக்காரன் சொல்லக் கேட்டுமிருக்கிருன். இத்தகைய புருஷன்; ஒருநாள் வழியே போய்க்கொண்டிருக்கும்பொழுது அங்குள்ள இலுப்பைமரம் ஒன்றைப் பார்த்தான். அவன் இலுப்பை மரத்தையும் இதன் முன்னர்ப் பார்த்ததில்லை, அதைப் பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை. அதனுல் ஷ இலுப்பை மரத்தை மாமரமென நினைத்தான். இங்கு இலுப்பை மரத்தில் மாமர அத்தியாசமுண்டாயிற்று. இலுப்பை மரம் உண்மை. மாமரம் பொய். மாமரஞானம் முன் புண்டாய் அது சம்ஸ்கார ரூபமாயிற்று. பின் இலுப்பை மாமரமாய்ப் பார்க்கின்றபொழுது மாமர அத்தியாசம் உண்டாயிற்று. இதனுல் உண்மைப்பொருளின் ஞான சம்ஸ்காரமே அத்தியாசத்திற்கு ஏது எனச் சொல்லியது பழுதுபட்டுப்போய், சம்ஸ்காரத்தை உண்டுபண்ணும் பொருளும், அதன் ஞானமும் பொய்யாகவும் இருக்கலா மென்பது பெறப்பட்டது' (மு - மை 163) என்பது.

அங்ஙனமாயின் மெய்ம்மரத்தைக் காணுமல் சாலமரத்தைக் கண்டுபோனவன் இருக்கட்டும். அச்சாலக்காரன் அச்சால மரத்தை மாமரமென்று எப்படிச் சொன்னுன். உண்மையான மாமரத்தை அவன் முன்னர்க் கண்டிருந்தான். அதனுற்ருன் அவன் அப்படிச் சொன்னுன். இல்லாவிட்டால் அதனை மாமர மென அவனுல் சொல்லமுடியாது. மெய்ம்மாமரத்தைத் தெரிந் தவன் ஒருவன். தெரியாதவன் இன்னொருவன். இவனுக்கு அவன் அம்மரத்தின் பெயரையும் அடையாளத்தையும் சொல்லி அம்மரத்தை நேரில் காட்டியோ, சாலத்தால் உண்டாக்கியும் சித்திரத்தில் வரைந்தும் வேறுமுறையிலும் காட்டியோ அறி வுறுத்துவான். அப்படியே மெய்ம்மாமரத்தைக் கண்டவனுகிய அச்சாலக்காரனிடமிருந்து முன்னர் அம்மரத்தைக் காணுதவ னுக்கு அம்மரத்தின் ஞானம் வந்தது. அச்சாலக்காரன் மெய்ம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாமரத்தைக் கண்டிராதவனுயின் அதன் பொய்த்தோற்றத்தை அவனுலும் ஆக்கமுடியாது. ஆக்கினுலும் அத்தோற்றம் மாமரமென அவனுக்கே அறியவாராது. அவனிடமிருந்து மற்றவன் எப்படித் தெரிவான்? அவன் இலுப்பை மரத்தில் மாமரத்தை எப்படி ஆரோபிப்பான்? ஆகலின் எவ்வழியாலாவது மெய்ப் பாம்புபற்றிய முற்காட்சியாகிய ஞானத்தின் சம்ஸ்காரத்தாற் ருன் கயிற்றில் பொய்ப்பாம்பை ஆரோபிக்கமுடியும் என்க.

இனி ஆரோபத்துக்கு மெய்ப்பொருள், பொய்ப் பொருள்கள்போல் அவற்றின் ஞானமும் அவசியமில்லை யென்கிருரவர். எப்படி ? பாம்பை ஒருவன் காண்கிருன். அக்காட்சி பாம்பு ஞானம். பாம்பு போய்விடுகிறது. மறுகணத்தில் அப்பாம்பு ஞானமும் நாசமாம். பின்னர் நெடுங்காலம் அவன் பாம்பைக் கண்டதில்லை. ஒரு கயிறு அவனெதிரிற் கிடக்கிறது. அதிற் பாம்பை அவன் ஆரோபிக்கிருன். முன் நசித்துப்போன பாம்புஞானம் அவ்வாரோபத்துக்கு ஹேதுவாயிருக்கமுடியுமா? முடியாது. ஆயினும் ஹேதுவொன்று வேண்டுமே. முன் நசித்துப்போன ஞானம் சம்ஸ்காரரூபத்தையடைந்து அவனது அந்தக்கரணத்தில் கிடந்தது. அந்த ஞானசம்ஸ்காரந்தான் ஹேது. அப்படிச் சொல்கிருரவர். அதுவும் பொருந்தாது. ஏன் ? ஞானமின்றி ஞானசம்ஸ்காரமில்லை. அதனை அவரும் சொன்னுர். நசித்தல் என்பது முயற்கோடு போல் சூனியமாதலா ? அன்று. ஞானம் நசித்தலாவது ஒடுக்க நிலையை யடைதலேயாம். ஆகலின் பூர்வ வஸ்துவின் ஞானம் ஹேதுவாகாது, அவசியமில்லை யென்பது செல்லாது. ஞானம் ஒடுங்கிச் சம்ஸ்கார ரூபமாய்க் கிடக்குமிடத்தை

> ‘வஸ்து ஞானத்தால் உண்டாகும் சம்ஸ்காரமும் அந்தக்கரணத்தில் தங்குகின்றது’ (மு - மை 164)

என அவரே கூறிக்காட்டினுர்.

இன்னும் பொய்ப்பிரபஞ்சத்தைக் காண்டலே போதும், அந்த ஞானசம்ஸ்காரமும் போதும், பிரமத்தில் இப்பிரபஞ்சத்தை ஆரோபிக்கலாம் என்று சொன்ன அவர் இப்பிரபஞ்சத்தை ஆரோபிப்பதற்கு முன்னர்க் கண்ட பொய்ப்பிரபஞ்சம் எது? இவ்வினு எழும். அதற்கு அவர் தரும் விடை முன் சன்மத்திலுள்ள அத்தியாசவுலகும், அதன் ஞான சம்ஸ்காரமுமே இச்சன்மத்தில் பிரமத்தினிடம் இப்பிரபஞ்சத்தை ஆரோபிப்பதற்கு ஹேது என்பதாகும். முன்சன்மத்தில் அவ்வுலகை ஆரோபமெனக் கண்டதெப்படி? இவ்வினு அடுத்து நிகழும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதற்கு அச்சன்மத்தின் முந்தின சன்மத்து அத்தியாசவுலகை யும், அதன் ஞான சம்ஸ்காரத்தையும் ஹேதுவெனச் சொல்லி விடைதரவேண்டும். அதுதான் அவரால் முடியும். அப்படி அடுக்கிக்கொண்டேபோனுல் அவ்வினுவிடைகளில் அநவஸ்தை என்னும் தோஷம்வரும்.

அக்குற்றத்திலிருந்து தப்ப அவர் இன்னெரு வழிதேடு கிருர். என்னே ?

'பிரமம், ஈசுவரன், ஜீவன், அவித்தை, அவித்தைக்கும் பிரமத்திற்குமுள்ள சம்பந்தம், இவற்றின்பேதம் ஆகிய இவ்வாறும் சொரூபத்தில் அநாதியாயிருக்கின்றன. உற்பத்தியில்லா வஸ்து சொருபத்தில் அநாதியாகும். மேலே கூறிய ஆறு பதார்த்தங்களும் உற்பத்தி இல்லா திருப்பதால் அவை சொரூபத்தில் அநாதியாயிருக் கின்றன' (மு - மை 165)

'மாயையானது ஒருகாலத்தில் பிரமத்தினின்றும் வெளிப் படுவது காரணமாக ஆதியென்று சொல்லப்படினும் இருந்துவந்ததென்று சொல்லப்படும் காரணத்தினுலே அநாதி என்று சொல்வது குற்றமன்றே,...மாயை அநா தியும் அதன் வெளிப்படுதல் ஆதியுமாம்' (அ - வு 10)

என்ருரவர்.

அந்த ஆறு பொருள்களும் சொரூப அநாதியாயின் பிரபஞ்சம் எவ்வநாதி ? அதற்கு அவர்தந்த விடை.

'உலகிற்குச் சுருதியாதிகளில் உற்பத்தி உண்டெனச் சொல்லியிருப்பது பற்றிச் சொரூபத்தில் அநாதியாயிரா விடினும் பிரவாக ரூபத்தால் அது அநாதியாயிருக் கின்றது' (மு - மை 165) என்பது.

சொரூப அநாதிக்கும், பிரவாக அநாதிக்கும் உள்ள வேறுபாடென்னே? முன்னேயது உற்பத்தியில்லாதது, பின்னே யது உற்பத்தியுள்ளது என்ருரவர். உற்பத்தி - சிருட்டி. பிரபஞ்சம் சிருட்டிப்படுவதற்கு முன்னுள்ள நிலே அதன்காரண நிலே, சிருட்டிப்பட்ட பின்னுள்ள நிலே அதன் காரியநிலே. அவ்விரு நிலேகளிலும் பிரபஞ்சம் சூனியமன்று. உற்பத்தி யாவது ஈண்டுப் பிரதம சிருட்டியாய்த்தான் இருத்தல்கூடும். பிரபஞ்சத்துக்கு அஃதுண்டு. ஆனுல் பிரபஞ்சம் முதன்முதல் இன்னகாலத்திற் சிருட்டிக்கப்பட்டதென எவ்வாற்ருனும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எவரானுங் காணமுடியாத தொன்று. அதனாற் பிரபஞ்சம் பிரவாக அநாதியெனப்பட்டது. அப்பிரபஞ்சம் மெய்ப்பொருளாகவே யிருக்கும், அத்தியாசமாயிருக்க முடியாது. மெய்ப்பொருளின் ஞானமின்றி அத்தியாசஞானம் கூடாதென்பது முன் விளக்கப்பட்டது. ஆகலின்,

> 'உத்தரோத்தர பிரபஞ்ச அத்தியாசத்துக்குப் பூர்வ பூர்வ பிரபஞ்ச அத்தியாசத்தைச்சொல்லி, அது அநாதியென் றுஞ் சொல்வதில் குற்றமில்லை' (மு - மை 166)

என்று அவர் சொன்னதும் அநவஸ்தையே. அதைவிட்டுத் தப்புவதெங்கே அவர்?

அப்புருஷன் இதன்முன் பார்த்தும் கேட்டுமிராத இலுப்பை மரத்தை இப்போது கண்டு அதில் மாமரத்தை ஆரோபித்தான் என்றாரவர். இவ்வுவமானத்தில் இலுப்பைமர ஸ்தானத்தில் பிரமத்தையும், மாமர ஸ்தானத்தில் பிரபஞ்சத்தையும் வைக்கவேண்டும். வைத்தால் இதன்முன் தான்கண்டும் கேட்டுமிராத இலுப்பைமரம் போன்ற பிரமத்தில் மாமரம் போன்ற பிரபஞ்சத்தை ஒருவன் ஆரோபித்தான் என்று சொல்ல வேண்டும். ஆனால் பிரமம் அரூபம். அதில் பிரபஞ்சரூப அத்தியாசம் எப்படி உண்டாகும்? அப்படி உண்டாகுமெனில் இலுப்பைமரவுவமை தவறேயாம். வேறோரரூபப் பொருளையே அவர் உவமையாகக் காட்டவேண்டும். மேலும் இலுப்பை மரத்தில் மாமரத்தை நினைப்பதற்குமுன் அப்புருஷன் இலுப்பை மரத்தைக் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை யென்றாரவர். கயிறு அப்படியா? கயிற்றில் பாம்பை ஆரோபிப்பவன் கயிற்றை முன்னர்ப் பலமுறை கண்டிருப்பானே. அதனால் ஆரோபம் தடைப்படுமா? ஆயின் எப்படி? அன்றியும் இலுப்பைமரத்தில் மாமர அத்தியாசம் பட்டப்பகலிலும், கயிற்றிற் பாம்பு அத்தியாசம் மயங்கிருளிலும் உளவாகின்றன. அதனையும் அவரறிக.

கயிற்றைப் பாம்பாகக் காண்கின்றானொருவன். அதற்கு ஹேதுக் காண்பவனிடமுள்ள தோஷமும், கண்ணிலுள்ள தோஷமுமாம். அவன் முன்னர் மெய்ப்பாம்பைக்கண்டு பயந்திருப்பான். அஃதவனிடமுள்ள தோஷம், பித்தம், படலம், தூரம், இருள் முதலியன கண்ணிலுள்ள தோஷம். அத்தோஷ ஜன்ய ஞானமாகும் கயிற்றில் பாம்பைக்காண்டல். ஆனால் அத்தோஷமில்லாமலே ஒன்றை மற்றொன்றாகக் காணலாமென் கிறார் அவர். அது தவறு. ஏன்? அக்காண்டலே பிராந்தி. எத்துணை அறிஞனுக்கும் பிராந்தி ஹேதுவின்றி நிகழாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த ஹேது மேலே சொல்லப்பட்ட தோஷங்களில் எதுவாயு மிருக்கலாம். ஹேதுவின்றியும் பிராந்தி நிகழுமெனில் அப் பிராந்தி எந்த முயற்சியாலும் நீங்கமாட்டாது. வேம்புக்குக் கசப்புப்போல் அப்பிராந்தி பிராந்தனுக்குச் சுபாவ குணமாய் முடியும். இன்னும் யாவருக்கும் சமமாய் ஆகாயத்தில் கூடாரத் தன்மையும், நீலநிறமும் தோன்றும். அத்தோற்றமும் அத் தோஷ ஜன்ய ஞானமே. அத்தோஷம் எது? அவர் கூறுக. கயிற்றில் பாம்பு ஓரத்தியாசம். ஆகாயத்தில் நீலம். கூடாரத் தன்மை இன்னோரத்தியாசம். அவ்விரண்டற்கும் வித்தியாசம் உண்டா? இல்லையா? உண்டெனின் அஃதெது? இல்லை யெனின்,

'அரவு உண்மையென மருள்வோனது பிராந்தி ... ஜட இருள்போய் ஜடவொளிவரின் ... நீங்கும்' (பே-தி 57) என்றாரவர்.

அவ்வொளியால் அவ்விரண்டாவது அத்தியாசம் நீங் காமை ஏன்? மேலும் கயிற்றரவுப் பிராந்திக்கு ஜடவிருள் ஹேதுவில்லையானால் ஜடவொளி அவ்விருளை நீக்குமுகத்தால் சர்ப்பப் பிராந்தியை நீக்குவானேன்?

கயிற்றுக்கும் பாம்புக்கும் ஒப்புமையுண்டு. கோணி, நீண்டு, சுருண்டு கிடத்தல் என்பது அது. அதனால் கயிற்றில் பாம்பை ஆரோபிக்கலாம். ஆனால் கயிற்றில் குடத்தை ஆரோபிக்க முடியாது. ஏன்? அவ்விரண்டற்கும் ஒப்புமையில்லை. அப் படியே பிரமத்தில் பிரபஞ்சத்தை ஆரோபிப்பதாயின் அவ் விரண்டற்கும் ஒப்புமைவேண்டும். ஆனால் அவரே,

'பிரமம் நிர்விகாரம், நிஷ்களம், நிர்க்குணம், நிராதாரம், நிரஞ்சனம், நிர்த்தோஷம், சத்து, சித்து, ஆனந்தம் முதலிய அதீத இலக்கணங்கள் அமையப்பெற்றது; உலகோ அதற்கு எதிர்மறையான விகாரம், சகளம், சகுணம், ஆதாரம், அஞ்சனம், தோஷம், அசத்து, சடம், துக்கம் முதலிய இழிந்த இலக்கணங்களைப்பெற் றது. அன்றிப் பிரமம் ஒளிபோன்றது; உலகு இருள் போன்றது. ஒளியின் முன்னர் இருளே இல்லாததாக, ஒளியிருளாதல் யாங்ஙனங் கூடுமெனக்கூறி மறுக்க' (து-வா 47)

எனக்கூறி அவ்வொப்புமை இல்லையென்றார். ஆகலின் அவ் வாரோபம் சாத்தியமன்று. ஆனால் அதை அவர் மறுப்பார் போன்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஒப்புமையில்லாமலும் அத்தியாச முண்டாகலாம்' (மு.மை 167)

என எடுத்துக்கொண்டு ஏதேதோபேசி,

'இதனுல் ஒப்புமை அத்தியாசத்துக்கு ஏதுவென்பது பரிகரிக்கப்பட்டது' (மு-மை 167) என முடித்து மகிழ்ந்தார்.

ஆனுல்,

'ஒருவனுக்குச் சர்ப்பஞானமில்லாமல் வேறு வஸ்துக்களின் ஞானமும், அதன் சம்ஸ்காரமும் இருக்கின், அவனுக்கு ரச்சுவில் சர்ப்பாத்தியாச முண்டாகமாட்டாது. எந்த வஸ்துவில் அத்தியாச முண்டாகின்றதோ, அதற்குச் சஜாதீயமான வஸ்துவின் ஞானத்தாலுண்டாகும் சம்ஸ்காரம் அத்தியாசத்திற்கு ஏதுவாகின்றது; விஜாதீய வஸ்துவின் ஞான ஜன்ய சம்ஸ்காரம் ஏதுவாகிறதில்லை. சர்ப்பத்துக்குச் சஜாதீயம் சர்ப்பமேயன்றி வேறன்று. சர்ப்பஞானமில்லாதவனுக்கு வேறு வஸ்துக்களின் ஞானமிருக்கக்கூடும். அவனுக்குச் சஜாதீய வஸ்துஞான ஜன்ய சம்ஸ்காரம் இல்லாதபடியால், ரச்சுவில் சர்ப்பாத்தியாசம் அவனுக்கு உண்டாகிறதில்லை' (மு - மை 165)

என்பதும் அவர் சொன்னது. ஒப்புமை வேண்டுமென்பதை அதில் அவர் சம்மதித்தார்.

ஆயினும் அவர் ஓயவில்லை. அவர்

'கயிற்றரவு திருட்டாந்தம் கோணரி நீண்ட வொப்புமையைப்பற்றிச் சொல்லவில்லை' (வே - நி 21)

என வாட்டத்தோடு சொல்லிக்கொண்டு.

'கயிற்றினிடத்திலேயே அரவு தோற்றுதற்கியைந்த சத்தியுளது' (து-வா 91)

எனக்கூறி அவ்வொப்புமையை மறுக்க முனைந்தார். எப்படி?

'கானலினிடத்து ... ... அசைதலுற்றுப்போகும் நீருக்கும் கானலுக்கும் ஒப்புமை யுள்ளதா ?' (வே - நி 21)

'காரணமான சுக்கில சோணிதங்களிலே காணுத தலை, கை, கால் முதலிய உறுப்புகளெல்லாம் காரியமானமனித உடலில் காணப்படுகின்றன. இதில் காரணத்திற்கும், காரியத்திற்கும் ஒப்புமையில்லையே' (வே - நி 21)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

> 'வித்திற்கும் விருக்ஷத்திற்கும் ஒப்புமையெப்படி அநாவசியகமோ அப்படிப்போலவும், இந்திரசாலக்காரனுக்கும் இந்திரசாலப் பொருளுக்கும் ஒப்புமை யெப்படி அநாவசியகமோ அப்படிப்போலவும், மனத்திற்கும் சொப்பனவுலகுக்கும் ஒப்புமையெப்படி அநாவசியகமோ அப்படிப்போலவும் சிவனுக்கும் உலகிற்கும் ஒப்புமை அநாவசியகம்' (வே - நி 22)

என்பன அவ்வொப்புமைக்கு அவர்தரும் மறுப்பாகும். அதிலும் அருத்தமில்லை. என்னை?

> 'கயிற்றரவு திருட்டாந்தம் ... ஒரு வஸ்துவில் இன்னொரு வஸ்து தோற்றுமென்பதற்கே சொல்லப்படுகின்றது' (வே - நி 21)

என ஏகாரங்கொடுத்துத் தோற்றல் மாத்திரைக்கே அத்திருட்டாந்தமாகுமென வரையறுத்துக் கொண்டாரவர். ஆனுல் அவரது மதாங்கீகாரமான தோற்றமாவது யாது? அதுதான் விவர்த்தம் என்பது.

> 'விவர்த்தத்தை அத்வைதிகள் கொள்ளுகின்ருர்கள்' (அ - வு 39) 'அத்வைதிகளோ ... விவர்த்த வுவமானங்கள்கூறி, ஆரம்பபரிணும உவமானங்களை மறுக்கின்ருர்கள்' (து - வா 79)

என்றது காண்க. அவ்விவர்த்தத் தோற்றத்துக்கு அதிட்டானமும் ஆரோபமும் வேண்டும். அவர் கொள்ளும் உவமானங்களில் அவ்விரண்டும் ஒப்புமை யுடையனவாயேயிருக்கின்றன. கயிறு அதிட்டானம். அரவு ஆரோபம். அவை யொப்பன. கிளிஞ்சல் அதிட்டானம். வெள்ளி ஆரோபம். அவை ஒப்பன. கட்டை அதிட்டானம். கள்வன் ஆரோபம். அவையொப்பன. கானல் அதிட்டானம். நீர் ஆரோபம். அவையொப்பன. அப்படியே பிரமம் அதிட்டானம். பிரபஞ்சம் ஆரோபம். ஆனுல் அவையொப்பனவா? அல்லவாகலின் அவ்விவர்த்த பட்சம் நாசமாம். ஒப்புமையை மறுப்பதற்கு அவர்காட்டுந் திருட்டாந்தங்களும் ஆபாசம். சுக்கில சோணிதங்கள், வித்து, இந்திரசாலக்காரன், மனம் என்பன அதிட்டானமும், மனிதன், விருக்ஷம், இந்திரசாலப்பொருள், சொப்பனவுலகு என்பன ஆரோபமும் ஆகா. விவர்த்தத் தோற்றத்துக்கு அவை சிறிதும் பொருந்திவாரா. வித்துக்கெட்டு மரமாகிறது. பிரமங் கெட்டுப் பிரபஞ்சமாகவில்லை. எந்த மரமும் தன் வித்தைவிடச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறிதாயிருப்பதில்லை, பெரிதுமாகிறது. அதுபோலப் பிரபஞ்சமும் பிரமத்தைவிடச் சிறிதாயிருத்தலுங்கூடாது; பெரிதும் ஆக வேண்டும். அங்ஙனமாகாமையின் கயிற்றினளவுக்குப் பாம்பு தோன்றுதலாகிய கயிற்றரவுத் திருட்டாந்தத்தை அவர்விடுக.

இனிக் கயிற்றிற் பாம்பைத் தோற்றுவது அவற்றின்பால் உள்ள ஒப்புமையன்று, கயிற்றின்பாலுள்ளதொரு சத்தியே என்றுரவர். அதற்கவர் கூறும் அளவை,

> 'கயிற்றின்கண் அரவு தோற்றுதற்கியைந்த சத்தியிராவிடின் அரவு தோன்றாது. அந்தச் சத்திக்கு அரவை உள்ளதாகவும் இல்லாதாகவுந் தோற்றுவிக்கச் செய்யும் வல்லமையுண்டு. ...இவ்வித மாயஞ்செய்யுஞ் சத்தி உள்ளதா, இல்லாதாவென ஆராயின், கயிற்றின்கணுள்ள சத்தியை நாம் என்றுங் கண்டதில்லை; அனுமானத்தினுல் உண்டென்று கணிக்கின்றேம். அனுமானத்திற்குப் பிரத்தியட்சம் வேண்டும்; அனுமானித்தற்குப் பிரத்தியட்சமாயுள்ளது புகை. புகை சத்தாயிருந்தாற்றான் நெருப்புண்டென அனுமானித்தற் கிடனும். உள்ளதாய்க் காணப்பட்ட புகை பனியாகி அது காரணமாக அப்புகை அசத்தென்று துணியப்படு மிடத்து நெருப்பென்பதேது? அதுபோலப் பிரத்தியட்ச ஸ்தானத்திலிருக்கும் அரவு விசாரணையில் அசத்தாய்ப் போகுங்கால் அது காரணமாகத் துணியப்பட்ட (கயிற்றின்கண் இருப்பதாய்க் கொண்ட) சத்தியென்பதேது? இவ் விசாரணையில் அசத்தென்று துணியப்பட்ட சத்தியானது அரவை மெய்யாகவும், பொய்யாகவும் செய்விக்கும் வல்லபத்தைப் பெற்றிருக்க வில்லையா?'
> (அ - வி 130, 131)

> 'ஒருபொருளை அனுமானிக்க வேண்டுமாயின் அனுமானத்தில் ஏது சத்தாயிருத்தல் வேண்டும். அங்ஙனம் இராவிடில் பொருள் சித்தியாது. புகையாகிய ஏது சத்தாயிருந்தாற்றான் நெருப்பென்பது சித்திக்கும். புகையாகக் காணப்பட்ட ஏது பனியாகி அதனுல் புகையென்பது பொய்யாய்ப் போமாயின் பின்னர் நெருப்பென்பது சித்திக்குமா? பனியைப் புகையென மருண்டு அதனுல் நெருப்புண்டெனச் சொன்னுலும் புகை பொய்யெனத்தெளிந்தபோதும் நெருப்புண்டெனச்சொல்லப் படுமா?' (வே - தீ 41) என்பது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதன் ஆபாசத்தையுந் தெரிக. இவ்வளவையில் நெருப்பு, பனி, புகை, கயிறு, அரவு என்பன வருகின்றன. அவற்றைக் கொண்டு கயிற்றில் அச்சத்தி உண்டென்பதை அவர் நிரூபிக்க முயல்கிறார். உண்மையில் புகையென்பதுகிடையாது. பனியைப் புகையென மருண்டான் ஒருவன். அதனால் அப்புகை பனிப் புகை என்பதாயிற்று. இன்னொருவன் கயிற்றை அரவென மருண்டான். அதனால் அவ்வரவு கயிற்றரவு என்பதாயிற்று. அவன் அப்பனிப்புகையை விசாரித்துப் பனியெனத் தெளிந் தான். இவன் இக்கயிற்றரவை விசாரித்துக் கயிறெனத்தெளிந் தான். பனிக்கும் புகைக்கும் உள்ள ஒப்புமையே பனிப்புகைத் தோற்றத்துக்கிடனாயிற்று. கயிற்றுக்கும் அரவுக்கும் உள்ள ஒப்புமையே கயிற்றரவுத் தோற்றத்துக் கிடனாயிற்று. விசாரணை யில் அப்புகை அசத்தானால் பனி மிஞ்சும். அவ்வரவு அசத் தானால் கயிறு மிஞ்சும். அவ்வளவே. கயிற்றில் அரவைத் தோற்றுஞ் சத்தி உண்டென்பதுபோல் பனியில் புகையைத் தோற்றுஞ் சத்தி உண்டென்பதாயிற்று. கயிற்றரவு, பனிப் புகை, கட்டையிற் கள்வன், கிளிஞ்சில் வெள்ளி எல்லாம் ஒன்றுதான். அத்திருஷ்டாந்தங்களை அடுக்கிப் பயனில்லை. அவற்றில் அச்சத்தியுண்டா? உண்டென்பதற்குப் பிரமாண மென்ன? அதைவிட்டுக் கயிற்றரவுக்குப் பனிப்புகையை முட்டுக்கொடுப்பது செல்லாது. அன்றியும் கயிற்றரவும், பனிப்புகையும் சரி, நெருப்புக்கு உவமேயம் எது? அவர் கூறுக. இன்னொன்று. நெருப்பென்பதேது? என ஒரு வினுக் கேட்டு அதுபோலச் சத்தி என்பதேது? என மற்றொரு வினுவுங் கேட்டாரவர். அவர் கூறியதில் நெருப்பு உவமான மும், சத்தி உவமேயமுமாகவாயிருக்கின்றன? மேலும் நெருப்பு ஒருபொருள். சத்தி கயிற்றிலுள்ளதொரு குணம். பொருளைச் சத்திக்கு உவமை சொல்லலாமா? சித்துக்குச் சடத்தையும், சடத்துக்குச் சித்தையும் உவமை கூறுவது தவறென அவரே சொல்வர். அதுபோன்றதுதான் இதுவும். இவ்வளவையில் இன்னும் பிழைகளுள. கயிற்றில் பாம்பைத் தோற்றுஞ் சத்தி உண்டு என்பதை அவ்வளவை சிறிதும் நிரூபிக்கவில்லையென் பதுவரை இங்கு ஆராய்ந்து காட்டப்பட்டது.

கயிறு சடம். அதிலுள்ளதாக அவர் சொல்லுஞ் சத்தி அதற்குத் தெரியாது. ஆனால் இராமன் சேதனன். அவன் போலிருக்கிறான் இலக்குவன். அவ்விராமனை இலக்குவன் எனக் காண்கிறான் ஒருவன். அது இராமனிடம் இலக்குவனை ஆரோபித்தலாகும். ஒப்புமை தவிர இராமனிடம் இலக்கு வனைத் தோற்றுஞ் சத்தியுளதாயின், அச்சத்தி அவனல்லாத

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறருக்குத் தெரியாமலிருக்கலாம். சேதனனுகிய அவனுக்கும் அது தெரியாமலாபோம் ? அவன் அச்சத்தியால் ஒரு பூனையாக வுந்தோன்றலாமே. ஆனல் அப்படித் தோன்ருன் அவன். ஏன் ? இலக்குவனுகவோ பூனையாகவோ வேறேதாகவுமோ தோற்றுஞ் சத்தி அவனிடம் சிறிதுங்கிடையாது.

கயிற்றிற் பாம்பு, கட்டையிற் கள்வன், கம்பளிமூட்டை யிற் கரடி, கரித்துண்டில் வண்டு, கிளிஞ்சலில் வெள்ளி, பனி யிற்புகை, கானலில் நீர் என்பன அவர் மதத்துக்கு ஊன்று கோல்போன்ற உவமைகள்.

> 'வேதாந்திகள் பூர்வபட்சமாய்ப்,பலவுவமானங்கள் சொல் லிடினும் சித்தாந்தமாகச் சொல்வது கயிற்றரவு முதலிய விவர்த்தபட்ச மென்பது...யாவரும் அறிந்த விஷயமே யாம்' (வே - தீ 41) என்ருரவர்.

அவற்றுள் அதிட்டானங்களாகிய கயிறும், கட்டையும், கம்பளிமூட்டையும், கரித்துண்டும் அசேதனங்கள். ஆரோபங் களாகிய பாம்பும், கள்வனும், கரடியும், வண்டும் சேதனங்கள். பிரமத்துக்கு அவ்வசேதனங்களையும். பிரபஞ்சத்துக்கு அச் சேதனங்களையும் உவமையாக்கிஞரவர். அது தகுமா ?

> ' சடத்தைக் கொண்டுபோய்ச் சித்துக்கு உவமானங் கூறி இடர்ப்பட வேண்டியதின்று' (ப் - வி 7 - 21 - 140)

> ' பிரமாணவரை சிறிதுமில்லாத அமூர்த்தவஸ்து உபமே யத்துக்குப் பிரமாணவரை முற்றுமுள்ள வுபமான மெங்ஙனே பொருந்தும் !' (து - வா 15)

என எதிரியை நோக்கிக் கூறிய அவர் தம்மளவில் அந் நியதியி லிருந்து தவறிவிட்டாரே! இன்னும்

> ' ஜடப்பொருளினின்றும் சேதனம் உண்டாயிருக்கின்ற தென்று மெய்ப்பிக்கவே முடியாது. (ப்-வி 11-4-68)

என அவரே சொன்னுர். அது கயிற்றிலிருந்து பாம்பு உண்டா யிருக்கிறதென்ற அவர் மதத்துக்கே மாறு. ஆகலின் பாம்பு முதலிய சேதனங்களினின்று கயிறு முதலிய அசேதனங்கள் உளவாயிருக்கின்றன வெனச் சொல்வதானுல் மட்டில் சேதன மாகிய பிரமத்தினின்று அசேதனமாகிய பிரபஞ்சம் உண்டா யிருக்கிறதென அவர் கொள்ளலாம்.

> 'சித்தில் ஜடந்தோன்ருதென ... இவர் முன்னேர் எழுதி வைத்த நூலை' (வே - நி 13)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனப் பிறரை மறுக்கப் புகுந்த அவர் மதத்துக்கு அதுதான் பொருந்தும்.

> ' கயிறு வேண்டாத ஒருவனுக்கும் அரவின்கண் கயிறத்தியாச முண்டாகின்றது. (அரவைக் கயிறென்றெடுக்கப் போதலுமுண்டு) ' (மு - மை 166) என்றுரவர்.

இது அரவிற் கயிற்றை ஆரோபித்தலாகிய அரவுக்கயிரும். இவ்வரவுக்கயிற் றத்தியாசந்தான் ஆவருக்குகந்த உவமை யாகற்பாலது. எப்படி? சேதனமாகிய பிரமத்தில் அசேதனமாகிய பிரபஞ்சந் தோன்றிற் றென்னும் உவமேயத்துக்குச் சேதனமாகிய அரவில் அசேதனமாகிய கயிறு தோன்றிற்றென்ற அரவுக்கயிற்றுவமையே சரியானது. அசேதனமாகிய கயிற்றில் சேதனமாகிய அரவு தோன்றிற்றென்ற கயிற்றரவுவமை சிறிதும் ஏலாது. அங்ஙனமாயின் அரவிற்கயிறு, கள்வனிற் கட்டை, கரடியிற் கம்பளிமூட்டை, வண்டிற் கரித்துண்டு என அவ்வுவமைகள் அனைத்தையும் மாற்றிவைத்து விவர்த்தம் பேசுவதுதான் அவருக்கு நியாயம். ஆனால் பாம்பைக் கயிறென் றெடுத்தவனும், கள்வனைக் கட்டையெனச் சமீபித்தவனும், கரடியைக் கம்பளி மூட்டையெனத் தழுவிக் கொண்டவனும், வண்டைக் கரித்துண்டெனத் தொட்டவனும் சாவர் அல்லது துயரமாவதடைவர். அவர்க்கெல்லாம் சாதன சதுஷ்டயங்களில்லாமலே கதி கிடைத்துவிடும். அதற்கஞ்சினர் மாயாவாதர். அன்றியும் அவர் பிரமமும் நேரிய ஆராய்ச்சியில் அசேதனமாகவே முடியும். அதனாற்றான் பிரமஸ்தானத்தில் அசேதனவுவமைகளை வைத்தாரவர். கிளிஞ்சல் வெள்ளியுவமையில் கிளிஞ்சலும் வெள்ளியுமே அசேதனம். பனிப்புகை கானல்நீர் என்பவற்றிலும் அதுவேயாம். இவ்வுவமைகளில் சீவன்களும் அசேதனமாயின. ஆகவே அத்தனை உவமைகளாலும் சீவன்களும் பிரமமுமே அசேதனமென்பது போதரும்.

> ' இப்பியின்கண் வெள்ளி தோன்றுமே அன்றி வெள்ளியின்கண் இப்பி தோன்றுதன்றே ' (ச - சு 82)

என்றுரவர். இப்பி பிரமத்துக்குவமை. வெள்ளி பிரபஞ்சத்துக்குவமை, அரவு கயிறாகத் தோன்றும்போது வெள்ளியும் இப்பியாக ஏன் தோன்றாது?

கயிற்றிலுள்ள விவர்த்தசத்தி பாம்பைத் தோற்றுவது போல் பிரமத்திலுள்ள விவர்த்தசத்தி பிரபஞ்சத்தைத் தோற்றுமென்பாரவர். அஃதவசியமா? தோழரிருவர் ஒருங்குசெல்கிறார். வழியில் கயிறு கிடக்கிறது. அவருள் ஒருவன் அதைப் பாம்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என மருள்கிருன். இன்னெருவனுக்கு அம்மருள் உண்டாவ தில்லை. அவனுக்கு அது கயிருகவேதோன்றும். அவ்விரண்டும் அனுபவம். ஆகலின் கயிறு அரவாகவும், அதுபோல் பிரமம் பிர பஞ்சமாகவும் தோன்ற வேண்டுமென்ற அவசியம் கிடையாது.

மேலும் கயிறு பாம்பைமாத்திரம் தோற்றுமென்பதுண்டா? ஒருவனுக்குப் பல சந்தர்ப்பங்களில் அல்லது பலருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் அது பாம்பையும், மாலையையும், ஓலையையும், கம்பியையும், அன்ன பிறவற்றையும் தனித்தனி தோற்றும். ஏன்? அதுவும் அவையும் ஒப்புமையுடையன. ஆனல் பிரமம், அல்லது அதன் விவர்த்தசத்தி பிரபஞ்சமொன்றையே தோற்று கிறது; கயிறு அல்லது அதன் விவர்த்த சத்திபோல் பல வற்றைத் தோற்றவில்லை. அஃதேன்?

அதற்கு விடைபோல் அவர் ஒன்று சொல்லினர். பிரபஞ்ச மென்ற பெயர் ஒன்ருயினும் அதன் பொருள்கள் பலவகைகளே என்பது அது.

> ' மரம் மரத்துடன் சம்பந்தம் சஜாதீயம்; மரம் கல்லுடன் சம்பந்தம் விஜாதீயம்; மரம் தன்னிடத்தினின்றும் தோற் றிய அரும்பு, பூ, பிஞ்சு, காய், பழங்களுடன் சம்பந்தம் சுவகதம் ' (பஞ்ச 22)

> 'வித்துடனே வித்து ஜாதியல்லாத நீர்முதலியன சேர்ந்து விருக்ஷமாகின்றது ' (து - வா 83)

என்பதும் அவர் சொன்னது. வித்து ஜாதியல்லாத - வித்துக்கு விஜாதீயமான - விருட்சத்தில் நீர், உரம் முதலியன சேர்ந்து விட்டன. ஆகலின் அவ்விஜாதீயங்களேயும் விருட்சத்துக்குச் சஜாதீயமென்னலாம். ஒட்டு மாமர முதலியவற்றை ஆராய்ந் தால் சஜாதீயங்கள் சுவகதமாதல் கூடும். ஆகலின் பிரபஞ்ச முழுவதும் ஓரேவகையென்பது சித்தம். பிரமம் கயிறுபோல் பலவேறு சாதிகளைத் தோற்ருதென்பதை அதனுல் தெரிக. பிரபஞ்சம் யார்க்கும் ஒன்றுபோலவே இருக்கும். யார்க்கும் குடம் குடமே, துணி துணியே, நீர் நீரே, மண் மண்ணே, ஆகாயத்தில் கூடாரம் நீலம் முதலிய தோற்றங்களும் அப்படித் தான். ஆகலின் பிரபஞ்சம் கயிற்றரவுபோல் தோற்றமன் றென்க.

உலகான பின்னரும் உலகாதற்கு முன்னரும் பிரமத்தின் கண் விவர்த்தசத்தியாகிய மாயை இருக்கிறதென்ருரவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'மண்ணிலிருக்கும் கடசத்தி கடமுண்டான பிறகும், உண்டாதற்கு முன்னு மிருப்பதுபோலும், கயிறு அரவாய் ஆதற்கியைந்த சத்தி கயிருயிருக்குங் காலத்தும் அரவாய் ஆன பின்னரும் இருக்கின்றமைபோலும் உலகான பின்னரும் உலகாதற்கு முன்னரும் பிரமத்தின் கண் மாயையிருக்கிறதென் றறியக்கடவர்' (வே-தீ 32)

என்றது காண்க. அங்ஙனமாயினும் மண்ணிற்கடமும், கயிற்றில் அரவும் எப்போதும் தோன்றிக்கொண்டிருப்பதில்லை. அதுபோல் அம்மாயையில் பிரபஞ்சம் எப்போதுந் தோன்றிக்கொண்டிருக்குமென்று சொல்லமுடியாது என்பாரவர். ஆயின் குலாலன் கையில் மண் குடமாகும். பிராந்தன் எதிரில் கயிறு பாம்பாகும். பிரமம் பிரபஞ்சமாதல் யார் கையில்? யார் எதிரில்? அவரும் வேருக உளராதல்வேண்டும். அவருக்கிடம் அம்மதத்திலில்லை.

திரியக்காண்டல் இரண்டுவிதம். அவற்றுள் கயிற்றில் அரவுக்காட்சி ஒன்று. ஆகாயத்தில் நீலத்தோற்றமுங் கூடாரத்தோற்றமும் இன்னென்று. தெளியக்காண்டல் நேர்ந்தால் கயிற்றரவு நீங்கும். கயிற்றில் அரவைக் காணுந்திரிவும், அது நீங்கிக்கயிற்றைக் காணுந் தெளிவும் அவ்வப்போது நிகழ்வன. ஆனுல் நீலத்தோற்றமுங் கூடாரத்தோற்றமும் ஆகாயத்தில் எப்போதுமிருக்கும். கயிற்றரவுபோல் அவையும் நீங்கலாமே. நீங்காமை ஏன்? அதற்கான தெளிவு எப்போது வரும்? அரவு நீங்கிய தெளிவில் கயிறு காணப்படும். நீலமுங்கூடாரமும் நீங்கினுல் அத்தெளிவில் காணப்படுவது எது?

கயிறு சத்து, கயிற்றரவு சத்துப்போலி. அப்படியே பிரமம் சத்து, சீவன் சத்துப்போலி. சீவன் தன்னை அப்போலியென உணரவேண்டும். உணர்ந்தால் அதுபிரமமாகும் என்பாரவர். உவமானத்தில் சீவ (மனித) ஸ்தானத்தில் கயிற்றரவு இருக்கிறது. அச்சீவன்போன்று அவ்வரவன்றே தன்னைச் சத்துப்போலியென உணரவேண்டும்? உணர்கிறதா? உணர்ந்து கயிருகிறதா? இல்லை. அப்படியே உவமேயத்திலுள்ள சீவனும் தன்னைச் சத்துப்போலியென உணராது. பிரமமுமாகாது. ஆகுமெனின், உவமான உவமேயங்கள் பொருந்தா. பொருந்தக்கூடிய உவமையைக் கூறுக.

கயிறு சத்தாயுள்ளது. அதனிடமுள்ள சத்தி சதசத் விலட்சணமாயுள்ளது. அச்சத்தியே அரவைத்தோற்றி இலயமாக்குகிறது. அப்படியே பிரமம் சத்தாயுள்ளது. அதனிடமுள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாயாசத்தி சதசத் விலட்சணமாயுள்ளது. அச்சத்தியே சிற்சட பேதங்களைத் தோற்றி இலயமாக்குகிறது. சத்தும், சதசத் விலட்சணமும் வெவ்வே றிலக்கணங்கள். கயிற்றின் சத்தியும், பிரமத்தின் சத்தியுங் குணங்கள். கயிறும் பிரமமும் குணிகள். குணம் சதசத் விலட்சணமாயின் குணியும் சதசத் விலட்சண மாய்த்தானிருக்கும். அல்லது குணி சத்தாயின் அதன்குணமும் சத்தாய்த்தானி ருக்கும். குணகுணிகள் தம்முள் மாறுபட்ட இயல்பினவா யிரா. ஆனால் அதை மறுப்பா ரவர். அங்ஙன மாயின் அரவு இலயமானால் கயிற்றின் சதசத் விலட்சணமான சத்தியாயிற்றே யன்றிச் சத்தாகிய கயிருகவில்லை. அப்படியே சீவனும் முத்தியில் 'நான் பிரமத்தின் சதசத்விலட்சண மாயா சத்தியானேன், அல்லது பிரமத்தோடு கூடிய மாயையானேன்' என்றுதான் சொல்லவேண்டும். 'நான் (சத்தாகிய) பிரமம் ஆனேன்' என்று சொல்ல அதற்கு வாயில்லை.

கயிற்றின் சங்கற்பமின்றி அரவு தோன்றுவதுபோல் பிரமத்தின் சங்கற்பமின்றிப் பூரணப்பிரமம், ஈசுரன் முதலிய சகல சிற்சட பேதங்களுந் தோன்றுமென்பாரவர். அரவு விஷ யத்தில் கயிறுபோல் பிரபஞ்ச விஷயத்தில் பிரமமும் பொறுப் பற்றுக் கிடக்கிறதென்பது அதனுற் புலனுகிறது. சடப்பொரு ளுக்கே அக்கிடையுண்டு. சுத்தப்பிரமம் சைதனியம் என்ற தொடரில் சைதனியம் என்ற சொல்லுக்குச் சடமென அவர் பொருள் கொண்டிருப்பர் போலும். அந்தப் பிரமத்தின் பிரதி பிம்பமெனப்படும் ஏனைப் பிரமங்களுக்கு மாத்திரம் பிரபஞ்சப் பொறுப்பு எப்படி வந்திடும்? சட்டியில் இல்லாதபொழுது அகப்பையில் வருவது ஒன்றுமில்லை. ஒருக்கால் சிருட்டியாதி சங்கற்பம் மாயாகாரியம் என்னலா மவர். ஆயின் மாயையே பிரமமென்றுதான் அவர்சொன்னவராவர். வேறொரு பிரமத்தை அவர்கொள்வது வீண். பிரமத்துக்குப் பிரபஞ்ச சிருட்டியாதி களிற் சங்கற்பமில்லை யென்பது மாத்திரமா, பிரபஞ்சத்தை அறியும் வாய்ப்புமில்லை யென்பார் அவர். அவ்வறியாமை அவராலேயே.

> 'இராமன் தன்னிடத்திற் கற்பிதமாய்த் தோன்றுகின்ற இலட்சுமணனைக் காணுதல் எவ்வாறின்ருே, அவ்வாறே பிரமந் தன்னிடத்திற் கற்பிதமாய்த் தோன்றுகின்ற உலகத்தைக் காணுத லின்றென்க' (அ - வி 62)

எனக் காட்டப்பட்டது. தன்னிடத்திற் கற்பிதமாகிய அரவைக் கயிறு காண்பதில்லை. தன்னிடத்திற் கற்பிதமாகிய இலட்சு மணனை இராமன் காண்பதில்லை. தன்னிடத்திற் கற்பிதமாகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரபஞ்சத்தைப் பிரமம் காண்பதில்லை என்பதாயின்; கயிறு, இராமன், பிரமம் என்னும் மூன்றும் அக்கற்பிதங்களைக் காணுமைக்குக் காரணமென்ன? அதை யவர் கூறுக. தம்மையறிய மாட்டாத பிரமத்தைச் சீவன்கள் அறியவேண்டுமா? அறிவதனுல் அவற்றுக்குப் பயனிருக்க முடியுமா?

கயிற்றரவையும், அதுபோன்றவற்றையும் திருட்டாந்தமாக வைத்துச் சில அனுமானங்களைக் கற்பிப்பாரவர். அவற்றையும் பார்க்கலாம்.

1. பிரமத்துக்கு அன்னியமானவை மித்தை. இஃதவர் மதம். இதற்கு அவர் கூறும் அனுமானம்:

பிரமத்துக்கு அன்னியமானவை மித்தை	பிரதிக்ஞை
திருசியமாயிருத்தலால்	ஹேது
கிளிஞ்சல் வெள்ளிபோல	உதாரணம்

2. பிரபஞ்சம் மித்தை. இஃதவர் மதம். இதற்கு அவர் கூறும் அனுமானம்:

பிரபஞ்சம் மித்தை	பிர ...
திருசியமாயிருத்தலால்	ஹே ...
சொப்பனம்போல	உதா ...

என்பன. இவ்விரண்டிலும் திருசியமாயிருத்தல் என்பது ஹேதுவாயிற்று. திருசியமாயிருப்பது எதுவாயினும் மித்தையென்பது அவர் கொள்கை. அதன்படி அதிருசியமா யிருத்தலென்பதே சத்தையாயிருத்தலென்பதை அனுமித்தற்கு ஹேதுவாதல் வேண்டும். வேண்டவே

பிரமம் சத்தை	பிர ...
அதிருசியமாயிருத்தலால்	ஹே ...
முயற்கோடுபோல	உதா ...

என்ற அனுமானங்கூறிப் பிரம நிச்சயஞ் செய்யலாம். முயற்கோடு அதிருசியமாயிருத்தலால் சத்தையெனக் கொண்டாலென்னை? அவருக்கு அது சங்கடம். ஆதலின் ஒரு பொருள் மித்தையென்பதற்கு அது திருசியமாயிருத்தலும், சத்தையென்பதற்கு அது அதிருசியமாயிருத்தலும் ஹேதுவாகாவென்பதை அவர் தெரிக.

3. வியாவகாரிகப் பிரபஞ்சம் மித்தை. இஃதவர் மதம். இதற்கு அவர் கூறும் அனுமானம்:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வியாவகாரிகப் பிரபஞ்சம் மித்தை — பிர ...
ஞானத்தால் நிவிர்த்திக்கப்படுந்
தன்மையால் — ஹே ...
சுத்தி வெள்ளிபோல — உதா ...

என்பது. இதுவுந் தவருனதே. எப்படி? சுத்திவெள்ளியை நிவிர்த்திக்கும் ஞானம் சுத்தியையுங் காட்டியே தீரும். சுத்தி ஸ்தானத்தில் பிரமமும், சுத்தி வெள்ளி ஸ்தானத்தில் வியாவகாரிகப் பிரபஞ்சமுமாம். ஆகலின் இம்மூன்ருவது அனுமானத்தோடு

பாரமார்த்திகப் பிரமம் சத்தை — பிர ...
மித்தையை நிவிர்த்திக்கும் ஞானத்தால்
அறியப்படுதலின் — ஹே ...

சுத்தி வெள்ளியில் மித்தையாகிய வெள்
ளியை நிவிர்த்திக்கும் ஞானத்தால் சத்தை
யாகிய சுத்தி அறியப்படுதல்போல — உதா ...

என்ற அனுமானத்தையும் வைத்துப்பார்க்க. அப்போது பிரமமும் திரிசியமென்பது சித்திக்கும். அதனுல் முதலாவது இரண்டாவது அனுமானங்கொண்டு அவர் நிச்சயித்தபடி அந்தப் பிரமமும் மித்தையாய் முடிதல் நிச்சயம்.

4. பிரமத்துக்குப் பின்னமான யாவும் மித்தை. இஃதவர் மதம். இதற்கு அவர் கூறும் அனுமானம்:

பிரமத்துக்குப் பின்னமான யாவும் மித்தை — பிர ...
பிரமத்துக்குப் பின்னமாயிருத்தலால் — ஹே ...
சுத்தி வெள்ளிபோல — உதா ...

என்பது. இதுவும் பொருந்தாது. என்னே? பிரமம் சத்தை, மற்றவை மித்தையெனச் சொல்ல விரும்புகிருரவர். சத்தையும், மித்தையும் விரோத இலக்கணங்கள். பிரமமும் பிறவும் தம்முட் பின்னமாஞல் பின்னமாயிருத்தல் என்ற ஹேதுவேபற்றி அவ்விரண்டும் சத்தையும் மித்தையுமாகிய விரோத வஸ்துக்களாய்விடுமா? பின்னர்ப் பொருள்களெல்லாம் விரோதப் பொருள்கள்தானென்பதை அவர் எங்கே கற்ருர்? மேலும் சுத்தியும் வெள்ளியுமே பின்னம். சுத்தி வெள்ளி அபின்னமே. அதைப் பின்னத்துக்கு உதாகரிப்பது சரியன்று. இன்னமும் அவர் கூற்றுப்படி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரபஞ்சத்துக்குப் பின்னமான யாவும்	
சத்தை	பிர ...
பிரபஞ்சத்துக்குப் பின்னமாயிருத்தலால்	ஹே ...
சுத்திபோல	உதா ...

என்ற அனுமானமும் சித்திக்கும். ஆனுல் பின்னமாயிருத்தல் என்பது சுத்தியில் எங்கிருக்கிறது? அன்றியும்

பிரபஞ்சத்துக்குப் பின்னமான யாவும்	
சத்தை	பிர ...
பிரபஞ்சத்துக்குப் பின்னமாயிருத்தலால்	ஹே ...
பிரமம்போல	உதா ...

என்ற அனுமானமும் வரும். இதில் பிரமம் திருட்டாந்தமா யிற்று. தாட்டாந்திகம் எது? இன்னும்

பிரபஞ்சத்துக்குப் பின்னமான யாவும்	
சத்தை	பிர ...
பிரபஞ்சத்துக்குப் பின்னமாயிருத்தலால்	ஹே ...
சூனியம் அல்லது முயற்கோடுபோல	உதா ...

என்றும் அனுமிக்கலாம். இதனுல் பிரமம் சூனியமாய் முடியாதா?

காற்றுக்குப் பின்னமான யாவும்	
உருவுடையன	பிர ...
காற்றுக்குப் பின்னமாயிருத்தலால்	ஹே ...
நீர்போல	உதா ...

என்ற அனுமானத்துக்கும் இடனுண்டாகிறது. இதில் மற்ருே ரருவப் பொருளாகிய ஆகாயம் மறக்கப்படுகிறது. ஆகவே பின்னமாயிருத்தல் என்பது ஆபாச ஹேதுவேயாமென்க.

5. பாரமார்த்தத்தில் சித்கனமாகிய பிரமந்தவிர ஏனைய வெல்லாம் மித்தை. இஃதவர் மதம். இதற்கு அவர் கூறும் அனுமானம்:

‘ பாரமார்த்தத்தில் சித்கனமாகிய பிரமந்	
தவிர ஏனையவெல்லாம் மித்தை	பிர ...
பொய்யென்று நிச்சயிக்கப்படுதலால்	ஹே ...
கயிற்றரவுபோல	உதா ...

என்பது. இதிலும் குற்றமுண்டு. என்னை? கயிற்றரவைப் பொய்யென்று நிச்சயிக்கிறவொன்று கயிற்றை மெய்யென்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிச்சயிக்கும். அதைத் தரிசிக்கவுஞ்செய்யும். ஆகையால் இவ்வனுமானம் மூன்ருவதற்குள்ள மறுப்பால் மறுக்கப்படுவது காண்க. இன்னும் பாரமார்த்திகத்தில் பிரமம் சித்கனம். கயிருே சடகனம். அதையும் அவர் இங்கு நினைக.

6. பிரமம் மித்தியா பதார்த்தத்தின் வேறு. இஃதவர் மதம். இதற்கு அவர் கூறும் அனுமானம்:

'பிரமம் மித்தியா பதார்த்தத்தின் வேறு	பிர ...
பாரமார்த்திகமாயும் சித்கனமாயு மிருத்தலால்	ஹே ...
எது பாரமார்த்திகமாயும் சித்கனமாயு மிருத்தலன்று, அது பிரமமன்று கடம் போல	உதா ...

என்பது. இதுவும் நாலாவதுபோல் ஒரு பின்னப் பிரசங்கமே. அவ்வுண்மை

மித்தியா பதார்த்த (பிரபஞ்ச)ம் பிரமத்தின் வேறு	பிர ...
வியாவகாரிகமாயும் சடகனமாயு மிருத்தலால்	ஹே ...
எது வியாவகாரிகமாயும் சடகனமாயும் இருத்தலன்று, அது பிரபஞ்சமன்று, பிரமம்போல	உதா ...

என்ற அனுமானத்தைப் போட்டுக்காண்க. பிரமமும் பிரபஞ்சமும் பின்னம் என்பது தெரியும். இதிலும் தாட்டாந்திகமில்லை.

7. வியாவகாரிக பிராதிபாசிகமாகிய சகல துவைதமும் பாரமார்த்திக சத்தியமன்று. இஃதவர் மதம். இதற்கு அவர் கூறும் அனுமானம்:

a. வியாவகாரிக பிராதிபாசிகமாகிய சகல துவைதமும் பாரமார்த்திக சத்தியமன்று	பிர ...
அநான்மாவாயிருத்தலால்	ஹே ...
(இல்லை)	உதா ...

என்பது. இதில் உதாரணமின்மைக்குக் காரணம் அச்சகல துவைதமும் பக்ஷம் என்பது. அநான்மா வென்ருரவர். அதிலுள்ள ஆன்மாவாவதெது? பிரமமே. ஆகலின் அநான்மாவாயிருத்தலாலென்பதற்குப் பிரமமல்லாததாயிருத்தலால் என்பது பொருள். ஆகலின் இவ்வனுமானத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வியாவகாரிக பிராதிபாசிகமாகிய சகல
துவைதமும் பாரமார்த்த சத்தியமன்று — பிர ...
பிரமமல்லாதனவாயிருத்தலால் — ஹே ...
(இல்லை) — உதா ...

என வெளிப்படையாகவே சொல்லிவிடலாம். இப்படிப் பிர பஞ்ச மல்லாததால் பிரமம் பாரமார்த்திகம், பிரம மல்லாததால் பிரபஞ்சம் வியாவகாரிகம் பிராதிபாசிகம் என்பதும் ஓரனு மானமா ?

b. யாது பாரமார்த்திக அசத்தன்று, அது அநாத்து
மாவும் அன்று — பிர ...
(இல்லை) — ஹே ...
சேதனமாகிய ஆன்மாவைப்போல — உதா ...

என்பது அவர்கூறிய மற்றோரனுமானம். a இல் உதாரணத்தை விட்டதற்குக் காரணஞ் சொன்னவர் b இல் ஹேதுவை விட்ட தற்குக் காரணஞ் சொல்லவில்லை. அது சரியா ? அன்றியும் அசத்தன்று என்பதற்குச் சத்தாகும் என்பதும், அநாத்துமா வன்று என்பதற்கு ஆத்துமாவாகும் என்பதும் பொருள். சத்தாகும், ஆத்துமாவாகும்; ஆன்மாவைப்போல என்பது பிழைபட்ட அனுமானமன்றோ ?

பிரமத்தைக் கயிறு, கிளிஞ்சல், கட்டை, கம்பளிமூட்டை, கரித்துண்டு, கானல், பனிபோல்வதென்றும், பிரபஞ்சத்தைக் கயிற்றரவு, கிளிஞ்சல்வெள்ளி, கட்டைக்கள்வன், கம்பளி மூட்டைக்கரடி, கரித்துண்டுவண்டு, கானல்நீர், பனிப்புகை போல்வதென்றும் அவர் சொல்வர். கயிறுமெய், அரவுமெய், கயிற்றரவு பொய். கிளிஞ்சல்மெய், வெள்ளிமெய், கிளிஞ்சல் வெள்ளி பொய். கட்டைமெய், கள்வன்மெய், கட்டைக்கள்வன் பொய். கம்பளிமூட்டை மெய், கரடிமெய், கம்பளிமூட்டைக் கரடி பொய். கரித்துண்டுமெய், வண்டுமெய், கரித்துண்டு வண்டு பொய். கானல்மெய், நீர்மெய், கானல்நீர் பொய். பனிமெய், புகைமெய், பனிப்புகை பொய். அப்படியே முயல் மெய், கோடுமெய், முயற்கோடு இல்லை. மலடிமெய், மகன் மெய், மலடிமகன் இல்லை. ஆகாயம் மெய், தாமரை மெய், ஆகாயத்தாமரை இல்லை. இப்படியே பிறவுமாம். இரண்டு மெய்களைச் சேர்த்து ஒரு சொல்லாக்கி அதைக்கொண்டுதான் ஒரு பொய்க்கு அல்லது ஓரில்லாமைக்கு உவமை சொல்ல வேண்டும். பொய் - தோற்றம். இல்லாமை - சூனியம். அப்படி யானால் பிரமம்மெய், பிரபஞ்சம்மெய், பிரமப்பிரபஞ்சமே பொய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரமப் பிரபஞ்சமென்ப தொன்றில்லை. இப்பிரபஞ்சத்தைப் பிரபஞ்சமென யாரும் தனியாகத்தான்வழங்குவர். அவ்வழக்குப் பற்றியும் இப்பிரபஞ்சம் மெய்யே, கயிற்றரவு முதலியனபோல் பொய்யன்று. அஃதறிக.

கயிற்றரவுத் திருட்டாந்தம் தமக்குச் சித்தாந்தபட்சமென்று ரவர். பிறகு அதனையும் அவர் விலக்கினர்.

'உலகம் பொருளல்ல வென்பதற்கு மாத்திரம் கயிற்றிற் பாம்பு' (வே - தீ 28)

'கயிற்றரவு உவமானத்தைக் கூறுதல் தோற்றல் மாத்திரைக்கே' (மு - மை 171)

'கயிற்றரவு திருட்டாந்தம் யாதுக்குச் சொன்னதென்னில் ஒரு பொருளின்கண் இன்னொருபொருள் அத்தியாசமாய்த் தோற்றும் என்பதுமட்டிலாம்' (வே - நி 16)

'அதிஷ்டானத்தைத்தவிர ஆரோபமில்லை என்பதுவரையில் கயிற்றின்கண் அரவு' (ஆ - நா 2, 3)

என்றதுகாண்க. அவரிட்ட மாத்திரம், மாத்திரை, மட்டில், வரையில் என்ற வரம்பினுள்ளும் அத்திருட்டாந்தம் பொருந்தவில்லை என்பது இதுவரை ஆராய்ந்து காட்டப்பட்டது.

6. கானல் நீர்

கயிற்றில் அரவைக்கண்டு மயங்கினவன் தெளிந்த பின் அவனுக்கு அவ்வரவு மறைகிறது. ஆனால் பிரமத்தில் பிரபஞ்சத்தைக்கண்டு மயங்கியவன் பிறகு சோதனைசெய்து அக்கயிற்றரவுபோலுந் தோற்றமேயெனத் தெளிந்த பின்னரும் அவனுக்கு அப்பிரபஞ்சம் மறையாமல் தோன்றிக்கொண்டேயிருக்கிறது. அஃதொரு குற்றம். ஆயினும் கானல் நீரை அசத்தெனத் துணிந்த பின்னரும் அத்துணிந்தவனுக்கு அந்நீர் தோன்றிக்கொண்டேயிருக்கிறது. அதுபோலும் அப்பிரபஞ்சம் என்பாரவர். இஃதவர்தந்த விளக்கம். இதனால் அக்குற்றம் பரிகரிக்கப்பட்டதென்பது அவர் கருத்து.

'கயிற்றைத்தவிரப் பாம்பு இல்லையெனத் தெளியின் பின்னர்ப் பாம்பு தோற்றுவதில்லை. உலகு காரணத்தையன்றி இல்லையென்றுணரினும் மீண்டும் தோற்றுகின்றது...இனி அத்தோஷமும் வாராமற் பரிகரிக்கின்றோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஃதியாதெனின் கானனீராம். கானலையன்றி நீர் முக்காலத்து மின்றெனத் துணியினும் மீண்டும் தோற்றிக்கொண்டேயிருக்கின்றது. அதுபோல் உலகம் அசத்தெனத் துணியினும் தோற்றிக்கொண்டேதானிருக்கும்' (வே - தீ 28)

'உலகம் அசத்தென்றுணரினும் பெயர்த்தும் தோற்றும் என்பது வரையிலுமாத்திரம் கானனீர் திருட்டாந்தமாம்' (வே - தீ 28)

என்றது காண்க. இதுவுஞ்செல்லாது. ஏன்? தோற்றம் என்ற மட்டில் கயிற்றரவும், கானல்நீரும் ஒன்றே. ஆகலின் கயிற்றரவுக்குள்ள மறுப்புக் கானல் நீருக்குமாகும். ஆனால் மீண்டு மீண்டும் அதாவது இடைவிடாது தோன்றிக்கொண்டிருத்தல் என்பதே இங்கு ஆராயவேண்டுவது. தெளியாதவனுக்குந் தெளிந்தவனுக்கும் அந்நீர் ஒப்பத் தோன்றிக்கொண்டிருந்தால் தெளியாதவனிவன், தெளிந்தவனிவன் எனக் காண்பதெப்படி? தெளியாதவன் அந்நீரை அருந்தலாமென எண்ணி அதை நோக்கி நடந்து நடந்து ஏமாறுவான். தெளிந்தவனோ அங்ஙனம் ஏமாறான் என்னலாம் அவர். அதனால் கானல்நீர் தோற்றமன்று, எப்போதும் உண்மையென அவர் சொல்லாமற் சொன்னவரானார். அவ்விரண்டுபேருக்கும் ஒப்பத் தோன்றிக் கொண்டிருக்கும் அக்கானல்நீரை மித்தையெனத் துணிதற்கு அத்தெளியாதவன், தெளிந்தவன்பாலன்றி அந்நீரிலேயே ஏதேனுமொரு ஹேதுவுண்டா? இல்லை. அதுபோல நிலையாகத் தோன்றிக்கொண்டிருக்கிற பிரபஞ்சத்தையும் மித்தை எனத் துணிதற்குப் பிரபஞ்சத்திலேயே ஹேதுவில்லையென்க.

கானல் நீருக்கு வெண்டேர், பேய்த்தேர்எனப்பெயருண்டு. பாலை நிலத்தில் முதுவேனிற் பருவத்தில் ஞாயிற்றின் கதிர் கடுமையாகி ஒளிவீசும். அக்கடுங் கதிரொளியே கானல் என்பது. அவ்வொளி அந்நிலத்தில் பெரியதொரு நீர்ப்பரப்பெனத்தோன்றும். அத்தோற்றமே கானல்நீராகும். ... இரவிலும், காலையிலும், மாலையிலும், மேகங் கவிந்திருக்கும் போதும் அக்கானல் நீரிராது. அங்ஙனமாகக் கானல்நீருக்கும் பாலை நிலத்துக்கும் இயைபென்னை? ஆனால்,

'பாலைநிலத்திற் றோற்றுஞ் சலமுழுதும் பாலைநிலமே தவிர வேறில்லை' (அ - வி 33)

'கானல்நீரைக் கண்டவிடத்து சூரியகிரணமென்ற அறிவின்மையால் நீரும்' (ச - சு 81)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ப்ரம்மமே ஜடங்கட்கு முதற்காரணமாய்க் கானனீருக்கு வெப்பம்போல் நிற்றலாலும்' (ப் - வி 6.5.82)

'கானல் ஸ்தானத்தில் பிரமத்தையும், நீர்ஸ்தானத்தில் உலகையும் வைத்து, கானலில் நீர் எங்ஙனம் கற்பிதத் தோற்றமா யிருக்கின்றதோ, அங்ஙனமே பிரமத்தில் உலகு கற்பிதத்தோற்றமாய் இருக்கிறதென்று கொண்டால் மேற்கண்ட குற்றங்கள் நிகழா'(மு - மை 135) என்றுரவர்.

இவற்றில் பாலை, கானல், நீர், சூரியகிரணம், வெப்பம், பிரமம், உலகு என்பன வருகின்றன. கானல் ஸ்தானத்தில் பிரமத்தையும், நீர் ஸ்தானத்தில் உலகையும் அவர் வைக்கச் சொன்னார். கானலாவது யாது? அதனை முதல் வாக்கியம் பாலைநிலமென்கிறது; மூன்றாவது வாக்கியம் வெப்பம் என்கிறது. முன்னதைப் பின்னது மறுத்தல் காண்க. பாலை கானலாயின், அதுவே நீர்க்கு உபாதானமாதல்வேண்டும். அப்படியானுற்றுன் பாலை பிரமத்துக்கும், நீர் உலகுக்கும் உவமையாகலாம். வெப்பமும் இரண்டாவது வாக்கியத்திலுள்ள சூரியகிரணமும் ஒன்றே. வெப்பம் கானலாயின், அதுவே நீர்க்கு உபாதானமாகி வெப்பம் பிரமத்துக்கும், நீர் உலகுக்கும் உவமையாகும். அவரது [1] அத்தியாசவாதத்தில் உபாதானமும் [2] அதிட்டானமும் ஒன்றே. ஆகலின் சூரியகிரணம்அதிட்டானம், நீர் அதில் ஆரோபம் என்க. ஆனால் சூரியனின்றிச் சூரியகிரணமில்லை. சூரியன் பொருள் - கிரணம் அதன் குணம்.

'ஒளியோ பொருளல்ல; அஃது ஓர் குணம்' (து - வா 23)

என்றுரவரும். ஆகலின் சூரியன், சூரியகிரணம், நீர் என்ற மூன்றையும் உவமானமும் அம்முறையில் பிரமம், பிரமகுணம், உலகு என்ற மூன்றையும் உவமேயமும் ஆக்கவேண்டும். அப்போது சூரியகிரணம் போல்வது பிரமகுணம் என்பதாகும். அவர் மதத்தில் அக்குணமாவது சதசத்விலட்சண மாயை. சூரியகிரணம் சதசத்விலட்சணமா? அன்று. அது சத்து. அன்றியும் வெப்ப ஸ்தானத்தில் பிரமத்தை வைத்தால் குணம் உவமானமும், பொருள் உவமேயமுமாகும். ஆகலின் அத் திருட்டாந்தம் செல்லாது.

---

1 அத்தியாசவாதம் - தோன்றல்வாதம்.

2 அதிட்டானம் - நிலைக்களம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கயிற்றில் அரவு ஒன்றே தோன்றுகிறது. ஆனால் பிரமத்தில் பிரபஞ்சம் ஒன்றே தோன்றினாலும் அப்பிரபஞ்சம் பலவாக இருக்கிறது. அஃதேன்? இவ்வினாவுக்கு அவர் தரும் விடை கானல் நீர் ஒன்றுதான். அதுவே அலை, திவலை, நுரைமுதலிய பலவாகத் தோன்றுகிறது. அதுபோலும் என்பது.

'கானல் ஒன்றாயிருக்க, அதினின்றுந் தோற்றிய நீர்அலை திவலை முதலியனபோலவும் ...' (பே - தி 28) என்றது காண்க.

இதுவும் சாரமற்றது. எப்படி? அலை திவலை முதலியவும் வேறுவேறு உருவிலுள்ள நீரே. இவ்வுருவ வேறுபாடுகள் உண்மை நீரிலுமுள. அங்ஙனமாகக் கானல்நீருக்கு அவர் சென்றது அநாவசியம். இன்னொன்று. நீரும் அவ்வுருவங் களும் சடமே. பிரபஞ்சமோ சடங்களும், *'சிதாபாசன்களு'மா யிருக்கிறது. கானல்நீரில் சடங்களாகிய அலை, திவலை முதலிய போல் மீன், நண்டு, திமிங்கில முதலிய சிதாபாசன்களுந் தோன்றுகின்றவா? அல்ல.

சத்தைகள்

அடுத்த உவமானம் கனவுலகு. அதை விசாரிக்குமுன் அவர் மதத்துச் சத்தைகளைச் சிறிது தெரிதல் அவசியம். அச் சத்தைகள் மூன்று. பாரமார்த்திகம், வியாவகாரிகம், பிராதி பாசிகம் என்பன அவை.

'முக்காலத்தினும் பொய்யென்று நிச்சயிக்கப்படாதது பாரமார்த்திக சத்தை' (மு - மை 155)

'வியவகாரிக சத்தைக்குத்தான் மித்தையென்று பெயர். வியவகாரிக சத்தைக்கிலக்கணம் எந்தப் பதார்த்தம் பிரமஞான மன்றியில் பொய்யென்று நிச்சயிக்கப்பட வில்லையோ, ஆனால் பிரமஞானத்தினால் பொய்யென்று நிச்சயிக்கப்படுகிறதோ அது வியவகாரிக சத்தை' (மு - மை 155)

'தெளிவைப் பரமார்த்தம் என்றும் மயக்கத்தை வியவகார மென்றுங் கொள்' (மு - மை 159)

'ஞானமன்றியில் பொய்யென்று நிச்சயிக்கப்படும் பதார்த் தம்யாது அது பிராதிபாசிக சத்தை. சொப்பன உலகு

---

* சிதாபாசன்கள் - சீவான்மாக்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலியவை ஞானமில்லாமலும் பொய்யென்று நிச்சயஞ் செய்யப்படுவதால் பிராதிபாசிக சத்தை' (மு - மை 26)

'பிராதிபாசிகமாகவன்றி வியவகாரிகமாகக் காரணத்தினின்றும் காரியம் வருதற்கு அத்தியாவசியகமாகச் சாமக்கிரியைகள் வேண்டும் என்பது சாமக்கிரியைகளாகிய தண்டசக்கர முதலானவைகளில்லாவிட்டால் மண்ணினின்றும் கடாதிகள் வாராவென்பதினுல் உணரற்பாற்ரும்' (மு - மை 25)

என்றது காண்க. முக்காலத்திலும் சத்தாயிருப்பது பாரமார்த்திகம்; பிரமஞானத்தினுல் பொய்யென்று நிச்சயிக்கப்படுவது வியாவகாரிகம்; ஞானமில்லாமலே பொய்யென்று நிச்சயிக்கப்படுவது பிராதிபாசிகம்; காரணத்திலிருந்து துணைக்கருவிகளால் காரியம் வருவது வியாவகாரிகம்; அக்கருவிகளின்றி அது வருவது பிராதிபாசிகம் என்பது கருத்து. ஞானமில்லாமலே பொய்யென்று நிச்சயிக்கப்படுவது பிராதிபாசிகமா? எந்த ஞானமில்லாமல்? பிரமஞானமில்லாமலா? ஆயின் அது சரி. ஆனுல் எதை நிச்சயிப்பதற்கும் ஏதாவதொரு ஞானம் வேண்டுமே. ஞானமே எதையும் நிச்சயிக்க உதவுவது. பிரமஞானத்துக்கு அன்னியமானது சீவஞானம். அச்சீவஞானம் அதனைப் பொய்யென நிச்சயிக்கும் என்பதே நியாயம். ஆனுல் அச்சீவஞானத்தை அவர் உடன்படார். ஆகலின் பிராதிபாசிகம் பொய்யென நிச்சயிப்பதற்கு வாயிலில்லாமையால் பிராதிபாசிகம் பொய்யெனல் சாலாது. அவருக்குப் பிராதிபாசிகம் போன்றதே வியாவகாரிகமும். அதனுல் வியாவகாரிகம் பொய்யெனப் பிரமஞானத்தினுல் நிச்சயிக்கப்படுமென்பதும் வெறுஞ் சொல்லே. ஆகலின் வியாவகாரிகம் பொய்யென்பதுஞ் செல்லாது. வியாவகாரிகந் தோன்றுவதற்குத் துணைக்கருவிகள் வேண்டுமென்ருரவர். வியாவகாரிகப் பிரபஞ்சந் தோன்றுதற்கு அக்கருவிகள் எவை? பிரமத்தைக் குலாலன் போல்வதென்றுஞ் சொல்ல நேராதா? அவர் அக்கருவிகளையும், பிரமங் குலாலன் போல்வதென்பதையுஞ் சம்மதிப்பாராயின் பிரபஞ்சம் விவர்த்தமாயிருக்க முடியாது. சத்தைகள்பற்றிய ஒரு விளக்கம் இதுவரை ஆராயப்பட்டது. இனி அடுத்த விளக்கமாவதென்ன?

'வினு :- ப்ராதிபாஸிக சத்தாவதென்ன?

விடை :- பிரதிபலித்தலாகிய செக, சீவ, பரஞ் சகலத்திற் சத்தியப் பொருளாகக் காண்டல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வினு :- வியவகாரிக சத்தாவதென்ன ?

விடை :- விவகரித்தலாகிய விச்சா ஞானக் கிரியைகள் பிரதிபலித்த லுள்ளளவு முள்ளவாறு நிகழ்வ தாகக் காண்டல்.

வினு :- பாரமார்த்திக சத்தாவதென்ன ?

விடை :- விருத்திகளடங்கி நிற்றலாகக் காண்டல், அதாவது கேவலத்திற் பிரதிபலித்தலுஞ் சேட்டித்தலு மில்லாமை.

வினு :- இம்மூன்று முள்ளனவாயிருக்க நீ ரிதனைப்போலி சத்தென்றதென்ன ?

விடை :- இவை யொருபோ துண்டா யொருபோ தில்லா மைபற்றியென்க' (தி·தி·வி 35, 36) என்பதது.

பிராதிபாசிகமும் பிராதிபாலிகமும் ஒன்று. முதல் விளக்கம் சொப்பனவுலகைப் பிராதிபாசிக மென்கிறது. இரண்டாம் விளக்கம் செக, சீவ, பரங்களைப் பிராதிபாசிக மென்கிறது. முதல் விளக்கம் வியாவகாரிக பிராதிபாசிகங்கள் இரண்டையும் போலியென்கிறது. இரண்டாம் விளக்கம் மூன்று சத்தைகளையுமே போலியென்கிறது. இம்முரண்பாடு கொண்டும் அச்சத்தைகள் அம்மதகற்பனையே என்பது தெரியவரும்.

7. கனவுலகு

கானல்நீர் அனுபவத்துக்கு வராது. யாரும் அதைக் குடிக்கவோ, அதிற் குளிக்கவோ முடியாது. பிரபஞ்சமோ அங்ஙனமின்றிக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிந்து பலபடியாலும் அனுபவிக்கப்படுகிறது. ஆகையால் கானல்நீர் போல்வதன்று பிரபஞ்சம். அவ்வுண்மையை அவருங்கண்டார். அதனுல் கனவுலகம் அவருக்கு உவமையாகக் கிடைத்தது. கனவுலகும் கானல்நீர் போன்றதாயினும் மேற்சொன்னபடி அனுபவிக்கப்படுகிறது. அதுபோல் இப் பிரபஞ்சமுமாம். இஃதவர் தந்தவிளக்கம்.

' அனுபவ மாகின்றதைப்பற்றி வேறு திருஷ்டாந்தம் கூறு வோம்:– அஃதாவது * சந்நிபாத தோஷத்திற் காணும்

---

* சந்நிபாததோஷம் - ஜன்னிதோசம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகும், சொப்பனவுலகும், பிறவும் போலுமாம். சந்நிபாததோஷ முதலியவற்றுற் காணும் உலகு தோற்றமேனும் அனுபவத்தோடுங் கூடிய தோற்றமாம்' (வே - தீ 28) என்றது காண்க.

அதனை ஆராயலாம்:

'சொப்பனம் எப்படிப்பொய்யோ, அப்படியே சாக்கிரமும் பொய்' (து - வா 53)

'சொப்பனப் பிரபஞ்சம்போலே ஜாக்கிர நாம ரூபப் பிரபஞ்சங் கற்பிதந்தானே' (பா - இ 59, 60)

'சொப்பனம் நினைப்பளவேயானுல் கோபாதிகளுண்டாய் ஓடவேண்டிய ஆவசியகமில்லை. ஓடுதல் கர்மேந்திரியத்தின் ரெழில்; கர்மேந்திரியமோ சரீரத்தைச் சார்ந்தது; சரீரமோ பஞ்சபூத சம்பந்தம்; பஞ்சபூதமோ உலகம்; உலகமோ காக்ஷிப்பொருளாகும். சாக்கிரம்போலக் காக்ஷிப் பொருளாயிருக்கும் சொப்பனவுலகைக் கேவலம் நினைப்பளவென எங்ஙனஞ் சொல்லலாம்? எது நினைப்பளவுமாத்திரமோ, அது எதிரிற் காணப்படாது. கண்ணுக்கெதிரில் காணப்படுகின்றமையின், சொப்பனவுலகு நினைப்பளவன்று, சாக்கிரம்போலக் காட்சியளவாமென்க. காட்சியளவைக்கு நினைப்பு, இந்திரியம், பொருள்கள் ஆகிய மூன்றும் வேண்டும். சொப்பனுவஸ்தையில் ஷெ மூன்று மிருக்கின்றன வாதலால், சொப்பனக்காட்சி நினைப்பளவென்று மாத்திரஞ் சொல்லுதல் கூடாது' (து - வா 54, 55)

'கனவிற் கண்டது பொய்யாவது போல் நனவிற் கண்டதும் பொய்யாம்' (ப்-வி-வைகாசி 30 உ 345)

'மனம் சொப்பனவுலகு போலவும் பிரமமும் உலகும்' (து - வா 44)

'உண்மையான மனத்தில் சொப்பனவுலகு கற்பனையாவதுபோல இவ்வுலகும் ஒரு உண்மைப் பொருளில் கற்பனையாம்' (வே - நி 42)

'சொப்பனவுலகு எப்படி மனத்நினிடத்துத் தோன்றி விளங்கி லயமாகின்றதோ, அப்படியே இச்சாக்கிரவுலகும் சிவத்தினின்றுந்தோன்றி யிருந்து லயமாகின்றதென் றனுமானிக்கலாம்' (வே - நி 42)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'சொப்பன வுலகுக்கு மனம் விவர்த்தோபாதான காரணம். அம்மனத்தில் ஓர் சத்தியுள்ளது. அது...... [1]பின்னசத்தி...... அந்தச் சத்தியினின்றும் சொப்பன வுலகு தோற்றுகின்றது...... மனத்தைவிட அச்சத்தி வேருயிராமையின் அதை மனத்தி லடக்கி, சொப்பன வுலகிற்கு மனம் முதற்காரணமெனச் சொல்ல இடமாகின்றதோடு, சொப்பனவுலகு சத்துப்பொருளாயிராமையின் சொப்பன வுலகிற்கு மனம் விவர்த்தோபாதான காரணமென்றுஞ் சொல்ல விடமாகின்றது. அங்ஙனமே பிரமத்தின்கண் ஓர்சத்தியுள்ளது; அது ... ... பின்ன சத்தி...... அந்தச் சத்தியினின்றும் இச்சாக்கிர உலகு உண்டாயிற்று' (ப் - வி 7 – 18 - 5, 6)

'மனம்: தன்னிடத்துள்ள பின்னசத்தி காரணமாகப் பேதிக்கப்பட்ட வுலகானமையையும், பேதிக்கப்பட்ட ஜீவர்களானமையையும், சந்நிநோய் உள்ளவனது புத்தி: அதன்கணுள்ள பின்னசத்தி காரணமாகப் பேதிக்கப்பட்ட பொருள்களானமையையும், இந்திர சாலக்காரனிடத்துள்ள பின்னசத்தி காரணமாகப்பேதிக் கப்பட்ட இந்திரசாலப் பொருள்களானமையையும் உபமானங்களாகக் கொண்டால், சிவனிடத்துள்ள பின்ன சத்தியான மாயாசத்தி காரணமாகப் பேதிக்கப்பட்ட [2] சடாசட வுலகந் தோன்றுமென்பது குற்றமின்று' (பே - தி 58)

'சொப்பனவுலகிற்குக் காரணமானமனம் சூனியமாகாது. அதுபோலச் சாக்கிர வுலகிற்குக் காரணமான சிவம் சூனியமாகாது. சொப்பனவுலக காரணமனம் சூனியமானல் சாக்கிரவுலக காரணசிவம் சூனியமாகும்' (வே - நி 43)

'மனத்திலிருந்து தோற்றும் சொப்பனவுலகு வேறு எந்தப் பொருளோடு சம்பந்தப்பட்டுத் தோன்றிற்று? வேறு ஒரு சம்பந்தமுமில்லாது தோன்றியதுபோலப் பிரமத்தினின்றுந் தோன்றியவுலகும் வேறெரு சம்பந்தமுமில்லாது தோன்றிற்று' (ப்-வி 7-14-10)

---

[1] பின்னசத்தி: பின்னம் - பிரிவு.

[2] சடாசடவுலகு – பிரபஞ்சமும் ஜீவனும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

• 'சொப்பனவுலகு பொய்யானாலும் அதனுள் தொழில் நடப்பது இவரறியாததன்று... அநிர்வசனீயத்தில் சிருட்டியும்..., திதியும்..., சங்காரமும்..., திரோபவமும்..., அனுக்கிரகமும் நடக்கலாம்' (து - வா 104)

• 'சொற்பனத்திற் பஞ்சபூத பௌதிகமல்லாத பொருளை அப்பஞ்சபூதபௌதிகப் பொருளெனவும் ஆண் பெண் அலி அல்லாதனவற்றை ஆண் பெண் அலியெனவும், கர்த்தா போக்தா வல்லாதவற்றைக் கர்த்தா போக்தா வெனவும், தன்மை முன்னிலை யல்லாதவற்றைத் தன்மை முன்னிலை யெனவும், சுகதுக்க மல்லாதவற்றைச் சுக துக்கமெனவும் அப்போது உண்மையாகக் காணுமாறு போலச் செக சீவ பர மல்லாத வறிவைச் செக சீவ பரமாகக் கண் டிறுமாக்கத் தக்கது சாக்கிரமாதலா லதனைச் சொற்பனத்துக் குவமை கூறியவா ருயிற்றென்க' (தி - தி - வி 30)

• 'சொப்பன வுலகத்திற்கும் சொப்பனவுலகத்தை யுவமான மாகக்கொண்ட சாக்கிர வுலகத்திற்கும்' (ப்-வி 7-15-5)

• 'அநிர்வசனீய மென்(னும்)......இந்த இலக்கணத்தையே சொப்பன வுலகத்திற்கும் சொப்பன உலகத்தை உவமானமாகக்கொண்ட சாக்கிர உலகத்திற்கும் சொல்லத் தகுதியாம்' (ஆ - நா 4)

• 'சொப்பன மனிதர்கள் பிரதிபிம்பர்கள்; அசத்தானவர்கள். ஆகையால் அவர்கள் விவகாரமும் அசத்தே. அவர்கள் சொரூபம் உண்மையில் மனமே. அப்படியிருந்தும் அச்சொப்பனவுலகில் ஆகாயம் பூரணமென்றும். கடபடாதிகள் அபூரணமென்றும் விசாரம் நிகழ்தற் கிடனு யிருக்கின்றது' (வே·தீ 38)

• 'சராசர உலகு......வியவகாரிகசத்தை .. ... சொப்பன உலகு ... ... பிராதி பாசிகசத்தை' (மு - மை 26)

• 'சாக்கிரம் வியவகாரிகசத்து. சொப்பனம் பிராதிபாசிகசத்து' (மு-மை 223)

• 'மனத்தின்கண் தோற்றமான சொப்பனவுலகு நினைப்புக்கும் இந்திரியத்துக்கும் விஷயமாகிறபடி பிரமத்திற் ரேற்றமான சாக்கிரவுலகும் நினைப்புக்கும் இந்திரியத்துக்கும் விஷயமாகின்றதென்க' (து - வா 55)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'அது கானல் ஒன்ருயிருக்க, அதினின்றுந் தோற்றிய நீர் அலை திவலை முதலியன போலவும், மனம் ஒன்ருயிருக்க அதினின்றுந் தோற்றிய சொப்பன உலகத்தில் மக்கள் விலங்கு பறவை முதலியன போலவும், இந்திரசாலசத்தி ஒன்ருயிருக்க அதினின்றும் தோற்றிய பலபொருள்கள் போலவுமாம்' (பே—தி 28)

'இங்ஙனம் சொற்பனுவஸ்தைபோல் ஜாக்ராவஸ்தையும் பொய்யாகவே யிருக்க, அதிககால முள்ளதாகையால் ஜாக்ராவஸ்தை மெய்யென்றும் சொற்பகால முள்ளதா கையால் சொற்பனுவஸ்தை பொய்யென்றும் தோன்று கின்றது' (ப்-வி சார்வரி வைகாசி 30உ 346)

என்ருரவர். அத்தனையாலுந் தெரிவ தென்னை? சொப்பன வுலகும் சாக்கிரவுலகும் சமமான பொய்கள், கற்பிதங்கள், அநிர்வசனீயங்கள். கேவலம் நினைப்பளவினதன்று சொப்பன வுலகு. அதில்நினைப்பு இந்திரியம் பொருள்கள் இருக்கின்றன. ஆகையால் அதுவும் சாக்கிரவுலகுபோலக் காட்சி யளவினதே. மனம்போலும் பிரமம், சொப்பனவுலகுபோலும் சாக்கிரவுலகு. மனம் உண்மை. அதிற் கற்பனை சொப்பனவுலகு. அதுபோல் பிரமம் உண்மை அதிற் கற்பனை சாக்கிரவுலகு. சொப்பன வுலகு மனத்தில் தோன்றி, இருந்து, மறைகிறது. அப்படியே சாக்கிரவுலகு பிரமத்தில் தோன்றி, இருந்து, மறைகிறது. மனத்தினிடமுள்ள பின்னுசத்தியில் சொப்பனவுலகு தோன்று கிறது. அச்சத்தியை மனத்தி லடக்கி அவ்வுலகு மனத்தில் தோன்றுகிறதென்று சொல்லப்படும். அப்படியே பிரமத்தினிட முள்ள பின்னுசத்தியில் தோன்றிய சாக்கிரவுலகு பிரமத்தில் தோன்றியதென்று சொல்லப்படும். மனத்தின் பின்னுசத்தி காரணமாகச் சொப்பனவுலகு பேதிக்கப்பட்டது. சொப் பனவுலக சீவன்களும் மக்கள் விலங்கு பறவை முதலியவாகப் பேதிக்கப்பட்டன. அப்படியே பிரமத்தின் பின்னுசத்தியால் சாக்கிரவுலகும், சாக்கிரவுலக சீவன்களும் பேதிக்கப்பட்டன. சொப்பனவுலக காரணமனமும் சூனியமன்று. சாக்கிரவுலக காரணபிரமமும் சூனியமன்று. மனம் வேறுபொருள்களிற் சம் பந்தப்படாமல் சொப்பனவுலகைத் தோற்றியது. பிரமமும் அப்படியே சாக்கிரவுலகைத் தோற்றியது. சாக்கிரத்திற்போல் சொப்பனத்திலும் சிருட்டி முதலிய தொழில்கள் நடக்கின்றன. சாக்கிரம் சொப்பனத்துக்கும், சொப்பனம் சாக்கிரத்துக்கும் உவமையாகும். சாக்கிரத்திற்போல் சொப்பனத்திலும் ஆகாயம் பூரணமே, கடபடாதிகள் அபூரணமே. சாக்கிர சொப்பனங் களில் ஒன்றுபோலவே விவகாரங்களெல்லாம் நடக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாக்கிரவுலகு வியாவகாரிக சத்தை. சொப்பனவுலகு பிராதிபாசிக சத்தை. சாக்கிர சொப்பனங்க ளிரண்டுமே பொய்யாயினும், சாக்கிரவுலகு நெடுங்கால மிருப்பதால் மெய்யென்றும், சொப்பனவுலகு குறுகிய காலமே யிருப்பதால் பொய்யென்றும் சொல்லி விவகரிக்கப்படும். இத்தனையுந் தெரிகின்றன.

இனிச் சாக்கிர சொப்பன வுலகங்கள்போற் சுழுத்தியுலக மென ஒன்றுண்டா?

> ‘மனமின்றி நிகழும் சுழுத்தி’ (ப் - வி 1. ஜனவரி 30உ 124)

> ‘சுழுத்தி ... யின் கண் அறிவுளது’ (ப் - வி 1. ஜனவரி 30உ 125)

> ‘சுழுத்தியின்கண் உலகின்று’ (ப் - வி 1. ஜனவரி 30உ 125)

> ‘சுழுத்தியின்கண் சாக்ஷியாய் விளங்கும் சலனமற்ற அறிவே நித்தியமும் சத்துமாம். (அதன்கண் உலகும், உலகை யறியும் சலனமுள்ள அறிவும் ஓர்காலத்துத் தோன்றி விளங்கி மறைகின்றன)’ (ப் - வி 2–3–46)

> ‘சுழுத்தியில் ஆத்துமாவானது பிறபொருள் சம்பந்தமின்றியும் இந்திரிய அந்தக்கரணங்க ளின்றியும் தனியே யிருந்து சுகிக்கின்றது’ (வே - தீ 60)

என்றுரவர். அவற்றில் வந்துள்ள அறிவு, சலனமற்ற அறிவு, ஆத்துமா என்பன எதைக்குறிக்கின்றன? சுத்தப்பிரமத்தையா?

> ‘சுழுத்தியாதியிலேயந்தக்கரணம் :- அவித்தை கருமங்களோடே யடைந்திருக்கிறன். அஃது எப்படியென்னில்? கயிறுந்தோண்டியும், தோண்டியில் தண்ணீருங்கூடவே தடாக ஜலத்துக்குள்ளே லயித்திருந்தாலெப்படியோ அப்படிப்போலக் கயிற்றைப் பிடித்திழுத்தால் அந்தத் தோண்டியும் அந்தத் தண்ணீரும் வெளியிலே வரும். அப்படிப்போலே கரும பாசத்தினுலே அந்த அந்தக்கரணமும், அந்த ஜீவனும், சுழுத்தியாதியிலேயிருந்து வெளிக்கு வருவன். நேற்றைக்கு ஜாக்கிர சொப்பனஞ் சுழுத்திகளிலே அநுபவித்த பதார்த்தங்களையும், மறுநாள் ஸ்மரிக்கிறனே ஆனதால் அவன்றனே திரும்ப வந்தானென்று சொல்லவேண்டும்’ (பா-இ 121, 122)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றும் அவர் சொன்னார். அதனால் சாக்கிரத்தில் உள்ள சீவனே சொப்பனத்துக்குஞ் சுழுத்திக்குஞ்சென்று அம் முறையே சாக்கிரத்துக்கு வருகிறதென்று தெரிகிறது. 'அதன் கண் உலகும் ... ... மறைகின்றன' எனவும் அவர் சொன்னதால் சுழுத்தியில் உலகுண்டென்பதுந் தெரியலாயிற்று. உலகில்லாமல் கருமமும் அந்தக்கரணமும் சீவனும் இயைதலில்லை. அவர்காட்டிய உவமையில் தடாகம் சுழுத்தியும், கயிறு கருமமும், தோண்டி அந்தக்கரணமும், நீர் சீவனுமாம். ஆகையால் சுழுத்தியிலும் ஏதாவதோருலகம் இருக்கத்தானே வேண்டும்? தடாகம் பிரமத்துக்கும் உவமையாகலாம். சாக்கிரவுலகுக்குப் பிரமமும், சொப்பனவுலகுக்கு மனமும் உபாதானங்களாயின், மனமில்லாத சுழுத்தியுலகுக்கு உபாதானம் எது? ஆனால் சுழுத்தியில் உலகில்லை யென்பாரவர். அதுதொலைக. சாக்கிர சொப்பன உலகங்களே விசாரணைக்குப் போதும்.

சொப்பனவுலககாரணம் மனம் என்றாரவர். மனம் சித்தா? சடமா?

> 'ஒருபொருள் : தன்னை நோக்கச் சத்தும், மற்றப்பொருளை நோக்க அசத்துமானால் உண்மையில் அது சத்தா? அசத்தா? உண்மையான ஒருசத்துப்பொருள்: தன்னை நோக்கினும் சரி, மற்றப்பொருளை நோக்கினும் சரி, சத்து சத்தே. அது ஒருபோதும் அசத்தாகாது. அசத்துப்பொருள் அசத்துப்பொருள் ஆமேயன்றிச் சத்துப்பொருள் ஒருபோதும் அசத்துப்பொருளாகாது. எது அசத்தோ அது என்றும் அசத்தே; எது சத்தோ அது என்றும் சத்தேயாம். சத்து அசத்தாவதும், அசத்து சத்தாவதும் என்றுமில்லை. சத்துப்போற் றோன்றும் அசத்து அசத்தாகுமேயன்றி உண்மையான அசத்து ஒருபோதும் சத்தாகாது' (அ - வு 14)

> 'யதார்த்தமான ஒருபொருள் : பிறிதொன்றன் காரணத்தால் தனது யதார்த்த நிலைமையை விட்டு அயதார்த்த நிலைமையினைப் பெறுவது கூடுமா?' (து - வா 114)

என்றாரவர். எந்த நோக்கிலும் சத்துப்பொருள் சத்துப்பொருளே, அசத்துப்பொருள் அசத்துப்பொருளே என்பது அதனால் தெரிகிறது. அப்படியே எந்த நோக்கிலாயினும் சரி, சித்துச் சித்தேயாம், அசித்து அசித்தேயாம் என்பதும் உண்மை. அன்றியும் எதுசத்தோ அதுசித்தே, எது அசத்தோ அது சடமே யென்பதும் அவர் மதம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'எது அசத்தோ அது ஜடமுமாகும். சிவம் என்றும் சத்து; ஆதலால் அது என்றும் சித்தாம்' (வே - நி 42)

என்றது காண்க. மேலும்,

'கண்ணால் அசேதனவுலகை அறியும்போது கண் சித்தும், உலகு ஜடமுமாம். மனம் வேறு விஷயத்தை நாடிடுங் கால் கண்ணிருந்தும் காண்டலில்லை. காண்டலில்லாமை யால் கண் அப்போது ஜடமாகின்றது. அசேதன வுலகை நோக்கக் கண் சித்தாயினும் மனத்தை நோக்க ஜடமாகின்றது. ஒரு சமயத்தில் சித்தாயும் ஒரு சமயத் தில் ஜடமாயுமிருப்பதால் கண்ஜடசித்தென்றே கூறத் தகுதியாம். உலகுமாத்திரம் எப்போதும் ஜடந்தான். கண்ணைப்போலச் சித்ஜடமாகாது. கண்ணைநோக்க மனம் சித்தாயினும் உயிரை நோக்க ஜடமாம். ஆதலால் மனமும் சித்ஜடமாம். மனத்தைநோக்கச் சித்தாயினும் சிவத்தை நோக்க ஜீவன் ஜடமாம். ஆதலால் ஜீவன் ஜடசித்தென்று சொல்லப்படுகின்றது. இதுபற்றியே ஜீவனைச் சிதாபாசனென்று வேதமுதலிய கலைகள் கூறு கின்றன. சிதாபாசன் என்பதற்குப் பொருள் சித்துப் போலி, அல்லது போலிசித்தாம். கீழேயிருக்கப்பட்ட வற்றை நோக்க மேலேயிருப்பவை சித்தாயினும் மொத் தத்தில் சிவத்தைநோக்க யாவும்ஜடந்தான்' (வே-நி 41)

என்றாரவர். அதில் கண் சடமாகும் என்பதற்கு, 'மனம் வேறு விஷயத்தை நாடிடுங்கால்' என்றேரேதுக் கூறப்பட்டது. அது போல் மனமும் சீவனும் சடமாதற்கு ஏதேனும் ஏதுக்கூறல் அவசியம். அதை அவர் கூறவில்லை. ஏனோ? இன்னொன்று. சடசித்தென்பதுபற்றிச் சீவன் சிதாபாசன் எனப்பட்டால் அதுவே பற்றிக் கண்ணும் மனமுமே சிதாபாசன்கள் எனப் படலாம் ஆனால் அவற்றை அவர் அப்படி வழங்கார். அதுவும் ஏனோ? பிரமம் என்றும் சித்து, கண் மனம் சீவனாகிய மூன்றும் சடசித்து, உலகம் என்றும் சடம் என முப்பிரிவுகள் உளவாதல் அவர் கூற்றால் தெரிகிறது. அக்கண் முதலிய மூன்றனுள் அவர்

'சீவனிடத்துச் சீவேசவுலகந்தோன்றியதெனக் கூறுதல் யாண்டுமின்றே' (அ-வி 70)

என்று கூறுவதால் சீவனிடத்தில் எத்தகைய வுலகும் தோன்ரு தென்பதறியப்படும். அப்படியே கண்ணிடத்துமாம். மன மாகிய சடசித்தில்மாத்திரம் சொப்பனவுலகு தோன்று மென் பது எப்படிக் கூடும்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்னும் சடத்திலிருந்து சித்துத் தோன்றுமென்பதை மெய்ப்பிக்க முடியாதென்றாரவர். சித்திலிருந்து மாத்திரம் சடந்தோன்றுமா? ஆமெனக்கூறி அதனையும் மெய்ப்பிக்க முடியாது. சடமுஞ் சித்தும் எதிர்மறைகள். அதனாலன்றோ சாக்கிரவுலகத் தோற்றத்தின் பொருட்டுப் பிரமத்திலேயே சடமானதொரு மாயையும் கற்பித்தாரவர்.

'பிரமத்தில் அவாந்திரமாயிரா நின்ற பின்னாசத்தியான மாயை விரிதலே யுலகு; குவிதலே சத்தி; அல்லது சத்தியையுடைய பிரமம். அந்தச் சத்தியும் தோற்றமே; உண்மையல்ல' (ப் · வி 7–18–7)

'ப்ரமத்தின்கண் இருவித சத்திகள் உள்ளன. ஒன்று அபின்னாசத்தி, ஒன்று பின்னாசத்தி. இந்தச் சடசத்தி தான் மாயை...மனம் சித்தாயினும் அதிலுள்ள பின்னா சத்தியானது சடமானதால் அதன் காரியமானவுலகும் சடமாகத் தோற்றுகிறது. அப்படியே ப்ரமத்தினிடத் துள்ள மாயா சத்தியான பின்னாசத்தி சடமானதால் அதன் காரியமானவுலகும் சடமாகத் தோற்றுகின்றது' (ப் · வி 6–21–381)

'குலாலனுக்குக் கடத்தை வனைதற்கண் தண்ட சக்கரங் களும் ஓர்வகைச் சத்திகளேயாம். இதுகொண்டு குலா லனும் தண்ட சக்கரங்களும் அபின்னப் பொருள்கள் எனப்படுமாமோ? பரிக்கிரகம் என்பதன்பொருள் எடுத் துக் கொள்ளப்படுவது. மாயையைத் தமக்கோர் சத்தி யாகப் பிரமம் எடுத்துக் கொண்டதன்றி, அஃது அப் பிரமத்தோடு அபின்னமாயதோர் பொருளல்ல; அபின் னமாயின், அதனை அவர் இடையிலே எடுத்துக்கொள்ள வேண்டா' (து · வா 42)

என்றது காண்க. குலாலனுக்குத் தண்டசக்கரங்கள் சத்தி யெனப்பட்டன. தண்டசக்கரங்கள் பொருள். அப்பொருள் சத்தியென்று உபசரிக்கப்பட்டது. அச்சத்திதான் பரிக்கிரகம் அதாவது பின்னா. அதுபோலப் பிரமமென்னும் பொருளுக்கு மாயையென்பது பின்னா அதாவது பரிக்கிரகசத்தி. அது சடமுமாம். ஆனால் தண்டசக்கரங்கள் போல அம்மாயையும் பொருளென அவர் சொல்லார். ஆகையால் பொருளல்லாத அம்மாயைக்குப் பொருளாகிய தண்டசக்கரங்களை உவமை கூறுதல் அவர்கொள்கைக்கே மாறு. உண்மையில் தண்டசக் கரங்கள்போல் மாயையும் பொருளே. பிரபஞ்சத்துக்கு அஃது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபாதானம். பிரமம் குலாலன்போலும் நிமித்தம். அவர் மதப்படி மாயை பொருளன்ருயினும் சடசத்திதான். அதிலிருந்துதான் பிரபஞ்சம் தோன்றியது. அங்ஙனமாகப் பிரமமாகிய சித்திலிருந்து பிரபஞ்சமாகிய சடம் தோன்றியதென்பது விருதாவாசகமே. இது சாக்கிரப் பிரபஞ்சம். அப்படியே மனமும் சித்து, அதற்கும் ஒரு பரிக்கிரக சத்தியுண்டு. அது சடம், அதிலிருந்துதான் சொப்பனவுலகு தோன்றியதென்ருர் அவர். பிரமப் பரிக்கிரகசத்திக்கு மாயையெனப் பெயரிருத்தல் போல் மனத்தின் பரிக்கிரகசத்திக்குப் பெயரென்னை? அதுதானில்லை. அன்றியும் பிரமம் என்றுமே சித்து, மனமோ சித்துஞ் சடமுமாம் என்ருரவர். மனம் சடமாயிருக்கும்போது அதற்கு அப்பின்ஞசத்தி யிருக்குமா? இல்லாதொழியுமா? அதற்கும் அவரிடம் விடைகிடையாது. ஆகலின் அச்சத்தி மனத்துக்கு இல்லையென்பது தேற்றம்.

தத்துவங்கள் பல. அவை அசேதனம். அவற்றுள் ஒன்று மனம். ஆகலின் அதுவுஞ் சடம். ஆனல் அம்மனத்தைச் சித்து சித்து எனப் பலவிடங்களில் அவர் சொன்னர்.

> 'புலப்படும் பொருளோசடம்; மனமோசித்து' (வே-நி 14)

> 'கனவில் காணும் பொருள்கள் எங்கிருந்து உண்டாகின்றன? மனத்தினின்றல்லவா? மனம் சித்தல்லவா?' (வே - நி 14) என்றது காண்க.

அப்படிச் சொல்லக் காரணமென்னை? சித்தாகிய பிரமத்தில் சாக்கிரவுலகுதோன்றுவது மனத்தில் சொப்பனவுலகு தோன்றுவதுபோலும் என்ருரவர். அதில் பிரமத்துக்கு மனம் உவமை ஆயிற்று. ஆனல் பிரமம் சித்து, மனம் சடம். சித்துக்கு உவமை சித்தையே கூறவேண்டும்; சடத்தைக் கூறலாகா தென்பதவர் மதம். அது முன்காட்டப்பட்டது. ஆனல் அவர்மதத்தில் பிரமந்தவிரத் தன்னியல்பாற் சித்தாயுள்ள பொருள்வேறு கிடையாது. ஆதலால் தன்னியல்பாலன்றி மற்றப்பொருளை நோக்கித் தம்மால் உள்ளதெனச் சொல்லப்படுவதாய சேதனத் தன்மையை அவர் அம்மனத்தில் ஏற்றி அதனைச்சித்தென்ருர். அது அவருக்கு நேர்ந்த நிர்ப்பந்தம்.

ஒவ்வொரு சாக்கிரவுடம்பிலும் ஒரு சாக்கிர சீவனேயுண்டு. அதுவே சொப்பனங்கண்டு சுழுத்திக்குப்போய் அம்முறையே சாக்கிரத்துக்கு மீள்கிறது. ஒருவன் சொப்பனங் காண்கிருன். அதில் அவன் முந்திய சாக்கிரத்தை நினைப்பதுமில்லை, பிரஸ்தா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிப்பதுமில்லை. ஆனால் அவன் சாக்கிரத்துக்குத் திரும்பி அச் சொப்பன நிகழ்ச்சியை நினைக்கிறான், பிறர்க்குச் சொல்கிறான். அப்படிச் சொப்பனத்தில் சாக்கிர நினைவு இல்லாமற்போதலும், சாக்கிரத்தில் சொப்பன நினைவு வருதலும் எதனால்? சாக்கிரத்தில் தொழிற்படுந் தத்துவங்களுட் சில சொப்பனத்தில் ஒடுங்கிவிடுகின்றன. அதனால் சாக்கிரம்பற்றிய நினைவுவராது. சாக்கிரத்தில் அதற்குரிய தத்துவங்களும், சொப்பனத்துக்குரிய தத்துவங்களுஞ் சேர்ந்து தொழிற்படும். அதனால் சாக்கிரத்தில் சொப்பனம்பற்றிய நினைவு வருகிறது. அவ்வளவே.

> 'போதமயராகவிருக்கிற வாத்மாவானவர் ஜாக்கிரதிசையிலே ஸ்தூல தேகத்தோடே கூடி விசுவனென்கிற பெயரோடுங் கர்த்தாப்போலேயும், போக்தாப்போலேயும், விளையாடுவர். சொப்பனதிசையிலேலிங்கதேகத்துடனே கூடித் தைசதனென்று நாமம்பெற் றனேக சொப்பனங்களோடே கூடிக் கர்த்தாப்போலேயும், போக்தாப்போலேயும் விளையாடுவர். சுழித்தியிலே காரண சரீரத்தோடே கூடிப் பிராக்ஞனென்கிற பேரோடு மானந் தங்களை யநுபவிக்கிறதுபோலே தோற்றுவர். சின்மயராயிருக்கிற வாத்மாவானவர் சரீரத்திரய சம்பந்தத்தினாலே...ஜீவன்போலேயுந் தோற்றுவர்' (பா-இ 126)

என்றாரவரும். போதமயரே தைசதனுயிருந்து கலவிக் கனவு கண்டு, விசுவனாகித் தன் படுக்கையை அசுசிப்படுத்தினாரென்பது கருத்து. விசுவன் முதலிய மூன்றும் வேறு வேறு சீவன்களா? முன் காட்டப்பட்ட 'சுழுத்தியாதியிலே' என்று தொடங்கும் மேற்கோளையும் உடன்வைத்துக் காண்க. சாக்கிர சொப்பனங்களில் இருவேறு சீவன்களில்லை. ஒரு சீவனே உண்டென்பது புலனாம்.

ஆனால் சாக்கிரத்திலுள்ள நான் என்பது பிரமத்திலிருந்தும், சொப்பனத்திலுள்ள நான் என்பது மனத்திலிருந்தும் தோன்றிய இருவேறு சீவன்கள் என்றாரவர்.

> 'ஒரு மனத்தினின்றுந் தோன்றிய சொப்பன உலகு பல பேதப் பொருளாயிருப்பதோடு பொய்த்தோற்றமாயும், நான் நீ நாயெனத் தன்மை முன்னிலை படர்க்கையாயும் இருப்பது எவர்க்குமே அனுபவம். இவ்வளவும் கால தேச நிமித்தமின்றி நிகழ்வதில்லை. இதற்கு முதற்காரணமான மனதைத்தான் சொப்பன ஜீவர்கள் பேதமாயும் தன்மை முன்னிலை படர்க்கையாயும் அறிகின்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனதைத் திரிபாய்க் காண்பதால் சொப்பனவுலகு நிகழ்கிறது. மனேஸ்தானத்தில் பிரமமும், தோற்றல் மாத்திரமாயுள்ள சொப்பனபேதப் பொருள்கள் ஸ்தானத்தில் தோற்றல் மாத்திரையாயுள்ள சாக்கிரபேதப் பொருள்களுமாம். சொப்பனத்தின் நான் நீ நாய் ஸ்தானத்தில் சாக்கிர நான் நீ நாய்கள். சொப்பன காலதேச நிமித்த வலை ஸ்தானத்தில் சாக்கிர காலதேச நிமித்த வலை' (வே - தீ 30, 31)

என்றது காண்க. அஃதுண்மையா? ஆயின்,

'சொப்பனத்தில் ஆசிரியன் மந்திரோபதேசஞ் செய்வதாகக் கண்டால் அது ஜாக்கிரத்தில் மெய்யாகின்றது. (அங்ஙனமே) சொப்பனத்தில் தைவத்தினருள் கிடைத்ததாய்க்கண்டது மெய்யாகி ஜாக்கிரத்தில் தான் விரும்பிய பொருள் கிடைக்கின்றது' (ப் - வி சார்வரி வைகாசி 30உ 347)

என்றுங் கூறலாமா அவர்? மனத்திலுண்டானதாய்ச் சொல்லப்பட்ட சொப்பன நாணுகியசீவன் கண்ட கனுநிகழ்ச்சி பிரமத்தில் உண்டானதாய்ச் சொல்லப்பட்ட சாக்கிர நாணுகிய சீவனுக்குப் பலிதமாய் வரமுடியுமா? முடியுமெனின் தென்னையில் தேள் கொட்டப் பனையில் விடமேறியது என்பதற்கே அஃதொப்பதாகும். அவ்வாக்கியத்தைத் தொடர்ந்தது

'(ஆகவே) அசத்தியத்தினின்றும் சத்தியம் கிடைப்பது உண்டு' என்பது ஒன்று.

'பொய்யினுல் மெய் சித்திக்குமென்பது நிதர்சனமாயிற்று' (து - வா 103)

என்பது மற்ருென்று. அசத்தியம், பொய் - அசத்து. சத்தியம், மெய் - சத்து. அசத்திலிருந்து சத்துப் பிறக்கும் என்பது பொருள். அஃதவர்மதத்துக்கே மாறு. அன்றியும் பிரமத்தையும் அசத்தெனக்கொண்டு அவ்வசத்திலிருந்து சாக்கிரவுலகு தோன்றிற்றென்னலாம். பிரமத்துக்குச் சத்திலக்கணங் கூறுதல் அநாவசியம். சொப்பனப்பயன் சாக்கிரத்திலும் வருகிறதென அவரே கூறுவதால் சாக்கிரசொப்பன சீவன்கள் வேறுவேறென்பது அபத்தம்.

இனிச் சாக்கிரவுலகு பொய்யா? மெய்யா? ஓரவசரத்திற் பொய்யும், பிறிதோரவசரத்தில் மெய்யுமா? அதனை நிச்சயிப்பதெப்படி? பிரத்தியக்ஷம், அனுமானம், ஆகமம் என்பன

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதற்கு வாயில். வேறு வாயில் எதுவுமில்லை. ஆனால் அம் மூன்றையும் அவர் எப்படிக்கொண்டார்?

'பிரத்தியக்ஷம் : யதார்த்தம், சந்தேகம், விபரீதமென மூவகைப்படும். அவற்றில் கயிற்றைக் கயிறென்பது யதார்த்தம் ; கயிறோ அரவோ என்பது சந்தேகம் ; அரவென்பது விபரீதம் ... யதார்த்தப் பிரத்தியட்சத் திலுங் குற்றமுண்டு' (து - வா 21)

'குடம் சத்தியமென்பது விபரீதப் பிரத்தியக்ஷம் ; குடம் சத்தியமோ அசத்தியமோ என்பது சந்தேகப் பிரத்தி யக்ஷம், குடம் பொருளல்ல ; மண்ணே பொருளென்பது யதார்த்தப் பிரத்தியக்ஷம் ... யதார்த்தப் பிரத்தியக்ஷத் திலுந் தோஷமுண்டு' (வே - நி 25)

என்றது காண்க. இதில் சந்தேகப் பிரத்தியட்சமும் விபரீதப் பிரத்தியட்சமுந் தள்ளத்தக்கன என்றாரவர். அது சரி. யதார்த் தப்பிரத்தியட்சத்தை அவர் ஏற்கலாம். அதையுந்தோஷமுடைய தெனக்கூறிக் கழித்தாரவர். ஆகலின் பிரத்தியட்சப்பிரமாணமே அவருக்கில்லையாயிற்று. பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் முறையே காண்டல் கருதல் உரையெனவும், அனுபவம் யுக்தி சுருதியெனவும்படும். ஆகலின் பிரத்தியட்சமும் அனுபவமும் ஒன்றே. ஆகலின்,

'ஞானிகளுக்கு அனுபவத்திற்கு வாராமை காரணமாக உலகு பொய்யாயின், அஞ்ஞானிகளுக்கு அனுபவத் திற்கு வாராமை காரணமாகச் சிவமும் பொய்யாக வேண்டுமே. பூர்வபட்சியார் கூற்றின்படி அனுபவத் திற்கு வருவது மெய்யாயும், அனுபவத்திற்கு வாராதது பொய்யாயும் ஆகவேண்டுதலின், கயிற்றரவும் கானல் நீரும் சொப்பனவுலகும் அனுபவத்திற்கு வருகின்றமை பற்றி மெய்யும் கடவுள் அனுபவத்திற்கு வராதிருப்ப தைப்பற்றிப் பொய்யு மாகவேண்டும். ஆகவே, அனுப வத்திற்கு வருவது மெய்யென்றும் வாராதது பொய் யென்றும் கூறுகின்ற நாஸ்திக மதத்தரிவிவரும் ஒருவ ரென்பதற்கு யாதுதடை? உலகு பொய்யென்பதற்கு உவமானமாக வெடுத்த கானல்நீர், முயற்கொம்பு, ஆகாயத்தாமரை முதலியன அனுபவத்திற்கு வாராமை காரணமாகவா? விசாரணை காரணமாகவா? அனுபவத் திற்கு வாராமை காரணமாகவென்பதில் மேற்கூறியபடி அநேக ஆசங்கைகளுண்டாகின்றமையின் விசாரணை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காரணமாகவே என்பதற்கு யாதுந்தடையில்லையென்க' (அ°- வி 91)

என்பதும் அவர் கூறிய பிரத்தியட்சநிந்தையே. அவர்தானே

'உலகு யதார்த்தப் பிரத்தியட்சமாய்ச் சத்தியம்போல் தோன்றினும் வேதம் முதலிய கலைகளைக்கொண்டு ஆராயுமிடத்து அது அசத்தியமென்றே சொல்லத் தக்கதாம்' (வே - தீ 26)

என்றுஞ்சொன்னார். பிரத்தியட்சமில்லாத அவருக்கு அனுமான முங்கூடாது. அவ்விரண்டும் பயன்படாவாகவே அவர் ஆகமத்தை, வேதமுதலிய கலைகளை ஆராய்வது விசாரிப்பதெப்படி? அதற்கு வேறு வாயிலுண்டா? விபரீதப்பிரத்தியட்சானுமானங்களால் வேதத்தை ஆராயின் விபரீதமுடிவே சித்திக்கும். உலகு விபரீதப் பிரத்தியட்சம் என்றமுடிவு அவருக்கு அப்படிக் கிடைத்ததே. அன்றியும் வேதமுதலிய கலைகளும் உலகின் ஒரு பாகமே. உலகு விபரீதமாயின் அதன் பகுதியாகிய அவைமாத்திரம் யதார்த்தமாய்விடுமா?

அவற்றைக்கொண்டு உலகு அசத்தியமெனத் தீர்ப்பதும் விபரீதமே. ஆகலின் சாக்கிரவுலகைப் பொய்யென்று சாதிக்க அவர் அளவையற்றவரானார்.

மனிதன் உலகிற்குப் பின்னமல்லன். அவன் இவ்வுலகப் பகுதியே. உலகம் என்ற சொல்லில் அவனும் அகப்படுவான். அப்படியிருக்கும்வரை அவனுக்கு இவ்வுலகு உண்மையென்ற மருட்சியேயுண்டு. இவ்வுலகு இன்மை எனத்தெளியவேண்டின் இவ்வுலகிற்குப் பின்னமாய் அவன் நிற்கவேண்டும். இப்படிச் சொன்னாரவர்.

'கயிற்றரவைக் காணும் விஷயத்தில் நாம் என்ற சொல்லுக்குப் பொருள் சரீர இந்திரிய கரண ஜீவக்கூட்டங்களோடுங்கூடிய மனிதனைக்கொண்டார்; உலகைக்காணும் விஷயத்திலும் அம்மனிதனையே நாம் என்ற சொல்லுக்குப் பொருளாகக்கொண்டார். கயிற்றரவு விஷயத்தில் காணும் மனிதனுக்குக் கயிற்றரவு வேறு. அவ்வாறு உலகை அறியும் விஷயத்தில் உலகுக்குக் காண்பான் வேறுயிருக்கின்றானா? மனிதனது சரீராதிகள் உலகன்றா? உவமானத்தில் கயிற்றரவுக்குக் காண்பான் எப்படி வேறோ, அப்படியே உலகை அறிகிற விஷயத்திலும் காண்பான் வேறாகவன்றோ இருக்கவேண்டும்? மனிதன் உலகையறிகின்றானென்றால் மனிதவடிவமே உலக வடிவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன்ரு? அறியப்பட்ட பொருளுக்கு அறிவான் பின்னமாயிருக்கவேண்டுமே. அவ்வாறு உலகப் பொருளான சரீராதிகளைவிட்டுப் பின்னமாய் நின்று உலகுண்டெனயாரேனும் அறிந்திருக்கின்றனரா? அறிந்தாலன்ரோ அந்தநிலையிலே பின்னுந் தெளிவோடிருந்து உலகில்லை எனச் சொல்லப்போகிருர்? சொப்பனவுலக மனிதனொருவன் சொப்பனவுலகிலேயேயிருந்து சொப்பனவுலகு விபரீதமென்றும் அஃதின்மை யதார்த்தமென்றும் அறியமுடியுமா? சொப்பனசரீரம் எப்போதிருக்கின்றதோ அப்போது அது உண்மையாய்க் காணப்படுமேயன்றி இன்மையாய்க் காணப்படுமா? அதுபோல இச்சாக்கிர சரீரத்தோடுகூடி இருக்கிறவரையில் இச்சாக்கிரவுலகு உண்மையாய்க் காணப்படுமே யன்றி இன்மையாய்க் காணப்படுமா? உலகுள்ளதென உலகுக்குப் பின்னமாயிருந்து அதாவது உலகப் பொருளான சரீராதிகளோடுங் கூடாதுநின்று கண்டபோதல்லவா அதனது இல்லாமையுங் காணக்கூடும்' (து - வா 95, 96)

'பொய்யான கனவுலகை அக்காலத்தில் உண்மைப் பொருளென்றே அறிகின்ருேம். அதிலும் கண்ணினுலேயேயறிகின்ருேம். அதை உண்மையென்று கொள்ளலாமா? கனவுலகு பொய்யென்பதில் ஆக்ஷேபமில்லை. அந்தவுலகை அங்குக் காண்கிறமனிதனும் அந்தவுலகப் பொருளில் ஓர்பாகம். அந்தப் பாகத்தில் ஓர்பாகம் ஷை மனிதனதுகண். காண்கின்ற (கனவுலக மனிதனது) அந்தக் கண்ணும் காணப்பட்ட அவ்வுலகமும் ஒரே பொருள். கண்ணனது உலகை அறிகின்றதென்பது ஒருபொருளின் ஓர்பாகம் மற்ருேர் பாகத்தை அறிகின்றதாயாகின்றது. அப்படியே இச்சாக்கிரவுலகைக் கண்ணறிகின்றதென்பதில் கண்ணுக்கு இவ்வுலகு காட்சிப் பிரமாணமாயிருக்கின்றது. கண்ணோ உலகின் ஓர் கூறு. ஓர் கூறு மற்ருேர் கூற்றை அறிகின்றதென்பதே காட்சிப் பிரமாணமா யிருக்கின்றமையின் இது காட்சிப் பிரமாணமாகாது. திருட்டாந்தத்தில், கண், கடபடாதிகளை அறிவது காட்சிப் பிரமாணம். இதில் கண் ஒரு பொருள்; கண்ணுல் அறியப்பட்ட கடம் ஒரு பொருள். கண்ணினது ஓர் கூறு கடமல்ல; கடத்தினதோர் கூறுங் கண்ணல்ல. இரண்டும் வேறு வேறு பிரத்தியேக பின்னப்பொருள்கள். இப்படியிருப்பதுதான் காட்சிப் பிரமாணம். இவ்வாறு தாட்டாந்தத்தில் உலகும் கண்ணு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாகா. திருட்டாந்தத்தில் கண்ணுக்குக் கடம் எப்படி விஷயமோ, அப்படியே தாட்டாந்தத்தில் காண்பானுக்கு உலகு விஷயமாம். திருட்டாந்தத்தில் கண்ணுக்குக் கடம் எப்படிப் பின்னமோ அப்படியே தாட்டாந்தத்தில் காண்பானுக்கு உலகு பின்னமாதல்வேண்டும். கண்ணால் உலகு அறியப்படும்போது கண்ணும் உலகும் ஒரு பொருள். கண்ணால் கடத்தை அறியும்போது கண்ணும் கடமும் பின்னப்பொருள்கள். கண்ணால் உலகை அறியும் போது உலகமென்னுஞ்சொல்லில் கண் அடங்கிவிட்ட மையால் இரண்டும் ஒன்றுதான். கண்ணும் கடமும் அவ்வாறு ஒன்றில் ஒன்று அடங்கவுமாட்டாது. இரண்டும் ஒரு பொருளுமல்ல. ஆதலால் உலகு காட்சிப் பிரமாணமென்றல் சற்றும் பொருந்தாமை காண்க' (வே - நி 36)

என்றது காண்க. அதிலுள்ள தவறென்னை? பார்க்கலாம். அவர் கண் அவர் கண்ணைப் பாராது. அப்பார்க்குங்கண்ணும் பார்க்கப்படுங்கண்ணும் அபின்னம். அக்கண் அக்கண்ணைப் பாராமையால் அவர் கண்ணைப் பொய்யென்றிடலாமா? அக் கண் மெய்யே. அவர் அதை எப்பிரமாணத்தால் கண்டார்?

உலகமென்னுஞ் சொல்லில் கண் அடங்கிவிடுவதுபோல் மனித வடிவமென்ற சொல்லில் கண் அடங்கும். அவ்வடிவத் தில் கை கால் முதலிய பகுதிகளுமுள. அக்கண் அப்பகுதி களைப் பார்க்கிறது. அப்போது கண்ணும் பொருள், கைகால் முதலியவும் பொருள்கள். கண்ணும் அவையும் பின்னம் அஃது அவற்றைப் பார்க்கலாம். அப்படிப் பார்ப்பதன்மூலம் அக்கண் அம்மனித வடிவத்தைப் பார்த்ததாகாதா? ஆகாதென்றால் அவருக்கு அம்மனிதவடிவம் இல்லையென்பது சித்திக்கும். மனித வடிவம் சத்தியம் என்பது சித்திக்க வேண்டுமாயின் அதிலிருந்து கண் பின்னமாக்கப்பட வேண்டும்போலும் - அக்கிரமம். ஆகவே உலகமென்னுஞ் சொல்லில் கண் அடங்கினாலும் கண்ணுக்குச் சாக்கிரவுலகு மனிதவடிவம்போல் சத்தியமே.

சரீர இந்திரிய கரண ஜீவக்கூட்டம் மனிதனென்றாரவர். சரீர இந்திரிய கரணங்களுக்குத் தோற்றம் ஓரிடம். சீவனுக்குத் தோற்றம் வேறோரிடம். சரீராதிகள் சடம். சீவன் சிதாபாசன். சீவன் அச்சரீராதிகளைக் கருவியாகக்கொண்டு வர்த்திக்கும் போது மனிதனெனப்படுகிறது. அவர்கருத்துப்படி கண் உலகி லொரு பகுதியாகலாமே தவிர அக்கண்ணையுடைய சிதாபாச னாகிய மனிதன் உலகின் ஒரு பகுதியாகமாட்டான். ஆகலின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகைப்பார்ப்பது கண்ணன்று, அதைக்கருவியாகக்கொண்ட சீவனே. அச்சீவனுகிய மனிதனுக்குக் கண் உள்பட உலகம் பின்னமே. மனிதவடிவமே உலக வடிவமன்ரு என அவருஞ் சொன்னூர். ஆகலின் அவன் சாக்கிரவுலகைப் பார்க்கலாம். அது காட்சிப் பிரமாணமே, சத்தியமே. சீவனும் மனிதவடிவத்தின் பாகமாயின் மனிதன் செத்தால் சீவனும் சாகும்; அப்படித்தானு ?

இன்னும் கடமும் படமும் பிறவும் பொருள்கள். அவற்றின் கூட்டம் உலகு. கடம் படம் முதலிய தனித்தனி காட்சிப்படும் போது அவற்றின்கூட்டமாகிய உலகும் காட்சிப்பட்டதாகாதா? கடம்படமுதலிய தனித்தனி காட்சிப்பட்டுச் சத்தியமாகும்போது அவற்றின் கூட்டமாகிய உலகுமாத்திரங் காட்சிப்படாது அசத்தியமாய் விடுமா ? பொருள்கள் தனித்தனியானல் சத்தியம், தொகுதியானல் அசத்தியம் என்பது என்னவாதம் ? ஆகலின் கடம் படம் முதலியவற்றின் தொகுதியாகிய சாக்கிரவுலகு சத்தியமேயென்க.

'திருட்டாந்தத்தில் கண்ணுக்குக் கடம் எப்படிப் பின்னமோ அப்படியே தாட்டாந்தத்தில் காண்பானுக்கு உலகு பின்னமாதல் வேண்டும்' எனக்கூறிக் காண்பானை உலகுக்கு வேருகக் கொண்டாரவர். பிறகு 'கண்ணுல் உலகு அறியப் படும்போது கண்ணும் உலகும் ஒருபொருள்' என்ருர். கண்ணும் உலகும் ஒரு பொருளாகுக. காண்பானுங் கண்ணும் ஒரு பொருளா ? ஒருபொருள் என்ற விடத்தில் கண்ணைக்காட்டிக் காண்பானை விட்டுத்தான் அவரும் பேசினூர். ஆகலின் காண்பானுக்கு வேருகிய பிரபஞ்சம் காட்சிப் பிரமாணமே, பொய்யன்று.

'இச்சாக்கிர சரீரத்தோடு கூடியிருக்கிறவரையில் இச்சாக்கிரவுலகு உண்மையாய்க் காணப்படுமேயன்றி இன்மையாய்க் காணப்படுமா ?' என்பது அவர் வினு. அவர் சொப்பன சரீரத்துக்குப் போய்விட்டால் சாக்கிரவுலகு இன்மையாய் விடுமா ?

'சொப்பனப்பொய்யுலகு : சாக்கிரமெய்யுலகைத் தோன்றவொட்டாது அவ்விடத்தில் மறைக்கினும் இவ்விடத்தில் சாக்கிர மெய்யுலகு மறைபடவேயில்லை. எங்ஙனமெனின் சொப்பனக்காட்சி காலத்தில் சாக்கிரவுலகு சத்தியமாய்க் காணப்பட்டு விவகாரம் நடக்கின்றமையா னென்க' பே-தி 70)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என அவர் வினவுக்கு அவரே விடைதந்தார். அதனல் சாக்கிர வுலகு எப்போதும் சத்தியமென்பதாயிற்று.

உலகு யதார்த்தப் பிரத்தியட்சமாயின் அதனை அப்படிக் காண்பவன் அதனின் வேருய் நின்று காணவேண்டுமென்ரு ரவர். உலகு சந்தேகப் பிரத்தியட்சமோ, விபரீதப் பிரத்தி யட்சமோ ஆனுலும் அதனை அப்படிக் காண்பவன் அதனில் வேருய் நின்று காணவேண்டாமா? வேருய் நிற்றல் என்ற ஹேது முப்பிரத்தியட்சங்களுக்கும் பொது. யதார்த்தத்துக்கு மாத்திரம் அதை ஒட்டவைப்பது செல்லாது.

மனிதன் உலகை உண்டு அல்லது இல்லையெனக் காண வேண்டுமாயின் உலகிற்கு வேருய் நிற்கவேண்டும். அதற்கு வழி அவன் சரீராதிகளை விட்டு விலகுவதே என்ருரவர். சரீராதிகளைவிட்டு விலகிய மனிதன் ஒரு சீவனே. அது சரீராதி களோடு கூடின் மனிதனுகிப் பந்தமுடையதாகும். கூடாவிடின் முத்தி அடைந்ததாகும். அதற்குப் பந்தமோ முத்தியோ அல்லாத நிலையில்லை. பந்தம் மருள் நிலை. முத்தி தெளிநிலை. ஆனல் முத்தியில் சீவன் நாசமாமென்பது அவர்மதம். அந்நாச மாய சீவன் தெளிவோடிருத்தலும், உலகு உண்டு, இல்லை என வினைமுதலாகிக் காண்டலுங் கூடுமா ? கூடா.

மனத்தின் காரியம் சொப்பனவுலகு என்பாரவர். அஃதா யின் அவ்வுலகின் கூறு சொப்பன சீவன். அச்சொப்பனம் போய்ச் சாக்கிரமோ, சுழுத்தியோ வந்தால் அச்சீவனும் நாச மாம், அவ்வுலகிற்குப் பின்னமாய் நிற்பதின்று. அச்சீவன் வினைமுதலாகி அவ்வுலகு உண்டு, இல்லையெனக் காணமாட் டாது. அப்படியே பிரமத்தின் காரியம் சாக்கிரவுலகு என்பார் அவர். அஃதாயின் அவ்வுலகின் கூறு சாக்கிரசீவன். அச்சாக் கிரம் போய்ச் சொப்பனமாதிகள் வந்தாலும் அச்சீவனும் நாசமாம், இவ்வுலகுக்குப் பின்னமாய் நில்லாது. அச்சீவன் வினைமுதலாகி அவ்வுலகு உண்டு, இல்லையெனக் காணுது.

சரீராதிகளைவிட்டு விலகிநின்று தெளிவோடிருந்து உலகு இல்லை எனக்கண்டவர் அவர்மதத்திலேனு முளரா ? அவர்மத குருவாயினும் அங்ஙனங் கண்டிருக்கின்றனரா? திருட்டாந்தங் காட்டுக. ஒருவர் பெயர் போதும்.

ஆகவே மலட்டுப்பசுவைக் கறப்பதும், முயற்கொம்பை முழம்போடுவதும் அசாத்தியமேயாவதுபோல் சாக்கிரவுலகு அசத்தியமென்னும் ஞானத்தை எந்தப் பிரமாணத்தாலுஞ் சாதிக்கமுடியாதென்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'உலகு அசத்திய மென்னுஞ் ஞானம் கல்லிலிருந்து நாருரிப்பது போல்வது' (வே - நி 26)

என அவருங்கூறி எய்த்தார்.

சரீராதிகளோடு கூடாதுநின்று உலகுள்ளதெனக் கண்ட போதல்லவா அதனதில்லாமையுங் காணக்கூடுமென்றூரவர். அக்கூடாதுநின்ற நிலையிலும் உலகு உள்ளதானுல்மட்டில் அதை உண்டெனக் காணமுடியும். உலகு இல்லையானுல் அவ் வில்லாமையைக் காண்பதற்கு அவ்வில்லாமையை விட்டும் விலகி நிற்கவேண்டுமே. உண்மையையோ இன்மையையோ எதனைக் காண்பதற்கும் காண்பவன் அதனைவிட்டு விலகிநிற்க வேண்டுமென்பதுதான் அவர் கூற்று.

உண்மையைவிட்டு விலகி நிற்கலாம். இன்மையைவிட்டு விலகி நிற்பதெப்படி ?

இல்லாமை நான்கு வகைப்படும். அத்தியந்தாபாவம் முதலி யன அவை. அவர் வேறும் நான்குவகை சொல்வர்.

'இன்மை நான்குவகைப்படும். (1) சொல்மாத்திரமாயுள் ளது. இதற்குவமானம் வான்மலர், மலடி மகனும். (2) (3) சொல்லுந் தோற்றமுமாம். இதில் ஒன்று கார ணத்தை நோக்கியபோது காரியந் தோற்ருதிருத்தலும், மற்றென்று தோற்றுதலுமாம். முன்னையதற்குவமானம் கயிற்றரவும், பின்னையதற்குவமானம் கானனீருமாம். (4) சொல்லுந்தோற்றமும் பொருளுமாயிருப்பது. இதற்குவ மானம் சொப்பனவுலகு. உள் பேதத்தோடுங்கூடிய இந் நான்கு இல்பொருளில் ...' (து - வா 84)

என்றது காண்க. பாரமார்த்திக அசத்தை, வியாவகாரிக அசத்தையென்பன அவர் சொல்லுகிற மற்றிரண்டபாவங்கள். அசத்தை - அபாவம். அப்பத்தினையும் நன்குவிளக்கிப் பிந்திய ஆறனையும் முந்திய நான்கனுள் அடக்கி அந்நான்கனுள் சாக் கிரவுலகு எவ்வபாவமென்பதை அவர் காட்டுக. பாவத்தை வைத்தே அபாவவகை பேசப்படும். இன்றேல் அபாவம் ஒன்றே, ஓரியல்பினதே.

சாக்கிரவுலகையும் சொப்பனவுலகையும் பலவிடங்களிற் சமப்படுத்திப் பேசிய அவர் சாக்கிரவுலகை வியாவகாரிகமென வும், சொப்பனவுலகைப் பிராதிபாசிகமெனவும் வேறுபடுத் தியும் சிலவிடங்களிற் பேசினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'கயிற்றரவு கானனீர் சொப்பனவுலகு ... பிராதிபாதிக சத்து' (மு - மை 223)

'பொய்யான சொப்பனப் புலியால் மெய்யான சாக்கிரத்தை யடைவதேயாம்' (து - வா 102)

'பொய்யான சொப்பனப் புலியால் மெய்யான சாக்கிர உலகுண்டாயிற் றென்பதே ... ... உவமானமாம்' (து - வா 103)

என்பதும் அவர் சொன்னது. சாக்கிரவுலகு (வியாவகாரிகம்) உண்டானது பிரம (பாரமார்த்திக)த்தாலா? சொப்பனப் புலியா (பிராதிபாசிகத்தா)லா? சொப்பனப் புலியாலென்றார் அவர். ஆயின் பிரமமிருப்பது எற்றுக்கு? அன்றியும் பிராதிபாசிகத்திலிருந்தும் வியாவகாரிகம் உண்டாகுமென்னலாம். வியாவகாரிகத்துக்குப் பிராதிபாசிகமும், பாரமார்த்திகமுமே காரணமென்னில் உபாதான முதலியவற்றுள் பாரமார்த்திகம் என்னகாரணம்? பிராதிபாசிகம் என்னகாரணம்? கயிற்றரவு முதலிய பிராதிபாசிகங்களை நடுப்பகல், காரிருள், மழை, வெடிச் சத்தம் முதலிய வியாவகாரிகங்கள் அழித்துவிடுகின்றன. ஆகலின் வியாவகாரிகத்தைப் பிராதிபாசிகம் ஆக்குவதெப்படி? பிராதிபாசிகத்தைக் காரணம்போலவும், வியாவகாரிகத்தைக் காரியம்போலவும் அவர் பேசியது பொருந்தாது.

வியாவகாரிக பிராதிபாசிகங்களுக்கு வேற்றுமை வேறோர் உதாரணத்தாற் காட்டினாரவர். என்னை?

'தாகம் வியாவகாரிகசத்தை. கானனீர் பிராதிபாதிக சத்தை. இவ்விரண்டும் வேறு வேறு சத்தையாயிருக்கின்றமையின் ஒன்றை மற்றொன்று தடுக்கமுடியவில்லை. சொப்பனத்தீயைச் சாக்கிரநீர் அணைக்காது; சொப்பனம் பிராதிபாதிக சத்தையாயும், சாக்கிரம் வியாவகாரிக சத்தையாயுமிருத்தலினாலென்க. எங்கே எங்கே சமானசத்தை யின்றோ, அங்கே அங்கே சாதகபாதகங்களுளவாகா. சொப்பனத்தீயைச் சொப்பன நீராலணைக்கலாம்; இரண்டும் சமானசத்தையாய் அதாவது பிராதிபாதிகசத்தையா யிருத்தலினால். அப்படியே சாக்கிரத் தீயைச் சாக்கிரநீரால் அணைக்கலாம். இவ்விரண்டும் சமானசத்தையாய் அதாவது வியாவகாரிக சத்தையா யிருத்தலினால்' (மு - மை 223)

'சாக்கிரம் வியாவகாரிக சத்து. சொப்பனம் பிராதிபாதிக சத்து. வேறுபட்ட இவ்விரண்டும் சமான சத்துக்களல்ல, விஷமசத்துக்களாம்' (மு - மை 223)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பது. தாகம் வியாவகாரிகம், கானல்நீர் பிராதிபாசிகம், அவ்விரண்டும் விஷமசத்தை. ஆகலின் அத்தாகத்தை அந்நீர் போக்காது என்றூரவர். அஃதிருக்கட்டும், கானல்நீரும் சொப்பனத்தீயும் பிராதிபாசிகம், சமானசத்தை. அந்நீர் அத்தீயை அணைக்கலாம். அணைக்கிறதா? இல்லை. கயிற்றரவும் சொப்பன மனிதனும் பிராதிபாசிகம், சமானசத்தை. அவ்வரவு அம்மனிதனைக் கடிக்கலாம். கடிக்கிறதா ? இல்லை. பிரமப் பிரதிபலனம் வியாவகாரிகம். மனப்பிரதிபலனம் பிராதிபாதிகம். அவ்விரண்டுமே பிரதிபலனங்கள் அதாவது பிராதிபாசிகங்களாயிருக்கப் பிரமப்பிரதிபலனத்தைமாத்திரம் வியாவகாரிகமென்பானேன்? அவற்றை வியாவகாரிகம், பிராதிபாசிகம், சமானம், விஷமம் என்பது ஆரவாரம், பிறரைப் பிரமிக்கச்செய்வதே.

சாக்கிரவுலகு மெய்யென்பாரவர். ஆனுல் அதற்குத் திருட்டாந்தம் அவரிடமில்லை. ஆனுல் அவ்வுலகு பொய்யென்றும் அவர் சொல்வார். அதற்கவர் காட்டுந் திருட்டாந்தம் சொப்பனவுலகு. சொப்பனவுலகு பொய்யென்பது எதனுல் ?

> ‘இச்சாக்கிராவஸ்தையில் பகற்காலத்துப் பன்னிரண்டு மணி சமயத்தில் ஒருவன் நித்திரைசெய்து கனவு கண்டானெனவும், அந்தக் கனவு இருட்காலமாயிருந்ததெனவும் வைத்துக்கொள்வோம். அங்ஙனமாயின் அக்கனவிருள் எங்கிருந்தது ? சாக்கிரவுலகிலேயே சொப்பன வுலகிருத்தலால் அச்சொப்பனவிருள் சாக்கிர உலகிலேயே இருந்ததாகச் சொல்லவேண்டும். சாக்கிரமும் ஒரு உலகு. சொப்பனமும் ஒரு உலகு. சாக்கிரவுலக சரீரத்தினின்றே சொப்பனவுலகைக் காண்கின்ருேம். ஆதலால் அச்சொப்பனவுலகு சாக்கிரவுலகில் இருக்கிறதென்பது உண்மை. அங்ஙனமாயின் இரண்டுபொருள் ஒரு இடத்தில் எவ்வாறிருக்கலாமெனின், சாக்கிரம் மெய்யும் சொப்பனம் பொய்யுமாயிருத்தலால் மெய்யில் பொய் ஒருங்கு கூடியிருக்கலாம் என்பதற்கு இறையும் ஆக்ஷேபமின்று’ (வே - தீ 14)

> ‘சாக்கிர உலகிருக்கும்போதே சொப்பனவுல கிருக்கின்றமையால்’ (து - வா 120)

என்ரு ரவர். சாக்கிரம் ஒருலகம். சொப்பனம் மற்ருேருலகம். அவ்விரண்டுலகமும் பொருளாயின் அதாவது மெய்யாயின் ஓரிடத்திலிரா. ஆகலின் ஒன்று மெய்யும் மற்ருென்று பொய்யுமாதல்வேண்டும். அங்ஙனமாயின் மெய்யில் பொய்யிருக்கலாம். ஆகலின் சாக்கிரம்மெய், சொப்பனம்பொய், சாக்கிர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வுலகில் சொப்பன வுலகிருக்கலாம் என்ப தவர் முடிவு. சாக்கிரம் மெய்யென்பது அவருக்கு மெய்யான அங்கீகார மன்று.

> 'வேதாந்திகள் பிரபஞ்சத்தை அசத்தியமென்பதுமுண் மைதான்' (வே - நி 23)

> 'சொப்பனம் எப்படிப் பொய்யோ, அப்படியே சாக்கிர மும் பொய்' (து - வா 53)

என்றுரவர். அப்படிச் சாக்கிரமும் சொப்பனமுமே பொய் யாயின் இரண்டு பொய்கள் ஓரிடத்திலிருக்கலாம். அப்படிச் சொல்வதைவிட்டுச் சொப்பனம் பொய்யென்பதற்குச் சாக்கி ரத்தை மெய்யெனக்கூறிச் சொப்பனமும் மெய்யாயின் இரண்டு மெய்கள் ஓரிடத்திராவாதலின் சொப்பனம் பொய்தானெனச் சுற்றுவாதம் பேசுவானேன்? சாக்கிரம் மெய்யும் சொப்பனம் பொய்யுமாமென்பதற்கும் சாக்கிரமும் சொப்பனமும் பொய் என்பதற்கும் அருத்தம் ஒன்றுதானு?

சொப்பனம் சொல்லும் தோற்றமும் பொருளுமாயிருப்ப தென்றுரவர். சாக்கிரமும் அப்படியிருப்பதுதான். ஆனுல் சாக்கிரத்தைப் பொய்யென அவரால் நிரூபிக்க முடியவில்லை. அது காட்டப்பட்டது. அப்படியே சொப்பனத்தையும் அவர் நிரூபிக்கமாட்டார். தோற்றமாயிருப்பதைப் பொய் என்னலாம். பொருளாயிருப்பதைப் பொய்யென்னலாகாது. ஆமெனின் தோற்றமும் பொருளும் ஒன்ருயிடும். கயிறு அரவாகத் தோன் றுவது தோற்றம். கயிருகவே தோன்றுவது சொல்லும் தோற்ற மும் பொருளுமாம்.

நல்வினைக்குப்பயன் இன்பம். தீவினைக்குப்பயன் துன்பம். அது நியதி. வினை செய்தவனுக்கே பயன் சித்தம். அவன் இன் பத்தையும் துனபத்தையும் அனுபவிக்கிருன். அவ்வனுபவம் மெய்யா? பொய்யா? மெய்யெனின், அது மருளாகாது. பொய்யெனின், இன்பத்தைப் பலபடியாலும் அனுபவித்துக் கொண்டே பொய்யென்பது பிறரை வஞ்சிப்பதாகும். அடி உதை நோய் முதலியவற்றை அனுபவித்துக்கொண்டே அத் துன்பத்தைப் பொய்யென்பது கேலிக்கேயிடம். ஆனுல்,

> 'சுகமும் துக்கமும் திரவியத்தின் குணம். அதினும் விளக்குக்கு ஒளியைப்போலச் சொரூபகுணம். அது ஒரு போதும் திரவியத்தைவிட்டு விலகாது. விலகின் திரவி யமேயில்லாதுபோம்; ஒளி விலகினுல் விளக்கேயில்லா மற்போதல்போல. இதுபோலவே உயிர்க்குத் துக்கமும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவத்துக்குச் சுகமும் சொரூப குணங்களாம். உயிர் துக்கமாயிராவிடில் அதாவது சுகமாயிருக்கின் சிவத்தினது சுகத்துக்கு எதிர்பார்க்கவேண்டிய ஆவசியகமின்று ... சொரூபகுணம் திரவியத்தைவிட்டு ... விலகிப் போயின், அப்போது உயிரென்னும் திரவியமேயில்லாது போகவேண்டும். ... உயிர் இல்லாது சுகத்தைப் பெறுமென்று சொல்வது இல்லாத மலடிமகன் ... சுகத்தைப் பெறுமென்று சொல்வதற் கினமாம். ... புருஷன் ஸ்திரீயோடு கூடுங்கால் சுகத்தை அனுபவிப்பது மனம்; சரீரமல்ல. சரீரம் ஓர் துணையாகமாத்திரம் இருக்கின்றது. ... மனத்தின் றொழில் பற்பல விடத்துத் தாவுதல்; உயிரின் றொழில் அவ்வாறல்ல. மனத்தோடு கூடாவிடில் உயிர் தொழிலற்றேயிருக்கும் ... ஸ்திரீபுருஷ சையோகத்தில் சுகமூண்டாகின்றதே யென்னின் அது வாஸ்தவந்தான். அந்தச் சுகம் தத்தமிடத்தினின்றே உண்டாகின்றது. புருஷன் ஸ்திரீயோடு புணருங்காலுண்டாகும் சுகம் தனது இந்திரிய அந்தக்கரணாதிகளின் இழப்பினாலும், ... சத்துவகுண மிகுதியினாலும் தன்னிடத்தினின்றே தோன்றிற் றென்க. இவ்வாறே ஸ்திரீக்கும் ஆமென்க. தம்மிடத்திலிருக்கும் சுகம் தோன்றுவதற்கு ஸ்திரீ புருஷ வடிவங்கள் நிமித்தமாய் இருக்கின்றனவேயன்றி அவையே சுகவடிவமல்ல. நித்திரையில் சுழுத்தி சுகமுண்டாகின்றது. அந்த நித்திரை யுண்டாதற்கு மெத்தை தலையணை முதலியன சாதனங்களாம். அவ்வளவேயன்றி அவையே சுகப்பொருள்களல்ல' (அ-வி 111, 112, 113)

'ஆன்மா பிறிதொருபொருளை அனுபவிக்கவேண்டின், இந்திரிய மனங்களின் துணைகளின்றி அனுபவித்தலாகாது' (அ-வி 109)

என்றாரவர். உயிரின் சொரூபகுணம் துக்கம் எனப்பட்டது. அங்ஙனமாயின் அத்துக்கம் என்றும் நீங்காது. சாக்கிரவுலகம் அதனை நீக்குதற்குச் சாதனமாதலுமில்லை. ஆகலின் பிரமம் அவ்வுலகைத் தோற்றியது பயனற்றசெயல். பிரமத்தாலும் அத்துக்கத்தை நீக்கமுடியாது. அப்பிரமம் இருந்துதான் பயனென்? பிரமமும் சாக்கிரவுலகுமே பயனற்றனவாயின் அவர் மதம் இங்கிருந்து ஆவது ஒன்றுமில்லை.

உயிர் தன்னளவில் தொழிலற்றது. அதனை மனமே கண்டவிடமெல்லாம் இழுத்தடிக்கும். சாக்கிரவுலகை அனுபவிப்பது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்மனமே என்றூரவர். அஃதாயின் அம்மனமே அனுபவிக்கும் வினைமுதல் என்பதாயிற்று. அப்போது சாக்கிரவுலகும் உயிரின் பொருட்டன்று, மனத்தின் பொருட்டேயாமென்பது வெளி. அவருயிர் இங்கிருப்பதெற்றுக்கு?

அனுபவிப்பதற்கு வினைமுதல் உயிரே, இந்திரிய மனங்கள் துணைதான் என்றும் அவர் சொன்னூர். துக்க சொரூபமான உயிருக்கு இன்ப அனுபவம் ஏது? தன்னளவில் தொழிலற்றுக் கிடக்கிற உயிர் வினைமுதலாதல் எப்படி? அனுபவத்துக்கு மனத்தை வினைமுதலென ஓரிடத்திலும், துணையெனப் பிறிதோரிடத்திலும் சொன்னது முரணன்ரு?

அனுபவிப்பது எதுவாயினும் அதற்கு அதற்குச் சரீரம், தலையணை, மெத்தைமுதலியவற்றைத் துணை அல்லது நிமித்தம் அல்லது சாதனம் என்றூரவர். அதனுல் அனுபவத்திற்குச் சாக்கிரவுலகம் நிமித்தமேயென்பது கருத்தாயிற்று.

துக்க சொரூபவுயிர் இன்பத்தை அனுபவிப்பதில்லை. அதற்குச் சாக்கிரவுலகும் துணையாதல்வேண்டாம். சுகத்தை அவர் உதாரணம் காட்டினூராகலின் மனம் சுகத்தைத்தான் அனுபவிக்கும்போலும். துக்கத்தை அனுபவிப்பதெது? அதுவும் மனந்தானு? சுகதுக்கானுபவம் மனத்துக்கேயெனின் அது நீங்குவது அஹம்பிரம ஞானத்தாலாம். அவ்வஹமும் மனமே. சீவப்பிரம ஐக்கியம் அவர் மதத்தில் சொல்லளவே.

சுகானுபவத்தில் அந்தக்கரணங்களின் இழப்புண்டு என்றூரவர். மனமும் ஓரந்தக்கரணம். அதுவும் இழப்புண்ணும். அதனுல் சுகத்தை அனுபவிப்பது மனமுமன்றென்பது பெறப்படும்.

சத்துவகுண மிகுதியினுலும் இன்பம் உண்டென்றூரவர். மிகுதிப்படுவது எதன்பால்? அல்லது யார்பால்?

தம்மிடத்தில் என்றூரவர். எவரிடத்தில்? அல்லது எவற்றிடத்தில்?

ஆன்மாவின் சுகமுண்டாதற்கு என்றூரவர். அவ்வான்மா பரமான்மாவா? ஆமெனின், அதற்கு ஈசுவரபக்தி முதலியன வேண்டுமென்பது பரிகாசம். சீவான்மாவா? ஆமெனின், துக்க சொரூபமாகிய அதற்கு அவை வீண்வேலை.

வினையைப்பற்றி ஒன்றும் பேசாமல், பயனைப்பற்றித்தான் அவர் பல பேசினூர். அத்தனையும் குழறுபடை. உயிரியல்பு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வினையுண்மை, தத்துவபேதம், தொழிற்பாடு முதலியவற்றின் ஆராய்ச்சி அவருக்கில்லாமையே அதற்குக்காரணம்.

பிரமப் பிரதிபலனமாகிய சாக்கிரவுலகே பயனற்றதாகும் போது, மனப்பிரதிபலனமாகிய சொப்பனவுலகும்வேண்டுமா? பயனற்ற சாதனத்தைப் பிரமஞ்செய்தது கண்டு மனமும் செய்ததுபோலும். அது கிடக்க. சாக்கிரமின்றிச் சொப்பனமில்லை. சொப்பனமின்றியுஞ் சாக்கிரமுண்டு. சாக்கிரமே சொப்பன காரணம். காரணம் மெய்யாகும்போது சொப்பனம் பொய்யாகாது. கயிற்றில் கயிறு தோன்றுவது பொய்யன்று. அரவு தோன்றுவதே பொய். சாக்கிரவுலகுபோலவே சொப்பனவுலகிருப்பதால் சொப்பனவுலகு பொய்யாமா? சாக்கிரத்தில் சாக்கிரசரீரமிருப்பதுபோல் சொப்பனத்தில் சொப்பனசரீரம் இருக்கிறது. சாக்கிர சொப்பனவுலக சரீரங்கள் சுகதுக்கானுபவங்கட்குச் சாதனங்கள். இந்திரிய அந்தக்கரணங்களாதியனவும் அங்ஙனமே. அவையெல்லாம் மாயையென்னும் வஸ்துவை உபாதானமாய்க்கொண்ட காரியங்கள். அவற்றின் தொழிற்பாடு அதியற்புதம். ஆகலின் சாக்கிரம் எவ்வகையில்பொய்யோ அவ்வகையில் சொப்பனமும்பொய். அப்படியே அவ்விரண்டும் மெய்யுமாகும். வினையிலக்கணம் அறிந்தவர் அவ்வுண்மையை அறிவர். வினைப்பயன் அவ்வீருலகிலும் மெய்யாயுண்டு.

மனம் எதனிலும் சம்பந்தியாமல் சொப்பனவுலகைத் தோற்றியது. அதுபோல் பிரமமும் எதனிலும் சம்பந்தியாமல் சாக்கிரவுலகைத் தோற்றியது என்றூரவர். பிரமம் சாக்கிர வுலகைத் தோற்றுமுன் வேறெந்த உலகமும் கிடையாது. ஆகலின் அது எதனிலுஞ் சம்பந்தியாமல் அவ்வுலகைத் தோற்றியதென்பது பொருந்தலாம். ஆனால் மனம் சொப்பன வுலகைத் தோற்றும்போது சாக்கிரவுலகிருக்கிறது. ஆகலின் அம்மனம் சொப்பனவுலகைத் தோற்றுவதாயினும் சாக்கிரவுலகிற் சம்பந்தித்தேதோற்றும். இன்றேல் சாக்கிரவுலகு இல்லாத காலத்தில் அது சொப்பனவுலகைத் தோற்றவேண்டும். அஃதில்லை. ஆகலின் சொப்பனவுலகுத் திருட்டாந்தஞ் செல்லாது.

தத்துவங்கள்பல. அவற்றுள் ஒவ்வொன்றற்குந் தொழிலுண்டு. மனமும் ஒரு தத்துவம். சங்கற்ப விகற்பங்களே அதன்தொழில். சங்கற்பம் - நினைத்தல். விகற்பம் - சந்தேகித்தல். வேறு தொழிலதற்கில்லை. அவ்வுண்மை அவருக்குத் தெரியாது. ஆகலின் சொப்பனவுலகை மனந்தோற்றுகிறதென்றூரவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கனவுலகம் பொய், ஆதலால் கனவனுபவமும் பொய. அது போல நனவனுபவமும் பொய். அதனை அறிவதே பாவநிவிர்த்திக்கு வழி என்பது அவர் மதம்.

'மூவுலகையும் பிரகாசிப்பிக்கின்ற சூரியமண்டலத்தை மறைக்கும் மேகமானது முன்னுமில்லைப் பின்னுமில்லை. ஆயின் நடுவிலே தோன்றுவதாம். அது சூரியமண்டலத்தைப் பார்க்கின்றவன் கண்ணை மறைக்கின்றதேயன்றிச் சூரியபிம்பத்தை மறைக்கவேயில்லை. இங்ஙனமில்லாவிடில் சூரியனல்லாமல் மேகமண்டலம் பிரகாசிப்பது எதனால்? (சூரியனாலேயேயாம்) அத்தன்மைபோல் பிரபஞ்சமானது கண்ணை மறைக்கின்றதேயல்லாது தன்னைச் சலிக்கச்செய்வதும் விளக்குவதுமான ஆன்மாவை மறைக்கின்றதேயில்லை. (அங்ஙனமில்லாவிடில் முற்குறித்த உதாரணம்போல் ஆன்மாவில்லாமல் ஜகமே தோன்றுதா மென்க. (அ - கை) ஸ்வப்பன திருஷ்டாந்தத்தால் பிரபஞ்சம் பொய்யெனக் காட்டுகின்றார். ஒருவன் ... இராஜ்ஜியத்தை ஆளுவதாய் சொப்பனங் கண்டெழுந்தவுடன்...அனைத்தும் போய்விட்டதே எனத் துக்கமடைவதுண்டோ? இல்லை. (ஏனெனில்) அது பொய் எனக் கருதினானாதலால். (அன்றியும்) சொப்பனத்தில் கள்குடிப்பது, ப்ரம்மஹத்திசெய்வது முதலிய மகாபாவங்கள் செய்ததாய்க் கண்டாலும் அதனால் தோஷமுடையவனாகான். அதுபோல ஜாக்ராவஸ்தையில் சகல வியவகாரங்களையும் கனவு கண்டதுபோல் மறந்தானாகில் அவன் பாவியாகான். (கனவிற் கண்டது பொய்யாவதுபோல் நனவிற்கண்டதும் பொய்யாம்) ... சொப்பனாவஸ்தையில் கண்ட சுபமாவது அசுபமாவது ஜாக்ராவஸ்தையிற் பொய்யாகின்றது. ஜாக்ராவஸ்தையின்கண் வியவகாரத்திற் றோன்றும் தூலசரீரம் சொப்பனாவஸ்தையில் பொய்யாகின்றது. இங்ஙனம் இருவிதத்தும் பொய்யான வஸ்துக்களில் மூடன் இடைவிடாது பற்றுதலடைகின்றான். ... இங்ஙனம் சொப்பனாவஸ்தைபோல் ஜாக்ராவஸ்தையும் பொய்யாகவேயிருக்க ...அசத்தான (அதாவது உண்மையிலுண்டாகாததான) சொப்பனத்தில் அனுபவிக்கும் ஸ்திரீ போகத்தால் உண்மையாய் ரேதஸ் வெளிப்படுவதுபோல் அஸத்தை (ஸதஸத்விலக்ஷணமான அவித்தையை)க் காரணமாக வுடைய ஜகமும் ஸத்தியம்போலவே தோன்றும். சொப்பனத்தில் புருஷனிருப்பது மெய். ஸ்திரீ யிருப்பதோ பொய். அவ்விருவர்க்குஞ் சம்போகம் நேர்ந்ததும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொய்யே. (ஆயினும்) காலையில் ரேதஸால் வஸ்திரங் கெடுவது சத்தியமாய்க் காண்கிறது. இவையெல்லாம் கற்பனையால் வந்ததன்றே. (இத்தன்மைத்தா மது)' (ப் - வி சார்வரி, வைகாசி 30 உ 345, 346)

என்றது காண்க. அதைப் பகுதி பகுதியாகச் சிறிதே ஆராய லாம். சூரியன் எப்போதுமுள்ளது. மேகம் இடையில்வருவது. அது கண்ணை மறைக்கின்றது, சூரியனை மறைக்கவில்லை. சூரியனை மறைக்குமாயின் மேகம் உண்டாகாது. அஃதுண்டா வது சூரியனாலன்றே? அதுபோல் பிரபஞ்சம் கண்ணை மறைக்கிறது, தன்னைச் சலிப்பிக்கும் பிரமத்தை மறைக்கவில்லை. மறைக்குமாயின் பிரமமில்லாமலே பிரபஞ்ச முண்டாகும் என அவர் சொன்னாரென்று தெரிகிறது. இதில் சூரியனும் பிரமமுஞ் சரி. மேகமும் பிரபஞ்சமுஞ் சரி. ஆனால் மேகம் கண்ணை மறைக்கிறதுபோல் பிரபஞ்சமும் கண்ணை மறைக்கிறதென்றே அவர் சொன்னார். பிரபஞ்சம் மறைக்கிற கண் எது?

சொப்பனத்தில் ஒருவன் நாடாள்கிறான். அந்நாடு சாக்கிர நாடன்று. மறுமுறை கட்குடிக்கிறான். அக்கள் சாக்கிரக்கள் அன்று. இன்னொருமுறை பிரமஹத்தி செய்கிறான். அந்தப் பிராமணன் சாக்கிரப் பிராமணனல்லன். கனாக்கண்ட அவன் நனவுக்குத் திரும்புகிறான். அவன் கனவாட்சி போய்விடுகிறது. அதனால் அவன் துக்கமடையான். அக்கனவுக்குடியும், கொலை யும் போய்விடுகின்றன. அவனுக்குப் பாவமுமில்லை. ஏன்? அக்கனாச் செயல்களை அவன் மறந்தான். காரணமதுவே. அவன் அக்கனாச் செயல்களைப்போல் சாக்கிரச் செயல்களையும் மறந்தானாகில் அவனுக்குத் தோஷமேறாது. ஆகலின் கனவு போல் நனவும் பொய். இப்படி அவர் கூறினார். சாக்கிரசீவன் சாக்கிர சரீரத்திலுள்ள சில கருவிகளின் துணைகொண்டு நினைக்கிறது. அத்துணை நீங்கினால் மறக்கிறது. ஆனால் சாக்கிர சரீர சீவன்களுக்கு அச்சரீரத்திலேயே சொப்பனசரீர சீவன்கள் வேறாயுள்ளன என்றாரவர். அஃதாயின் சொப்பன நிகழ்ச்சி யைச் சாக்கிரத்தில் நினைப்பதும் மறப்பதும் எது? எப்படி?

சீவன் இன்பமே அனுபவிக்குமுலகம் சுவர்க்கம். அவ்வனு பவத்துக்குத் துணையாவது பூதசார சரீரம். சீவன் துன்பமே அனுபவிக்குமுலகம் நரகம். அதற்குத் துணையாவது யாதனா சரீரம். அவ்விருலகங்களிலும் சீவன் வினைகளைச் செய்யாது. வினைப்பயன்களை அனுபவித்தல் மாத்திரஞ்செய்யும். அதனால் அவ்வுலகங்கள் போகபூமிகளெனப்படும். அவை சாக்கிரமா? சொப்பனமா? அல்லது வியாவகாரிகமா? பிராதிபாசிகமா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வின்பத்துன்பங்கள் மெய்யா? பொய்யா? அவையெல்லாம் இங்குமறுக்கப்பட்டன. ஆதலால் அத்தனையும் பொய் என்பதா?

சீவன் இச்சாக்கிரவுலக சரீரத்தையெடுத்து இருவினைகளையும் செய்கிறது. அவற்றின் பயன்களையும் நுகர்கிறது. இருவினையீட்டற் கிடமாதல்பற்றி இவ்வுலகு கருமபூமி எனப்படும்.

சொப்பனவுலகிற் சொப்பன சரீரத்தைக்கொண்ட சீவனும் வினைகளைச்செய்து, பயன்களை நுகர்கிறதென அவரும் சொன்னார்.

ஆகவே வினை அனுபவத்துக்குச் சொப்பனவுலகு, சாக்கிர வுலகு, சொர்க்கநரகவுலகுகள் என மூன்றிடங்களும், சொப்பன சரீரம், சாக்கிரசரீரம், பூதசாரசரீர யாதனா சரீரங்கள் என மூன்று துணைகளும் உள. சொப்பனவுலக சரீரங்கள் பொய் யானால் பின்னவையும் பொய். பின்னவை மெய்யானால் சொப் பனவுலக சரீரங்களும் மெய்யே. அவரோ எல்லாமேபொய் யென்பவர். சொப்பன நிகழ்ச்சி சொப்பனத்தில் அனுபவ மாவதையும் சாக்கிரத்தில் பலிதமாவதையும் கண்டிருந்தும் சொப்பனம் அசத்தியமென வாதிப்பது என்னையின்றுள்மலடி என்பதனோடொக்கும்.

சொப்பனத்தில் பாவம் செய்தவனுக்குத் தோஷமில்லை என்றாரவர். அங்குத் தெய்வத்தினருள் பெற்றவனுக்கு இங்குச் சுகங்கிடைக்குமெனச் சொன்ன அவர் அப்பாவிக்கு இங்குத் தோஷமேறுதென எப்படிச் சொல்லலாம்? இதில் மாத்திரம் சொப்பனமாகிய அசத்தியத்திலிருந்து சாக்கிரமாகிய சத்தியம் பிறவாதுபோலும்.

சொப்பனத்திற்செய்த பாவத்தை மறக்கிறான் ஒருவன். அப்பாவம் அம்மறதியால் பொய்யாகிறது. அவனுக்குத் தோஷ மும் ஏறாது. அதுபோல் சாக்கிர விவகாரங்களையும் அவன் மறந்தானாகில் அவையும் பொய்யாயிடும். அவனுக்கும் அவற் றால் தோஷம் ஏறாது என்றாரவர். மறதி அவ்வளவு இலாப கரமா? அவர் எத்தனையோ பாவங்களைச் செய்திருக்கலாம். அவற்றுள் அவர் மறந்தனவும்பலவே. அவற்றின் தண்டனையை அவர் அடையமாட்டாரா? மாட்டாரெனின் அக்கொள்கை மாபாவச்செயல்களில் மக்களை உந்தவே உதவும். மனித இயற்கை மறதி. அதனால் புண்ணியவானும் தான் செய்த பல புண்ணியங்களை மறக்கலாம். அவன் அவற்றால் வரும் இன்பத்தை இழக்கநேரும். ஆகலின் புண்ணியஞ் செய்யவொட் டாமல் அவனை அக்கொள்கை தடுக்கவுஞ்செய்யும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருவன் சொப்பனத்திற்செய்த பாவங்களைச்ச ாக்கிரத்துக்கு வந்து மறக்கிறான். அப்படியே அவன் சாக்கிரத்திற் செய்த பாவங்களைச் சொப்பனத்துக்குப்போய் மறக்கிறான். ஆகவே சொப்பனங் காண்பவரெல்லாம் தம் சாக்கிரபாவங்களிலிருந்து விலகித் தூயராகிறாரென்றுதான் அம்மதப்படி கொள்ளவேண்டும். அப்படிச் சொப்பனபாவங்களைச் சாக்கிரமும், சாக்கிரபாவங்களைச் சொப்பனமும் நீக்கிவிடுவது உண்மையானால் அவர் ஏன் சாகிறார்? பிரமோபாசனை அவருக்கு ஏன்?

போனபிறப்பிற் செய்தபாவங்கள் இப்பிறப்பில் மறக்கப்படுகின்றன. அதனால் அவை இப்பிறப்பில் நீங்கிவிட்டன என்பது கருத்தா? ஆமெனின் துன்பந் தாங்கமாட்டாமல் தற்கொலை செய்து கொள்பவரெல்லாம் சாந்தி பெற்றனராதல் வேண்டும். தற்கொலை முயற்சி குற்றமாகக் கருதப்படாது. அம்மதம் அம்முயற்சிக்குச் சாதகஞ் செய்வதாயிருக்கிறது.

சொப்பனக் கலவியில் புருஷனிருப்பதுமெய், ஸ்திரீயிருப்பதோ பொய் என்றாரவர். அவருக்கு அப்புருஷனும் பொய்தான். அது முன்காட்டப்பட்டது. நனவிற் கண்டபொருள்களோடு சாமியமுடைய பொருள்களைத்தான் எவனுங் கனவிற் காண்பான். அவன் நனவிற் காணாத எதனையுங் கனவிற் காணமாட்டான். கனவுடலும் நனவுடலும் வேறுவேறானவல்ல. கனவுடல் சூக்குமம். நனவுடல் தூலம். கனவுடல் வேர். நனவுடல் அவ்வேரில் தோன்றும் வேறொரு மரம். ஆகலின் கனவுடலில் வஸ்திரங் கெடுவதற்குரிய செயல் நிகழ்ந்தால் அது நனவுடலையும் பாதிக்கும். கனவுட லசுசி சூக்குமம். அது நனவுடலில் தூலமாய்த் துணியைக் கெடுத்தது. அவ்வளவே. ஆகலின் அக்கனவின் அனுபவம் பொய்யன்று. இஃதப்புருஷ விஷயம். இனிச் சாக்கிரபுருஷனே சொப்பனத்தில் உள்ள புருஷனுமாவான். ஆனால் அவனைச் சொப்பனப் புருஷனென வேறாக்கினாரவர். அங்கு அவன் மெய்யாயிருந்தால், அவன் கூடிய சொப்பன ஸ்திரீயும் மெய்யாய்த்தானிருக்க முடியும். அவனும் அவளும் சமான சத்தைகளே. சாக்கிரத்தில் அவனுடைய படுக்கை அசுசியாகிறது. அப்படுக்கை விஷம சத்தை. அதனால் அவனனுபவம் மெய்யென்பது நிசம். ஆனால் அந்த ஸ்திரீயோ அவனது புத்திதத்துவ பரிணாமம். அன்ன பரிணாமங்கள்தான் எல்லாராலும் சாக்கிரத்திலும் அனுபவிக்கப்படுவன. 'புத்தி ... ... ஆன்மாவிற்குப் போக்கியம்' என்றது மாபாடியமும். அச்சொப்பன ஸ்திரீ தன்னளவில் எப்படிப் பொய்யாவாள்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர் ஒரு விகடமும் பேசிக் கனவைப் பொய்யெனச் சாதிக்க முயல்கிறார்.

> 'இவருக்கு எவராவது சாக்கிரத்தில் கடன் கொடுத்திருந்து அப்பணத்தைச் சொப்பனத்தில் திருப்பிக் கொடுத்துவிட்டதாகக் காண்பாராஞல், அவர் சாக்கிரத்தில் வந்து பணங் கொடுத்துவிட்டேன் என்பார்; கொடுத்துவிட்டதாகச் சத்தியமும் செய்வார். ... அவர் பொய்யரல்லர். சொப்பனம் மெய்யென்பது அவர் முன்னோரால் எழுதப்பட்டிருக்கும் மதப் புத்தகத்தின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையின்பேரில்தான் அவருக்குச் சொப்பனம் மெய்யென்று கொள்ளும் நம்பிக்கை உண்டாயிற்று' (மா - ச 45)

என்பதது. விகடப்பேச்சு வாதத்துக்குதவாது, கூத்துக்கே உதவும். சாக்கிரத்தில் கொற்றனுக்குச் சாத்தன் கடன்கொடுக்கிறான். அவன் அக்கடனைத் திரும்பப் பெறுமலே சில நாட்களில் இறந்துவிடுகிறான். அவனுக்கு வாரிசுகளுமில்லை. அதனால் கொற்றன் அத்தொகையைச் சுவீகரித்துக்கொள்ளலாமா ? திருப்பிக்கொடுக்க வேண்டாமா ? எப்படிக் கொடுப்பது ? அக்கடன் தொகையைக்கொண்டு சிலகாலம் சுகமாய் வாழ்க்கை நடத்திப் பின்னர்க் கொற்றனும் சாகிறான். ஆயினும் அக்கடன் கேள்விமுறையற்றுப் போய்விடாது. அதுதீர்க்கவே படும். அவ்விருவரும் மீண்டும் பிறப்பர். அப்பிறப்பில் ஒருவரையொருவர் அறியார். அவர் விலாசங்கள் வேறாகும். கடன் கொடுத்ததும் வாங்கினதுமே அவருக்குத்தெரியா. ஆனால் நீதிதேவதை அவ்விருவரையும், அத்தொகையையும் அறியும். கடன் கொடுத்தவனுக்கு வாங்கினவனிடமிருந்து எந்த ரூபத்திலாவது அத்தொகையை வட்டிசகிதம் அத்தேவதை வாங்கிக்கொடுப்பது சத்தியம். ஆகலின் கடன்காரன் எவனும் கடனைத்திரும்பக் கொடாமல் தப்பமுடியாது. இச் சாக்கிரவுலகம் அப்படிப்பட்டது. இதில் பலமதங்களுள. அவற்றுள் சொப்பனத்தைப் பொய்யென்பன சில, மெய்யென்பன சில. ஆனால் எல்லா மதங்களும் சாக்கிரத்தை மெய்யென்றே சொல்லும். அவர் மதமொன்றுதான் சாக்கிரத்தையும் பொய்யெனக்கூறிச் சாதிக்கும். சாக்கிர சொப்பனங்கள் அதிற் சமமான பொய்கள். ஆகலின் இங்கேயே அவருக்குக் கடன் கொடுத்தவன், வாங்கின அவர், பணம், கொடுத்து வாங்கின தொழில் எல்லாம்பொய். அவர் அவனைப்பார்த்து 'இவ்வுலகம் பொய். இதன்பகுதிகளான நீயும் பொய், நானும் பொய். நீ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடுத்ததும் பொய், நான் வாங்கினதும் பொய், பணமும் பொய்' எனப்பேசி ஏமாற்றலாம். ஆனால் அஃதவரால் முடியாது. அவரைச் சார்ந்தாரும் நாளிதுவரை அதுசெய்திலர். ஏன்? சாக்கிரத்தை மெய்யென்கிற மதங்களைச் சார்ந்தவர் நடுவில் அவரிருந்து காலங்கழிக்கிறார். வேறு புகலில்லை. அவர்மதம் போதிக்கும் அப்பொய்ப் பிரசாரம் பலியாது. அவருக்குக் கடன்கொடுத்த மற்றவர் அவரைச் சும்மாவிடார். அந்நிர்ப்பந்தத்தாற்றான் அவர் அக்கடனைத் திருப்பிக்கொடுக்கிறார். ஆனால் அவர் கடன்கொடுத்திருந்தால் அதைத் திரும்ப வாங்குவாரா? மாட்டாரா? அவருக்குச் சாக்கிரம் பொய்யாகலின் அவர் அதை வாங்காமலிருப்பதே நியாயம். ஆனால் அவரும் வாங்கிவிடுவார். அதற்கும் வகைசெய்துளது அவர் மதம். அது சாக்கிரத்தை மெய்யெனவும் சில சந்தர்ப்பங்களில் பேசும். அதைக் காட்டித் தம் தொகையை அவர் வரவு செய்வர். இங்ஙனம் பிறரை ஏமாற்றச் சாக்கிரத்தையே பயன்படுத்த வகைசெய்தும் வாய்ப்புப்பெறாத அவர் சொப்பனத்தை வேடிக்கை பேசுகிறார். கடன் கொடுத்தவன் சாத்தன். வாங்கினவன் கொற்றன். கொற்றன் சொப்பனத்தில் அதனைத் தீர்க்கிறான். ஆனால் சாக்கிரப் பொருளெதுவும் சொப்பனத்துக்கு வராது. வந்தால் சொப்பனமும் சாக்கிரமாகும். அவனவன் சொப்பனம் அவனவனளவிற்றான் தொழிற்படும். ஆகலின் கடன்கொடுத்த சாக்கிர சாத்தனும் கொற்றனது சொப்பனத்தில் வாரான். கொற்றனுக்கு அது தெரியும். சாக்கிர நீர் சொப்பனத்தீயை அணையாதென அவருஞ்சொன்னார். ஆகலின் கொற்றன் சாக்கிரத்தில் வந்து சாக்கிர சாத்தனிடமே கடனைத் தீர்ப்பான். அவன் அச்சாத்தனை ஏமாற்றான். தன் கடனைக் கொற்றன் திருப்பிவிட்டதாகச் சாத்தனுங் கனுக்காணக்கூடும். அதனால் அவன் சாக்கிரத்துக்கு வந்து கொற்றனிடம் தன்கடனைக் கேளானா? கேட்பான். அவனும் தன் கனவால் ஏமாறான். இன்னும் கொற்றன் கனவுபோல் அவருங் கனுக்காண்பர். தாம் சாக்கிரப் பொய்யில் வாங்கிய கடனைச் சொப்பனப் பொய்யில் தீர்த்துவிட்டதாகக் கூறி அச்சாத்தனை அவரும் ஏமாற்றலாம். சிருட்டிதொட்டு நாளிதுவரை நிகழாத தொன்றை அவர் கற்பித்துக்கொண்டு வேடிக்கை பேசுவது முறையன்று. சாக்கிரத்தையே பொய்யென்கிற அவர் சொப்பனத்தைப் பொய்யென்பது வியப்பில்லை.

சாக்கிரம் நெடுங்கால மிருக்கும் பொய், ஆகலின் அது மெய்யெனப் பட்டது. சொப்பனம் குறுகிய காலமே யிருக்கும் பொய், ஆகலின் அது பொய்யெனப்பட்டது. ஆயினும் அவ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரண்டும் பொய்யே என்றுரவர். பொய் நீண்டகால மிருந்தால் மெய், குறுகியகாலமிருந்தால் பொய் என்பது மெய்க்கும் பொய்க்கும் விளக்கமாகுமா? ஆமெனின் காலமாவது யாது? அது மெய்யா? பொய்யா? எதனுல் மெய்? எதனுல் பொய்? விஞடியிலிருந்து ஊழிவரை கால அளவுகள் இருக்கின்றனவே. அவற்றுள் எந்தெந்த அளவுகள் மெய்? எந்தெந்த அளவுகள் பொய்? நூருண்டு வாழ்ந்தவனை மெய்யெனவும், பிறந்தவுடன் இறந்துபோன குழந்தையைப் பொய்யெனவும் சொல்லலாமா? இடைப்பட்ட ஆயுளினரை மெய்யென்பதா? பொய்யென்பதா? ஆல், அரசு, மனிதன், எருது, புழு முதலியவற்றுள் மெய்யாவதெது? பொய்யாவதெது? ஒப்புநோக்கு முறையில் கால அளவுகளெல்லாமே மெய்யும் பொய்யுமாகாவா? அதை நிச்சயம் பண்ணுமல் நீண்டகாலம், குறுகியகாலம் எனப்பேசுவது செல்லுமா? இனி அவர் பிரமம் மெய்யா? பொய்யா? அதுவும் பொய்யாக வேண்டும். எப்படி? அவர்கருத்துப்படி அதுவும் சாக்கிர சொப்பனங்கள் போல் காலவசப்பட்டதே. நீண்டகால மிருப்பது சொப்பனம். அதைவிட நீண்டகால மிருப்பது சாக்கிரம். அதைவிட நீண்டகால மிருப்பது பிரமம். ஆகலின் அத்தனையும் மெய், குறுகிய காலமிருப்பது பிரமம். அதைவிடக் குறுகியகால மிருப்பது சாக்கிரம். அதைவிடக் குறுகியகால மிருப்பது சொப்பனம். ஆகலின் அத்தனையும் பொய். இப்படி வாதிப்பதில் தவறென்னை? அதற்கிடந்தருவது அம் மதம். இங்ஙனம் பொய்க்கும் மெய்க்கும் விபரீத இலக்கணம் பேசுகிற அவர் சாக்கிரத்தைப் பொய்யெனச் சாதிப்பதற்குச் சொப்பனத்தைப் பொய்யெனத் திருட்டாந்தங் கூறியது பயனற்றதாயிற்று.

பிரமமொன்றே சத்தியம். சகசீவபரங்கள் தோற்றமே. என்ற தம் கொள்கையைத் தாபிப்பதற்கு அவர் காட்டிய திருட்டாந்தங்கள் தாய் பிள்ளை, பால் தயிர், மண் கடம், பிம்பப் பிரதிபிம்பம், கயிற்றரவு, கானல்நீர், கனவுலகு என ஏழு. அவற்றுள் முதல் ஆறு திருட்டாந்தங்களை வரிசையாக அவரே பூர்வபட்சஞ்செய்தார். ஏழாவது அவருக்குச் சித்தாந்த பட்சமாயமைந்தது. இங்கே அவ்வேழும் ஆராய்ந்து ஒதுக்கப்பட்டன. அவர் பூர்வபட்சஞ் செய்தவை இங்கும் பூர்வபட்சஞ் செய்யப்படலாமா என்ற வினு எழலாம். அவற்றை அவர் பூர்வபட்சஞ் செய்த பகுதி வேறு. அஃதிங்குத் தொடப்படவில்லை. ஒவ்வொரு திருட்டாந்தத்துக்குந் தாட்டாந்திகத்தோடு இயைபு கூறினுரவர். அதுவுமில்லை என்பதுதான் இங்குக் காட்டப்பட்டது. இது வேறு பகுதி. ஏழாவது அவருக்குச் சித்தாந்த பட்ச

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாகலின் அதுவும் ஆராய்ந்து பூர்வபட்சஞ் செய்யப்பட்டது. ஆகவே சகமாதியன தோற்றம் என்பதை அத்திருட்டாந் தங்கள் நிரூபிக்கவில்லை. அதனை அறிக.

சீவன்

சீவன் என்பதொன்று. அதன் இலக்கணம் என்னை? அவர் மதம் சொல்வதைக் காணலாம்.

'பிரமத்தின்கண் ஜீவன் கயிற்றரவு ... போலக் கற்பிதம்' (பே - தி 9)

'சிவன் சத்து, ஜீவன் சத்துப்போலி' (பே - தி 48)

'சிவன் கற்பனை' (திரு - வி 45)

'பிரமம் ஜீவர்களாவது விவர்த்தம்' (அ - வி 80)

'அத்வைதிகள் பிரமத்தைச் சத்தியமென்றும், ஜீவவுலகங்களைப் பொய்க்கும் மெய்க்கும் விலக்ஷணமான அநிர்வசனீயமென்றுஞ் சொல்லுகின்றார்கள்' (து - வா 14)

'பிரகிருதி ஜீவர்கள் அநிர்வசனீயமாக அநாதி' (வே-தீ 52)

'அத்தியாசத்தி லொன்றான சீவன்' (பஞ்ச 12)

'உயிர் வியாவகாரிக சத்துப்பொருள்' (து - வா 62)

'அந்தக்கரண பிரதிபிம்பனான சிதாபாசன் (ஜீவன்)' (அ - வி 33)

'உயிராகிய ஜீவான்மாவானது...தனக்கு யதார்த்தத்தில் பொருளில்லாதபோது தன்னைத்தான் எப்படி அறியும்?' (வே - தீ 63)

'பிரம சைதன்னியமானது...அவைக(அந்தக்கரணங்கள்) ளில் பிரதிபலிக்கின்றது. பிரதிபிம்பர்களே ஜீவர்கள்... சகல ஜீவர்களும் அந்தக்கரணத்தை உபாதியாயுடையவர்களேயாம்' (பே - தி 18)

'அவித்தையோபாதிகன் சீவன்' (அ - வி 67)

'ஜீவன்...காரியோபாதி (அவித்தையிற் பிரதிபவனம்)யை யுடையவன்' (பே - தி 17)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஒரு கானலே பலவித அலைகளையுடைய நீராய்த் தோன்றுவது போல, பிரமமும் பலவித தன்மைகளையுடைய சீவர்களாய் விளங்குகின்றது' (அ - வி 79)

'மலின சேதனமாகிய சீவன் பிரமத்தினிடத்தில் கற்பிதப் போலிப் பொருளாயிருக்கிறன்' (அ - வி 63)

'உபாதிகளிற் பிரதிபிம்பித்துச் சரீரங்களிற் பிரவேசித்து விவகரிக்கின்ற சிதாபாசன்றான் சீவன்' (அ - வி 118)

'வியாபகமான பிரமகூடஸ்த ஆன்மாவினின்றும் ஏகதேசமான ஜீவான்மா தோன்றுவது' (பே - தி 39)

'சீவான்மா அவ்வியாபக ஏகதேச அணுப்பொருள்' (ஜீ - பரி 8)

'அணுவென்பதெல்லாம் உருவாயேயிருக்க வேண்டுமென்பதென்னை ?' (ஜீ - பரி 6)

'கலாபஞ்சகமென்பது ஜீவ உபாதி' (பே - தி 73)

'உண்பானாகிய சீவனுக்கும் ஊட்டுவானாகிய ஈசனுக்கும் காயபேதம் உபாதியால் வந்தது' (அ - வி 95)

'சிதாபாசன் (ஜீவன்) அந்தக்கரணத்துடன் நசித்துப் போகிறன்' (அ - வி 33)

'எப்படி அம்சமான அலையும், ... பொரியும் சலத்தையும் நெருப்பையும் அடைந்தபோது அலையும் பொரியுமில்லை. அப்படியே ப்ரம்மத்தின் அம்சமான ஜீவன் ப்ரம்மத்தை அடைந்த பிறகு இல்லை. இந்த நியாயத்தின் பிரகாரமும் ... ஜீவன் நாசத்தை அடைகின்றவனாகின்றான். ஆனதால் நாசமில்லாதவன் ஜீவன் என்பதற்கு ஞானமின்றிச் சம்சாரபீஜம் நசியாமலிருப்பவன் என்பது பொருள்' (வே - தீ 49)

'... நாசமில்லாதது ஜீவனாகிய சேதனமென்றும் சொல்லப்படுகின்றன. நாசமற்றவன் என்பதன் பொருள் ஜீவன் ஞானமில்லாமல் சம்சாரபீஜம் நசியானென்பது; ஜீவனே நசியாதவனென்பது பொருளன்று' (வே - தீ 47)

என்பன சில வாக்கியங்கள். சீவன் கற்பிதம், சத்துப்போலி, விவர்த்தம், அநிர்வசனீய அநாதி, அத்தியாசம், வியாவகாரிக சத்து, சிதாபாசன், தனக்கெனப் பொருளில்லாதது, பிரதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிம்பம், அவ்வியாபகம், ஏகதேசம், அணு, அருவம், கடலலை போல்வது, தீப்பொறிபோல்வது, காரியோபாதிகள்? பிரமமே பலவித தன்மைகளையுடைய சீவன்களாய் விளங்குகின்றது; பிரமம் அவித்தையிற் பிரதிபிம்பித்துச் சரீரங்களில் பிரவேசித்துச் சீவனாய் விவகரிக்கிறது; கூடஸ்த பிரமத்திலிருந்து ஏகதேசமாய்த் தோன்றுவது சீவன்; சீவனுக்குச் சரீரபேதம் உபாதியால் வந்தது; சீவன் அந்தக்கரணத்துடன் நசிக்கும் என்பது அவ்வாக்கியங்களின் விஷயம். சீவன் தனக்கெனப் பொருளில்லாததாயின் சீவனுக்குச் சொல்லப்பட்ட ஏனையிலக்கணங்களத்தனையும் வெறுமைக்குச் சொல்லப்பட்ட இலக்கணங்களேயாம். பிரமம் பிம்பமானால் அவித்தை கண்ணாடியும், சீவன் பிரதிபிம்பமுமாம். அஃதாயின், மனிதப் பிரதிபிம்பம் சிதாபாசனாகாமல் அசேதனமேயாகும். அதுபோல் பிரமப் பிரதிபிம்பமெனப்படுஞ் சீவனும் அசேதனமென்பது நிச்சயம். பிரமம் கயிறானால் சீவன் கயிற்றரவாகுமென்பதாயின் கயிற்றரவு எதன் சகாயத்தாலுங் கடியாது. அதுபோல் சீவனும் எச்செயலுக்கும் வினைமுதலாதலில்லை. பிரமம் கடல்நீர், சீவன் அலை என்றால் கடல்நீரும் உவர்ப்பு, அலையும் உவர்ப்பின் ஆபாசமல்லாமல் உவர்ப்பே. அவ்விரண்டும் தன்மையில் வேறுபடவில்லை. ஆகலின் சீவனும் தன்மையில் வேறுபடாத பிரமப்பொருள் என்பதுதான் உண்மை. நெருப்பும் பொரியும் என்னும் உவமையும் அம்முடிவையே தரும். சீவனைச் சொரூப அநாதியென அவர் சொன்னது முன் காட்டப்பட்டது. இங்கு அதனை அநிர்வசனீய அநாதியென்றாரவர். அவ்விரண்டநாதிகளும் ஒன்றுதானா? ஆயின் பிரமமுதலிய பிற சொரூப அநாதிப் பொருள்களும் அநிர்வசனீய அநாதிகளாகவேண்டும். அப்படியா? அங்ஙனம் சீவனைப் பொருளற்றது, பிரதிபிம்பம், தோற்றம், அலைப்பிரமம், பொரிப்பிரமம், அநிர்வசனீய அநாதியென முரண்படப் பேசுவது சீவன் என்பது இன்னதென விளக்கமாட்டாத எளிமையையே காட்டுகிறது. இன்னும் சீவன் எதார்த்தத்தில் பொருளாயில்லாதபோது தன்னை எப்படியறியுமென்றாரவர். பொருளாயில்லாத சீவன் தான் அறியப்படாததுபோலத் தானும் அறியாது. அதாவது சீவன் அறியப்படும்பொருளல்லாததுபோல் அறியும் பொருளுமன்றென்பது. ஆனால் சீவனே உயிர். அஃதறிகிறது, இச்சிக்கிறது, செய்கிறது. அதனால் விளையும் நலந்தீங்குகள் பல. அவ்வுயிர் இல்பொருளானால் அத்தனைக்கும் பொறுப்பாவதெது? அறிவிச்சை செயல்கள், எந்திரங்கள் செய்யுங் காரியங்கள் போன்றனவா? சீவன் அநாதியாயினும் நசிப்பதேயென்றாரவர். அநாதியாயிருப்பது நசியாது. நசிப்பது அநாதியாகாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்

நான் அறிகிறேன், இச்சிக்கிறேன், செய்கிறேன் என்பதொரு வாக்கியம். அதில் நான் என்பது வினைமுதல். அந்த நான் என்பதற்குப் பொருளாயிருப்பது எது? அதற்கு அவர் தந்த விடை

'பிரமமும் கூடஸ்தனும் நித்தியமே; ஆனால் இதன் பொருள் மகாகாசம் கடாகாசமிரண்டும் நித்தியமென்பது போலாம்' (மு - மை 30)

'ஞானிகள் ... அகங்காரப் பிரதிபிம்பனுயுள்ள சிதாபாச (சீவன்)னைச்சாட்சியாயுள்ள சிதாத்மா(கூடஸ்தன்)வைப் பிரவேசிப்பிக்காமல் அதாவது சுத்திகாரசிதம் போன்று ஒருமைப்பாடாய்க் காணமல் நீரிற்றோன்றும் பிரதிபலனம்போல வேருகக்கண்டு, சிதாபாசன் பொருளன்று, கற்பனையா யுள்ளவனெனக்கழித்து, அச்சிதாபாசனுக்கு அதிஷ்டானமாயுள்ள கூடஸ்தனைக் கண்டு அதாவது கூடஸ்தனுய் நின்று அதிஷ்டானத்தையும் ஆரோபத்தையும் வேருகக் காண்கிருர்கள்' (பஞ்ச 23)

'ஜீவ சாக்ஷியும் துவம்பத லட்சியமும், வியஷ்டி ஸ்தூல சூட்சும காரண சரீரங்களுக்கு விலக்ஷணமுமாகிய கூடஸ்தன்; சர்வசாட்சியும் தத்பத லட்சியமும், சமஷ்டி ஸ்தூல சூட்சும காரண சரீரங்களுக்கு விலட்சணமும் ஆகிய வியாபக பிரமத்தின் ஓர் அமிச (குடாகாசம் போல் கற்பித பொய்யுபாதியினுல் அம்சம் போற்றேன்றுவது) மாயிருப்பதினுல் அக்கூடஸ்த ஆன்மாவை வியாபகமென்று சொல்வது கூடும். அவ்வளவேயன்றிச் சீவான்மாவை வியாபகமென்று சொல்வதற்கு வேதப் பிரமாணமும், ... புராண இதிகாசாதிப் பிரமாணமும் இல்லை. இதுதான் ஆன்மா வியாபகம் என்பதன் பொருள் ... வியாபகமான பிரம கூடஸ்த ஆன்மாவினின்றும் ஏகதேசமான ஜீவான்மா தோன்றுவதையும், அவ்வான்மா அஞ்ஞானத்தால் மறைபடுவதையும் விவர்த்தமாய்க் கொண்டால் பிரமமான ஆன்மாவின் கண் தோஷம் ஏதும் காணப்படாது' (பே - தி 39)

'பிரமத்தினிடத்திலே ... பல தேகபேதங்களினுலே கயிற்றிற் பாம்பென்கிற பிரமைபோல் கற்பிதமாயிருக்கிற ஞானமே அஞ்ஞானம்' (மு - மை 19)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'அஸ்தம், கரம் என்பன இயைபு நோக்கிக் கையையே யுணர்த்தும் ஒரு பொருட் கிளவியா யிருத்தல்போல, கூடஸ்தன் பிரமம் என்பன சொல்லா லிரண்டாய்ப் பொருளால் ஒன்ருயிருக்க ... ஒரே சலம் உபாதிபேதத் தால் குளமென்றும், மடுவென்றும், கிணறென்றும், யாறு என்றும், கடலென்றும் பேர்பெற்றமைபோல ஒரே சேதனப்பொருள் பிரமமென்றும் கூடஸ்தனென்றும் சமஷ்டி வியஷ்டி உபாதிகாரணமாகப் பெயர்பெற்றது' (மு - மை 29)

'மித்தையான உலகிஞெரு கூருன சீவனுக்கு அதிஷ்டான மாயுள்ள பிரமத்தைக் கூடஸ்தனென் றுரைத்து, அக் கூடஸ்தனே பிரமமென்று புகல்வதில் கூறியது கூறல் என்னும் குற்ற முண்டாமா றெங்ஙனம்?' (மு - மை 21)

'பிரத்தியகாத்மாவெனினும் கூடஸ்தனெனினும் ஒன்றே' (மு - மை 28)

'ரச்சுசர்ப்பப் பிராந்தியில் சர்ப்பப்பிராந்தி நீக்கமே ரச்சு வாய் விளங்குவதுபோல, அவித்தையோபாதியாயுள்ள சீவன் அவித்தையோபாதி நீக்கத்தில் சிவமாய் அல்லது கூடஸ்தனுய் விளங்குகின்ருன்' (மு - மை 28)

'நான் என்பதற்குப் பொருள் முத்தியில் சீவசாட்சியாய் உள்ள கூடஸ்தன் என்றும், அக்கூடஸ்தனே பிரமம் என்றும் வேதவேதாந்தங்கள் கூறுவதைப் பன்முறை ... யுக்தி யநுபவத்தோ டெழுதியிருப்பதற் கெல்லாம் பதில் விடுக்கும் வலிமையின்றி ... தாந்திரீக பாஷாண்டிகள்... என்றவாறு அத்வைதிகள் நான் என்பதற்குப் பொருள் சீவனைக் கொள்ளுகிருர்களென்று கூறல் விவேகமுடை மையாமோ ?' (மு - வா 4)

'நான் என்பதின் பொருள் வாச்சியார்த்தத்தில் சீவன் என்றும் இலக்கியார்த்தத்தில் பிரமம் என்றும் விளங் கின' (அ - வி 126)

என்பது. பிரமமும் கூடஸ்தனும் நித்தியம். பிரமம் சர்வசாட்சி, தத்பதலட்சியம், சமஷ்டி ஸ்தூல சூட்சும காரண சரீரங்களுக்கு விலட்சணம், வியாபகம், அமிசி. கூடஸ்தன், பிரத்தியகாத்மா, சிதாத்மா என்பன ஒன்றே. கூடஸ்தன் சீவசாட்சி, துவம்பத லட்சியம், வியஷ்டி ஸ்தூல சூட்சும காரண சரீரங்களுக்கு விலட்சணம், வியாபகம், அமிசியாகிய பிரமத்தின் அமிசம். கூடஸ்தனுகிய சிதாத்மா சீவனுக்கு அதிஷ்டானம். சீவனுகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிதாபாசன் அதில் ஆரோபம். ஆயினும் அப்பேதங்களெல்லாம் எதார்த்தமல்ல, விவர்த்தமே.

எவன் ஞானி? சிதாத்மாவி (கூடஸ்தனி)ல் சிதாபாச (சீவ)னை இப்பியில் வெள்ளிபோல் ஒருமையாகப் பார்த்தல் கூடாது. பிம்பத்தை நீரில் தோன்றும் பிரதிபிம்பத்துக்கு வேருகப் பார்ப்பதுபோல் அக்கூடஸ்தனை அதிஷ்டானமென அவ்வாரோப சீவனுக்கு வேருகப்பார்த்தல்வேண்டும். பார்த்து அவ்வாரோப சீவன் பொருளன்று, கற்பனையா யுள்ளதெனக் கழிக்கவும் வேண்டும். அப்படிப் பார்த்துக்கழிப்பவனே ஞானி.

பிராமணன் சத்திரியன் விலங்கு பறவை முதலியன தேகம்பற்றிய பேதம். அப்பேதம் பற்றிய ஞானமே அஞ்ஞானம். அவ்வஞ்ஞானத்தால் மூடப்படுகிறது சீவன்.

பிரமம், கூடஸ்தன் என்பன சொல்லால் இரண்டு, பொருளால் ஒன்று. அதாவது பிரமமே கூடஸ்தன், கூடஸ்தனே பிரமம் என்பது. ஆனுல் சமஷ்டி வியஷ்டியென உபாதிகள் இரண்டு. ஒருபொருளே சமஷ்டியுபாதியால் பிரமமென்றும், வியஷ்டியுபாதியால் கூடஸ்தனென்றும் பெயர்பெறும்.

கயிற்றரவுப் பிராந்தி யென்பதொன்று. அப்பிராந்தி நீங்கினுல் அவ்வரவும் நீங்கும். அந்நீக்கமே கயிருய்விளங்கும். அதுபோல் கூடஸ்தனில் அவித்தியோபாதிகன் சீவன். அவ்வுபாதி நீங்கினுல் அவ்வரவுபோல் அச்சீவனும் நீங்கும். அந்நீக்கமே கூடஸ்தனுய் விளங்கும்.

ஆகவே நான் என்பதற்குச் சீவன் என்பது வாச்சியப் பொருள், கூடஸ்தன் அல்லது பிரமம் என்பது இலட்சியப் பொருள் என்பது கண்டுகொள்ளப்படும். இத்தனையும் அவ்வாக்கியங்களிலிருந்து கிடைத்தவை. அவற்றைச் சிறிதே ஆராயலாம்.

பிரமத்துக்கு மகாகாசமும், கூடஸ்தனுக்குக் கடாகாசமும் உவமையெனச் சொல்லப்பட்டன. ஆனுல் கடம்போல் உவமேயத்தில் எதுவுமில்லை. அன்றியும் கடம் ஆகாசத்தைப் பிரிக்கவோ, தனக்குள்ளிருக்கும் ஆகாசத்தினியல்பை வெளியிலிருக்கும் ஆகாசத்தின் இயல்பிலிருந்து வேறுபடுக்கவோ மாட்டாது. ஆகலின் அக்கடத்தை அவர் சுமந்து திரிவது வீண். அவரே பிரமமும் கூடஸ்தனும் சொல்லாலன்றிப் பொருளால் இரண்டல்லவென்ருர். பொருளற்ற அச்சொற்களை வைத்துக்கொண்டு வேறு வேறு இலக்கணங்களை அப்பிரமத்துக்கும் கூடஸ்தனுக்கும் அவர் கூறுவானேன்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குளம், மடு, கிணறு, யாறு, கடல் என்பன நீருக்கே உபாதி பற்றிய பெயர்கள். நீர் என்பது மாத்திரம் உபாதி பற்ருத பெயர். அதுபோல் பிரமம் கூடஸ்தன் என்பன ஒரு சேதனப் பொருளுக்கே சமஷ்டி, வியஷ்டியென்னும் உபாதிபற்றிய பெயர்கள். சேதனப்பொருள் என்பது மாத்திரம் உபாதி பற்ருத பெயர் என்ருரவர். அஃதாயின் எவ்வுபாதியும் பற்ருத சைதன்யம், சமஷ்டியுபாதி பற்றிய பிரமம், வியஷ்டியுபாதி பற்றிய கூடஸ்தன், மாயையுபாதி பற்றிய ஈசன், அவித்தை யுபாதிபற்றிய சீவன் என ஐந்துசைதன்யங்கள் அவர் மதத்தில் உளவென்பது கூறப்படுகிறது. ஆனல்,

> 'எங்குமாம் பிரம மீசன் நண்ணுங் கூடஸ்தன் சீவன்
> நான்கு சைதந்ய மாமே' (மு - மை 21)

என நான்கு சைதன்யங்களே கொண்டாரவர். முதற்சைதன் யத்துக்கு அம்மதத்தில் இடமில்லை. ஏன்? அது கிடையா தென்ருல் நீர் உவமானத்துக்கு உவமேயம்வேண்டும். அவர் தருக.

ரச்சுவையும் ரச்சுசர்ப்பத்தை (இப்பியையும் இப்பி வெள் ளியை)யும் போன்று கூடஸ்தனும் சீவனும் ஒருமையாயிருக் கின்றன. ஞானி அவ்விரண்டையும் அப்படிக் காணுமல் ரச்சுப் போன்று அதிஷ்டானமாயுள்ள கூடஸ்தனையும், அதிலாரோப மாயுள்ள சீவனையும் பிரித்துக்கண்டு சீவனைக் கற்பனையெனக் கழித்துவிடுகிருன். அப்போது அவன் கூடஸ்தனையே காண் கிருன். அதாவது அதிட்டானமான கூடஸ்தனுய் நிற்கிருன் என்ருரவர். கழிப்பதற்குமுன் அவன் சீவனே. கழிப்பதற்கான முன்முயற்சியை அச்சீவனே செய்திருக்கும். அம்முயற்சிக்குப் பயன் அச்சீவனின் நாசமே. அது தற்கொலை. அக்கொலையால் அம்முயற்சியும் அழியும். அது கூடஸ்தனைத் தருவதெப்படி? விதையின் அழிவில் மரம் வருவதுபோலும் என்னலாமவர். விதை தன்னைப் பொசுக்குதலாகிய முயற்சியைச்செய்துகொண் டால் அது மரத்தைத் தருவதில்லை. அப்படியே நசித்துப் போன சீவமுயற்சி கூடஸ்தனைத் தரமாட்டாது. ஆகலின் ஞானி கூடஸ்தனைக் காண்பதற்கோ, கூடஸ்தனுய் நிற்பதற்கோ வழி யில்லை. மேலும் அவன் கூடஸ்தனைக் காணவேண்டுமாயின் அதற்கு வேருய் நிற்கவேண்டும். காணும் பொருளும் காணப் படும்பொருளும் அதுவேயாயிருக்க முடியாதென அவரே சொன்னர். அது முன் காட்டப்பட்டது.

சீவன் தேகத்தோடு கூடியபோது இருக்கும் ஞானத்தை அஞ்ஞானமெ(அறியாமையெ)ன்ரு ரவர். அஃதாயின் தேகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போனல் அவ்வஞ்ஞானமும் போம். அப்போது செத்தவ ரெல்லாமீ ஞானிகளாவார். அதனை அம்மதம் ஏலாதாயின் தேகத்தோடு கூடிய ஞானத்தை அஞ்ஞானமென்றல் பிழை.

கயிற்றரவு போல்வது கூடஸ்தசீவன்; கயிற்றரவுப் பிராந்தி நீங்கினல் அவ்வரவு போய்க் கயிறு எஞ்சும்; அது போல் அவித்தியோபாதி நீங்கினல் சீவன் போய்க் கூடஸ்தன் எஞ்சும் என்றூரவர். கயிற்றரவுப் பிராந்தி கயிற்றினுடையதா? ஆமெனின் அதனைக் கயிறுதான் நீக்கிக்கொள்ளவேண்டும். அப்பிராந்தி கயிற்றரவினுடையதா? ஆமெனின் அதனை அவ் வரவுதான் நீக்கிக்கொள்ளவேண்டும். அஃதக்கயிறும் அரவு மல்லாத பிறிதொன்றனுடையதா? ஆமெனின் அதனை அப் பிறிதொன்றே நீக்கிக்கொள்ளவேண்டும். மேலும் அப்பிறி தொன்ருவ தெது? அதுபோல் அவித்தியோபாதி கூடஸ்த னுடையதாயின் அதனைக் கூடஸ்தனும், கூடஸ்த சீவனுடைய தாயின் அச்சீவனும், கூடஸ்தனும் கூடஸ்தசீவனு மல்லாத பிறி தொன்றனுடையதாயின் அப்பிறிதொன்றுமே நீக்கிக்கொள்ள வேண்டும். ஆனல் பிராந்தி கயிற்றுக்கும் கயிற்றரவுக்குமில்லை. பிறிதொன்றற்(மனிதனுக்)கே யுண்டு. அதுபோல் அவ்வுபாதி யும் கூடஸ்தன் கூடஸ்தசீவன் அல்லாத பிறிதொன்றற்கே யிருக் கக்கூடும். அப்பிறிதொன்ருவது யாது? அஃதில்லையென்றூல் அவ்வுவமான உவமேயங்களை அவர் பொருத்திக்காட்டுக.

கூடஸ்தன் அதிட்டானம், சீவன் அதில் ஆரோபம் என்று ரவர். அவ்வதிட்டானத்தில் சீவன் தானே ஆரோபித்துக் கொண்டதா? அஃ தாரோபிக்கப்பட்டதா? அவ்வாரோபத் துக்கு முதல்வேற்றுமைக் கருத்தாவோ மூன்ரும் வேற்றுமைக் கருத்தாவோ இல்லையானல் அவ்வாரோபம் இயற்கையே. அதனை எந்த ஞானியாலும் நீக்கமுடியாது. ஆகலின் நான் என்பதற்குச் சீவன் என்பதே மெய்ப்பொருளாகும். அதுவே நான் என வினைமுதலாகி வினையைச் செய்து பயனை அனுப விக்கிறது. அவ்வினை முதலியன அச்சீவனுக்குப் பந்தம். அது நீங்கி முத்திபெறுவதும் அச்சீவன். ஆனல் முத்தியில் அச் சீவன் நசிக்கக் கூடஸ்தன் முத்திபெறு மென்று ரவர். கூடஸ்த னும் பிரமத்துக்கும் சீவனுக்கும் இடையிலுள்ளதொரு பிரமந் தான். உலகில் சீவன் அனுட்டிக்குஞ் சாதனங்களால் அவ் விடைப்பிரமம் முத்திபெறு மென்பது சாத்தன் மருந்துண்ணக் கொற்றன் நோய்தீர்ந்தான் என்பதுபோலும். நான் என்ப தற்குக் கூடஸ்தன் இலட்சியார்த்தமும், சீவன் வாச்சியார்த்தமு மாயின், வாச்சியார்த்த நான் என்பதே மேற்காட்டியவாறு பிரவர்த்திக்கிறது. இலட்சியார்த்த நான் என்பது பிரவர்த்திப்ப

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெப்படி ? அது வினைமுதலாயிருந்து செய்வதொன்றுமில்லை. அதை நான் என்ற சொல்லால் வழங்குவது வீண். '

மஹாவாக்கியம்

'தத்வமஸி' என்பது ஒரு மஹாவாக்கியம். அதற்கு அவர் கூறும் பொருள் இரண்டு. ஒன்று வாச்சியார்த்தம். இன்னொன்று இலட்சியார்த்தம்.

> 'திருக்கு திரிசியங்களைப் பகுத்தவற்றிற்குரிய விலக்கணங்களை ஞாயத்தாற் சுருதியுக்திக் கொத்து விசாரித்துத் தேர்ந்தது வாச்சியார்த்தம்' (தி-தி-வி 18)

> ' அவ்வாச்சியார்த்தத்தான் மெய்யிது பொய்யிதுவெனத் தேறுந் தேற்றம் வருமத் தேற்றத்தான் மெய்யை விளக்கிவிப்பானைத் தேடி யவனுலதனை யுள்ளபடி காணுங் காட்சிக்கு லட்சியார்த்தம் ' (தி - தி - வி 18)

என்றது காண்க. சுருதியை யுக்தியால் ஆராய்ந்து தேர்ந்தவுண்மை வாச்சியார்த்தம். ஆசான்மூலம் அனுபவத்தில்கண்ட உண்மை இலட்சியார்த்தம். அவர் மதத்து நான்கு சைதன்யங்களும் முன்காட்டப்பட்டன.

> ' அந்தப் பிரகிருதியின் சத்துவகுணத்தை மாயையென்றும்...சொல்லப்படும். இந்த மாயையினிடத்திலே நிர்மல சலப் பிரதிவிம்பம் போலப் பிரமம்...பிரதி விம்பிக்கும். இந்தப் பிரதிவிம்ப சைதன்னியத்தை ... ஈசுரனென்று சொல்லப்படும் ' (நா - நா)

> ' இந்த அவித்தைகளிடத்திலும் மலின சலப்பிரதிவிம்பம் போலப் பிரம சைதன்னியம் பிரதிவிம்பிக்கும். இந்தப் பிரதிவிம்ப சைதன்னியங்களை...சீவசிதாபாசரென்றும்... சொல்லப்படும் ' (நா நா)

என்றதால் பிரமம் மாயையிற் பிரதிபிம்பித்து உண்டானது ஈசுரன், அவித்தையிற் பிரதிபிம்பித்து உண்டானது சீவன் என்பது தெரிகிறது. பிரமமும் கூடஸ்தனும் சொல்லால் இரண்டாயினும் பொருளால் ஒன்றுதான் என அவர் சொன்னார். அதனை அடியாகக்கொண்டு மேல் நான் என்பது விசாரிக்கப்பட்டது. ஆனால் அவநூள்ளேயே கூடஸ்தன் வரலாறு பலவாய்க் கிடக்கின்றது. பிரமமும் கூடஸ்தனும் சொல்லால் இரண்டு, பொருளால் ஒன்று. என்பது ஒன்று. பிரமம் மாயையிற் பிரதிபிம்பித்து ஈசுரனும், அவித்தையிற் பிரதிபிம்பித்துக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூடஸ்தனும், அந்தக்கரணத்திற் பிரதிபிம்பித்துச் சீவனும் ஆயிற்று என்பது இன்னொன்று. பிரமம் மாயையிலே பிரதி பிம்பித்து ஈசுரனும், அவ்விசுரன், அவித்தையிலே பிரதிபிம்பித் துக் கூடஸ்தனும், அக்கூடஸ்தன் அந்தக்கரணத்திலே பிரதி பிம்பித்துச் சீவனும் ஆயின என்பது மற்றொன்று. அக்கூடஸ் தன் வரலாறு இன்னும் இருக்கும்போலும். ஆயினும் அக் கூடஸ்தனும் ஒரு பிரதிபிம்பம் என்ற அளவில் இங்கே கொள்ள லாம். பிரமம் ஒன்றே பிம்பசைதன்யம், மற்ற மூன்றும் பிரதி பிம்ப சைதன்யங்கள் என்பது வெளி. அவற்றுள் பிரமம் நிர்க் குணம். ஈசுரன் சகுணமும், சீவன் சிதாபாசனுமாகும். கூடஸ் தன் நிர்க்குணமா? சகுணமா? சிதாபாசனா? அது சொல்லப் படவில்லை. அன்றியும் நிர்க்குணமும் சகுணமும் எதிர்மறைகள். அங்ஙனமாக நிர்க்குணம் சகுணமாகப் பிரதிபிம்பிக்குமா? ஈசுரசகுணத்துக்கும், கூடஸ்தனும் சகுணமாயின் அச்சகுணத் துக்கும் வேறுபாடென்னை? சகுணம் பிரதிபிம்பித்தால் அப் பிரதி பிம்பம் சகுண ஆபாசனுகலாம். சிதாபாசனுதல் எப்படி?

'சீவன் தொம்பத வாச்சியார்த்தனென்றும், கூடஸ்தன் தொம்பத இலட்சியார்த்தனென்றும், ஈசுரன் தத்பத வாச்சியார்த்தனென்றும், பிரமம் தத்பத இலட்சியாத்த மென்றும், இதற்குதாரணம் முறையே கடஜலப் பிரதி பிம்பாகாசம், கடாகாசம், மேகஜலப் பிரதிபிம்பாகாசம், மேகாகாசம் என்றும், சீவசாட்சி கூடஸ்தனென்றும், ஈசுவரசாட்சி பிரமமென்றும், கடாகாசமும் மேகாகாச மும் உபாதியால் வேறுவேறு போல் தோற்றினும் உண் மையில் ஆகாயம் ஒன்றுயேயிருப்பதுபோல, கூடஸ்த னும் பிரமமும் மாயை அவித்தையுபாதிகளால் வேறு வேறுபோல் பிரதீதியானுலும் உண்மையில் ஒன்றே' (மு-மை 27)

'மேகங் காரணமாகவும் கடங்காரணமாகவும் மகாகாச மென்றும், கடாகாசமென்றும் உபாதிபற்றி ஆகாயம் இரண்டாகச் சொல்லப்படுகின்றதே யன்றி, யதார்த்தத் தில் இரண்டன்றென்பது சிறுவரும் தெரிந்துகொள்ளத் தக்கது' (மு - மை 21)

'பிரத்தியட்ச மாகாமல் மறைந்திருக்கிறவனும், சர்வஞ் ஞத்துவாதி லட்சணமுடையவனும், மாயையை யுபாதி யாயுடையவனும், சச்சிதாநந்த லட்சணனு மாகிய ஜகத் காரணனுனவன் தத்பதத்திற்கு வாச்சிய னுகிறுன். (தத் பதமானது ஈசுவரனைக் குறிக்கிறதென்பது தாற்பரியம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனே அந்தக் கரணத்தினுலே பேதப்பட்ட அறிவை யுடைய 'நான்' என்கிற நம்பிக்கைக்கு ஆதாரமா யிருக் கிறவன்; (அவன்ருன்) துவம்பதவாச்சிய ஞகின்ருன். (துவம்பதமானது அந்தக்கரணத்தினுடைய சம்பந்தத் தினல் வேறுபோல் காண்கிற ஜீவனைக் குறிக்கிற தென்பது தாற்பரியம்) பரமாத்துமா ஜீவாத்துமா இவ்விருவருக்குமுள்ள உபாதியாகிய முறையே மாயை அவித்தை இவைகளைவிட்டுத் தத்பதத்திற்கு இலட்சிய மாகிய தெதுவோ அதுவே (கூடஸ்தனுக்கு) அபேதமா யிருக்கிற பிரமம் (மு - மை 23)

'அஸிபத வாச்சியார்த்தம் கூடஸ்த பிரமம் ... அஸிபத லட்சியம் பிரமகூடஸ்த ஐக்கியம் அதாவது ஏகத்துவம்...' (பே - தி 24, 25)

'ஐக்கியமென்ப தொன்றேயாம்; இரண்டைக்கியமென்ப தன் பொருள் கடாகாய மகாகாயத்தை யுவமானமாகக் கொண்ட (ஜீவேசர்க்குச் சாக்ஷியாய் விளங்கும்) கூடஸ்த பிரமைக்கியமாம்' (திரு - வி 25)

'துவம்பத தற்பத அசிபதங்களுக்காகச் சுருதியாதிகளில் கூறப்படும் கடாகாச மகாகாச ஏகாகாச திருட்டாந்தங் களில் ஈசனுக்கு மகாகாச திருட்டாந்தங் கூறியிருக்கின் றமையின்' (திரு - வி 23)

'மகா காசத்தி னேர்பாகமான கடாகாசத்தை யுவமான மாகக்கொண்ட கூடஸ்தனையும் ... மகாகாசத்தை யுவ மானமாகக்கொண்ட பிரமத்தையும்...' (திரு - வி 33) என்ருரவர்.

அதில் அவர் மதத்து நான்கு சைதன்யங்களுக்கும் நான்கு உவமைகள் வருகின்றன. மேகாகாசம் அதாவது மகாகாசம் போல்வது பிரமம், மேகசலப் பிரதிபிம்பாகாசம் போல்வது ஈசுரன், கடாகாசம்போல்வது கூடஸ்தன், கடசலம் பிரதிபிம்பா காசம்போல்வது சீவன் என்பன அவை. அவற்றுள் கடாகாச மகாகாச வுவமை முன் விசாரித்து ஒதுக்கப்பட்டது. மேலும் மேகாகாசத்தின் பிரதி பிம்பமன்று கடாகாசம். கூடஸ்தனே பிரமத்தின் பிரதிபிம்பமென்றும் சொல்லப்படுகிறது. பிம்பமும் பிரதிபிம்பமு மல்லாத இரண்டு பொருள்களைப் பிம்பமும் பிரதி பிம்பமுமாய இரண்டு பொருள்களுக்கு உவமான உவமேயங் கூறலாமா? இனி மேகசலப் பிரதிபிம்ப கடசலப் பிரதிபிம்பங் கள்தா னெப்படி? அவையும் முன் ஆராயப்பட்டன. ஆகலின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வுவமைகளும் ஆரவாரமேயென்க. அவர் கூறுகிறபடி ஆகாசம் ஒன்றே யாதல்போல் பிரமமும் ஒன்றே. ஆகாசத்துக்கு உபாதி எதுவுங் கிடையாது. அப்படிப் பிரமமும் உபாதி ரகிதமே யாகும்.

தத்வமஸி என்ற வாக்கியத்துக்கு அவர் பொருள்கூற முயன்றார். தத் - அது, த்வம் - நீ, அஸி - ஆகின்றாய் (அது நீ ஆகின்றாய்) என்ப தது. அது வாச்சியார்த்தமு மன்று, இலட்சியார்த்தமுமன்று. அது கிடக்க. தத் - ஈசுரன் (ஈசன்), த்வம் - சீவன், அஸி - ஆகின்றது (ஈசுரன் சீவன் ஆகிறது) என்பது வாச்சியார்த்தம்; இவ்வர்த்தம் கற்பிதமே; தத் - ஈசுரனுக்குச் சாட்சி அதாவது அதிட்டானம் ஆன பிரமம். த்வம் - சீவனுக்குச் சாட்சி அதாவது அதிட்டானம் ஆன கூடஸ்தன். அஸி - ஏகத்துவம் (பிரம கூடஸ்த ஏகத்துவம்) என்பது இலட்சியார்த்தம். இவ்வர்த்தம் உண்மை; பிரமம் கூடஸ்தன் ஏகத்துவம் என்பவற்றுக்கு முறையே மகாகாசம் கடாகாசம் ஏகாகாசம் என்பன இலட்சியார்த்தவுவமைகள்; மகாகாசமும் கடாகாசமும் ஏகாகாசமே; அப்படிப் பிரமமும் கூடஸ்தனும் ஏகப்பிரமம்; அதுதான் தத்வமசி என்றாரவர்.

வாச்சியார்த்தத்தை அவரே கழித்தார். ஆகலின் விசாரணைக்கு இடனாவது இங்கு இலட்சியார்த்தமே. பிரமம் ஈசுரனாகி, ஈசுரன் கூடஸ்தனாகிக் கூடஸ்தன் சீவ னாகின்றது. சீவன் சரீரத்திற் பிரவேசித்துச் சித்துப்போலியா யிருந்து உலகில் விவகரித்து வருகிறது. இலயத்தில் சீவன் கூடஸ்தனிலும், கூடஸ்தன் ஈசுரனிலும், ஈசுரன் பிரமத்திலும் இலயித்து நாசமாகும். எஞ்சி நிற்பது பிரமமொன்றே. கடசலப் பிரதிபிம்பாகாச முதலிய ஆகாசங்களெல்லாம் போய் மகாகாசமொன்றே எஞ்சுவது போலும் அது.

சமானாதிகரணம்

அப்பொருளைச் சாதிக்கச் சமானாதிகரணம் என்றொரு நியாயத்தை அவரெடுத்தார். அஃதாவதென்னை ?

> ‘ஒரு பொருள் கொண்டுமுடியும் இரண்டு விசேடணங்களையுடையது’ (மு - மை 199)
>
> ‘வெவ்வேறு அர்த்தங்களுடன் கூடிய இரண்டு பதங்கள் ஒரே வேற்றுமைப் பலத்தால் ஒரே பொருளைக் குறிப்பித்தல் சமானாதி கரணமாம்’ (மு - மை 129)

என்பது அவர்தந்த விளக்கம். அச்சமானாதிகரணம் முக்கியம், பாதம் என இரண்டுவகை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'எந்த வஸ்துவிற்கு எந்த வஸ்துவுடன் சங்கம் எப்போதும் அபேதமாயிருக்கிறதோ, அந்த வஸ்துவிற்கு அதனுடன் சங்கம் முக்கிய சமானுதிகரணம் எனப்படும். இதற்கு உதாரணம் கடாகாசத்திற்கு மகாகாசத்துடன் சங்கம் எப்போதும் அபேதமாயிருப்பதாம். இதனுல் கடாகாசத்திற்கு மகாகாசத்துடன் சங்கம் முக்கிய சமானுதிகரணமாம். எந்த வஸ்து பாதிக்க (பொய்யென்று நிச்சயிக்க)ப்பட்டு எத்துடன் சங்கம் அபேதப்படுகிறதோ அந்த வஸ்துவிற்கு அதனுடன் சங்கம் பாத சமானுதிகரணம் எனப்படும். இதற்கு உதாரணம் பிரதி பிம்பமுகமும் யதார்த்தமுகமும், அல்லது ஆரோபமான அரவும் அதிஷ்டானமான கயிறுமாம். பிரதிபிம்ப முகமும், அரவும் பாதிக்கப்பட அவற்றினுக்கும், பிம்ப முகம் கயிறு இவற்றினுக்கும் பாதசமானுதி கரணமாம். இவ்வுவமைகளுக்கிணங்க முக்கிய சமானுதிகரணத்துக்குக் கூடஸ்த பிரமங்களேயும், பாத சமானுதிகரணத்துக்குச் சீவப் பிரமங்களேயும் வைத்தமைத்துக் கொள்க' (மு - மை 129)

'நான் என்பது வாச்சியார்த்தத்தில் சீவன் என்றும் லட்சியார்த்தத்தில் கூடஸ்தனென்றும், நான் பிரமமென்பது வாச்சியார்த்தத்தில் பாதசமானுதி கரணத்தாலென்றும், லட்சியார்த்தத்தில் முக்கிய சமானுதி கரணத்தாலென்றும் கூறுவதை ...' (மு - மை 133)

என்ருரவர். அதனுல் அம்மகாவாக்கியத்துக்கு வாச்சியார்த்தம் பாதசமானுதிகரணத்தாலும், இலட்சியார்த்தம் முக்கிய சமானுதிகரணத்தாலும் கொள்ளப்படுமென அவர் மதம் கூறி முடிக்கிறது.

ஆகாயம்

அவர் மதத்தில் ஆகாயவுவமை அடிக்கடி வரும். அம்மகாவாக்கியத்துக்கு அவர் கொண்ட பொருளும் ஆகாயவுவமையாலேயே சீவிக்கிறது. அவர் நான்கு ஆகாயங்கள் சொன்னுர். அவற்றுள் மகாகாசமொன்றே பிம்பம். மற்றவை பிரதிபிம்பங்கள். கூடஸ்தனே ஓரிடத்திற் பிம்பமென்றும், மற்ருேரிடத்திற் பிரதிபிம்பம் என்றுஞ் சொன்னுரவர். அஃதெதுவேனுமாக. மகாகாசம் போல்வது பிரமமென்ருரவர். அவ்வாகாயமாவது யாது? அவர் கூறுவதைக் காணலாம். 1887 மார்ச் 30 உ ப். வி 159, 160 ஆம் பக்கங்களில் 'ஆகாயவாதம்' என்ற தலைப்பின்கீழ் ஒரு விளக்கம் வந்தது. அதில் அவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'சந்தெனினு மின்மை எனினு மபாவமெனினு மாகாய மெனினு மமையும்'

'சந்துளதாய வழிப் பொருளின்று பொருளுளதாய வழிச் சந்துளது'

'யாது மிலதாய வெற்ற வெளியின்கண் ஓர் தூணினை நிறுத்தி வைப்பின், வைத்தற்கு முன்னர் நிரம்பி முற்று மாண்டிருந்த இன்மை எங்கேனுமோடிப் போயதோ? தூணினை எடுத்துவிடின் பெயர்த்தும் அவ்வின்மை அங்கெய்தியதோ? இரண்டு மின்று. ஆண்டிருந்த வின்மை யாதெய்தினும் யாது கழியினும் வருதல் போத லின்று. தூணெனல் பலப்பல பரமாணு நிறைந்துள தாகலின் யாண்டும் நிரம்பிய இன்மை பரமாணுவின் கண் மாத்திர மிலதென்ப தொருவாற்றானு மியம்ப வொல்லாதென்க'

என்றார். எது இல்பொருளோ, இன்மையோ, அபாவமோ, சூனியமோ அது ஆகாயம்; தூண் சுவர் முதலிய பிறபொருள் களிருந்தால் அவை அடைக்குமிடத்திலும் அவ்வபாவமாகிய ஆகாயமுண்டு; அங்ஙனம் எவ்வாற்றானும் அழியாத இன் மையே ஆகாயமெனப் படுமென்பது அவற்றால் தெரிகிறது. அங்ஙனமாயின் முன் சொல்லப்பட்ட நால்வகை யபாவங்களுள் ஒன்றாகிய அத்யந்தாபாவமே ஆகாயம் என்பதாகும். ஆகவே மற்ற மூன்றபாவங்களின் அடைகளாகிய முன், பின், ஒன்றி ஞென்று என்பவற்றிற்குப் பொருளிருக்க முடியாது. அவ்வா காயம் அவரது பிரமத்துக்கு உவமையாயிற்று. அதனால் அப் பிரமமும் இல்பொருள், இன்மை, அபாவம், சூனியம் என்பதே சித்தம். பிரமமென்ற சொல்லுக்குச் சூனியமென்றொரு பொருளு முண்டு. அஃதவரது பிரமத்தினியல்பால் வந்ததுபோலும். ஆகவே தத்துவமஸி, நான் பிரமம் என்ற வாக்கியங்களுக்குச் சூனியமென்றே அவர் பொருள்கொண்டவரானார். மேகாகாச, மேகசலப் பிரதி பிம்பாகாச, கடாகாச, கடசலப் பிரதிபிம்பாகாச உவமைகளாலும், வாச்சிய இலட்சிய அர்த்தங்களாலும், முக்கியபாத சமானுதிகரணங்களாலும் வேறுபொருள் கிடைக்க மாட்டாது. சொல்லார வாரத்தால் எல்லாரும் மயங்கிடார். உவமானமாகிய ஆகாயம் சூனியமானால் உவமேயமாகிய பிரமம் சத்தையாதல் யாங்ஙனம்?

இனி இன்மை எதிலும் பிரதிபிம்பியாது. மனிதனுக்குக் கொம்பில்லை. அதனை அவன் கண்ணாடியிற் பாரான். ஆனால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவன் உள்பொருள், கண்ணாடியிற் பிரதிபிம்பிக்கிறான்; அதனைப் பார்க்கவுஞ் செய்கிறான். உள்பொருளே பிரதிபிம்பிக்கும் என்பது அதனால் புலனாம். பிரமமும் ஆகாயம் போல்வதாயின் எதனிலும் பிரதிபிம்பித்தலில்லை.

அவர் கொள்கைப்படி ஆகாசம் கடத்துக்கு வெளியிலும், கடவடிவத்திலும், கடத்துக்குள்ளிலு மிருக்கிறது. அது பிரிபடாதது. அங்ஙனமாக முக்கிய சமானாதிகரண சங்கம் அங்கேது? பிம்பத்தில் பிரதி பிம்பமும், கயிற்றிற் கயிற்றரவும் பாத சமானாதிகரண சங்கமாகின்றன என்பதைப் புலப்படுத்துவது எது? ஒன்றுமில்லை. அவை இல்லாமற்போவதே அனுபவம். அச்சங்கமும் அங்கில்லை.

ஆகாயம் போலும் பிரமமென்றால் அவ்விரண்டும் சூனியங்கள் ஆகின்றன. ஆனால் ஒரு சூனியந்தா னிருக்கமுடியும். அச்சூனியத்திலிருந்தே பிரமம் கூடஸ்தன் ஈசுரன் சீவன் சடவுலகம் எல்லாந் தோன்றின என்று சொல்லிவிடலாம். அவர் மதத்தின் அந்தரங்கமும் அதுதானெனத் தெரிகிறது.

விட்டுவிடாத இலக்கணை

அதுதானிது என்பதொரு வாசகம். அது என்பதும் இது என்பதும் வெவ்வேறு பொருள்களா? ஒருபொருளா? அது என்பது அன்று அங்கே கண்ட பொருள். இது என்பது இன்று இங்கே காண்கிறபொருள். அன்று இன்று என்பன வெவ்வேறு காலங்கள். அங்கே இங்கே என்பன வெவ்வேறு இடங்கள். அக்காலங்களையும் இடங்களையும் விடுக. எஞ்சியிருப்பது பொருள். அன்று அங்கிருந்த பொருளும் இன்று இங்கிருக்கிற பொருளுமாத்திரம் ஒன்றையொன்று விடவில்லை. அதாவது அவ்விரண்டும் ஒருபொருளே. வேறல்ல. இங்ஙனம் வாச்சியார்த்தத்தின் ஏகதேசத்தை (ஒரு பகுதியை) விட்டு ஏகதேசத்திற்கு அன்வயமுள்ளவிடத்து விட்டுவிடாத இலக்கணை கொள்ளப்படுகிறது. அன்வயம் - கொண்டுகூட்டுதல். சீவ ஈச பிரமங்களுக்கும் இவ்விட்டுவிடாத இலக்கணையே கொள்வாரவர். எப்படி?

> 'இந்த ஜீவனானவன் காரியோபாதி (அவித்தையிற் பிரதிபலனம்)யை யுடையவன்: ஈசன் காரணோபாதி (மாயையிற் பிரதிபலனம்) யை யுடையவன். காரிய காரணங்களைத் தள்ளிவிட்டால் பூரண ஞான சொரூபமான பிரமமே மிஞ்சுகின்றது' (பே-தி 17)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றது காண்க. அது பிழை. ஏன்? அவித்தையிற் பிரதிபலனம் சீவன். மாயையிற் பிரதிபலனம் ஈசன். அவ்வவித்தையையும் மாயையையுந் தள்ளிவிட்டால் சீவனும் ஈசனுமே நாசமாகும். பிரமத்தோடு அன்வயமாவது அவற்றுள் எதுவுமில்லை. அன்றியும் பிரமம் பிம்பம். சீவனும் ஈசனும் பிரதிபிம்பங்கள். பிம்பத்துக்கும் பிரதிபிம்பத்துக்கும் விட்டுவிடாத இலக்கணை கொள்ளலாமா? திருட்டாந்தத்திலுள்ள அது இது என்பன பிம்பப் பிரதிபிம்பங்களா? அது என்ற பொருளே இலக்கணத்தால் சிறிதும் வேறுபடாத இது என்றபொருளாம்.

முத்திநிலை

அம்மதத்தில் சீவனுக்கு முத்தியுண்டெனவும் கூறப்படும். அதனிலக்கணமாவதென்னை?

> 'மாயை நிர்ம்மல சலத்தைப்போன்றது...அவித்தை மலின சலத்தைப்போன்றது ...' (து - வா 110)

> 'சிருட்டியாதிகள் செய்வது நித்திய நிர்ம்மல...முதலிய அதீத இலக்கணங்களைப் பெற்ற...பிரமப் பொருளன்று; சுத்தசத்துவ மாயாசகித ஈசுவரனேயாம். மாயா உலகை மாயா ஈசுவரன் சிருட்டிப்பதால் மாயை எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை ஈசனும் உலகுமாம்' (து - வா 103, 104)

> 'ஜீவன் ஒவ்வொரு சிருட்டியிலும் பிரகிருதியிலிருந்து வெளிப்பட்டு ஒடுங்குங்காலத்து அப்பிரகிருதியில் இலயமாகின்றது' (வே - தீ 34)

> 'பிரகிருதி ஜீவர்கள் அநிர்வசனியமாக அநாதியும், பிரமம் சத்தாக அநாதியுமாம்' வே - தீ 52)

> 'சிருட்டிக்குமுன் பிரகிருதியில் அழுந்தியிருந்த (அவித்தியா சம்பந்தமுள்ள) ஜீவர்கள் அவித்தையிலிருந்து நீங்கி, முத்தி அடையுமாறு தநுகரணங்களைக் கொடுத்தது ஈசுரசத்தி ...' (வே - தீ 31)

> 'ஆத்மா (பிரமம்) வென்பதொன்றே. ஆத்மா (பிரமம்) வாய் இருப்பதன்றி, பரமாத்மாவாகவும் (ஈசுவரனுகவும்) அந்தராத்மாவாகவும் (சீவனுகவும்) இருக்கிறது. அந்தராத்மாவாகிய சீவன் பரமாத்மாவாகிய ஈசுவரனை மோட்சம் அடையுமாறு ஆச்ரயமாகப் பற்றவேண்டும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பதேயாம். ஒரு ஆத்துமா (பிரமம்) வே பரமாத்மா வாகவும் அந்தராத்மாவாக்வும் இருத்தலெவ்வாறு கூடு மெனின், பிருதிவியொன்றே மலை, விருட்சம், மண்டபம், சுவர் முதலாகவும், ஆகாயமொன்றே; கடாகாசம், மடாகாசம், பர்வதாகாச முதலாகவும், ஒருவனே; நடன சாலையில் அரிச்சந்திரனென்றும், இந்திரனென்றும், கட்டியக்கார னென்றும் வருவதுபோலவும், ஒரு சலமே; சமுத்திரம் நதி ஏரி குளம் கால்வாய் முதலாகவும் உபாதி வேறுபாட்டால் ஆவனபோன்று ஆன்மா ஒன்றே உபாதிவேறுபாட்டால்...ஈசுவரனுகவும் சீவர்க ளாயும் இருக்கின்றதென்க' (அ - வி 66, 67)

'ஈசவரனைச் சீவன் ஆசிரயிக்கவேண்டும் ... ஆசிரயிக்கா விட்டால் தீங்குண்டாம் ... ஈசுவரன் உயர்ந்தவன், ஜீவன் தாழ்ந்தவன்' (அ - வி 67)

'மாயோபாதிகனுனஈசுவரனை அவித்தையோபாதிகனுகிய சீவன், நான்ருன் அந்த ஈசுவரனென்று கூறின், அது காரணமாக அந்தச் சீவன் தண்டிக்கப்படுவன். சீவன் ஈசுரனுவதும் ஈசுரன் சீவனுவதும் ஓர்போது மின்று. சீவன் சீவனே, ஈசுரன் ஈசுரனே யாம்' (அ - வி 127)

'ஈசன் பூஜ்ஜியர் ... ஜீவர் அபூஜ்ஜியர் ... ' (வே - தீ 78)

'இரும்பு ஒன்ருயினும் கடியாரத்தின் ஸ்பிரிங்குக்கும் கட்டைப்பாறைக்கும் ... ... வித்தியாசமும் பூஜ்ஜியதை பூஜ்ஜியதையில்லாமையும் இருப்பனபோன்று பிரமம் ஒன்ருயினும் ஈசஜீவர்களுள் பேதமும், பூஜ்ஜியதை பூஜ்ஜியதையில்லாமையுமுள' (வே - தீ 33)

'கைலாயத்தில் இராச மந்திரியைப்போலிருக்கிருன் ஈசன், தாசனைப்போலிருக்கிருன் ஜீவன்' (திரு - வி 15)

'இது (ஜீவேசபேதம்) மாயைக்குக் கீழ்ப்பட்டவிடம். மாயைக்கு மேற்பட்ட விடத்திலோ இந்தப்பேதஞ் சொல்லமுடியாது. ஏனெனின் அவ்விடத்திலுள்ள பிரமம் பரிபூரணப் பொருள்' (திரு - வி 16)

'ஒவ்வொரு ஜீவர்க்கும் மலம் விக்ஷேபம் அஞ்ஞான முள்ளன. மலம் நிஷ்காமியமான சற்கருமங்களாலும், விக்ஷேபம் ஈசுவரத் தியானத்தாலும், அஞ்ஞானம் பிரம ஞானத்தினுலும் நிவர்த்தியாகும்' (வே - தீ 57)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'பிரம சொரூபமாய் விளங்கும் ஜீவன்முத்தன் பெயர்த்தும் பிரமத்தைவிட்டு நீங்கான்' (வே - தீ 78)

'சீவன் முத்தனிலைமையாவது சத்துப்போலி அநிர்வசனீயமான ஜீவவடிவை யதார்த்தமான பிரமத்தில் இலயப்படுத்திப் பிரமசொரூப மாக்குவது' (வே - தீ 37)

'ப்ரம்மத்தின் அம்சமான ஜீவ்ன் ப்ரம்மத்தை அடைந்த பிறகு இல்லை' (வே - தீ 49)

'ஜீவர்கள் தம்மிடத்துள்ள அஞ்ஞானத்தை நிவர்த்தி செய்து கொள்ளுவார்களேயானால் பிரமத்தினின்றும் பிறகு உண்டாக மாட்டார்கள். விதையின்கணுள்ள விருட்சசத்தி வறுக்கப்பட்ட பிறகு மீண்டும் முளையாமை போலவாம்' (வே - தீ 37)

'பரமான்மாவினிடத்திலே தோற்றமாயுள்ள சீவன் துக்கரூபமான பந்தத்தினின்று நீங்கிச் சுகரூபமாய் நிற்றற்கென்றும், வறுத்தவித்து முளையாவாறு போன்று துக்கரூபமான பந்தத்தினின்றும் நீங்கின் சீவன் மீண்டுந் தோன்ருன்...சுகவடிவாயே நிற்பான்' (பஞ்ச 11)

'வித்தை வறுத்துவிட்டால் பிறகு எப்படி முளையாதோ அப்படியே பசுக்களைச் சிவஞானத் தீயால் வறுத்து விட்டால் பின்பு அவைகள் பிறப்பதில்லை...இப்படிப் பட்ட நிலைமையில்தான் ஜீவன்...சிவமாய் விளங்குவது' (ப் - வி 7 - 14 - 6)

'ஜீவன் பரமாத்மாவின் அமிசமே அவித்தையினுல் மோகிக்கப்பட்டு, அதன் வசமுடையவனுய் நான் வேறு என்றறிகிருன். அவ்வவித்தையினின்று (சிரவணுதி சாதனங்களால்) விடுபட்டுச் சிவனுகின்ருன்' (திரு - வி 17)

என்பன அவர் சுவடிகளிலுள்ள சில வாக்கியங்கள். அவித்தியா சம்பந்தமுள்ள சீவன்கள் சிருட்டிக்கு முன்னும் உள. அவை அப்போது பிரகிருதியில் அழுந்திக்கிடந்தன. சங்காரத்தில் அப்பிரகிருதியில் ஒடுங்குகின்றன. சிருட்டியாதிகளைச் செய்வது பிரமமன்று, ஈசுரனே. சீவன்கட்குத் தனுவாதிகளைக் கொடுப்பது அதுதான். முத்தி கொடுப்பதற்கே சிருட்டியாதிகள் உளவாயின.

பிரமமே உபாதி வேறுபாட்டால் ஈசுரனுகவும், சீவன்களாகவும் இருக்கிறது. சீவன்கள் முத்தியடைய ஈசுவரனையே உபாசிக்கவேண்டும். அவனை உபாசியாதிருந்தாலும், நான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தான் அவ்வீசுரன் என்ற பொருளில் அஹம் பிரமம் என்பதைக் கொண்டாலும் அது சீவன்களுக்குக் குற்றம். கடியாரத்தின் ஸ்பிரிங்கும் இரும்புதான். கட்டைப்பாறையும் இரும்புதான். ஆயினும் ஸ்பிரிங்குக்குள்ள மதிப்பு கட்டைப்பாறைக்கில்லை. அப்படியே ஈசுரனும் பிரமந்தான். சீவன்களும் பிரமந்தான். ஸ்பிரிங்குக்குச் சமம் ஈசுரன் கட்டைப்பாறைக்குச் சமம் சீவன்கள். ஆகலின் ஈசுரனுக்குள்ள மதிப்புச் சீவன்களுக்கில்லை. ஈசுரன் பூஜ்யம், ஆள்வது. சீவன்கள் அபூஜ்யம், ஆளப் படுவன. அவ்வீசுர சீவபேதம் மாயைக்குக் கீழ்ப்பட்ட விடத் திற்ருனுண்டு. மேற்பட்டவிடத்தில் அப்பேதஞ் சொல்லமுடியாது. அங்குள்ள பிரமம் பரிபூரணப்பொருள்.

மலம் விக்ஷேபம் அஞ்ஞானம் என்பன முத்தியிற் சீவன்களுக்கு நீங்கிவிடும். அச்சீவன்கள் தம் வடிவைப் பிரமத்தில் இலயப்படுத்திப் பிரமசொரூபமாக்குவது அவற்றிற்குச் சீவன் முத்தி நிலையாம். சீவன்முத்த சீவன்கள் மீண்டும் பிரமத்தை விட்டு நீங்கா. வறுக்கப்பட்ட விதையில் மரம் முளையாது. அவ் விதையில் முளைக்குஞ் சத்தி நசித்துவிடும். அப்படியே திரும்ப அவித்தையிற்படுஞ் சத்தி அதாவது பிறப்பு அம்முத்த சீவன்களுக்கிராது. சீவன்கள் அவித்தையிலிருந்து விடுபட்டுப் பிரமமாவதே அவற்றிற்கு முத்தியாகும். அந்நிலையில் தருவானும் பெறுவானுமாகிய இரட்டை கிடையாது. முத்தசீவன்கள் சுகவடிவாய்விடும். அம்மத முத்திநிலை இது. இனி அதனைச் சிறிதே விசாரிக்கலாம்.

பிரமத்தின்பாலுள்ள விவர்த்தசத்தி மாயையொன்றுதானு? அவித்தையுமா ? அவித்தையுமாமெனின், அதனேடிதனிடை வேற்றுமையென்ன ? அதுவரக் காரணமென்ன ? அவித்தை காரியமெனின், மாயோபாதிகனன ஈசுரன்ருன் அதைக் காரிய மாக்கியிருக்கவேண்டும். அதற்கு அவன் கொண்ட நோக்க மென்ன ? அவித்தியோபாதிகன் சீவன். சீவன்கள் அநிர்வசனீய அநாதியெனப்படுதலால் அவித்தையும் அநிர்வசனீய அநாதியாய்த்தான் இருக்கமுடியும். ஆனல் அவித்தை சொரூப அநாதியென அவர்சொன்னது முன் காட்டப்பட்டது. அது காரியமாதல் எப்படி ? காரியமெல்லாம் பிரவாக அநாதியென் பதே அவர்மதம். ஆகலின் அவித்தையின் வரலாற்றுக்கு யுக்திக்கொத்த விளக்கம் வேண்டும்.

ஈசுவரனும் பிரதிபிம்பம், சீவனும் பிரதிபிம்பம், சேதனப் பொருள் பிரதிபிம்பித்தாலும் அப்பிரதிபிம்பமும் அறிவற்றதே. அப்பிரதிபிம்பமான ஈசுரனல் சிருட்டியாதிகள் செய்யமுடியுமா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிர்மல சலம் போன்ற மாயையிற் பிரதிபிம்பம் ஈசுரன், அதனுல் சர்வஞ்ஞத்துவாதி குணங்களோடு கூடியதாயிற்று என்றூரவர். இருக்கட்டும். எப்படியும் அது பிரதிபிம்பந்தான். அதுவும் முயன்று பிரமமாக வேண்டும். ஆகுமா? அதற்கு விதிக்கப்பட்ட சாதனங்கள் எவை?

ஸ்பிரிங்கும் கட்டைப்பாறையும் இரும்புப் போலிகளோ இரும்பு ஆபாசன்களோ அல்ல, இரும்பேயாம். இரும்புத் தன்மை அவ்விரண்டிலும் சிறிதும் மாறவில்லை. அவ்விரண்டன் உருவங்களும் அழிந்தால் கிடைப்பது அத்தன்மையோடு கூடிய இரும்புதான். அப்படியே ஸ்பிரிங்குபோன்ற ஈசுரனும், கட்டைப்பாறை போன்ற சீவனும் தம்முருவழிந்தால் பிரமந் தான். கட்டைப்பாறை ஸ்பிரிங்கை வணங்கித் தன்னுருக் கெடப்பெற்று இரும்பாகவில்லை. சீவன்மாத்திரம் தன்னுருக் கெட்டுப் பிரமமாக ஈசுரனை ஏன் உபாசிக்கவேண்டும்?

சிருட்டிக்கு முன்னும் சங்காரத்திலும் சீவன்கள் பிரகிருதியில் அழுந்திக்கிடப்பன. அவை முத்தியிற்றூன் பிரமத்தில் ஐக்கியமாகும். ஆனுல் அம்முத்தி சீவன்களுக்குமாத்திரந்தானு?

'பிரமமும் துரும்பும் ஒன்றென்று சொல்லவேண்டும். அவ்வாறு சொல்லாவிடில் சுருதி யுக்தி அனுபவ விரோதமுண்டாம்' (பே - தி 6)

'துரும்பு மாயையிலொடுங்கி, அம்மாயை பொய்யெனப்பட்டு, பிரமத்தில் அத்தியாச ஐக்கியமானதுபோலச் சீவனும் மாயையில் ஒடுங்கி, மாயை பொய்யெனப்பட்டுப் பிரமத்தில் அத்தியாச ஐக்கியமாகின்றது' (பே - தி 9)

என்றூரவர். அதனுல் துரும்புக்கும் அம்முத்தி உண்டெனத் தெரிகிறது. அம்முத்தியில் சீவன் சுகவடிவானதுபோல் துரும்பும் சுகவடிவாயிற்றுப் போலும்.

சீவனும் சீவவடிவும் ஒன்றே. சீவனின் வடிவு இலயமாகும் என்பதற்குச் சீவன் இலயமாகும் என்பதே பொருள். பிம்பத்தில் பிரதிபிம்பம் இலயமாகுமா? அவர் கண்ணுடியிற் பிரதிபிம்பிக்கிறூர். கண்ணுடியில் அப்பிரதிபிம்பம் இருக்கிறது. பிறகு கண்ணுடி விலகுகிறது, அல்லது அவர் விலகுகிறூர். அப்பிரதிபிம்பம் எங்கே போயிற்று? அவரிடமே இலயமாயிற்ரு? ஆமென்கிறூரவர். ஆனுல் அவ்விலயத்தை அவர் எப்போதாயினும் உணர்ந்திருக்கிறூரா? எவ் வளவையாலேனும் பிறர்க்கு உணர்த்தவல்லரா? இல்லையாகலின் சீவன் பிரமத்தில் இலயமாகுமென்பது வெறுஞ்சொல் என்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானத்தினுல் அவித்தை நீங்குகிறதா? நாசமாகிறதா? ஆனுல் ஞானம் கைவந்தால் சீவன் நாசமாய்விடுமென்றுரவர். அந்நாசமே அதற்கு முத்தி. சீவன்முத்தியாவது சீவனது தற்கொலை. அந்த ஞானம் அச்சீவனுக்குத் தூக்குக்கயிறே.

முத்திபெற்ற சீவன் பிரமத்தில் வறுத்த வித்துப்போற் கிடக்கும். அது இனி அவித்தையில் அல்லது பிறப்பிறப்பிற் படாது என்றுரவர். முத்தியிற் சீவன் நாசமாம். அச்சீவனுக்கு அதிட்டானம் கூடஸ்தன். அதுவும் பிரமமும் பொருளால் ஒன்றே. அவ் வேகத்துவமே சித்தம். நாசமான சீவனுக்கு அங்கிடமேது? வறுத்தவித்தாவது முளைக்குஞ்சத்தி கெட்ட வித்து. அதுபோல் நாசமான சீவனுவது அவித்தையிற்படுஞ் சத்திகெட்ட சீவன் என்றுல் சீவன் இருப்பதாயிற்று. அம்முத்த சீவன்கள் கோடானுகோடியுமாம். அவை பிரமத்தில் ஏகமாய் விட்டன. அச்சீவப்பகுதிபோக மற்றப்பகுதிப் பிரமந்தான் அவித்தையிற் பிரதிபிம்பித்த தென்னவேண்டும். பிரதிபிம்பித் தற் குதவாத முத்த சீவப்பகுதியும் மற்றதும் என இரண்டு பகுதிகள் ஏகபரிபூரண பிரமத்தில் இருக்கமுடியுமா? ஆகவே நாசமாகுஞ் சீவனுக்கு முத்தியுமில்லை. வறுத்தவித்துப்போ லிருந்து அதுபிரமத்தில் ஐக்கியமாதலுமில்லை. ஏகப்பிரமத்தின் அப்பகுதி பிரதிபிம்பியாமல் மற்றப்பகுதி பிரதிபிம்பித்தலும் இல்லை.

அவருடைய பிரதிபிம்பமொன்று அவரிடம் இலயமாகிறது. ஐக்கியமாகிறது, முத்திபெறுகிறது, அவரேயாகிறது. மறு முறை அவர் கண்ணுடியிற் பிரதிபிம்பிக்கிறுர். அப்பிரதிபிம் பத்தை அவரிடம் முத்தியடைந்த முந்திய பிரதிபிம்பமன்று, வேறொரு பிரதிபிம்பமே என்னலாமா? அங்ஙனமே பிரமத்தின் பிரதிபிம்பமாகிய சீவன் பிரமத்தில் முத்தியடைந்தாலும் மீண் டும் அவித்தையிற் பிரதிபிம்பித்தல்தப்பாது. அச்சீவன் வறுத்த வித்துப்போலிருக்கும், மீண்டும் அவித்தையிற்படாது என்பது சொல்லளவே. அது திரும்பாவிட்டால் அந்தத் துரும்புந் திரும்பாது.

பிரமம் கிளிஞ்சிலுங் கயிறுங் கட்டையுமானுல் சீவன் கிளிஞ் சில் வெள்ளியுங் கயிற்றரவுங் கட்டையிற் கள்வனுமாகும். அவ் வெள்ளி சடம், பாம்பு பகுத்தறிவற்றது, கள்வன் பகுத்தறி வுள்ளவன். சீவன் பிராந்தி நீங்கிப் பிரமமாகுமென்றுல் அக் கள்வன் பிராந்தி நீங்கிக் கட்டையாவான் என்றுதான் சொல்ல வேண்டும். அப்போதுதான் அவ்வுவமேய வுவமானங்கள் பொருந்தும். அக்கள்வனுக்குப் பிராந்தி நீங்குவதுமில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவன் கட்டையாவதுமில்லை. அப்படியே சீவனும் முத்தி எய்த மாட்டாது.

முத்தியில் ஆரோப சீவன் நசிக்கும். அதிட்டான கூடஸ்தன் எஞ்சும். நான் என்பது அக்கூடஸ்தனே. அதுவே பிரமமாகும் என்றுரவர். அது பிரமமாதற்கு அதுவன்றோ சற்கருமமும் உபாசனையும் ஞானசாத்திர வாராய்ச்சியும் செய்ய வேண்டும்? அவற்றைச் சீவன் செய்வதும் நாசமாவதும் ஏன்?

சீவன் சனன மரணமுற்றுழல்வது அதற்குப் பந்தம். அது துக்கம். அப்பந்தநீக்கம் முத்தி. அது நிரந்தர சுகவாழ்வு. இப்பிரசங்கம் அவர் வாயிலும் வரும். ஆனால்,

> ' இதனாற் பந்தமுத்தி கற்பிதமெனவு, மறிவே யெதார்த்த மெனவுங்கொள்க. (பந்த முத்தி கற்பிதமென்றதற் குதாரணம்) ஞானவாசிட்டம், அந்தமற் றொன்றாய் விகற்பமற் றறிவா யழிவிலாப் பரம்பொரு ளிருக்கப் பந்தமுற்றவரார் வீடு பெற்றவரார் பாவனை விகற்பமா மனைத்தும்' (தி · தி · வி 22)

என்றும் அவர் சொன்னார். பந்தமும் முத்தியும் கற்பனையென்பது அதிற்கண்டது. அவர் சொல்கிறபடி அவ்விரண்டுமே பொய்யானால் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பது தான் அவர் மதமாதல் கூடும்.

சங்கரமுனிவர் மதம்

பிரமம் ஒன்றே சத்து. ஈசுரன், விஷ்ணு, பிரமன், உருத்திரன் என்னும் தெய்வங்களும், சீவன்களுமாகிய சேதனங்கள் வெறுந் தோற்றங்களே. அப்பிரமத்தின் பிரதிபிம்பங்களே. மாயை, அவித்தையென்பன அப்பிரமம் அங்ஙனம் பிரதி பிம்பித்தற்கு நீர் கண்ணாடிபோலிருப்பன. அம்மாயையாதியன அப்பிரமத்தின் அநிர்வசனீய சத்திகள். அப்பிரதி பிம்ப தெய்வங்களே அப்பிரதிபிம்ப சீவன்களுக்காகச் சிருட்டியாதிகளைச் செய்யும். சிருட்டிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இப்பிரபஞ்சமும் வெறுந்தோற்றந்தான்.

வேதாதிகளும் வியாவகாரிகமே. இவ்வுலகில் அச்சீவன்கள் சற்கருமம், உபாசனை, ஞானசாத்திர வாராய்ச்சிகளைச்செய்து இல்லாமற்போய்விடும். அச்சீவன்களைக் கூடஸ்தனென்னும் பிரமத்தின் பிரதிபிம்பங்களாகக் கொள்வதுமுண்டு. நான் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் அக்கூடஸ்தனே. அதுவும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரமமாய்விடும். பந்தம் முத்தி யென்பன சீவன்களை உத்தேசித்தன. முத்த சீவன்களோ நசிக்கும். ஆகலின் பந்தமுத்திகளும் வாஸ்தவமல்ல கற்பனையே. முத்தியில் தருவானும் பெறுவானு மிலர். ஆகலின் அங்கு இன்பமும் சூனியம். இங்ஙனம் பிரமமொன்று தவிர மற்றவையனைத்தும் சத்துப்போலி, அநிர்வசனீயம், கற்பனை, மித்தை, விவர்த்தம் ஆகும். இம்மதத்தைத் தாபிக்கும் வகையில் ஏதுக்கள் மிகமிக அருகியும், உதாரணங்கள் மாத்திரம் மலிந்துங்கிடக்கும். ஆகலின் அவை மேற்கோளைச் சாதிக்கும் ஆற்றல் பெறுவாயின.

சாதிருசியார்த்தம்

பதஞ்சலியார் நகாரத்துக்குக்கொண்ட பொருள்வரிசையில் சாதிருசியத்தை முதற்கண் வைத்தார். அதனால் அப்பொருட் சிறப்பு அறியப்படும்.

அவர் தந்த ஆறு பொருள்களையும் சிறிதே நுணுகிக் காணலாம். அச்ருங்க: மநுஷ்ய:, அநாகாச: பூ:, அநுதரா கந்யா, அமரா: தேவா: என்ற நான்கு உதாரணங்களிலுள்ள மநுஷ்ய:, பூ:, கந்யா, தேவா: என்ற சொற்களை எடுத்துவிடுக. எஞ்சியுள்ள சொற்களின் நகாரத்துக்கு முறையே அபாவம் முதலிய பொருள்கள் வருமா? பின்னுள்ள மநுஷ்ய: முதலிய சொற்களை வைத்துத்தான் அப்பொருள்கள் கொள்ளப்படும். கொம்பிற்கு வேறானது பாதம் என்றபொருளில் உதாரணத்தை மாற்றிவிட்டால் அச்ருங்க: என்றதிலுள்ள நகாரத்துக்கு அபாவப்பொருள் போய்விடும். மற்ற உதாரணங்களையும் மாற்றினால் அவற்றிலுள்ள நகாரப் பொருளுக்கும் கதி அதுதான். ஆனால் சாதிருசியப் பொருளுக்கு உதாரணம் அநச்வம் என்ற ஒரு சொல்லேயிருக்கிறது. விரோதப் பொருளுக்கு உதாரணமும் அப்படித்தான். அநச்வம் என்றதிலுள்ள நகாரப்பொருளை விளக்கவோ மாற்றவோ அதனை யடுத்து வேறு சொல் இல்லை. அத்வைதம் என்பதும் அநச்வம்போன்று ஒரு சொல்லே.

அச்வம் – குதிரை. அநச்வம் என்றால் என்ன? குதிரையில்லை என்பதா? அப்போது அந்நகாரப்பொருள் அபாவம் அதாவது இன்மை என்பதாய்விடும். ஆனால் அங்குள்ளது சாதிருசியப்பொருள். சாதிருசியம், சாமியம், ஒப்பு என்பன ஒன்று. அப்பொருளில் அநச்வம் என்பதைக் குதிரை அல்லாதது என்றுதான் தமிழ்ப்படுத்தவேண்டும். அல்லாததாவது அன்மைப்பொருள். குதிரை அல்லாதது என்பது வேறொன்றைச் சூசிப்பிக்கின்றது. அஃதெது? கோழியா? குடமா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

T. R. ... 14-A SELVAM NAGAR THANJAVUR

அன்று. குதிரையல்லாததாய்க் குதிரை வடிவமுடையதாய் அதாவது குதிரைபோலுள்ளதாய்க் குதிரை செய்யுஞ் செயலைச் செய்வதாய் அதாவது குதிரைபோல் ஓடவல்லதாய் உள்ள கோவேறுகழுதை என்பதாம். அநச்வம் - குதிரைக்குச் சமமான கோவேறுகழுதை. அநச்வம் - கோவேறுகழுதை. ஒப்புமை அதாவது அன்மைபற்றிவந்த பொருள் அது. வேற்றுமையைத் தன்னுளடக்கியது சாதிருசியார்த்தம். அன்மை அதன்பாற் பட்டது என்பது அறிக.

இனி அத்வைதம் என்பதிலுள்ள நகாரத்துக்குப் பொருந்துவது இன்மைப்பொருளா? அன்மைப்பொருளா? சங்கரர் இராமானுஜர் மத்வர் ஆகிய மூவரும் இன்மைப்பொருளே கொண்டனர். எப்படி? நகாரம் பெருவழக்கிற்றாய் அபாவப் பொருளிலேயே வரும். அதுபற்றி அத்வைதத்துக்குப் பொருளென்னை? த்வைதம் - இரண்டு. அத்வைதம் - இரண்டில்லை என்பதே பொருள். பின்னை அப்பதம் எத்தனையைக் குறிக்கும்? மூன்று, நான்கு முதலிய மேலெண்களையா? அன்று. ஏன்? இரண்டுக்கு மேற்பட்ட எண்களில் இரண்டென்னும் எண் இருக்கிறது. மூன்றிலிருப்பது ஓரிரண்டு. நாலிலிருப்பன ஈரிரண்டுகள். அங்ஙனமே பிற வெண்களிலுமாம். ஆகையால் அத்வைதமென்பது இரண்டுக்குமேற்பட்ட எந்த எண்ணையுங் குறியாது. இரண்டில்லாத எண்ணைத்தான் அது குறித்தல் கூடும். அந்த எண் ஒன்று என்பதே. ஆகலின் அத்வைதம் என்பதற்கு ஒன்று என்பது பொருள். அதுதான் அப்பதத்துக்குச் செம்பொருள். இப்படிப் பொருள் கண்டனர் அம் மூவரும்.

அப்பொருள் சரியா? பார்க்கலாம். நகாரம் பெருவழக்கிற்றாய் அபாவப் பொருளிலேயே வருமெனக் கொண்டாலும் எண்ணின்கண் வரும் நகாரம் சிறுவழக்கிற்றாகவேனும் அப் பொருளின் வருமா? விசாரணை இங்கு அதுதான். ஏகம், த்வைதம் என்பன எண்கள். அநேகம், அத்வைதம் என்பவற்றில் நகாரம் சேர்ந்திருக்கிறது. அது மற்ற எந்த எண்ணிலுஞ் சேராது. அநேகம் என்ற சொல்லை வைத்து அத்வைதம் என்ற சொல்லை ஆராயவேண்டும். அவ்விரு சொல்லுக்கும் வியாகரணம் ஒன்றே. ஏகமாவதொன்று. ஒன்றுக்கு மேற்பட்டன இரண்டு மூன்று முதலியன. அவற்றிலெல்லாம் ஒன்றெனுமெண் அடங்கியிருக்கிறது. அத்வைதம் என்பது த்வைதம் என்பதற்கு (தனக்கு) மேற்பட்ட எண்களைவிட்டுக் கீழ்ப்பட்டதும் தானில்லாததுமாகிய ஒன்றென்னுமெண்ணைப் பொருளாகக் கொள்ளுமாயின் அநேகமென்பதும் ஏகம் என்பதற்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(தனக்கு) மேற்பட்ட எண்களைவிட்டுக் கீழ்ப்பட்டதும் தானில்லாததுமாகிய ஏதாவதோ ரெண்ணையே பொருளாகக்கோடல் வேண்டும். அவ்வெண் எது? அரையா? கா்லா? அரைக் காலா? இல்லை. தனக்கு மேற்பட்ட தொகையையே பொருளாகக் கொண்டதது. அநேகம் - பல. ஆகலின் அத்வைதத் துக்கு ஒன்றென்ற பொருள் கூடாது என்க. ஒன்றுக்குக் கீழ்ப்பட்ட முழு எண் இல்லை. இரண்டுக்குக் கீழ்ப்பட்ட முழு எண் ஒன்றென்பது. அதைக்காட்டி அம்மும்முனிவருந் தப்பப் பார்த்தனர். அவர் கூற்று இலக்கண வரம்பை அதிக்கிரமித்த தாகும்.

அநேகமென்பது ஒன்றல்லாததாய்ப் பல ஒன்றுகளை உள் ளிட்டதாய் உள்ள பல என்பதாம். ஆகலின் அதிலுள்ள நகா ரத்துக்கு அன்மைப்பொருளே பொருந்துகிறது. அத்வைதத்தி லுள்ள நகாரத்துக்கும் அதுவே பொருந்தும்.

அந்நகாரம் இன்மைப் பொருளதாயின், பிரமம் ஒரு பொருள், அஃதல்லாதவெல்லாம் மற்றொருபொருள் எனக் கொண்டு அத்வைதம் என்பதற்கு அவ்விரண்டுபொருளுமில்லை என்பதே சித்திக்கும். அது நாத்திகம். பொருளுமென்றதி லுள்ள உம்மைக்கு அத்வைதமென்பதில் இடமில்லை என்றாரவர். ஆனல் அவரே.

> ‘ தனக்கிணையாய்த் தன்னினம் பிறவினம் இரண்டுமில் லாதது என்பது கேவலாத்துவிதச் சொற்பொருள் ’
> (ப் - வி - 6 - 5 - 82)

என்றார். அவ்வும்மைக்கு மாத்திரம் அச்சொல்லில் இடம் உண்டா? அன்றியும் தன்னினம் பிறவினம் என்பவற்றோடு சுவகதம் என்பதொரு பிரிவுமுண்டு. அதனை நழுவவிட்டு இரண்டும் எனச் சொன்னது நியாயமன்று. மூன்றுமில்லாதது எனச் சொன்னல் அவரது அத்வைதத்துக்கு அது பொருளா காது. அதைக்கண்டு அஞ்சினரவர்.

அத்வைதம் - இரண்டில்லை. இப்படி உம்மையைவிட்டுப் பொருள்கொண்டால் பிரமம் இரண்டில்லையா? பிரமம் சீவன் எனப் பொருள்கள் இரண்டில்லையா? இவ்வினுக்கள் எழும். பிரமம் இரண்டில்லை. ஒன்றேயென்ருல் அது அநேகேசுர வாதத்துக்கே மறுப்பாகும். பிரமம் சீவன் எனப் பொருள்கள் இரண்டில்லையென்ருல் உலகம் என்ற பொருளையும் சேர்த்துப் பொருள்கள் மூன்றில்லையென அவர்சொல்லவேண்டும். மூன் றில்லையென்பது அத்வைதத்துக்குப் பொருளன்று. ஆகலின் அத்வைதம் என்ற சொல்லை அவர் விடுவதே நியாயம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இனி அத்வைதம் என்ற சொல்லுக்கு அன்மைப்பொருள் எப்படிப் பொருந்துகிறது? பார்க்கலாம். அத்வைதம் - இரண்டல்லாதது. பிரமம் ஒருபொருள். உலகுயிர்களின் தொகை இன்னொருபொருள். விளக்கத்தின் பொருட்டு இங்கு உயிரைமாத்திரங் கொள்ளலாம். பிரமமும் உயிரும் தம்முள் வேறுபட்டதன்மையையுடைய இரண்டுபொருள்கள். ஆயினும் இரண்டெனப் பிரிக்கமுடியாதபடி அவை இயைந்துள்ளன. பிரமப்பொருள் உயிர்ப்பொருளில் கலந்து நிற்கும் நிலையென் பதே அத்வைதச் சொற்குப்பொருள்.

> 'எண்ணுப் பெயர்மேல் வந்தநகரம் அன்மைப்பொருள் மாத்திரையே யுணர்த்திப் பொதுமைபி னிற்பதன்றி, ஏனைச்சொற்களின்மேல் வந்த நகரம்போல இன்மை மறுதலைப் பொருள்களையும் உணர்த்துதல் வழக்கின்க ணின்மையின், அத்துவிதமென்ற மொழி தானே பிறிது காரணம் வேண்டாது வேறன்மையை உணர்த்தி நிற்கும்' (சிவ - பா)

என்றனர் சிவஞானமுனிவர். அதனை மறுக்கமாட்டாதவ ராயினர் மாயாவாதர். அதனால் எண் வேறு. எண்ணப் படும் பொருள்வேறு. முனிவர் கூறியது பொருளின்கட் செல்லாது என்றாரவர். வேதத்தில் ஏகம் என்ற சொல்லும், அத்வைதம் என்ற சொல்லும் கூடி வருமிடங்களுள. அங்கு ஏகமென்ற சொல் எண்ணைக் குறிப்பதாயின் அத்வைதமென் றதும் அங்ஙனமேயாம். ஏகமென்பது எண்ணை யன்றி ஏகவஸ்துவைக் குறித்தால் அத்வைதமென்பதும் எண்ணை யன்றி வேறொன்றனையே குறிக்கும். த்வைத மல்லாததாய் த்வைதத்தைத் தன்மாட்டுடையதாயிருப்பதே அத்வைதம். அதுவே அவ்வேறொன்றென்க.

அநச்வம் - அச்வமல்லாததாய் அச்வத்தை (அச்வத் தன்மையை)த் தன்பாற் கொண்டதாயிருக்குங் கோவேறு கழுதை.

அநேகம் - ஏகமல்லாததாய் ஏகத்தைத் தன்பாற் கொண்ட தாயிருக்கும் பல.

அத்வைதம் - த்வைத மல்லாததாய் த்வைதத்தைத் தன்பாற் கொண்டதா யிருக்கும் ஒன்றுபட்ட (கலந்த) நிலை.

சுருதியிற் பொருள்கள் இத்தனையென்று நிச்சயிக்கவந்த வாக்கியங்கள் பல. அத்வைதபதம் அவற்றிற் சேராது. பிரமப் பொருள் வேறு. உலகுயிர்கள் வேறு. ஆயினும் அங்ஙனம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரித்தறிய வாராதநிலையில் அப்பிரமம் அவ்வுலகுயிர்களில் கலந்திருக்கிறது. அதாவது அத்வைதமா யிருக்கிறது.

சோழன் அத்விதீயனாய் ஆள்கிறானென்றால் அதற்குப் பொருளென்னை? அத்விதீயன் என்பதற்குப் படை முதலிய சகாயரகிதன் என்றும், தனக்குநிகராக இன்னொரரசனை இல்லாதவன் என்றும் பொருள் கூறுவதுண்டு. எந்த அரசனும் சைனியமாதி சகாயமின்றி ஆளமாட்டான். எந்தநாட்டிலும் ஏககாலத்தில் இரண்டரசரிருந்து ஆளார். ஆகையால் அப் பொருள் சரியாகாது. சோழன் அரசனாயிருந்தும் செருக்கற்று குடிசனங்களுடன் கலந்து அவர்களுள் ஒருவனாயிருந்து அவர்களது நலனையேகருதி ஆளுகிறானென்பதே அவ்வாக்கியார்த்தமாகும்.

வேதம் 'ஏகமே வாத்விதீயம்', 'ஏக ஏவ ருத்ரோ நத்விதீயாய தஸ்தே' என்றது. அவற்றுள் அத்வைதபதம் பொருளொன்றே என்ற பொருளில் வந்திருக்குமாயின், 'ஏகம் ஏவ' 'ஏக ஏவ' என்பவற்றுக் கருத்தமென்ன? அவற்றுக்குத்தான் பொருள் ஒன்றே யென்பதருத்தம். ஏவகாரத்தால் பிரமம் சகாயரகிதமென்பதும், இரண்டு பிரமங்கள் அல்லது இரண்டாவது பிரமம் இல்லையென்பதும் சித்திக்கின்றன. அங்ஙனமாக அத்வைத பதத்துக்கும் அவ்வர்த்தமே சித்திப்பதெப்படி? சித்திக்குமென்றால் அப்பதப் பிரயோகம் அதிப்பிரசங்கமாகும். பிரமம் அதாவது சிவம் ஒன்றே முழுமுதற்பொருள். அது தானல்லாத உலகுயிர்களில் பிரிப்பின்றி நிற்கிறது என்பதே அவ்வாக்கியங்களுக்குப் பொருளாதல் கூடும். அஃதன்றி அத்வைதம் என்பதற்கு ஏகம் அதாவது ஒன்று எனப் பொருள்கொண்டால் ஏகபத்தினி விரதனை அத்வைத பத்தினி விரதனெனவும், ஏகாம்பரநாதனை அத்வைதாம்பரநாதனெனவும் வழங்கநேரும். அது கேலிக்கிடம்.

சுரோதா - கேட்பவன். வக்தா - சொல்பவன். பிரமமொன்றே உள்ளதாயின் பிரமமொன்றே உள்ளதெனச் சொன்னவர் யார்? அதனைக் கேட்டவர் யார்? கேட்பவரிலராயின் சொல்பவர் பித்தரே. சொல்பவரே கேட்பவர், கேட்பவரே சொல்பவர் என்றால் அதுவும் கேலிதான். வேதம் பிரமாணம். பிரமம் பிரமேயம். உயிர் பிரமாதா. அங்ஙனமாகப் பொருள் ஒன்றே உண்டென்றல் யாங்ஙனம்?

அநிர்வசனீயம்

வசனம் - சொல்வது. நிர்வசனம் - உறுதியாகச்சொல்வது. அநிர்வசனம் - உறுதியாகச் சொல்லமுடியாது. அநிர்வசனீயம்-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உறுதியாகச் சொல்லப்படாத பொருள். அநிர்வசனம், அநிர் வசனீயம்; அவாச்சியம், அநிர்வாச்சியம் என்ற சொற்கள் ஒரு பொருளில் வழங்குவன. அதற்கு விளக்கம் பல சுவடிகளில் வரைந்தாரவர்.

'சத்து (உளது) அசத்து (இலது) என்னுமிரண்டும் ஒன்றுடொன்று மாறுபட்ட குணங்கள். சத்தென்பது முக்காலத்தது. அசத்தென்பது எக்காலத்துமில்லது. உலகு முக்காலத்து மிருந்தால் சத்தெனலாம்; அங்ஙன மின்மையின் சத்தெனப்படாது.

பின்னே யசத்தெனலாமோவெனின், அசத்தென்பது எக் காலத்து மில்லாததாகலின், ஒரு காலத்ததான உலகை யசத்தெனப்படாது. மற்று ஒன்றுக்கொன்று மாறுன சத் அசத் என்னுமிரு தன்மையை அது (உலகு) ஏற்றல் அசம்பவமாகலின் அது அநிர்வசனீயமென்றே உரைக் கற்பாற்றும்.

பொய்யென்று நிச்சயிக்கப்படுவதாயும் சொரூபமிருப்ப தாயுமுள்ளது யாது? அது அநிர்வசனீயமாகலின், இதன்படியே பொய்யென்று நிச்சயிக்கப்படுவதாயும் சொரூபமுள்ளதாயுமுள்ள உலகு அநிர்வசனீயமேயாம்' (மு - மை 138)

'கயிற்றிற் காணப்படும் அரவு சத்தா அசத்தா சதசத்தா வென்று விசாரிப்புழி மூன்றுமல்லாத அநிர்வசனீயமென் றேற்படும். எங்ஙனமெனின் அரவு சத்தானுல் தெளிந்த போதும் இருத்தல்வேண்டும். இல்லாதிருத்தல் காட்சிப் பிரமாணம். அசத்தெனில் அசத்தென்ப தில்லையெனப் பொருள்படுதலால் மலடி புத்திரனைப்போல் தோன்றும லிருத்தல்வேண்டும். தோற்றிக்கொண்டு நடுக்கம் பயம் இவற்றையுண்டாக்குவதால் இல்லையென்றுஞ் சொல்லப் படாது. இவ்விரண்டிலும் இவ்விதக் குற்றம் நிகழ்வ தால் சதசத்தென்று சொல்லலாமெனின் அப்போது மேலே காட்டிய இருவகைக் குற்றங்களும் உண்டாம். அன்றி நேர்மாறுன இருவிதக் குணங்கள் ஒரு பொருளி லிடத்து நிகழ்தல் அசம்பாவிதம். சத்து, அசத்து, சதசத்து ஆகிய இம்மூன்றினிடத்தும் இவ்விதத் தோஷ மிருப்பதால் சதசத் விலட்சண அநிர்வசனீய மென்று சொல்வது நியாயமாகும்.' (வே - தீ 31)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றது காண்க. சத்துமன்று, அசத்து மன்று, சதசத்து மன்று. அம்மூன்றற்கும் வேருனது என்பது சதசத் விலட்சண மென்பதற்கு விளக்கம். விலட்சணம் - வேருனது. அவ்விளக் கமே அநிர்வசனீயம் என்பதற்குமாம். இனி அதைச் சிறிதே ஆராயலாம்.

அநிர்வசனீயம் என்பதிலுள்ள நகாரம் பதஞ்சலியார் கூறிய ஆறு பொருள்களில் எப்பொருள் கொண்டது ?

அவ்வநிர்வசனக் கொள்கைக்கு 'நேர்மாருன இருவிதக் குணங்கள் ஒரு பொருளினிடத்து நிகழ்தல் அசம்பாவிதம்' என்பது அடிப்படை. ஆனுல் அவர் தமது மற்ரொரு கொள் கையை நிலேயிடும் பொருட்டு

> 'உலகில் இப்படியே நேர் எதிர்மறையான குணங்கள் எல்லாம் ஒரு பொருளேயே பற்றியிருப்பது கண்கூடாம்' (வே - தீ 9)

என்ருர். இது முன்னேயதற்கு முரணில்லேயா ?

முக்காலத்தும் உள்ளபொருள் சத்து, இல்லாதபொருள் அசத்து. உலகைச் சத்தென்பதா ? அசத்தென்பதா ? சதசத் தென்பதா ? அது முக்காலத்து மில்லேயாகலின் சத்தெனப் படாது. ஒருகாலத்திலிருப்பதாகலின் அசத்தெனவும்படாது. ஒருகாலத்திருப்பதாற் சத்து முக்காலத்து மில்லாமையாலசத்து ஆகலின் சதசத்து எனவும்படாது. சத்தும் அசத்தும் எதிர் மறைகளாகலின் ஒருபொருளிலிராவென்பது நியாயம். ஆகவே சத்து, அசத்து, சதசத்து ஆகிய மூன்றற்கும் வேருனதே உலகம். அப்படிச் சொல்வதுதான் அநிர்வசனீயம் எனப்படும். இஃதவர் கொள்கை. இதிலுள்ள பிழையென்னே ? முக்காலத்து மில்லாமையாகிய அசத்துக்கு முயற்கோடு மலடிமகன் என்பன திருட்டாந்தங்கள். அக்கோடும் மகனும் ஒருகாலத்துளவா மாறு எங்காவது ஆரோபிக்குமா ? ஆரோபிக்கப்படுமா ? மாட்டா ? அப்படியே அசத்தாகிய உலகும் சத்தாமாறு ஆரோ பித்தலில்லே, ஆரோபிக்கவும்படாது. மெய்யான அரவுவர்க்கம் இல்லேயாயின் கயிற்றில் அரவின் ஆரோபமும் அசாத்தியமே. ஆகவே உளதாகிய உலகைச் சதசத்விலட்சண அநிர்வசனீய மென்றல் செல்லாதென்க.

அவர் சதசத்விலட்சண அநிர்வசனீயமென உலகை மாத் திரங்கொண்டாரா ? வேறுஞ் சிலபலவற்றைக் கொண்டாரா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'பிரம ருத்திராதியர் பொய்யன்று, அநிர்வசனீயம்' (அ - வி 12)

'பிரமத்தினிடத்து அவாச்சியமாக சத்தியொன்றுளது' (அ - வி 80)

'அஞ்ஞானம் சத்துமல்ல, அசத்துமல்ல, சதசத்து மல்ல, பின்னெதுவெனின் அநிர்வாச்சியமே' (அ - வி 89)

'சீவன் ... அநிர்வசனீயப் பொருள்' (அ - வி 105)

'பிரமத்துக்கு இரண்டாவது வஸ்துவேயில்லையென்பது யதார்த்தமே. ஆனால் அதன்பொருள் சத்தாக இல்லை யென்பதே யாம்; இதனால் சதசத் விலட்சண அநிர்வச னீயமா யுண்டு' (அ - வி 129)

'பிரகிருதி ... அநிர்வசனீயம்' (வே - தீ 7)

'ப்ரமத்தின்கண் உலகு ... அநிர்வசனீயம்' (வே - தீ 22)

'பிரகிருதி ஜீவர்கள் அநிர்வசனீயமாக அநாதி' (வே - தீ 52)

என்றுரவர். பிரமம், ஈசன், விஷ்ணு, பிரமன், உருத்திரன், கூடஸ்தன், சீவன், மாயை, அஞ்ஞானம், அவித்தை, பிரகிருதி, குணம், உலகு, கன்மம், சுவர்க்கநரகம், பிறப்பு, இருப்பு, இறப்பு, அளவை, வேதாதிநூல்கள், சொல், பொருள், ஆசார அநுட்டானுதி சாதனங்கள், தானதருமங்கள், பந்தம், முத்தி எனப் பொருள்கள் பல. மேற்கோளிலில்லாதனவும் அவ்வரிசை யிற் சேர்க்கப்பட்டுள்ளன. அறிஞருள்ளங்களில் இன்னும் பல உதிக்கலாம். அவையும் இங்குச் சேரத்தக்கனவே. அத்தனையும் அறிஞர் சிந்திப்பதற்கு விஷயமாய் நிற்கும். மாயாவாதருஞ் சிந்தித்தனர். அவர்கண்ட முடிவென்ன? பிரமமொன்றே சத்து. ஈசன் விஷ்ணு முதல் பின்கண்ட வற்றில் ஒவ்வொன் றும் இவ்வியல்பினது என யாராலும் உறுதியாகச் சொல்லமுடி யாது. அம்முடியாமைக்குச் சிந்திப்பவரது அறிவாற்றலின் குறை காரணமன்று, அப்பொருள்களின் இயல்பே அதுதான் என்பது அம்முடிவு. அப்பொருள்கள் அனைத்துமே சதசத் விலட்சண அநிர்வசனீயம் என்பது கருத்து.

ஆனல் நிர்வசனம்பண்ணும் ஒருவரோடு வாதிடுமுறையில் அநிர்வசனீயமானத்தை ஒரு மாயாவாதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'நீர் நிர்வசன சூரரன்றோ? எல்லாப் பதார்த்தங்களுக்கும் நிர்வசனம் சொல்வீரோ? ஜாதியென்பது "என்ன? அதற்கு ஒரு நிர்வசனம் சொல்லும் பார்ப்போம். இனி ஜாதி (தன்மை) அகண்டோபாதி (குறி) இவை இரண்டும் ஒழிய மற்றையப் பொருள்கள்தான் நிர்வசனத்துக்கு வரும் என்பீரேல், சகோதரரே உமதானுரை உமது சிஷ்யனையும் தாசனையும்மாத்திரம் வசப்படுத்துமாயினும் உலகத்தை வசப்படுத்தாதே. பாரும் இரண்டு குடங்களைக் கண்டவன் இரண்டும் வேறென்கின்றானே. அதனிடத்திலுள்ள வேற்றுமையை எவ்விதமறிவது? வேறென்றேயல்லவோ சொல்லவேண்டும். வெவ்வேறு கபாலங்களான காரணங்களால் உண்டான குடம் வேறென்பீரேல் அக்காரண கபாலங்கள்தான் எவ்விதம் வேறு எனின் அதன் காரணமான சிறு கபாலங்கள் வேறுதலாலென்பீர்; அவைதான் வேறு என்பது எதனால் எனின், அவற்றின் அம்சபேதத்தால் என்பீர். அவ்வம்சங்கள்தான் எதனால் வேறெனின், அவைகளின் காரணங்களான நுண்டுகளின் வேற்றுமையினால் என்பீர். அவற்றின் வேற்றுமையோவெனின், சிறு நுண்டுகளின் வேற்றுமையாலன்றோ? அவற்றின் வேற்றுமை சிறு தூளிகளின் வேற்றுமையாலன்றோ? அவற்றின் வேற்றுமை அதன் காரணமான மூவணுவின் வேற்றுமையாலன்றோ? அம்மூவணுக்களும் அதன்காரணமான ஈரணுக்களின் வேற்றுமையால் அன்றோ? அவ்வீரணுக்களும் அவற்றின் காரணங்களான அணுக்களின் வேற்றுமையாலன்றோ? அவ்வணுக்கள்தான் யாது காரணம்பற்றி வேறுபட்டனவென்னின் அங்கு மெள்ளமெள்ள அவற்றின் விசேஷத்தால் வேறுபட்டனவென்பீர். அவ்விசேஷங்களோ அணுக்கள்தோறும் வேறுபட்டன. அவைகட்கு நிர்வசனமில்லை. அவைகள் அனந்தங்கள். அவ்வநிர்வசனீய அனந்த விசேஷங்களின் பலத்தால் உலகத்தில் ஒன்றுக்கொன்று எல்லாப்பொருளும் வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது. இங்ஙனம் ஜாதிகள் அனந்த கோடி. அகண்டோபாதிகளோ அளவிலடங்காதன. ஆகவே வெகுதூரம் ஓடி இறுதியில் இடறி விழுவதைக் காட்டிலும் ஆரம்பத்திற்றானே தோன்றும் வேற்றுமை அநிர்வசனீயமென ஒழித்திட்டால் இவ்வளவு உபத்திரவமில்லை...எல்லாப் பொருள்களும் அநிர்வசனீய அனந்தகோடி விசேஷங்களால் வேற்றுமைப்பட்ட பல அணுக்களின் பரம்பரையில் தோன்றின...பிரம்மமும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அநிர்வசனீயமே. பிரம்மத்திற்குத் தர்மமேதுமில்லை யாதலின் அது அநிர்வசனீயம். உலகமோபல தர்மங்கள் மாறப்பெறுதலானும் ஒன்றினிடத்தே பல தர்மங்கள் தோன்றி நிற்றலானும் அவை அநிர்வசனீயமே...குணமென்றால் அது விசேடத்தினிடமிராது. குணம் முதலியவையெலாம் நிர்க்குணங்களாதலின் ... சுபாவமென்பதும் அநிர்வசனீயமென்பதும் வேறில்லை' (ப் - வி 12 - 3 - 51, 52)

எனப் பெருமளவில் விவரித்தார். பொருளை நிர்வசனம்பண்ண வந்த ஒருவரை நீர் நிர்வசன சூரரன்றோ எனக் கூறிப் பரிகசித்தார் எதனையும் நிர்வசனம்பண்ண முடியாதெனச் சொல்ல வந்த அவ்வநிர்வசன சூரர். அவர் கிடக்க.

அவர் விவரித்தது அவர் கொள்கைக்கே பாதகமாயிற்று. எப்படி? இரண்டு குடங்களின் வேறுபாட்டிற்கு அவற்றின் கபாலங்களும், அவற்றின் வேறுபாட்டிற்கு அவற்றின் சிறு கபாலங்களும், அவற்றின் வேறுபாட்டிற்கு அவற்றின் அமிசங்களும், அவற்றின் வேறுபாட்டிற்கு அவற்றின் நுண்துகள்களும், அவற்றின் வேறுபாட்டிற்கு அவற்றின் சிறு தூளிகளும், அவற்றின் வேறுபாட்டிற்கு அவற்றின் மூவணுக்களும், அவற்றின் வேறுபாட்டிற்கு அவற்றின் ஈரணுக்களும், அவற்றின் வேறுபாட்டிற்கு அவற்றின் அணுக்களும், அவற்றின் வேறுபாட்டிற்கு அவற்றின் விசேஷங்களும் காரணமென்றுரவர். விசேஷம், தர்மம், குணம் என்பவற்றை ஒன்றெனச் சிலவிடங்களிலும், வேறு வேறெனச் சிலவிடங்களிலும் சொல்வது அவருக்கு வழக்கம். விசேஷமென்ற சொல்லையே இங்கு வைத்துப் பேசலாம். ஒவ்வோரணுவுக்கும் விசேஷமுண்டு. அணுக்கள் அனந்தங்கோடி. அதனால் அவ்விசேஷங்களும் அனந்தங்கோடி. அவ்வநிர்வசனசூரர் அந்நிர்வசன சூரரை அவ்விசேஷம்வரை துரத்திச்சென்றார். அவ்விசேஷத்தை யணுகியதும் துரத்தினவர் ஓய்ந்தார். துரத்துண்டவர் நின்றார். ஓய்ந்தவர் தோற்றார். நின்றவர் வென்றார். எதனால்? அவ்விசேஷங்கள் அநந்தங்கோடி. அவற்றை நிர்வசனம்பண்ணும் அறிவாற்றல் யாருக்குமில்லை. அவ்வறிவாற்றலின் குறையாற்றான் அவ்விசேஷங்கள் அநிர்வசனீயமாயின. மற்றப்படி அவ்விசேஷங்கள் தம்மளவில் சதசத் விலட்சணங்களல்ல, சத்தேயாம். அதனாலன்றோ அவ்வநிர்வசனசூரர் அவற்றிற்கப்பாலும் அந்நிர்வசனசூரரைத் துரத்தமாட்டாதவராயினர். ஆகவே சத் அநிர்வசனீயம், சதசத் விலட்சண அநிர்வசனீயம் என அநிர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வசனீயங்கள் இருவகையவாதல் அறிக. பிரமம் சத்து. ஆயினும் அநிர்வசனீயம். அஃது அநிர்வசனீயமாதற்குக் காரணம் அறிபவனது அறிவின்பாலுள்ள குறை. அச்சிற்றறிவு அப்பிரம சத்தை அறியமாட்டாது. பிரமசத்து முதல்வகை அநிர்வசனீயத்துக்கு உதாரணம். அணுக்களின் விசேஷங்களும் அவ்வகையவே. ஆனால் மேற்காட்டப்பட்ட ஈசன் விஷ்ணு முதலியவனைத்தும் சத் அநிர்வசனீயங்களல்ல. சதசத் விலட்சண அநிர்வசனீயங்களே. அதற்குக்காரணம் அவற்றை அறிபவனது அறிவின் குறையன்று, அவற்றின் இயல்பேயாம். அவ்வநிர்வசனஞூரர் அவ்விருவகை அநிர்வசனீயங்களையும் குழப்புகிறூர். எதிர்பட்சத்தார் அதனுல் ஏமாருர். அணுக்களின் விசேஷங்கள் அநிர்வசனீயமாயினும் சத்தென்பது உறுதி. அவற்றிலிருந்து ஒன்றன்மேலொன்ருகக் காரியப்பட்டுவந்த பிரபஞ்சமும் சத்தேயாவதில் சம்சயமில்லை.

கருவிநூல் பொருள்நூல் வல்லவர்முன் வாதிடும் மாயாவாதர்க்கு அநிர்வசனீய மானமே கவசமும், கற்பனை, பொய், மித்தை, போலி, விவர்த்தம், தோற்றம் முதலியன ஆயுதங்களும் ஆகும். பாவம். அவையெல்லாம் அவ்வல்லவர் பார்வையாலேயே நுறுங்கிடும். அத்துணை எளிமையுடையன அவை.

நிர்க்குணம்

பிரமத்தின் குணம் ஒருவிதம். சீவனின் குணம் இன்னெரு விதம். மாயையின் குணம் மற்ருெருவிதம். பிரகிருதியின் குணம் பிறிதொருவிதம். இங்கு விசாரணை அம்முறையிலில்லை. மாயாவாதர் வழியில் நிகழும். குணம், விசேஷம், விசேஷணம், தருமம், தன்மை என்பன ஒருபொருட் சொற்கள். நிர்க்குணம் - குணமில்லாமை. நிர்விசேஷம் - விசேஷமில்லாமை. எல்லாப் பொருள்களும் குணமுடையனவா? குணமில்லாத பொருள்களும் உளவா? அவர்தரும் விடையைக் காணலாம்.

> ‘குணமின்றி எந்தப் பொருளுமிருக்க யாம் கண்டிலேம்’
> (வே - தீ 43)

என்ருரவர். நிர்க்குணப் பொருளென ஒன்றுமில்லை என்பது கருத்து. அதனுல் பிரமமும் குணமுடைப்பொருள் என்பதாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆனால் மற்றோரிடத்தில் அவர் வேறென்று சொன்னார். என்னை? குணமுடையது குணி. குணி - பொருள். குணத்துக்கும் குணிக்கும் உள்ள சம்பந்தம் பேதமா? அபேதமா? பேதாபேதமா? நூல்கள் குணகுணிகளுக்குப் பேதாபேத சம்பந்தமே கூறும். அப்பேதாபேதத்தில் பேதமுமிருப்பதால் இரட்டை தொனிக்கிறது. பேதம் - இரட்டை, இருமை. அபேதம் - ஒற்றை, ஒருமை. சீவனும் சகமும் மித்தையெனக் கழிக்கப் பட்டன. எஞ்சியது பிரமம். அது சத்தென்பது நிச்சயமாயிற்று. அப்பிரமமுங் குணமுடையதென்றால் அக்குணமும் குணியாகிய அப்பிரமமும் பேதாபேதமெனப்பட்டுப் பேதமாகிய இரட்டையும் வந்து சேர்கிறது. இரண்டு சத்தைகளுக்கோ இடமில்லை. ஆகலின் அக்குணகுணிகளுள் ஏதாவதொன்றை மித்தையெனக் கூறித் தொலைக்கவேண்டும். எதைத் தொலைப்பது? பிரமத்தையா? அதன் குணத்தையா? சீட்டு அக்குணத்தின் தலைமேல் விழுந்தது. ஆகலின் அக்குணத்தையே மித்தையெனக்கூறிக் கழித்தாரவர். அதனால் அவர் பிரமம் நிர்க்குணம், நிர்விசேஷம் ஆனது. பிரமம் சத்தென அவர் நிச்சயித்ததிலுள்ள பிரமமாவது அந்நிர்க்குணப் பிரமமேயாமென்க. ஆனால் குணமில்லாத பொருளில்லையெனத் தாம் முன் கூறியதற்கு மாறாக அந்நிர்க்குணப் பிரமமுண்டென அவர் இங்கு நிச்சயித்தது தவறன்றோ?

மேலும் பிரமமும் சீவனும் சைதன்யங்கள். அவை ஐக்கியமாதலே தத்வமஸியாகும். ஆனால் அவை ஐக்கியமாகும்வரை ஐக்கியமாகாமலிருப்பதற்குத் தடையாயுள்ளது எது? அது தான் அவற்றின்பாற் காணப்படும் குணங்கள். எப்படி? சர்வஞ்ஞத்துவாதிகள் பிரமத்தின் குணங்கள். கிஞ்சிஞ்ஞத்துவாதிகள் சீவனின் குணங்கள். அவ்விரண்டும் பரஸ்பர விரோத குணங்கள். அவை சத்தாயிருந்தால் பிரமமும் சீவனும் ஐக்கியமுறவே மாட்டா; தத்வமஸி என்பதற்குப் பிரம சீவ ஐக்கியமென்ற பொருளும் வராது; மித்தையாயிருந்தாற்றான் அவ்வைக்கியம் சாத்தியமாகி அவ்வாக்கியத்துக்கு அப்பொருளுங் கிடைக்கும். அதனாலும் பிரமம் நிர்க்குணமேயென அவர் முடித்தார்.

குணமில்லாமையால் பிரமமும் சின்மாத்திரம், சீவனும் சின்மாத்திரம் என்பதாயிற்று. அதனால் அவ்விரண்டும் கேவல சித்துக்கள். கேவலசித்து - எவ்வித குணங்களின் சேர்க்கையாலும் பாதிக்கப்படாமல் தான்மாத்திரமாய் அதாவது தனியேயிருக்கும் சித்து. அந்நிலையில் அவ்விரண்டும் சமான சித்துக்களாம். அவைதான் ஐக்கியமாகமுடியும். தத் த்வம் அஸி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பதற்கு ஈசன் சீவன் ஆகிறது என்பது வாச்சியார்த்தமும், சித்சித் ஏகத்வம் என்பது இலட்சியார்த்தமும் ஆகும். இக் கேவல சித்துக்களின் ஐக்கியமே கேவலாத்வைதமென்பது. பிரமமும் சீவனும் அங்ஙனம் சித்தென்று மாத்திரஞ் சொல் வதை அகண்டார்த்தபோதம் என்பாரவர். அவரால் மற்ற மஹாவாக்கியங்களுக்கும் அப்படியே பொருள் கொள்ளப் பட்டது.

முக்கியவிருத்தி - செம்பொருள். வாச்சியப்பொருள் - லட் சணுவிருத்தி. கௌணவிருத்தி - இலக்கணப்பொருள். தாற்பரி யப்பொருள்; இலட்சியப்பொருள் வேதத்திலுள்ள வாக்கியங் களுக்குச் செம்பொருளே கொள்ளவேண்டும். அதற்கு இடந் தராத வாக்கியங்களுமிருக்கலாம். அவற்றிற்கே இலக்கணப் பொருள் வைக்கப்பட்டது. அது நிர்ப்பந்தநிலை. ஆனால் அப்பொருள் மற்ற வாக்கியங்களால் நன்கு ஆதரிக்கப்பட வேண்டும்.

சங்கரர் தத்வமஸிக்கு முக்கியவிருத்தியிற் பொருள் கொள்ள இசைந்திலர். கொண்டால் அவர்கொள்கை பங்க முறும். ஆனால் அவர்கொள்கை முக்கியமா? வேதக்கொள்கை முக்கியமா?

குணமில்லாத பொருளில்லையென்றூர் அம்மதவாதர். அவர் பிரமத்தைக் குணமில்லாதபொருளென்னலாமா? அதனால் பிரமப்பொருளே இல்லையென அவர்சொன்னவ ராவார். அது நாத்திகம்.

மாயையிலுள்ள பிரமப்பிரதிபிம்பம் ஈசுரன். அவ்வீசுர னுக்கே சர்வஞ்ஞத்வாதி குணங்களுள. சிருட்டியாதிகளைச் செய் வதும் அத்தெய்வமே என்பது அவர்மதம். அது பிழை ஏன்? மேகத்தில் வானவில் உண்டு. அதில் நிறங்களுள. அவை அவ்வில்லுக்குரியனபோல் தோன்றும். உண்மை அஃதில்லை. அவை சூரியனுக்குரியன. அவை சூரியனிடத்தில் இல்லை யானல் அவ்வில்லில் விளங்கித் தோன்ரு. மேகத்தை மாயை யென்றும், வானவில்லை ஈசுரனென்றும், நிறங்களைச் சர்வஞ் ஞத்வாதி குணங்களென்றுங் கொண்டால் பிரமத்தைச் சூரிய ஸ்தானத்தில் வைக்கவேண்டும். அப்போது அந்நிறங்களுக்கு மூலம் சூரியனுவதுபோல் அக்குணங்களுக்கு மூலம் பிரமமாக வேண்டும். ஆனல் அந்நிறங்கள் சூரியனிடம் விளங்கித் தோன்ரு. அப்படியே அக்குணங்களும் பிரமத்தினிடமாம். அதுகொண்டு அந்நிறங்கள் சூரியனிடமில்லை யென்பதும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்குணங்கள் பிரமத்தினிடமில்லையென்பதும் வெறுஞ்சொல்லென்க. இத்திருட்டாந்தத்தால் பிரமத்தில் அக்குணங்கள் சூக்குமமாகவுளவென்பதே சித்தம். பிரமம் ஈசுரனைப் பிரதிபிம்பித்ததென்றால் பிரமசைதன்யம் சர்வஞ்ஞத்வாதி குணங்களாகப் பிரதிபிம்பித்ததெனக் கொள்வதே தகும். அதை விட்டுப் பிரமத்தை நிர்குணம் நிர்விசேஷம் என்றல் சிறிதும் ஏலாது.

அவர் அசத்காரியவாதங் கொள்பவர். அசத்காரியவாதம் - இல்லாதது தோன்றுமென்கிற வாதம். ஈசுரனிடமுள்ள சர்வஞ்ஞத்வாதி குணங்கள் பிரமத்தினிடம் இல்லையென்பது மெய்யாயின் அப்பிரமத்தைச் சைதன்ய மென்பானேன்? அதை அசேதனமென்றே சொல்லிவிடலாம். அசேதனமாகிய கயிற்றிற் சேதனகுணத்தோடுகூடிய பாம்பு தோன்றவில்லையா?

பிரமம் சைதன்யம். அப்பிரமசைதன்யம் திரவியமா? குணமா? திரவியம் என்பது அவரது விடை. அத்திரவியம் சகுணமா? நிர்க்குணமா? நிர்க்குணம் என்பதும் அவரது விடை. ஆனால் எந்தத் திரவியமுங் குணமின்றியில்லையென அவர் சொன்னது முன் காட்டப்பட்டது. அங்ஙனமாகப் பிரமத்தைமாத்திரம் நிர்க்குணத்திரவியமென்றல் எப்படிப் பொருந்தும்? அதற்குச் சம்பாஷணை ரூபத்தில் அவர் விடை தந்தார். அச்சம்பாஷணையில் வருகிற 'ஜப்' என்பவர் அவரே.

'ரங்:- ... ... திரவியங்கள் எல்லாம் சகுணமாகத்தானேயிருக்கும்?

ஜப்:- நையாயிக சித்தாந்தத்தில் உற்பத்தி க்ஷணத்தில் திரவியத்துக்குக் குணமுண்டா?

ரங் :- இல்லை.

ஜப் :- அங்ஙனமானால் பிரமமும் திரவியமு மாகலாம். அதேநியாயத்தாற் குணமில்லாமலிருக்கலாம்.

ரங :- ஐயா பிரமம் நிற்குணமாகத்தா னிருக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமென்ன?

ஜப் :- உலகத்துக்கு முற்றும் வேறுபட்டகுணமுள்ளது பிரமமென வேதங்கள் கூறுதலால் உலகம் சகுணமாகவே நிற்றலால் பிரமம் நிற்குணமென்றேற்பட்டது' (ப் - வி 10-6-92)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பது அவ்விடை. அவர் வேற்றுமதத்தில் விழுந்து தம் கொள்கையைச் சாதிக்க முயல்கிருரென்பது அவ்விடையால் தெரிகிறது. அம்மதம் நையாயிகம். உலகமும் உலகத்திரவியங்களும் உற்பத்தியாகிற முதற்கணத்தில் நிர்க்குணமாயிருக்கும். மறுகணத்திற்ருன் அவற்றில் குணம்வந்துகூடும். அதுமுதல் அவை சகுணங்களாகும். அம்மதஞ் சொல்வதது. 'உலகத்துக்கு முற்றும் வேறுபட்டகுணமுள்ளது பிரமம்' என்றவிடத்துப் பிரமம் அச்சகுண உலக திரவியங்களுக்கு முற்றும் வேறுபட்டது. நிர்க்குண உலக திரவியங்களுக்குச் சிறிதும் வேறுபட்டதன்று என்பது கருத்து. அங்ஙனமாயின் நிர்க்குணமாயிருப்பதில் முதற்கண உலக திரவியங்களும் பிரமமும் சமம் என்பதாயிற்று. அது பிரமத்தின் தன்னியல்புக்கு ஊறுவதை அவர் அறிக. அப்பிரமத்தையும் நிர்க்குண உலக திரவியங்களேயும் வேறுபடுத்துவதெது? அவ்வுலக நிர்க்குண திரவியங்களிலேயே ஒன்றிலிருந்து இன்னென்றை வேறு படுத்துவது எது?

வேறுபட்ட குணமுள்ளது பிரமம் என்ருரவர். நிலம் நீர் முதலியன முதற்கணத்தில் குணமில்லாதன. அவை அடுத்த கணத்திலிருந்து சகுணமாகும். அப்போது நிலத்தின் குணம் நீரிலும் நீரின் குணம் நிலத்திலும் வந்து இயையுமா? இயையாவெனின் ஏன்? ஒருவருக்கும் உரித்தல்லாத வீட்டில் எவரும் நுழையலாமே. இனி நிலத்தின் குணமே நிலத்திலும், நீரின் குணமே நீரிலும் இயையுமன்றி நிலத்தின் குணம் நீரிலும், நீரின்குணம் நிலத்திலும் இயையா என்பதைக் கொள்ளலாம். ஆனல் நிலத்தின் குணம் நீரிலில்லாமையால் நீரை நிர்க்குணமென்னலாமா? நீரின்குணம் நிலத்திலில்லாமையால் நிலத்தை நிர்க்குணமென்னலாமா? அதற்கதற்குரிய குணத்தை அங்கீகரியாமல் அவ்விளுக்களுக்கு ஆமென விடைகொடாரறிஞர். வேறுபட்ட குணங்கள்தான் சர்வஞ்ஞத்துவாதிகள். அவை பிரமத்தின்பாலுள. ஆகலின் அது சகுணமே. வேறுபட்ட குணமுள்ளது என்பதை நிர்க்குண மென்றல் செல்லாது. உலக திரவிய குணங்கள் அதன்பாலில்லை. பிரமம் நிர்க்குணம் என்பதற்கு அதனிடம் அக்குணங்களில்லை யென்பதே கருத்து. சர்வஞ்ஞத்வாதிகள் உலகதிரவிய குணங்களல்ல, பிரமத்துக்கே உரியன.

குணம் திரவியத்தை மறு கணத்தில் பற்றுமென்ருர் நையாயிகர். குணத்தின் சொரூபம் என்ன? முதற்கணத்தில் அதற்குப் பற்றுக்கோடு வேறுண்டா? அது தனித்தே கிடந்ததா? நையா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யிகரைத் துணைக்கொண்டார் மாயாவாதர். அவ்விருசாராரும் அவ்வினுக்களுக்கு வகையோடு விடைதருக.

இன்னென்று: குணசமூகமே குணி, குணுசிரயமே குணி எனக் கொள்கைகள் இரண்டு. அவற்றுள் ஒன்றைத் துணிந்து மேற்செல்வதே நிர்க்குண சகுணவாதர்க்கு வேண்டும்.

பிரமம் ஆகாயம் போல்வதென்றும், ஆகாயம் அபாவம் சூன்யம் என்பன ஒன்றென்றும் அவர் சொன்னது முன் காட்டப்பட்டது. அதனுல் பிரமம் சூன்யம் என்பதாயிற்று. சூன்யத்தை நிர்க்குணம், நிர்விசேஷம் என்ருல் ஆசங்கிப்பார் யாருமிலர்.

திரிமதஸ்தர்

சங்கரர், இராமானுஜர், மத்வர் என்னும் இம்மூன்று ஆசிரியன்மாரின் வழிவந்தார்க்குத் திரிமதஸ்தரென்பது தொகுதிப் பெயர். அம்மூவரும் அத்வைதம் என்ற சொல்லுக்கு ஒன்றென்றே பொருள் கொண்டனர். அஃதவர்க்குச் செம்பொருள். அச்சொற்குத் தாற்பரியப்பொருளும் அவர் கொள்ளலாயினர். அதுவே அவர்க்குட் பிளவை உண்டாக்கிற்று. அப்பிளவு சாமானியமன்று. மிக மிக ஆழமானது, அகலமானது. வேதம் பிரமத்தை நிர்க்குணப் பொருளென்றும் சகுணப்பொருளென்றும் சொல்வதோடு, பிரமத்துக்கு அன்னியமான பொருள்களுமுள வென்றும் சொல்லும். அன்னியமான பொருள்கள் சீவரும் சகமுமாம். பிரமம் நிர்க்குணம் என்பன அபேதங் கூறுஞ் சுருதிகள்; சகுணம் என்பன பேதாபேதங்கூறுஞ் சுருதிகள். அன்னியமான பொருள்களுமுள என்பன பேதங் கூறுஞ் சுருதிகள். சங்கரர் அபேத சுருதிகளே பிரமாணமென்பர். மற்றை யிரண்டுவகைச் சுருதிகளும் பிரமாணமாகா வென அவரால் ஒதுக்கப்படும். அபேதசுருதிகளே பாரமார்த்திகத்தைப் போதிப்பன. பேதாபேத, பேதசுருதிகள் வியாவகாரிகங்களேயென்பது அவர்கருத்து. அவர்கொண்ட தாற்பரியப்பொருள் அப்படியாயிற்று. அவர் வேதத்தைப் பிரமாணமாகக் கொள்வது அவ்வளவுதான்.

சங்கரரால் ஒதுக்கப்பட்ட சுருதிகளை இராமானுஜருக்கு விட மனமில்லை. பிரமத்துக்கு அனந்தகல்யாண குணங்களுள வெனக் கூறுஞ் சுருதிகளும், சீவசகங்களுளவெனக் கூறுஞ் சுருதிகளும் ஏன் ஒதுக்கப்படவேண்டும்? அவற்றை எப்படி ஒதுக்குவது? அச்சுருதிகளிற் கூறப்பட்டவை பிரமத்துக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விசேஷணங்கள். அவற்ருேடுகூடி விசிஷ்டமாயுள்ளது பிரமம். அஃதொன்றே. அத்வைதப் பொருளாவது அதுதான் என்ருர் அவர். அவ்விசிஷ்டாத்வைதம் முன் விளக்கப்பட்டது. அவர் கொண்ட தாற்பரியப்பொருள் அதுவாயிற்று. அவருக்குச் சகுணசுருதிகளே அங்கீகாரம். அபேதசுருதிகளையும், பேத சுருதிகளையும் மெல்லக் கழிப்பாரவர். வேதம் அவருக்குப் பிரமாணமாவது அத்தனையே.

மத்வருக்கு அவ்விருவரின் அத்வைதங்களும் பிடிக்கவில்லை. அவரும் அத்வைதம் என்பதற்கு ஒன்றென்றே பொருள் கொண்டாலும் அபாவப் பொருளிற்போய் விழவில்லை. அவர் கொண்டது விரோதப்பொருள். த்வைதத்தின் மறுதலை அத்வைதம். அதாவது இரண்டற்கு விரோதம் (மறுதலை) ஒன்று என்பது. த்வைதங்களாகிய சீவசகங்களும் உள்ளன. அத்வைதமாகிய பிரமமும் உள்ளது என்ருரவர். அவர்கொண்ட தாற்பரியப்பொருள் அது. அதனுல் அவர் மதம் த்வைதமென்றே சொல்லப்படும். அவருக்குப் பேதசுருதிகளே முக்கியம்; அபேத பேதாபேத சுருதிகள் கௌணங்களாயொழியும். வேதத்தை அவர் பிரமாணமாகக்கொள்வது அம்மட்டே.

ஆனுல் வேதத்திலுள்ள அம்மூவகை வாக்கியங்களும் சமான தரமுடையன. அவற்றுள் ஒன்றை முக்கியமெனக் கொள்ளலும், மற்றவற்றைக் கௌணமெனத் தள்ளலும் கூடா. அவற்றைச் சமதரத்தில் வைத்துப் பொருள்காண்பதே தக்கது. அன்மைப் பொருளொன்றே அதனைச் சாத்தியமாக்கும்.

சம்பந்தம்

சம்பந்தம் பலவகைப்படும். ஐக்கியம், தாதான்மியம், சமவாயம், சையோகம், சொரூபம், அநிர்வசனீயம் என்பன அவற்றுட்சில. இங்கு எடுத்துக்கொள்ளப்படுவன மூன்று. அவை ஐக்கியமும், தாதான்மியமும், சையோகமுமாம். ஐக்கியமும் அபேதமும் ஒன்று. தாதான்மியமும் பேதாபேதமும் ஒன்று. சையோகமும் பேதமும் ஒன்று.

வேதம் 'ஏகமே வாத்விதீயம்' என்றது. அது சீவபரங்களுக்கு ஐக்கியங் கூறுமாயின் ஏகமென்ற அளவில் நிறுத்தியிருக்கலாம்; அத்விதீயம் என்ற சொற்பிரயோகம்அநாவசியம். அச்சொல் சேர்ந்து வேருெரு பொருளை உய்த்துணரவைப்பதாயிருக்கிறது. அஃதென்னை? உயிருக்கோரிலக்கணமுண்டு. அதுவதுவாய் நின்றறிதலே அவ்விலக்கணம். முத்தியில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐக்கிய முளதாயின் அவ்விலக்கணம் நாசமாம். அவ்வழி இலக்கியமாகிய உயிரும் இலதாய்ப்போம். உடல்மாத்திரம் அழிவதாகிய மரணத்தைவிட உயிரும் அழிவதாகிய முத்தி எங்ஙனம் விரும்பத்தக்கதாகும்? ஏற்றமுடையதாகும்?

சீவபரங்களுக்குத் தாதான்மியங் கூறுமாயின் குணகுணி சம்பந்தமே தாதான்மியம். உயிர் பிரமத்தின் குணமா? உயிரே குணமுடைய பொருள். அது பிரமத்தின் குணமாதல் யாங்ஙனம்? குணமுடைய பொருள் பிறிதொரு பொருளின் குணமாதலில்லை.

சீவபரங்களுக்குச் சையோகங் கூறுமாயின், சையோகம் உருவுடைப் பொருள்களுக்குத்தானுண்டு. பிரமமும் உயிரும் வியாபகப் பொருள்கள். அவை சையோகியா.

ஆகலின் அம்மூன்றுந் தனித்தனி அத்வைத மாகா. அத்வைதமும் ஒரு சம்பந்தமே. அபேதமாவது ஒன்றுதல். பேதமாவது வேறுதல். பேதாபேதமாவது உடனுதல். அம்மூன்றையுந் தன்னுட் கொண்டது அச்சம்பந்தம். எப்படி ? ஒரே பொருள் குணமுங் குணியுமென இரு கருத்துப்படப் பிரிந்து நிற்பதுண்டு. பிரமப்பொருளொன்றே சத்தியமெனக்கொள்கிற மாயாவாதம். அப்பொருள் நிர்விசேஷ சைதன்யமெனக் கூறுவதால் அதுவிளங்கும். நிர்விசேஷ சைதன்யம் - குணமுமில்லாத அறிவுப்பொருள். பொருள் முதற்கணத்திலும் குணம் மறுகணத்திலுந் தோன்றுமென்கிற மதமுமுண்டு. அக்குண குணிசம்பந்தம் தாதாத்மியமாகும். சாத்திரமும் அதனைத் தாதான்மியமென்றே சொல்லும். அப்படியே இரண்டு வேறு பொருள்கள் ஒன்றேயென்னுங் கருத்துப்பட ஒற்றித்து நிற்றலுமுண்டு. அந்நிலையுந்தாதான்மியந்தான். ஆனுல் சாத்திரம் அச்சம்பந்தத்தைத் தாதான்மியமென்று சொல்லாமல் அத்வைதமென்று சொல்லும். பேதாபேதத்தோடு பேதமும் அபேதமுங் கூடியிருத்தலால் அத்வைதமென்ற பெயரே பொருந்துவதாயிற்று. அவ்வத்வைதம் சில திருஷ்டாந்தங்களால் விளக்கப்படும்.

அபேதம், ஒன்றுதல், உடலுயிர்

உடல் பருக்கும், சிறுக்கும். உயிருக்கு அவ்விகாரமில்லை. ஆயினும் உயிர் 'நான் பருத்தேன், சிறுத்தேன்' என்கிறது. இன்னும் சாத்தன் கொற்றன் முதலியன பெயர்கள். அவை உடலுக் கிடப்படுவனவே, உயிருக்கல்ல. ஆனுல் சாத்தா கொற்ரு என அழைத்தால் என்ன என விடைதருவது எது?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயிரே. உடலன்று. அதனால் உயிர் உடலில் ஒற்றித்து உடலே யென்னுமாறு நிற்குநிலை விளங்குகிறது. அதுவே அபேத நிலை. உயிர்போல்பவன் சிவன். உடல்போல்வது உயிர்.

பேதம், வேறுதல், கண்ணருக்கன்

பொருளைச் சூரியன் காட்டுகின்றது, கண் காண்கின்றது; சூரியன் காணாது, கண் காட்டாது. கண்ணுக்குப் பொருள் புலப்படும்போது சூரியனொளி கண்ணொளியில் இயைகிறது. அக்காட்சியில் அவ்விரண்டொளிகளையும் பிரிக்கமுடியாது. ஆயினும் காட்டுமொளி காட்டுமொளிதான். காணுமொளி காணுமொளிதான். அங்ஙனம் இரண்டாய்நிற்பதே பேதநிலை. சூரியன் போல்பவன் சிவன். கண்போல்வது உயிர்.

பேதாபேதம், உடனாதல், அறிவொளி

கண்ணுக்குப் பார்க்குஞ் சத்தியுண்டு. பார்க்குஞ் சத்தி யாவது பார்வை. சாத்திரம் அதனைக் கண்ணொளியென்னும். ஐம்புலன்களில் ஒன்றாகிய ஒளியென்பது அது. உயிருக்கு அறியுஞ்சத்தியுண்டு. அறியுஞ்சத்தியாவது அறிவு. சாத்திரம் அதனை ஆன்மபோதமென்னும். ஐம்புலன்களுள் அஃதொன்றா காமைகாண்க. பார்வை கெட்டவனிடமும் அவ்வறிவிருக்கிறது. பார்வையிருந்தும் கேள்வி முதலியவற்றில் அவ்வறிவு செல்லும் போது பார்வையில்லாததுபோலாகிறது. ஆகலின் பார்வையும் அறிவும் வெவ்வேறென்பது சித்தம். அங்ஙனமாக எதிர்ப் பட்டபொருளைக் காண்பது பார்வையா ? அறிவா? பார்வையை அறிவு தானாக்கி அப்பொருளிற்படவேண்டும். அப்போதுதான் அப்பொருள் காணப்படும். அதனைப் பார்வை விடயித்தது அல்லது அறிவு விடயித்தது என்று பிரித்துச்சொல்லமுடியாது. கண்ணொளிக்கு ஆன்மபோதம் உடனாயிருந்து அப்பொருளைக் காட்டிக் காண்கிறது. அப்படிச் சிவன் உடனாயிருந்து உயிருக் குக் காட்டிக் கண்டு வருவதே பேதாபேத நிலை. ஆன்மபோதம் போல்வது சிவசத்தி. கண்ணொளி போல்வது ஆன்மபோதம்.

சிவன் அங்ஙனம் கலப்பால் உயிர்களில் அபேதமாயும், பொருளால் உயிர்களுக்குப் பேதமாயும் உடனாதலால் உயிர்க ளோடு பேதாபேதமாயும் நிற்கிற அதியற்புத நிலையையே அத்வைதமென்ற சொல் தனக்குத் தாற்பரியப்பொருளாகக் கொண்டது. அதனையே சித்தாந்த சைவம் அவையேயாதல், தானேயாதல், அவையேதானேயாதல் என விளக்கியது. அந் நிலை அனாதிநித்தமென்பதும் அறியப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயிருக்கு அவ்வத்வைத நிலையில்லை

அவ்வத்வைதநிலை பிரமத்தின் இலக்கணம். சிவனொருவனே பிரமம். ஆகலின் அவனே அங்ஙனம் நிற்றல்கூடும். அவனல்லாத பிற சேதனங்களெல்லாம் உயிர்கள். அவற்றிற்கு அந்நிலையில்லை. ஆனால் கிருஷ்ணன் உபமந்யு முனிவரிடம் சிவதீக்ஷை பெற்றுச் சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொண்டான். அதனால் அவன் தன்னையுந் தலைவனையும் உணர வல்லனானன். அவனுக்குச் சிவோகம்பாவனை கைவந்தது. 'யானே உலகெல்லாம்' என்றும், விசுவரூபத்தைக் காட்டி 'ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக' என்றும் அவன் கீதையில் கூறியது அச்சிவோகம்பாவனையாலேயாம். ஆகையால் அந்த 'யானே' 'என்னையே' என்பன 'சிவனே', 'சிவனையே' என்ற பொருளில் முடிந்தன. அவன் காட்டிய விசுவரூபமும் சிவனுடையதே. 'பரமம் ரூபம் ஐச்வரம்' என்றது கீதை. ஈசுரனுக்குரிய விசுவரூபம் என்பது அதன்பொருள். ஐச்வரம் - ஈசுரனுக்குரியது. ஈசுரன் - சிவன். கீதையை உபதேசித்தவன் கிருஷ்ணன். கேட்டவன் அருச்சுனன். அவனொருவனே சீடனாயிருந்தான். கிருஷ்ணன் சன்னிதியில் கீதையைக் கேட்க இரண்டாவது சீடன் கிடையாது. ஆகலின் அருச்சுனனொருவனே அக்கீதோபதேசத்தை அனுட்டானத்திற் கொண்டு வரவேண்டும். அவன் கொண்டும் வந்தான். அவன் மரணபரியந்தம் அனுட்டித்ததென்ன? சிவபூசையே அவனுக் கனுட்டானமா யிருந்துவந்தது. அவனுடைய அனுட்டானமே கீதைக்குச் சத்தியமான வியாக்கியானமாகற்பாலது. கீதையை உபதேசித்தவன் கிருஷ்ணன். அதில் உபதேசிக்கப்பட்ட பொருள் சிவபரத்துவம். அதைக்கேட்டு உய்ந்தவன் அருச்சுனன். ஆகவே அவையேதானே யாதலாகிய அத்வைதநிலை சிவனுக்கேயுண்டு. கிருஷ்ணன் உள்பட எவ்வுயிர்க்குமில்லையென்பது தெளிக. உயிர்கள் எப்போதும் அடங்கிய அத்வைத நிலையின. முதல்வன் எப்போதும் அடக்கிய அத்வைதநிலையினன்.

சுத்தாத்வைதமே வைதிகம்

பதஞ்சலியார் சாதிருசியப் பொருளை முதற்கண்வைத்து மதித்தும், அபாவப் பொருளை இரண்டாமிடத்தில் வைத்துக் கழித்தும் போந்தார். அதன் காரணமென்னை? அவ்வபாவக் காரரே கூறுக. சாதிருசியப் பொருள்கொண்ட அத்வைதம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாகமிகம். சிவாகமங்கள் வேதத்துக்குப் பாஷ்யம் போல்வன. ஆகலின் வேதமும் அப்பதத்துக்கு அப்பொருளையே கொண்டதாயிற்று.

> 'நிரஞ்சந: பரமம் ஸாம்ய முபைதி' (முண்) என்றது வேதம்.

அதற்குத் தமிழ்

> 'இவ்வித சீவன்முத்தன் மலநீக்க முடையவனாய்ப் பரம சாமியத்தை யெய்துகின்றனன், ... இவ்வொப்பு அன்மை யெனப்படுதல் எங்ஙனமாமென்னின், - க்ஷத்திரியனாக வேனும் வைசியனாகவேனுமுள்ள வொருவன் யஞ்ஞோ பவீதந்தரித்துப் பிராமணகன்மங்களைச் செய்யுமிடத்து அவன், பிராமணன் அல்லன் பிராமணனுக்கு ஒப்புளோனான அப்பிராமணன் எனப்படுமாறு, சீவான்மாவும் யோகஞான விளக்கமுற்றஞான்று பரமான்மாவே அன்று, அப்பரமான்மாவின் சர்வஞ்ஞத்துவம் முதலிய கலியாண குணங்களை அஃதடைந்து அதனை யொத்திருக்குமென்றுரைக்கப்படும்; அங்ஙனமே யாமென்க. இந்த அன்மைப் பொருளே வைதிக சைவ சித்தாந்தத்திற் கொள்ளப்படுவதாயிற்று' (பரி 129)

என்பது. சாமியம், சதிருசம், சமத்துவம் என்பன அன்மையே.

அவ்வன்மைப்பொருளிற்றான் அவ்வத்வைத பதம் வேதத்திலுள்ள அபேத பேத பேதாபேதமாகிய - மூவகை வாக்கியங்களையும் அவற்றின் தரங்கெடாமல் சமந்வயப்படுத்திப்பொருள் கண்டு வேதமுழுவதையுமே சமப்பிரமாணமென அங்கீகரிக்க முடியும். ஆகலின் அவ்வத்வைதமே சம்பூர்ண வைதிகமென்க. கேவலம், விசிட்டம் முதலிய அடைசேரா அத்வைதம் சங்கரர் இராமானுஜரின் கொள்கைகளை ஏற்கவேமாட்டாது. வேதத்துக்குப் புறம்போன அவராராய்ச்சி நூல்களே அவற்றுக்குப் பிரமாணமாகலாம். ஓரடையுமின்றி அப்பதம் சாதிருசியப் பொருளையே தரவல்லது. அதனால் அவ்வத்வைதம் சுத்தாத்வைதம் எனப்பட்டது. சுத்தம் - அடைசேராதது. அடைசேராமையாவது வேறொருசொல்லால் விசேடிக்கப்பட்டுப் பொருள் தரக் கூடிய விதத்தில் நில்லாமை. இதை ஆங்கிலத்தில் Advaitha pure and simple எனலாம். வேதத்தில் கேவலாத்வைதம் விசிஷ்டாத்வைதம் என்ற பிரயோகங்களில்லை. சுத்தாத்வைதமென்ற பிரயோகமேயுண்டு. 'தல்லயாச் சுத்தாத்வைதஸித்தி:' சுத்தாத்வைத ப்ரஹ்மாஹம்', 'சுத்தாத்வைதா ஜாட்யா' என்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டல ப்ராஹ்மணோபநிஷத் காண்க. இந்தச் சுத்தாத்வைதமே சைவ சித்தாந்தத்திற் கொள்ளப்பட்டதாகும்.

ஆனால் மாயாவாதியர் சிலவுபநிஷத் வாக்கியங்களைத் தம் கொள்கைக்கு ஆதாரமாகக் காட்டுவர். அவற்றையுஞ் சிறிதே விசாரிக்கலாம்.

'ஆத்மாவா இதமேக ஏவாக்ர ஆஸீத் நாந்யத் கிஞ்ச நமிஷத்ஸ ஈக்ஷத லோகாந் நுஸ்ருஜா இதி' (ஐத)

என்றது ஒன்று. இவ்வுலக சிருட்டிக்கு முன் ஆன்மா ஒன்றே இருந்தது. வேறெதுவுமில்லை. அவ்வான்மா உலகைச் சிருட்டிக்க வேண்டுமெனப் பார்த்தது என்பது அதற்கருத்தம். ஆன்மா - பிரமம். கருப்பஸ்திரீயைக் குறித்து 'இவள் ஒருத்தியேயிருக்கிருள்' என்பது போன்றது அவ்வாக்கியம். கருவிற் சிசுவுமிருப்பதைக் கருதுக. அப்படியே அப்பிரமத்தினிடத்திலும் சகசீவன்கள் அடங்கியிருக்கின்றன என்பது தாற்பரியம். அவ்வுண்மை,

'தஸ்மிந்நேவாகிலம் விச்வம் ஸங்கோசித படவர்த்ததே' (பைங்)

என்றதால் தெரியவரும். அவனிடத்திலேயே எல்லாப் பிரபஞ்சமும் சித்திரபடம் சுருட்டப்பட்டமைபோல அடங்கியிருக்கிறது என்பது அதற் கருத்தம்.

அம்மதவாதருக்குக் கயிற்றரவுத் திருட்டாந்தம் மிகப்பிடித்தமானது. கானல்நீர், கிளிஞ்சில் வெள்ளி முதலியவும் அப்படிப்பட்டனவே. இத்திருட்டாந்தங்கள் நிராலம்பம், நாதபிந்து, தேஜோபிந்து, கடம் முதலாகவுள்ள சில வுபநிஷத்துக்களில் வருகின்றன.

'ஸர்ப்பாதெள ரஜ்ஜு ஸத்தைவ ப்ரஹ்ம ஸத்தைவ கேவலம் । ப்ரபஞ்சாதார ரூபேண வர்த்ததேதோ ஜகந் நஹி' (ஆத்)

என்றது இன்னொன்று. கயிற்றிலுண்டாம் பாம்புத்தோற்றம் போலப் பிரபஞ்சாதாரப் பிரமசத்துமாத்திர மிருக்கின்றதாதலிற் சகத்தில்லை என்பது அதற்கருத்தம். அவர்கருத்துப்படி அதிஷ்டானம் பிரமமும் ஆரோபம் சகசீவ பரங்களுமாம். அதிஷ்டானம் உள்ளவன்றே ஆரோபங்களும் இருந்தேதீரும். ஆரோபங்கள் இடைப்பட்டதேல் காரணம் வேண்டும். அவரால் அது கூறமுடியாது. ஆகலின் சக சீவ பரங்களும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அநாதி நித்த மென்பது சித்தம். அது பதி பசு பாசங்களை அநாதிநித்தமெனச் சொல்லாமற் சொன்னதாகும்.

'ஏவம் மயி சிதாகாசே ஜீவேசௌ பரிகல்பிதௌ' (வரா)

என்றது பிறிதொன்று. சிதாகாசமாயுள்ள என்னிடத்தில் சீவன் ஈசன் என்பார் கற்பிக்கப்பட்டிருக்கின்றனர். அன்னோர் உண்மையிலிலர் என்பது அதற்கருத்தம். அதுவே

'மாயாதத் கார்ய விலயே நேச்வரத்வம் நஜீவதா'

என்றும் சொல்லியது. மாயையும் அதன் காரியமும் இலய மடைந்திடின் ஈசுரத்துவமுமின்று, சீவத்துவமுமின்று என்பது அதற்கருத்தம். முன் வாக்கியத்துள்ள ஈசன், சீவன் என்ப வற்றுக்குப் பின் வாக்கியத்துள்ள ஈசுரத்துவம். சீவத்துவம் என்பன விளக்கம். ஆதலின் ஈசனில்லை, சீவனில்லை யென்பன ஈசுரத்துவமில்லை, சீவத்துவமில்லையென்னும் பொருளுடைய வாகும். ஈசுரத்துவமும், சீவத்துவமும் எப்போது இல்லாமற் போம்? மாயையும் அதன் காரியமும் இலயமடைந்தபோது என்பது அதற்கு விடை. அப்போது ஈசுரத்துவம் ஒடுங்குவது இயல்பே. ஈசுரத்துவம் - ஈசுரனது தொழில்செய்யும் ஆற்றல். மேல் ஈசனிலன் என்பதற்குப் பொருளும் அவ்வளவே. சீவத் துவமாவது சீவபோதம், அதாவது சீவசுதந்தரம். அஃதியங்கு வது வினைவழியாம். அதனைப் பிரேரிப்பது ஈசுரகிருத்தியம். அஃதில்லையானல் அப்போதம் சீவியாது. கருவிகளுமியங்கா. சீவனிலன் என்பதற்குப் பொருளும் அவ்வளவே.

ஆகவே கயிற்றரவுத் திருட்டாந்தத்திலுள்ள கயிற்றுஸ்தா னத்தில் பிரமத்தைவைப்பது சரியன்று. பிரமம் வியாபகம், ஆதாரம். மாயை வியாப்பியம், ஆதேயம். பிரமமில்லையாயின் மாயை சேட்டியாது. சேறில்லையாயின் கிழங்கிலிருந்து தாமரை முளையாது; அதுபோலும். பிரமத்திற் பிரபஞ்ச முண்டாயிற் றென்னுஞ் சுருதி சேற்றில் தாமரைமுளைத்தது என்பது போன் றது. அம்முறையிற் கயிற்றரவுத் திருட்டாந்தத்தைக் கொள்ள வேண்டும். சேற்றுஸ்தானம் பிரமத்துக்குப் போய்விடும். கயிற்றுஸ்தானம் கிழங்கிற்காம். கிழங்காவது மாயை. தாம ரையோ பிரபஞ்சம். அதற்குத் தானம் அவ்வரவு.

'ஆத்மஜ்ஞாந ம்ருதேந விநச்யத் யாத்ம ஸந்நிதௌ நித் யத்வேந, ப்ரதீயதேச மூலாவித்யேயத் யாத்மோபாதிர் யஸ் ததேவ லிங்க, சரீரபீஜக் ஹ்ருதயக்ரந்தி ரித்யுச்யதே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தத்ப்ரதிபலிதம் சைதந்யம், யத் ப்ரகாசதே ஸக்ஷேத் ரஜ்ஞ:' (ஸர்வ)

என்றது வேறென்று. ஆன்மஞானத்தானன்றி நசியாததும், ஆன்ம சன்னிதியில் நித்தியத்துவமாகக் காணப்படுவதும், ஆன்மோபாதியாயுளதுமான மூல அவித்தை எதுவோ அதுவே இலிங்கசரீர பீஜம்; இருதயக்கிரந்தி யெனப்படுவதும் அதுவே. அதனிற் பிரதி பலித்துப் பிரகாசிக்கின்ற சைதன்னி யந்தான் க்ஷேத்ரஜ்ஞன் என்பது அதற்கருத்தம். இலிங்கசரீர மாவது சூக்குமதேகம். அதற்குப் பீஜமாயிருப்பது அவித்தை. அதுவே இருதயகிரந்தி. அதுவே காரணதேகம். அத்தேகி பசு. அப்பசுவிலுள்ளது ஆணவமலம். அம்மலத்தையும் அக் காரண தேகத்தோடு இணைத்துக்கூறி அத்தேகத்தில் பிரதி பலித்துப் பிரகாசிக்கும் பசுவாகிய சைதன்யம் க்ஷேத்ரஜ்ஞன் எனப்பட்டது. காரணதேகத்தின் உள்ளந்தக் கரணமாவது புருடதத்துவம். அதுவே பிரதிபலித்தற்கு உரிய இடம். சீவான்மா நுகர்ச்சியின் பொருட்டுத் தன் வினையளவாகப் பிரவேசித்துப் புருடதத்துவமாய் நிற்றலே பிரதிபலித்தலெனப் பட்டது. க்ஷேத்ரஜ்ஞன் - சீவான்மா. பிரமபிம்பத்தின் பிரதி பிம்பமே சீவன் என்பது அப்பொருள்கோளால் மறுக்கப் பட்டது காண்க.

'எரிந்துகொண்டிருக்கிற அக்கினியிலிருந்து அதேரூப மாய் அநேக பொறிகள் எப்படி உண்டாகின்றனவோ, அப்படியே அக்ஷர (பிரமம்) த்திலிருந்து பலவித தேகத்தை யுபாதியாயுடைய ஜீவர்கள் உண்டாகின்றார் கள்' (து - வா 38)

என்கிறது முண்டகோபநிஷத்து. இதற்குத் தாற்பரியங் கூறும் போது சிலந்திப்பூச்சியை உதாரணமாகக்கொள்க. சிலந்திப் பூச்சியின் உடம்பிலிருந்து வரும் நூல் சிலந்திப் பூச்சியி னிடத்திலிருந்து வருகிறதெனவும், அவ்வுடம்பில் ஒடுங்கும் நூல் அப்பூச்சியில் ஒடுங்குகிறதெனவும் சொல்லப்படும். அப் பூச்சியின் உடல் வேறு. உயிர் வேறு. உயிர் உடற்கு ஆதாரம். அப்படியே பிரமத்தை ஆதாரமாகக்கொண்ட மாயையிலிருந்து சிருட்டிக்காலத்தில் சரீரங்களை யெடுத்துக்கொண்டு சீவன்கள் சஞ்சரிக்கும். அதையே பிரமத்திலிருந்து தெறித்துவிழும் பொறிகளெனச் சொன்னதாகும். சங்காரத்தில் அச்சீவ சரீரங் கள் அம்மாயையி லொடுங்கும். அவ்வொடுக்கம் பிரமத்தில் நிகழ்வதாகச் சொல்லப்படும்.

முத்தியிற் பெறுவானாகிய ஆன்மாவும், பேறாகிய பேரானந் தமும் இல்லையென்பது அவர்மதம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'தமாத்மஸ்தம் யேநு பச் யந்தி தீராஸ்தேஷாம்ஸுகம் சாச்வதந் நேதரேஷாம்' (கடோ)

என்றது வேதம். (ஈசானனுகிய) அவனை எத்தீரர்கள் ஆன்மாவிலிருப்பவனுக அறிகின்றூர்களோ அவர்கட்கு நித்தியமான சுகமுண்டு; ஏனையோர்க் கின்று என்பது அதற்கருத்தம்.

'ப்ரசந்நாத்மாத்ம நிஸ்தித்வா ஸுக மவ்யய மச்நுதே' (மைத்)

என்றது இன்னொரு வசனம். தெளிவுற்ற ஆன்மா ஆன்மாவிலிருந்துகொண்டு நாசமில்லாத சுகத்தை யடைகின்றனன் என்பது அதற் கருத்தம்.

'கர்த்ருத்வாதி து:க நிவ்ருத்தித்வாரா நித்யாநந்தாவாப்தி: ப்ரயோஜநம்பவதி' (முக்)

என்றது வேறொரு வசனம். கர்த்திருத்துவம் முதலிய துக்க நிவிர்த்திவாயிலாக நித்தியானந்தப் பிராப்திதான் பிரயோஜனம் என்பது அதற்கருத்தம். முத்திச் சுகமோ சிவசுகம். அது நித்யம். அதை நுகர்வது முத்தான்மா. அவ்வான்மாவும் நித்தமே. அவ்வசன சமுகத்தால் அவ்வுண்மை விளங்கும். மாயாவாதருக்கு வேதத்தில் எப்பகுதியும் ஆதாரமாதலில்லை. பரிபூரணனந்தபோதம், தகராலய ரகசியம் முதலிய நூலுரைகள் பாம்பன்சுவாமியாலியற்றப்பட்டன. அவ்வுரைப்பகுதியில் அவர் வழங்கியுள்ள வேதவசனங்கள் பலப்பல. மாயாவாதபரம்போலுள்ள அவ்வாக்கியங்கள் சிலவற்றைத் தாலிபுலாக நயம்பற்றியெடுத்து அவையெல்லாம் சித்தாந்தசைவ பரமானவையே யாமெனத் தெளிபொருள் காட்டி விளக்கியிருக்கிறுரவர். இங்கே காட்டியவற்றையும், மேலும் வேண்டுவனவற்றையும் அங்கே காணலாம்.

தடைவிடைகள்

சித்தாந்த சைவக் கொள்கைகள் பல. அவை பல திருட்டாந்தங்கள் மூலம் விளக்கப்பட்டிருக்கும். அத்திருட்டாந்தங்களெல்லாம் வழுவுடையனவெனக் காட்டவேண்டுமென்பது மாயாவாதியருக்காசை. திருட்டாந்தங்களிற் குற்றமிருந்தால் அவை தாட்டாந்திகங்களை விளக்கா. பிறர் கூற்றை மறுக்கு முறைகளில் அவர் காட்டுந் திருட்டாந்தங்களையே குற்றங் காட்டி மறுப்பதும் ஒன்று. நானும் இந்நூலின் முற்பகுதியில் அவரை அவ்வாறே மறுத்திருக்கிறேன். ஆனுல் அம்மறுப்புக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிசைந்தவகையில் அவர் திருட்டாந்தங்களேயோ, தாட்டாந் திகங்களேயோ நான் திரித்துக்கொள்ளவில்லே. என் மறுப்பைப் படிப்பவர் ஆராய்ந்து அவ்வுண்மையைக் கண்டுகொள்க. அப்படியே மாயாவாதரும் மறுக்கலாம். அது நல்லதே. வாதி பிரதிவாதிகள் உண்மை தெரிவதற்கு அது உறுதுணேசெய்யும். அவர் மறுப்பு நூல்களே நான் மிகக்கூர்ந்து படித்தேன். சைவ சித்தாந்தம் காட்டும் ஒவ்வொரு திருட்டாந்தத்தையும் அவர் பல பக்கங்களெழுதி மறுத்திருக்கிருர். உவமான இலக்கணம் இது. உவமானம் உவமேயத்தில் இன்னவிதமாய், இன்ன அளவிற் பொருந்தவேண்டும் என்ற விளக்கங்களுக்கும் அந் நூல்களில் குறைச்சலில்லே. ஆயினும் என்? அவர் செய்துள்ள மறுப்புக்களில் அவ்விளக்கங்கள் அவராலேயே மீறப்பட்டன. ஒரு பானேச் சோற்றுக்கு ஒருசோறு பதம் என்ற நியாயப்படி நான் இங்கு அவற்றுட் சிலவே காட்டுகிறேன்.

கண்ணொளி

கண் இருளும் ஒளியும் அல்லாதது என்பது சைவசித் தாந்தம். ஆயினும் அதன் பயப்பாட்டுப் பகுதியைநோக்கி அதற்கு ஒளியுண்டு என்பதை அம்மதம் மிகுத்துச் சொல்லும். ஆனல் கண்ணுக்கு ஒளியில்லே. அஃது இருளுடையது என்பது மாயாவாதம்.

> 'கண் ... இயற்கைக்குணம் இருளா? ஒளியா? இருளென்றே சொல்லவேண்டும்' (து - வா 26)

என்றது காண்க. கண்ணுடி போன்றதொரு பொருள் கண் மணியிலுண்டு. உலகப் பொருள்கள் அதில் பிரதிபிம்பிக்கும். அப்பிரதிபிம்பத்தையே சில நரம்புகள் மூளேக்கு அறிவிக்கும். மூளே அப்பொருளிருப்பதை அறியும் என்பது அவர் முடிவு. அது தவறு. என்னே? கண்ணுடியில் விழுகிற பிரதி பிம்பம் கண்ணுடிக்குப் பின்புறம் போகாது. முன்புறத்திற்ருன் அது தெரியும். அங்ஙனமாக அப்பிரதிபிம்பத்தைக் கண்ணுக்குப் பின்புறமுள்ள நரம்புகள் மூளேக்கு எப்படி அறிவிக்கும்? கண்ணுடிக்கு முன்னுள்ள பொருள் கண்ணுடிக்குப் பின்புறமுந்தெரியும். ஆனல் அது பிரதிபிம்பமன்று. அப்பிம்பமே அதாவது பொருளே கண்ணுடி வழியாய்ப் பின்புறந் தெரிவதாகும். அப்பிம்பத்தைத்தான் அந்நரம்புகள் மூளேக்கு அறிவிக்கும். அப்படிச் சொல்வதே பொருத்தம். ஆகலின் கண் பிம்பத்தைப் பார்க்கிறதேயன்றிப் பிரதிபிம்பத்தைப் பார்க்கவில்லேயென்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொறிகள் ஐந்து. அவற்றுள் காது ஓசையைக் கேட்கிறது, பிரதியோசையென வொன்றிருந்து அதனைக்கேட்கவில்லை. மூக்கு நாற்றத்தை மோக்கிறது, பிரதிநாற்றமென வொன்றிருந்து அதனை மோக்கவில்லை. நாக்குச் சுவையைச் சுவைக்கிறது, பிரதிச்சுவையென வொன்றிருந்து அதனைச் சுவைக்கவில்லை. மெய் ஊற்றை உறுகிறது, பிரதியூறென வொன்றிருந்து அதனை உறவில்லை. அந்நான்கு பொறிகளும் அங்ஙனம் தத்தமக்குரிய புலன்களையே நேரில் கிரகித்துவரும்போது கண்மாத்திரம் பிம்பத்தைக் கிரகியாமல் பிரதிபிம்பத்தைக் கிரகிக்கிறதென்பது சரியன்று. அதுவும் மற்றைப் பொறிகள் போல பிம்பத்தைத்தான் நேரே கிரகிக்கிறது.

> 'கணாத முனிவரும் கௌதம முனிவரும் (க) தேஜோரூப ஸ்பர்சவத்(உ) அநேக த்ரவ்ய சமவாயாத் ரூப விசேஷச்சரூபோ பலப்தி என்று அருளிய சூத்திரங்களாலும், அவ்விருநியாய வைசேஷிக டீகா ஆக்கியோர்களாலும் கண்ணுக்கு ஒளியுண்மை ... விளக்கப்பட்டிருக்கிறது. பூனை கோட்டான் முதலியவற்றிற்கு இராப்போதிற் கட்பிரகாசமுண்மை பின்ன பின்ன தேசோ விசேஷங்களாமென்றுணர்த்தற்குக் கௌதம முனிவர் இராப்போதில் இராக்ஷசனுக்குக் கட்பிரகாசவுண்மைவிளக்கி, நக்தஞ்சர நயந ரச்மிதர்சநாச்ச என்று சூத்திரித்தார்...தாம் இயற்றிய தர்க்க காரிகாவளியிற் போந்த இந்திரியம் நயநம் என்ற மூலத்துக்குக் கண் ஒளியுடைப் பொருளாமெனப் பொருள்பட சட்சுஸ்தைஜஸம் என்று சித்தாந்த முக்தாவளி வியாக்கியான வாயிலாக விதந்துரைத்தார். இங்ஙனம் கண்ணுக்கு ஒளியுளதாதல் இருஷிகளாலும் மற்றைத் தார்க்கீகர்களாலும் அங்கீகரிக்கப்பட்ட தொன்றும்' (து - ம 10)

> 'சங்கராசாரியர் ஒளியுடைப் பொருளன்றே கண் எனப் பொருள்பட தைசசம் கி சட்சு என்று சுருதி பாஷியத்தில் கூறியிருப்பாராக ...' (து - ம 58, 59)

எனச் சைவசித்தாந்தம் தன் கொள்கைக்கு ஆதரவு காட்டியதாக அவரே எடுத்துக்காட்டினார். ஆனால்கண்ணுக்கு இயற்கையில் ஒளியில்லை. கண்ணொளி செயற்கையொளியேயென்பதுதான் அவ்வாக்கியங்களின் கருத்தென அவர் சமாதானங் கூறினார். அதற்குப் பிரமாணம் வேண்டும். அவர் காட்டவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'கண் தனியேயிருக்கும்போது இருளாயும் ஒளியோடு சேர்ந்தபோது ஒளியாயும் இருக்குமானால் அதனுண்மையான இயற்கைக்குணம் ... ... இருளென்றே சொல்ல வேண்டும்' (து - வா 26)

என்றாரவர். அதில் கண் ஒளியோடு சேர்ந்தபோது ஒளியாயிருக்குமென்ற சைவசித்தாந்தவுண்மையை அவர் ஒத்துக் கொண்டவரானார். கண் தனியேயிருக்கும்போது இருளே, ஆதலால் இருளாயிருப்பதே அதன் இயற்கையென்றதே அவர் பாலுள்ள தவறு. ஏன்? பிரபஞ்சம் ஒளியோடிருக்கும் அல்லது இருளோடிருக்கும். அவ்விரண்டுமில்லாத நிலை அதற்கு எப்போதுமில்லை. ஆகலின் கண் ஒளியிலிருக்கும்போது அவ்வொளி சேர்ந்து ஒளியாவதுபோல் இருளிலிருக்கும்போது அவ்விருள்சேர்ந்து இருளாயிருக்குமென்பதே உண்மை. இருளையும் ஒளியையும்விட்டுத் தனியேயிருக்கும் நிலை கண்ணுக்குக் கணநேரமுங் கிடையாது. ஆகலின் கண்ணுக்கு இருள் இயற்கைக்குணமன்று.

ஒளி இருள்

தேயு ஒரு பூதம். அது ஒளிப்பொருளென்பது சர்வமத சம்மதம். ஆனால் இருளென்பதென்ன? ஒளியின்மையே இருளென்பர் ஒருசாரார். மாயாவாதரும் தேயுவினது ஒளியின் அபாவமே இருளென்று ஓரிடத்திற் சொன்னார்.

'தேயுவாகிய வொளியினதபாவமே இருளென யாமும் பலமுறை கூறியிருக்கின்றோம்' (து - ம 31)

என்றது காண்க. அபாவம் - இன்மை. அவரே மற்றோரிடத்தில் ஒளியும் இருளுமே தேயுவின் குணமென்றார்.

'இருளென்பதும் ஓர் ஒளியே' (து - ம 27)

'தேயுவின் குணம் ஒளியும், இரு (குறைந்த வொளி) ளுமாமென்பது முடிபாம்' (து - ம 27)

'பிரகாசம் அதிகப்பட அதிகப்பட ஒளியென்றும், குறையக்குறைய இருளென்றும் சொல்லப்படும்' (து-வா 119)

என்றது காண்க. குறைந்த ஒளியே இருளென இருளுக்கு விளக்கஞ் செப்பினரவர். அங்ஙனமாயின் குறைந்த ஒளியையே ஒளியின் அபாவமென அவர் சொன்னதாகத் தெரிகிறது.

அக்குறைந்த ஒளியையும் அவர் வகைப்படுத்தினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'1 சித்திரை வைகாசி மாசங்களில் மேக சஞ்சாரமில்லாத பகல் பதினைந்து நாழிகைக்கு இருக்கும் ஒளியைப் பார்க்கிலும். 2 சற்று மப்பாயிருக்கும் அதேகாலத்தில் ஒளி சற்றுக் குறைச்சலாயிருக்கின்றது. அந்தக் குறைந்த பாகம்வரையில் கிஞ்சித்து இருளேயாம். 3 அதைவிட இராக்காலத்துப் பூரண சந்திரோதயத்தில் ஒளி இன்னுங்குறைந்து, குறைந்த பாகத்துக்கு இருள் அதிகப்படுகின்றது. 4 மூன்றும் பிறைக் காலத்து இன்னும் ஒளி குறைந்து அவ்வளவுக்கு இருள் ஏறுகின்றது. 5 சந்திரனேயில்லாது நக்ஷத்திரங்கள் மாத்திரம் பிரகாசிக்குங்காலத்து ஒளி பின்னும் குறைந்து இருள் பின்னும் அதிகப்படுகின்றது. 6 அந்நக்ஷத்திரங்களையும் மேகம் மறைத்திடுங்கால் இன்னும் ஒளி குறைந்து இருள் இன்னும் அதிகப்படுகின்றது. 7 ஆருவது நிலையான இருட்காலத்தில் இமயமலைபோன்ற பெரிய மலையினுட்பாகத்தினிடையில் குகையும் கதவுமிருந்து அந்தக் கதவை மூடிவிடுவோமாயின், அக்குகையினுள் ஒளி இன்னும் வெகு அதிகமாய்க் குறைந்து, குறைந்த அளவுக்கு அவ்வளவு இருள் அதிகப்படும். இந்த ஒளியும் இருளும் ஒன்றைநோக்க ஒன்று ஏற்றக்குறைச்சலாய் இருக்கின்றனவேயன்றி, மற்றப்படித் தனியேயெடுத்து இதுதான் ஒளி, இதுதான் இருளெனச் சொல்வதற்கிடனின்று. சூரியனில்லாதகாலம் இருளெனச் சொல்லப்படுமாயினும் அந்த இருளிலும் ஒளியும் இருளுமுள்ளன. ஷ ஏழாவதிலக்கத்திற் காட்டிய மலைக்குகையிலுள்ளதை நோக்க மேகமில்லாத இரவு நட்சத்திரகாலமும், சந்திரகாலமும், தீபகாலமும் ஒளியுள்ள காலங்களாயினும் மொத்தத்தில் சூரியனுள்ள பகற்காலத்துக்கு அவை இருட்காலங்களேயாம். மிக உயர்ந்த குணத்துக்குச் சூரியனை வைத்து ஒளியென்றும், மிகத் தாழ்ந்த குணத்துக்குக் குகையை வைத்து இருளென்றும் முடிவாகச் சொல்லினும் இதற்கு மத்தியில் சந்திரன், நக்ஷத்திரம், தீப முதலியவைகளை வைத்து, அவ்வப்போது அதற்கியைய ஒளியென்றும், இருள் என்றும் சொல்லிக் கொள்ளுகின்றோம்' (து - ம 27)

என்றது காண்க. அத்தனை ஒளிக்குறைகளும் ஒளியின் அபாவந்தானு?

மேலும் தேயுவென்பது சூரியன், சந்திரன், உடுக்கள், விளக்கு முதலியவையே. அவை தேயுவின் தடிப்புக்களாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவற்றுள் சூரியனைமாத்திரம் இங்கு எடுத்துக்கொள்க. எந்தக் காரணங்கொண்டும் அதனொளி கூடுதலுங்குறைதலுமில்லை. என்றும் ஒருபடித்தாய்ப் பேரொளியாயிருப்பதது. ஆதலால் சூரியன் ஒளிப்பொருளென்றே எப்போதுஞ்சொல்லப்படும். அது குறைந்த வொளியுடையதாகி இருட்பொருளென யாண்டுஞ் சொல்லப்படாது. மேக முதலியவற்றாலெல்லாம் அவ்வொளி நம் கண்ணுக்கே குறைந்து காணப்படுகிறது. இராப்போதும் மலைக்குகையும் சூரியன்முன் இல்லை. அப் போதும் அவ்விடத்தும் இருள் வருகிறது. இருளும் சூரியனது குணமாயின் சூரிய சந்நிதியிலேயே வேறு பிரதிபந்தகமின்றி அவ்விருள் வருதல்வேண்டும் அஃதில்லை.

ஒளியும் இருளும் மாறுபட்டவை என்பது சைவசித்தாந்தம். அவர் அதை மறுத்து அவ்விரண்டும் ஒன்றேயென்றார். இரு ளும் ஓரொளியேயென்றால் ஒளியும் இருளும் ஒன்றென்பதே கருத்து. ஒளி அதிகப்பட அதிகப்பட ஒளியென்றும், குறையக் குறைய இருளென்றும் சொல்லப்படுதற்கும், இருள் அதிகப்பட அதிகப்பட ஒளியென்றும், குறையக் குறைய இருளென்றும் சொல்லப்படுதற்கும் வித்தியாசமில்லை. ஆகலின் இருளின் மிகுதியே சூரியனெனச் சொல்வதும் அவருக்குச் சம்மதமாதல் வேண்டும். அப்படித்தானா? இன்னும் அவர்

> ‘விளக்குக்கு ஒளி சொரூபகுணம்; அது ஒருபோதும் நீங்காது. நீங்குமாயின் முதலே அதாவது விளக் கென்னும் பொருளே இல்லாமற்போம்’ (வே - தீ 59)

> ‘ஒளியென்பது ஓர் பொருளின் குணம்...குணம் குணியி னிடத் திருக்குமேயன்றித் தனித்திராது’ (து-வா 29)

> ‘குணம் குணியைவிட்டுப் பிரியாது’ (மு - மை 12)

என்றார். ஒளி நீங்கினால் விளக்கும் போவதுபோல் விளக்கு நீங்கினால் ஒளியும்போம் என்பது அவருக்கும் உடன்பாடு. அப்போனநிலைதான் இருள். அது குறைந்தவொளியாவதும், அக்குறைந்த வொளி விளக்கின் குணமாவதும் எப்படி?

பொருள் விகாரியாமல் அதன் குணத்தில் கூடுதல் குறை தல் முதலிய விகாரங்கள் நிகழா. தேயுவுக்கும் அதுவே விதி. இருளில் தேயு எப்படி விகாரிக்கிறது?

இருள் மறைப்பது. ஒளி விளக்குவது. மறைப்பதும் விளக் குவதும் எதிர்மறைகள். ஒளி குறைவுற்று இருளாகி மறைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கவுஞ்செய்யுமெனின் ஒளிக்கு மறைக்கும் செயலும் உண்டென்ன வரும். ஒளி மறைக்கவுஞ்செய்யுமா ?

இருள் ஒளியை (சூரியனை) மறையாது. ஒளி இருளை விளக்காது. இருளும் ஒளியும் தம்முள் வேறுவன. இருள் மறைப்பதும், ஒளி விளக்குவதும் கண்ணையேயாம். இருளுண்மையைச் சிவஞான மாபாடியத்துட்காண்க.

பால் நீர்

பாலும் நீரும் கலப்பதுபோலும் என்பது ஒரு திருட்டாந்தம். அதைக் கண்டிக்கப்புகுந்த அவர்

> 'நீரும் பாலும்போலெனச் சுருதியாதிகளில் உவமானஞ் சொல்வதுண்டு. ஆனால் அது ஏகதேச உவமையாகும். முற்றுவமையானால் ...... (து - வா 65, 66)

என்றார். உவமைகளெல்லாம் ஏகதேசமே. அதை எல்லாருமறிவர். அவ்வுவமை சுருதியிலுண்டென அவருஞ்சொன்னார். அச்சுருதியின் நோக்கமறிந்து அவ்வுவமையை ஏற்கவேண்டியது நியாயமே. அதைவிட்டு 'முற்றுவமையானால்' என்றெடுத்துக்கொண்டு பக்கம் பக்கமாய் எழுதி மறுப்பது முறையா? முற்றுவமை என்பதேயில்லை.

சொற்பொருள் பேதாபேதம்

சொல்லுக்கும் பொருளுக்குமுள்ள சம்பந்தம் பேதாபேதம் என்பதை அவர் மறுத்தார்.

> 'சொல்லின்கண் பொருள் சத்திருபமாய் அடங்கியிருக்கின்றதெனவும், அதுபற்றியே ஸ்போடமெனப்படும் மத்திமநாதமே சர்வகாரணமெனவும் அதற்கும் பொருளுக்கும் அபேதம் சொல்லவெண்ணித் தாதான்மிய சம்பந்தமுடையதெனவும் நாகேசபட்டர் சொல்லியிருக்கிறார்' (து - ம 7)

> 'எழுத்துக்கும், பொருளுக்கும் அமையக்கூடிய ஆற்றல் எனும் சம்பந்தமே இருத்தல்வேண்டும்'
> (ப் - வி 6 - 15 - 278)

என்றாரவர். சத்திருபத்தில் அதாவது ஆற்றல்வடிவில் சொல்லிலேயே பொருளிருக்கிறது, அதனால் சொல்லுக்கும் பொருளுக்கும் பேதாபேத சம்பந்தஞ்சொல்லாமல் தாதான்மிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தமே சொல்லவேண்டும் என்பது அவர் கருத்தெனத் தெரிகிறதி. ஆனுல்,

‘சொல்லின்கண் பொருள் உண்மையன்று, கற்பனையாம்’ (து - ம 33)

‘சொல்லின்கண் பொருள் அபாவம்’ (து - ம 35)

‘சொல்லின்கண் பொருள் அதனிடத்துள்ள கற்பித மன்று; நம் மனத்தினிடத்துள்ள கற்பிதமேயாம். நமது மனேகற்பனையை நீக்கிவிட்டால் சொல்லின்கண் பொருளிருக்கவே மாட்டாது’ (து - ம 35)

‘சொல்லினிடத்துப் பொருளிருப்பது வாஸ்தவமானுல் அந்தச் சொல்லே அப்பொருளை விளக்கலாமே. அப்படி விளக்கவில்லையே. இதனுல் சொல்லினிடத்துப் பொருளில்லையென்றும், சொல்லுக்குப்புறம்பாக மனத்தின்கண் இருக்கின்றதென்றும் வெளியாகின்றன’ (து - ம 36)

‘சொல்லின் கண் பொருளின்றென்பது திண்ணமா யிற்றே. மனத்தினிடத்தன்றே சொல்லின்பொருள் இருக் கின்றது? அங்ஙனமாகச் சொல்லின்கண் பொருள் பேதமென்றுதல் அபேதமென்றுதல் யாங்ஙனஞ் சொல் லற்பாற்று? ... சொல்ல வியையாதபோது பேதாபேத மென்று சொல்வது கூடுமா? (து - ம 36)

‘சொல் முதலியவற்றில் பொருள் முதலியவை யதார்த்தமா யில்லை. கற்பனையாயிருக்கின்றன. அதிலும் கயிறு முதலியவற்றில் அரவு முதலியன கற்பனையா யிருப்பது போன்றில்லை. சொல்வோர் உள்ளத்திலேயே இருக் கின்றன. அவ்வாறிருப்பவற்றைச் சொல் முதலியவற்றில் ஆரோபித்து, பின் அவற்றிலிருப்பதுபோல் நினைக் கின்றேம்’ (து - ம 38)

என்றும் அவர் சொன்னுர். சொற்பொருள் பேதாபேதமென் பதை மறுத்துத் தாதான்மியஞ்சொல்லவந்த அவர் பொருளைக் கற்பனை, அபாவம் எனக்கூறிக்கழித்தார். அதனுல் தாம்சொல்ல வந்த தாதான்மியம் என்பதும் அவரால் மறுப்புண்டது. சொல்மாத்திரம் எஞ்சியது. அதற்குச் சம்பந்தம் ஏது?

பொருள் தமது மனத்திலுள்ள கற்பனையேயென்றுர் அவர். அக்கற்பனையும் அபாவந்தானே? வேறே? அபாவமாயின், அபாவப்பொருளைச் சொல்லிற் புகுத்தமுடியாது. புகுத்தினுலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லேநிற்கும். வேருயின், சொல்லின் சம்பந்தமின்றி மனம் எதனையேனுங் கற்பிக்கவல்லதா ?

கயிற்றில் கற்பனையரவு இருப்பதுபோல் சொல்லில் கற்பனைப்பொருள் இல்லையென்ருரவர். அக்கற்பனையரவு எப்படி வந்தது? கயிறே அவ்வரவைத் தன்பாற் கற்பித்துக்கொண்டதா? ஆமென அவருஞ்சொல்லார். அதுவும் மனிதனது மனேகற்பனைதான். கயிற்றரவுக் கற்பனையும் சொற்பொருட் கற்பனையும் வேறுபட்டனவாயின் எந்த அமிசத்தில் அவ் வேறுபாடென்பதை அவர் எடுத்துக்காட்டுக; இன்றேல், கயிற்றரவு கயிற்றிலிருப்பதுபோல் சொற்பொருள் சொல்லில் இருப்பதென்பதை உடன்படுக.

அன்றியும் வேதம் சொல்லும் பொருளுமாயிருப்பது. ஆனல் சொல் யதார்த்தம், பொருள் மனேகற்பனையென்பது அவர்வாதத்தாற் போதருகிறது. வேதம் பொருளற்றது என்பதை அது காட்டுகிறது. வேதநிந்தை அதைவிட வேறும் உளதோ?

ப்ரஹ்மம் என்பது சொல். அதன்பொருளை அவர் மனத்தால் கற்பித்தார். அதுவும் அவர் வாதத்தாற் கிடைத்ததே. அஃதாயின் நாத்திகர் அவரைவிட வேருர்?

சொல்லுக்கும் பொருளுக்கும் வரலாறு தெரியாதவரவர். அவர் அவற்றின் சம்பந்தத்தை எப்படி அறிவர்? அந்த வரலாற்றைச் சிவஞானமாபாடியத்திற் காண்க. அவர் நெல்லையிலிருந்து செந்திக்குச் செல்லவிரும்பி மேற்குநோக்கி நடக்கிறவராவார்.

எள் நெய்

எள் நெய் என்பது ஒரு உவமை. இதையும் மறுக்கப் பெரும் பிரயாசை எடுத்திருக்கிருரவர். அவ்வுவமை சுருதி விரோதமாம்.

> 'பூர்வபக்ஷிகள் கற்பித்துக்கொண்ட ஔபச்சிலேஷிக வியாபகம் சுருதி விரோதமாகலின் வைதிகர் ஒப்பாரென்றறிக' (வே - தீ 71)

என்றது காண்க. ஆனல் அவரே பிரமோபநிஷத்திலிருந்து அவ்வுவமையையெடுத்து மற்ருேரிடத்தில் விசாரித்திருக்கிருர்.

> 'பிரமோபநிஷத்து, எள்ளுக்குள் நெய்போலும், தயிரில் நெய்போலும் பிரவாகத்தில் நீர்போலும், அரணியில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்கினிபோலும் இவ்வான்மா, ஆன்மாவினிடத்திலே உண்டாகிறுன் - இவ்வுபநிஷத்தின் எள் நெய் திருட்டாந்தத்தில் ரசமல்லாத திப்பியொழிய ரசமான நெய் கொள்ளப்படுவதுபோலவும், தயிர் நெய் திருட்டாந்தத்தில் அமுக்கியமான மோர் ஒழிய முக்கியமான நெய் எடுக்கப்படுவது போலவும், பிரவாக நீர் திருட்டாந்தத்தில் பிரவாகம் பொருளின்றிப் பொய்யாய்ப்போக நீர் பொருளாயும் மெய்யாயும் மிஞ்சுவதுபோலவும், அரணி அக்கினி திருட்டாந்தத்தில் அரணி நாசப்பட்டொழிய அக்கினி எழும்பி ஒளிசெய்வது போலவும் பிரம, சேதனுசேதன உலக தாட்டாந்தத்தில் உலகம் ரசமல்லாததும், அமுக்கியமானதும், பொருளற்றபொய்யானதும், நாசமானதுமாய்க் கழியப் பிரமம் ரசமாயும், முக்கியமாயும், பொருளுள்ள மெய்யாயும், ஞானப் பிரகாசமாயும் வெளிப்படுகின்றது' (மு - மை 175)

என்றது காண்க. முதலாவது அவ்வுவமானத்தை அவர் எப்படிக் கொண்டார்? அதைப் பார்க்கலாம். எள்நெய், தயிர் நெய், பிரவாகம் நீர், அரணிதீ என நான்கு உள்ளன. திப்பி போல் ரசமல்லாதது, மோர்போல் முக்கியமல்லாதது, பிரவாகம்போல் பொய்யாவது, அரணிபோல் நாசமாவது பிரபஞ்சம்; நெய்போல் ரசமானது, நெய்போல் முக்கியமானது, நீர்போல் மெய்யானது, தீப்போல் ஞானப்பிரகாசமானது பிரமம். இப்படி அவ்வுவமான உவமேயங்களைப் பொருத்தினுரவர். அது பிழை. எப்படி ? அவ்வுபநிஷத்தில் வந்த எள்ளையுந் தயிரையுந் தள்ளித் திப்பியையும் மோரையும் அவர் வைத்தார். எள் திப்பியன்று, தயிர் மோரன்று. அதனுல் அவர் உவமானத்தைத் திரித்துக் கூறினுரென்பது. அது கிடக்க. எள், தயிர், அரணிமூன்றும் காட்சிப்பொருள், உவமை. அவை போல்வது பிரபஞ்சம். அதுவும் காட்சிப்பொருள். அது உவமேயம். ஆனுல் பிரபஞ்சத்தில் பிரமம் எப்படியிருக்கிறது? அதை அவ்வுவமைகளால் அவ்வுபநிஷத்து விளக்குகிறது. எள்ளில் நெய்போலும், தயிரில் நெய்போலும், அரணியில் தீப்போலும் பிரபஞ்சத்தில் பிரமம் பரந்தும், மறைந்தும், ஒளிர்ந்தும் நிற்கிறது என்பது அவ்விளக்கம். அவ்வுபநிஷத்துப் பெயர்ப்பில் 'உண்டாகிருன்' என்றிருக்கிறது. 'இருக்கிருன்' அல்லது 'நிற்கிருன்' என்றிருப்பதே பொருத்தம்.

'விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல், மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்' (திருமு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றது காண்க. எள் நெய் உவமானத்தை அவர் மறுத்தார். அது வகையற்றது. அதையும் சிறிதே காணலாம். '

'இந்த உபமானத்தில் எள்ளென்னும் சொல்லுக்குப் பொருள் திப்பியும் நெய்யுமாம். திப்பியும் நெய்யுமன்றி எள்ளென்னும் சொற்குப் பொருளில்லை. எள்ளென்னும் சொல்லுக்கே பொருள் இல்லாதபோது அதில் நெய் வியாபித்ததென்பது எங்ஙனம் அமையும்? இதில் எள் ஸ்தானத்தில் பசுபாசங்களும், நெய் ஸ்தானத்தில் பதியு மாகின்றன. உபமானத்தில் எள்ளென்னும் சொற் பொருளில் நெய் அடங்கிவிட்டது. அங்ஙனமே பசுபாச மென்னும் சொற்பொருளில் பதியடங்கிவிடவேண்டும். திப்பியில் நெய் வியாபித்தமை போலப் பசுபாசங்களில் பதி வியாபித்ததெனச் சொல்லி, திப்பி ஸ்தானத்தில் பசு பாசங்களையும் நெய் ஸ்தானத்தில் பதியையும் சொல் லின், நெய் திப்பியில் வியாபித்தது பூரணமாயன்று: திப்பியில்லாத விடத்திலேயே வியாபித்ததாயாகின்றது' (மு - மை 173)

என்றது அம்மறுப்பு. அவர் திப்பியும் நெய்யும் சேர்ந்ததே எள் என்றார். அது சரி. ஆனால் அவரே எள் ஸ்தானத்தில் பசுபாசங்களைமட்டில் வைத்துப் பதியை விட்டாரே அடுத்து அது சரியா?

எள்ளில் நெய்யிருப்பது எள்ளுக்குரிய திலமென்ற வட சொல்லாற் புலனும். தயிலம் வியாபித்திருப்பது திலம். தயி லத்தின் வியாபகம் புலப்படாத நிலை திலம். அதுபோல் பிரமம் பிரபஞ்சத்தில் வியாபித்திருப்பது. அதுபுலப்படாத நிலை பிரபஞ்சம். எள் என்ற மாத்திரத்தில் நெய் வியாபித் திருப்பது புலப்படவில்லை. ஆயினும் நெய் எள்ளிலிருப்பது உண்மை, தய்லம் தன்னிடத்துள்ள தென்பதைக் காட்டுவது திலம் என்றசொல். நெய் தன்னிடத் துள்ளதென்பதைக் காட் டாத சொல் எள் என்பது. அது போன்றது பிரபஞ்சம் என்ற சொல்லும். ஆயினும் பிரபஞ்சத்தில் பிரமம் வியாபித்திருப்பது மெய். சைவர் அவ்வுவமையை அப்படிக் கொள்கிறார். அதில் என்ன தப்பு? இனித்தயிரைவிட்டு மோரைக்கொண்டாரவர். அதனையும் அப்படியே ஆய்ந்து உண்மைகாண்க.

பிரவாகத்தில் நீர் என்பது மூன்றும் உவமை. பிரபஞ் சத்தை மித்தையென்றாரவர். அதற்கேற்பப் பிரவாகமும் அவ ருக்குப் பொருளற்ற பொய்யாயிற்று. நீரின் மிகுதியும் ஓட்ட முஞ்சேர்ந்ததே பிரவாகம். அது பொய்யானல் மரங்களை இழுத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துக்கொண்டு போகப் பயன்படுத்தப்படுமா? அது கரையிலுள்ள கட்டடங்களை அடித்துக்கொண்டு போமா? அவருக்குப் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர்களே பொருளுள்ளனவாகும். குணப்பெயரும் தொழிற்பெயரும் பொருளில்லாத பொய்களேபோலும். அதனாற்றான் பிரவாகத்தை அவர் பொய்யென்றார். பிரவாகம் பொய்யானால் அது போனதும் நீரும் போய்விடுகிறது. அப்படியே பிரவாகம் போன்ற பிரபஞ்சம்போனால் நீர்போன்ற பிரமமும் போய்விட வேண்டும். போய்விடுமா? அல்லது பிரவாகம் வடிந்த பிறகு ஆங்காங்குள்ள பள்ளங்களில் சிறுநீரே மிஞ்சும். அப்படியே பிரபஞ்சம் போனபிறகு மிஞ்சுவது அப்படியுள்ள பள்ளப் பிரமங்கள்தானா?

அரணி தீயென்பது நாலாம் உவமானம். அரணியிருக்கும் வரையே தீயுமிருக்கும். அரணி எரிந்து சாம்பலாகி நாசமானால் தீயும் ஒழிந்துபோம். அரணிபோல்வது பிரபஞ்சம். தீப்போல்வது பிரமம். உவமையின்படி பிரபஞ்சம் ஒழிந்தால் பிரமமும் ஒழியும். அப்படித்தானா?

> ‘ சாஸ்திரங்களில் எள்ளிலெண்ணெய் உவமானம் சொல்கிறதேயென்னின் அது ஏகதேச உவமானமாம். சம்பூரணா வுவமானமாயின் ’ (மு - மை 174)

என்றாரவர். அவ்வுவமை சுருதி விரோதமென ஓரிடத்தில் சொன்ன அவர் இங்கு அதனைச் சாஸ்திர சம்மதமென்றார். வாதத்தில் மறதி ஆபத்தானது. அவர் அதனைத் தெரிக. எந்த உவமையையும் அவர் வரம்புமீறி அல்லது விபரீதப்படுத்தி வைத்தே மறுக்கிறவரென்பதற்குச் ‘சம்பூரணா உவமானமாயின்’ என இங்கும் தொடங்கியிருப்பதே சான்றாகும். உவமையில் சம்பூரணம் கிடையாதென்பது யார்க்குந்தெரியும். நீரில் உப்பு, செம்பில் களிம்பு, நெல்லில் முளை தவிடு உமி முதலிய உவமைகளும் சாத்திரத்தில் வந்துள்ளன. அவையும் ஏகதேசங்களே.

சிலந்திப்பூச்சி

இவ்வுவமையும் சுருதியிலுள்ளது. நூலைச் சிலந்திப்பூச்சி தன்னிடமிருந்து உண்டாக்கித் தன்னிடமே ஒடுக்கிக்கொள்ளும். பிரபஞ்சத்தைப் பிரமம் தன்னிடத்தில் உண்டாக்கித் தன்னிடத்தில் ஒடுக்கிக்கொள்ளும் என்பதற்கு அச்சிலந்திப் பூச்சி உவமை கொள்ளப்பட்டிருக்கிறது. நூலுக்கு அப்பூச்சி நிமித்தமும் உபாதானமுமாகி நிமித்தோபாதான காரணமாணற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போலப் பிரபஞ்சத்துக்குப் பிரமம் நிமித்தோபாதான காரணம். இப்படிச் சொன்னது மாயாவாதம். அது மறுப்புக்குரியது. எப்படி ?

அப்பூச்சியை உயிர்வேறு, உடல்வேறு எனப்பிரித்துப் பேசக்கூடாதென்றூர் அவ்வாதர். அதுபற்றிய அவரது வாதம்.

'உடலையும் மனிதனென்றூது உயிரையும் மனிதனென்றூது உயிரோடு கூடிய உடலையே மனிதன் என்பது போலச் சிலந்திப்பூச்சியையும் கொள்ளல்வேண்டும்; கொள்ளவே, நூலுக்குச் சிலந்திப் பூச்சியை அபின்ன நிமித்த உபாதான காரணமென்பதில் யாதுந் தடையின்று. இவர் சிலந்திப் பூச்சியின் உடலையும் உயிரையும் பிரித்து முறையே முதற்காரணமாகவும் நிமித்த காரணமாகவும்கொண்டு, அதனுல் தமது சித்தாந்தத்திற்குப் பலமிருப்பதாகப் பேசுவது கூடாது; சிலந்திப் பூச்சி யென்பது அதனது உடல் மாத்திரமுமன்று, உயிர் மாத்திரமுமன்று; பின்னை உயிரோடு கூடிய உடலையே சிலந்திப்பூச்சியென் றென்றுய்க் கொள்ளப்படுகின்றது. சிலந்திப்பூச்சி யென்பதற்குப் பொருள் அதனது உடலே யாயின், சிலந்திப்பூச்சி செத்தது என்னும் வழக்கிருத்தல் கூடாது. வெறும் உயிரையும் சிலந்திப்பூச்சி என்பதில்லை. இல்லையாகவே உயிரோடுகூடி யோரமைப்பாய (மற்றவற்றினின்றும் வேறு பிரித்துக் காட்டுவதாயுள்ள) உடலையே மொத்தமாய்ச் சிலந்திப்பூச்சி யெனப்படுகின்றது; படவே, சிலந்திநூலுவமானம் இறைவன் உலகிற்கு முதற்காரணமாயும், நிமித்தகாரணமாயும் இருக்கிருன் என்பதற்கு ஏகதேசமா யெடுக்கப்பட்டதென்பது பெற்ரும்' (மு - மை 179)

என்பது. இஃதோராபாசவாதம். என்னை ? பிரிக்கப்படாமல் இருப்பது அபின்னம். அந்த அபின்னபதத்தை அவர் பிரயோகித்திருக்கிருர். சமவாயம், தாதாத்மியம், சையோகம் முதலாகப் பல சம்பந்தங்கள் அவராற் பிரஸ்தாபிக்கப்படும். அவற்றுள் அந்த அபின்னம் என்ன சம்பந்தம் ?

எள்ளும் அபின்னம். சிலந்தியும் அபின்னம். ஆயினும் எள்ளைத் திப்பிநெய் எனப்பின்னப்படுத்தி எள்நெய் உவமையின் நயத்தை யறியாமற்போனுரவர். ஆனல் சிலந்தியை உடல் உயிரெனப் பின்னப்படுத்திப் பேசவேண்டுவ தவசியம். அப்படியிருந்தும் அவர் அங்ஙனம் பேசக்கூடா தென்கிருர். அது நியாயமா ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'சிலந்திப்பூச்சி யென்பது அதனது உடல் மாத்திரமுமன்று, உயிர்மாத்திரமுமன்று; உயிரோடுகூடிய உடலையே சிலந்திப்பூச்சியென் றென்றுய்க் கொள்ளப்படுகிறது' என்றார் அவர். அப்படியே எள் அதன் திப்பிமாத்திரமுமன்று, நெய்யாத்திரமுமன்று; திப்பியோடு கூடிய நெய்யையே எள்ளென் றென்றுய்க் கொள்ளவேண்டும். அதை ஏன் அவர் அறியவில்லை?

சிலந்தியின் உயிரையும் உடலையும் அபின்னமாகக் கொள்ளவேண்டுமென்றாரவர். கொள்ளவேண்டுமென்பது விஷயமன்று. உண்மையிலேயே அவ்வுயிரும் உடலும் பின்னப்பொருள்களா? அபின்னமா? அதுதான் விவகார விஷயம். உயிரோடு கூடிய உடலையே சிலந்திப்பூச்சியென அவரே சொன்னார். அதனால் சிலந்தியின் உயிரும் உடலும் வேறுவேறு பொருள்களேயென்பது அவர்க்குஞ் சம்மதமாயிற்று. ஒரே பொருள் நிமித்தகாரணமும் உபாதானகாரணமுமாயிருக்க முடியாது. ஆனால் சிலந்தியொன்றையே நூலுக்கு அவ்விரு காரணமுமாமென அவர் சொன்னார். அது நியாயத்துக்குச் சிறிதும் பொருந்தாது. ஆகலின் உயிரென உடலெனப்பின்னமாய அப்பூச்சியை உயிரென உடலெனப் பிரித்தறிய வேண்டியது அவசியமாயிற்றென்க.

உயிரோடுகூடி யோரமைப்பாய உடலையே மொத்தமாய்ச் சிலந்திப்பூச்சி யென்றாரவர். அதனால் உடலே சிலந்திப்பூச்சி யென்னும் பெயருக்கு உரியதென்பது அவர் கொள்கையுமானது. அது சரி. அவர் மலசலங்கழிக்கிறார். அக்கழிவு அவருடலின் பகுதியா? அதனோடு அவருயிரிலிருந்தும் ஒரு பகுதி சேர்கிறதா? அவர்சிரைத்துக்கொள்கிறார். அக்கழிவுமயிர் அவருடலின் பகுதிமாத்திரமா? அம்மயிரில் அவருயிரின் பகுதியுஞ் சேர்ந்திருக்கிறதா? அவரிடமிருந்து அப்படிக் கழியும் பொருள்களெல்லாம் அவருடலின் பகுதியே அன்றிச் சிறிதும் அவருயிரின் பகுதியல்ல. இனி அவருண்கிறார். அவ்வுணவு அவருடலை மாத்திரம் பருமனுக்குகிறதா? உயிரையுமா? உடலை மாத்திரமே அப்படிச் செய்கிறதென்பது யாவரும் அறிந்ததொன்று. அக்கழிவு, உணவுகளெல்லாம் உயிரோடு கூடிய அவருடலின் பகுதிகளே. நூலும் சிலந்தியின் உடலின் கழிவுதான்.

சிலந்திப்பூச்சி என்பதற்குப் பொருள் அதனுடலேயென யாருஞ்சொல்லார். அப்படியிருக்கச் சிலந்திப்பூச்சி என்பதற்குப்பொருள் அதனது உடலேயாயின், சிலந்திப்பூச்சி செத்தது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னும் வழக்கிருத்தல் கூடாது என்றாரவர். அவ்வழக்கால் அவரடையும் பாதகம் என்னையோ? உடல் கிடப்பதால் சிலந்திப் பூச்சி செத்தது எனச் சொல்வது அவருக்கு அர்த்தமற்ற வழக்குப்போலும். சிலந்தி செத்தது என்றால் அர்த்தமென்ன? அதனுடலிலிருந்து உயிர் பிரிந்து போய்விட்டது என்பதே. சிலந்திப்பூச்சி செத்தது என்ற வழக்கிருப்பதுபோல் சிலந்திப் பூச்சி செத்துக்கிடக்கிறது என்ற வழக்குமிருக்கிறது. அதி லுள்ள கிடக்கிறது என்பதற்கு எழுவாய் எது? சிலந்திப்பூச்சி என்பது. இவ்விடத்துச் சிலந்திப்பூச்சி என்பதற்கு அதனுடலே பொருள். கிடக்கிறது அதனுடல்தான்.

அப்பூச்சியின் உயிர் சேதனம், உடல் அசேதனம். உயிர் சேதனமாயினும் தான்மாத்திரமாயிருந்தால் அது நூலை உண் டாக்கமாட்டாது. அசேதனமாகிய உடல் தான்மாத்திரமா யிருந்தாலும் நூலை உண்டாக்காது. ஏன்? உயிர் உண்டாக்க உடலிலிருந்து உண்டாகும் நூல். நூலுக்குச் சிலந்தியினுயிர் நிமித்தகாரணம். உடல் உபாதானகாரணம். நூல் காரியம். அந்நிமித்தகாரணம் அவ்வுபாதான காரணத்தில் இயைந்து நின்று அக்காரியத்தை உண்டாக்கிற்று. அங்ஙனமின்றி உடலையும் உயிரெனக்கொண்டு அவ்வுயிரையே நிமித்தமும் உபாதானமுமாமென்பது சரியன்று. அப்படியே பிரமமென் னும் சேதனப்பொருள் மாயையென்னும் அசேதனப்பொருளில் இயைந்துநின்று பிரபஞ்சமாகிய காரியத்தை உண்டாக்கியது. அப்பிரபஞ்சத்துக்கு அப்பிரமம் நிமித்தம். அம்மாயை உபா தானம். அங்ஙனமின்றி மாயையில் இயைந்து நிற்பதுபற்றிப் பிரமத்தையே நிமித்தமும் உபாதானமும் எனக் கொள்வது பெரும்பிழையாகும். சிலந்திப்பூச்சி உவமை விளங்குவது சாமானியருக்குச் சிறிது சிரமம். ஆகையால் குலாலன் மண் உவமையைச் சைவசித்தாந்தம் எடுத்தது.

உடலுயிர்

உயிர் உடலிற்கலந்து உடலேயென்னுமாறு நிற்கிறது. அக்கலப்பைச் சிவன் உயிரிற்கலந்து உயிரேயென்னுமாறு நிற்கிறானென்பதற்கு உவமானமாகக்காட்டும்சைவசித்தாந்தம். மாயாவாதியர் அவ்வுவமையை மறுக்கக் கச்சைகட்டினர்.

> 'உடலும் உயிரும் பிரிவற நிற்றல்போல் இறைவன் மாயையில் பிரிவற நிற்கிறானென்பது கூடாது. உடலும் உயிரும் பிரிவற நிற்றல்போல் இறைவன் மாயையில் பிரிவற நிற்கிறானெனின், மயக்கவுணர்வில் உடலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

> உயிரும் பிரிவற நிற்பதுபோல் விளங்கினும் அவை தெளிந்த உணர்வில் பிரிவாயே நிற்றலின்ல் இறைவன் மாயையிற்பிரிவற நிற்கிருனென்பது மயக்கவுணர்வும், பிரிவாய்நிற்கிருன் என்பது தெளிந்தவுணர்வும் ஆயின; ஆகவே இறைவன் மாயையிற்பிரிவற நிற்கிருனென்பது மயக்கவுணர் வென்ருயிற்று ' (மு - மை 183)

என்பது அம்மறுப்பு. தேர்ந்த கல்வியும் தீர்க்காயுளுமுள்ளவர் அவர் கூட்டத்தில் எத்தனையோ பேர் இருந்திருப்பர். அவர் தம் வாழ்நாள் முழுவதிலும் மயக்கவுணர்வுடையரா யிருந்தாரெனச் சொல்லமுடியாது. தெளிவுணர்வும் ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் அவர்க்கு வந்திருத்தல் கூடும். அவருடலில் உயிர் பிரிந்துநிற்கும் உண்மையை அப்போதேனும் அவர் கண்டிருக்கவேண்டும். அவருள் ஒருவரிருவர் பெயரையேனும் அவ்வாதர் தெரிவிப்பாரா? ஆனுல் தாம் சாகும்வரை எவரும் அப்பிரிவைக் காணவே மாட்டாரென்பது உண்மை. அங்ஙனமாக மயக்கவுணர்வு தெளிவுணர்வு எனப் பேசிப் பிறரை ஏமாற்றுவானேன்? உடலில் உயிர் கலந்திருக்கும் உண்மையை விலங்கு பறவை முதலியன அறியா ?

> ' நாஸ்திகர் சரீரத்தைத் தவிர உயிர் வேறேயில்லை என்பதற்கு வெற்றிலை பாக்கு சுன்னங்களாலாய சிவப்பு நிறத்தையும், கடியாரத்தின் ஓட்டத்தையும், இவை போன்று பிறவற்றையும் உவமானமாகக் கூறுகின்ருர்' (வே - தீ 25)

என்பதால் நாத்திகரும் அறியார். அவ்விருவகைப் பிராணிகளிடமும் மயக்கவுணர்விருப்பதே அதற்குக் காரணம் என்னலாம். ஆனுல் ஆராய்ச்சி மிக்க ஆத்திகர் தெளிவுணர்வு உடையார். அவர் அக்கலப்பை நன்கு உணர்ந்திருக்கிருர்.

> ' சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள் மாருகலின், வினைவயத்தால் கூடியதல்லது நட்பில என்பது அறிக ' (குறள் 338 உரை)

என்ற பரிமேலழகர் வாக்கும் அதற்குச்சான்று.

தெளிவுணர்வுக்கு விஷயமாவதே பிரமாணமாகற்பாலது. அஃதவ்வாதர்க்குஞ் சம்மதம். ஆனுல் உடலில் உயிர்பிரிந்து நிற்பதே தெளிவுணர்வுக்கு விஷயமாவது, ஆகலின் உயிர் உடலில் பிரிந்து நிற்பதுதான் உண்மை என்ருரவர். உணர்வு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவோ மயக்கமோ எதுவேனுமாக. உயிர் உடலில் பிரிந்தோ பிரியாமலோ எப்படியேனும் நின்றிடுக. 'உடலிலே உயிர் நிற்கிறதென்ற அளவில் அவரும் சம்மதித்தவரானுர். அவர் கருத்துப்படி அவருடலில் அவருயிர் பிரிந்து நிற்கிற தென்றே கொள்ளவேண்டும். அப்படிக் கொள்ளலாம். சாத்த னுயிர் கொற்றனுடலை விட்டுப் பிரிந்துநிற்கிறது. அவ்வுயிர் சாத்தனுடலிற் பிரிந்து நிற்பதும் அப்படித்தானு? வேறுவித மாகவா? அப்படித்தானென்ருல் கொற்றன்கண்ணில் நோய் வந்தால் சாத்தன் பார்வை மங்காது. அதுபோல் சாத்தன் கண்ணில் நோய் வந்தாலும் சாத்தன் பார்வை மங்காமை வேண்டும். கண் அசேதனம். உடலின் ஒருறுப்பு. பார்வை சாத்தனுயிரின் அறிவு. ஆயினும் அவன் குருடனுயலைகிருன். அதனுல் அவனுயிர் அவனுடலிற்பிரிந்து நிற்கிறதெனச் சொல் லுவது வெறும் பேச்சு. வேறுவிதமாகவென்ருல் அந்தவிதம் எந்தவிதம்? அதை அவர் விளக்குக.

விரலில் குளவிகொட்டுகிறது. உடனே வாய் ஓலமிடுகிறது. கண் நீர்வடிக்கிறது. கால் குதிக்கிறது. விரலுக்கும் வாய் கண் கால்களுக்கும் என்ன சம்பந்தம்? அதுவும் அவையும் பிரிந்தே யிருக்கின்றன. நரம்புகளைக்காட்டி அவற்றின் மூலம் அவை இயைந்து நிற்கின்றன என்பாரவர். அது செல்லாது. பிணத் தில் அந்நரம்புகளின் இயைபுண்டு. அப்பிணத்தை அப்படிக் குளவி கொட்டினுல் நரம்புகள் வேலை செய்யா. வாய்முதலிய மற்றவுறுப்புக்களில் அந்நிகழ்ச்சிகளுங் காணப்படா. ஆகலின் உயிரே அவற்றிலெல்லாம் இயைந்து நின்று அத்துன்பத்தை அனுபவிக்கிறதென்பதறியப்படும்.

இன்னும், 'மயக்கவுணர்வில் உடலும் உயிரும் பிரிவற நிற்பதுபோல் விளங்கினும் அவை தெளிந்தவுணர்வில் பிரி வாயே நிற்றலினுல்' என்ருரவர். உடல்வேறு, உயிர்வேறு என்பது அதனுல் நிச்சயமாயிற்று. நூல் தோன்றுதற்குச் சிலந்தியினுடல் உபாதானமும், உயிர் நிமித்தமுமாமென்பதை இப்போதாயினும் அவர் தெரிக. உடலும் உயிரும் பிரிவற நிற்பது மயக்கவுணர்வென அவரே தள்ளினுர்.

பங்கஜம்

நிலம் குளிர்ந்தால் அதிற் கிடக்கும் கிழங்கிலிருந்து தாமரை முளைக்கும். தாமரை காரியம். கிழங்கு உபாதானம். குளிர்நிலம் அதாவது சேறு ஆதாரம். அப்படியிருந்தும் தாம ரையைப் பங்கஜம் எனச் சொல்வதுண்டு. பங்கம் - சேறு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜம் - உண்டாவது. உபாதானத்திலிருந்து உண்டானதை ஆதாரத்திலிருந்து உண்டானதெனும் பொருள்படப் பங்கஜம் என்றசொல் தாமரைக்கு வந்தது. அதுபோலச் சிவசத்தி ஆதாரம். மாயை உபாதானம். பிரபஞ்சம் காரியம். மாயையிலிருந்துண்டான பிரபஞ்சத்தைப் பிரமத்திலிருந்துண்டானதெனச் சுருதி கூறுகிறது. பங்கஜம் என்பதுபோலும் அது. இப்படிச் சைவசித்தாந்தஞ் சொல்லும். அதை

'சேறில்லாவிடத்துக் கிழங்கும், கிழங்கில்லாவிடத்துத் தாமரையு மிருப்பதுபோன்று, பிரமமில்லா விடத்து மாயையும், மாயையில்லாவிடத்து உலகமும் இருந்தாலன்றோ இவரது உவமானம் மணம்பெறும்? பிரமம் பரிபூரணமென்றுரைத்து அதனிடத்தில் மாயையானது சேற்றின்கண் கிழங்கைப்போல வேறுயிருக்குமென்று உரைத்தல் அசம்பவமென்க' (அ - வி 96)

எனக்கூறி மறுக்க முனைகிறார் அம்மாயாவாதர். சேறில்லா விடத்துக் கிழங்கு இருக்கிற தென்றுரவர். அஃதாயின் தாமரைக்குப் பங்கஜம் என்ற பெயர் வருவானேன்? கிழங்கில்லாத விடத்துத் தாமரை யிருக்கிற தென்றுரவர். அத்தாமரைக்குத் தோற்றுவாயெது? கிழங்கில்லாவிடமா? அவ்வினாக்களுக்கு அவர் விடை தெரிக. அம்மறுப்பு வரம்புமீறியதென்பதை அவர் அறிவர். பங்கஜம் என்ற சொல்லுக்குப்போல் வனஜம், ஜலஜம் என்ற சொற்களுக்கும் அவர் பொருளாய்க.

கடல்

வியாபகம் கடல், வியாப்பியம் நீர், வியாத்தி உப்பு என்ற உண்மையைத் தெரிந்த சைவசித்தாந்தம் சிவனது வியாபகத்துக்குக் கடலை உவமை கூறியது. கடல் என்பது நீருக்கு இடங் கொடுத்து நிற்கும் ஆகாயம். அவ்விளக்கமும் அச்சமயம் கொடுத்தது. அதைக் கடல் என்பது ஆகாயமன்று, நீரின் மிகுதியே என்று கூறி மறுத்தாரவர்.

'கடலென்னும் சொல்லுக்குப் பொருள் நீரின் மிகுதியேயாம்' (அ - வி 120)

என்றது காண்க. இந்த மறுப்பை மறுத்து

'குளம் வெட்டினேன் - கிணறு எடுத்தேன் - ஏரியுண்டாக்கினேன் - குளத்தில் நீரில்லை - ஏரியில் ஜலமில்லை - ஏரிவற்றியது - பாழ்த்த கிணறு என்னும் பிரயோகங்களால் நீரானது கடலன்றெனச் சித்தாந்தமாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

> 'அற்றகுளத்தி லறுநீர்ப் பறவைபோல்' என்னு மான்ளேர் வாக்கியமும் இதை நிறுத்தியது கண்டீர்' (அ - வி 120)

எனக் கூறி ஆதாரங்காட்டியது அச்சித்தாந்தம். அதையும் மறுத்தாரவர்.

> 'ஏதேனும் ஒரு சபையை உண்டாக்கினேன் என்று ஒருவன் சொல்வானேயானல் உண்டாக்கினதற்குமுன் சபையிருந்ததென்ரு பொருள்? உண்டாக்கிய பிறகு உண்டான சபையை முன்பு சொல்லுதல் போல வெட்டியபின் உண்டாகும் குளத்தை முன்பு சொல்லுதலாம். 'குளத்தில் நீரில்லை' என்றது எங்ஙனமெனின் முதல் இடை கடைச் சங்கத்தில் அவயவிகள் இல்லையென்று ஒருவன் இப்போது சொல்வானேயானல் சொல்லும் இப்போது சங்கம் இருக்கின்றதென்ரு பொருள்? சங்கமென்பது அவயவிகளின் கூட்டத்திற்குப் பொருள். அவயவிகளைத் தவிரச் சங்கமென்பதற்குப் பொருளில்லை. இதுபோல நீரைத் தவிரக் குளமென்னுஞ் சொல்லுக்குப் பொருளில்லை. அப்படி இருந்தாலும் அவயவிகளிருந்தபோதுண்டாகிய கற்பிதப்பேரை அவயவிகள் இல்லாதபோதும் சொல்வதுபோல நீரிருந்தபோதுண்டான பேரை நீரில்லாதபோதும் சொல்லுகிரேம். இது முன்னிருந்த நிலைமையைத் தெரிவிப்பதேயன்றிப் பொருளிருந்தன்று' (அ - வி 121)

என்பது அம்மறுப்பு. அதுசரியா? பார்க்கலாம். குளம் என்பது நீரே. ஆயினும் குளத்தை வெட்டுவதற்கு முன்னும் குளம் என்ற பெயரைவைத்துக் 'குளத்தை வெட்டினேன்' என்று சொல்லலாம். அப்பெயரையே வைத்து நீர் வற்றிய பின்னும் 'குளத்தில் நீரில்லை' என்று சொல்லலாம். அப்படி ஈரிடத்துஞ் சொல்வதனலேயே குளம் என்ற சொல்லுக்கு நீரென்ற பொருளன்றி வேறுபொருள் வந்துவிடாது. அம்முறையில் ஆறு, கிணறு, ஏரி, சுனை, கடல் முதலியவற்றுக்கும் நீரென்பதே பொருள். அவற்ரேடு குடம், கொப்பரை, சருவம் முதலியவற்றையுஞ் சேர்த்துக்கொள்ளலாம். இப்படியெல்லாம் அவர் சொல்வர். ஆனல் குளத்தை வெட்டியவன் குளமாகிய நீரை வெட்டவில்லை, அங்குள்ள மண்ணைத்தான் வெட்டினன். அப்போது குளமென்பதற்கு மண்ணெனவும் பொருளாகலாம். ஆனல் குளமென்பது மண்ணுமன்று, நீருமன்று. ஆகாயம் எங்குமாயிருப்பது. அது வெட்டப்படாத தொன்று. மற்ற நான்கு பூதங்களையுந்தான் மனிதன் ஏதேனும் செய்யவல்லான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவன் மண்ணை வெட்டி அப்புறப்படுத்தினன். அதுவெற்றிட மாயிற்று.' அதில் நீர் தேங்கியது. அதனல் அவ்விடம் குளம் எனப் பெயர்பெற்றது. ஆறு கடல் முதலியவும் அங்ஙன மாயினவே. ஆறு, கடல் என்பன இனம்பற்றியே இங்குச்சேர்க் கப்பட்டன. அவை மனிதனுல் ஆயினவல்ல என்பதை எவரும் அறிவர். மண் வெட்டப்படுமுன் அங்குள்ள ஆகாயத்தைக் குளமென்றுலென்னை? அவ்விறு எழலாம். சைவசித்தாந்தமோ நீர்தங்க இடங்கொடுத்து நிற்கும் ஆகாயமே கடல் என்றது. அவ்வாகாயப்பரப்பின் மிகுதி குறைவுபற்றியே குளம் கிணறு முதலிய சொற்கள் உளவாயின. மண் தங்க இடங்கொடுத்து நிற்கும் ஆகாயத்துக்கு அன்ன வழக்காறில்லை.

'தொட்டனைத் தூறு மணற்கேணி' என்ற குறளுக்கு உரைகண்ட பரிமேலழகர் 'ஈண்டுக்கேணி என்றது அதன் கண் நீரை' என்ற குறிப்புங்கொடுத்தார். கேணியே நீராயின் அக்குறிப்புக் கவசியமில்லை. ஆகலின் குளத்தில் நீரில்லை என்ற போது குளம் இடத்தையே குறிக்கும். நீர் அற்ற குளம் என்பது ஆட்கள்போன சங்கக்கட்டடம் என்பதுபோலும். குளம் வற்றியது என்பது இடவாகுபெயராய் நீரைச்சுட்டும். கடலிற் பாய்ச்சினன் என்பதற்குக் கடலாகிய ஆகாயத்திலுள்ள நீரிற்றள்ளினன் என்பதுபொருள். குளம், ஏரி, கடல்முதலியன இடப்பெயராதலையும் அவரறிக. குடம், கொப்பரை முதலியன செம்பு, பித்தளை முதலிய உலோகங்களால் நீர் தங்குவதற் கென வரைந்து கொள்ளப்பட்ட ஆகாயமேயாம். ஆயினும் அவ்வாறமைந்துள்ள உலோகங்கள்பற்றியே அப்பாத்திரங் கள் பொருட்பெயரெனப்பட்டன.

மாயாவாதர் எடுத்து விசாரித்த சைவசித்தாந்த உவமை கள் இன்னுமிருக்கலாம். சைவசாத்திர வல்லுநர் அவற்றையும் எடுத்து அலசிக்காட்டுக. சைவசமயத்துக்கு அது சிறந்த சேவையாகும்.

இரண்டு சத்துக்களின் இருப்பு

பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களும் சத்து என்கிறது சைவசித்தாந்தம். அதனை மறுத்திடவேண்டும் மாயாவாதியர். அஃதவர்க்குக் கடன். இன்றேல் அவர் மதத்துக்குச் சீவனமே கிடையாது. ஆகலின் அவர்

'ஒரு சத்துப்பொருளில் மற்றொரு சத்துப்பொருளிருத்தல் யாண்டு மின்மையின், சத்தாயும் சம வியாபகமாயு முள்ள ஜீவர்களில் இவரது நிமித்தகாரணக்கடவுள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்தரியாமியாயிருத்தல் எவ்வாற்ருனும் அமையாது' (அ - வி 79)

'இரண்டு பொருள்களைச் சொல்லி, அவற்றி லொன்றி னுக்குச் சர்வபரிபூரணத்வஞ் சொல்வது கூடாது' (து - வா 52)

'சிவம் ஒரு பொருளும் மாயையொரு பொருளுமாயிரண்டு பட்டுக் கண்டத்தன்மை அடையும். அடையுமேல், சிவம் பரிபூரணமென்று கூறும் சுருதி வாக்கியம் பொய்ப் பட்டுப்போம்' (து - வா 6)

என்ருர். ஒரு சத்துப்பொருளில் இன்னெரு சத்துப்பொருள் இருக்கமுடியாது. ஆகையால் சிவமாகிய சத்துப்பொருள் சீவ னுகிய சத்துப்பொருளில் அந்தரியாமியா யிருக்கிறதென்பது வெறுஞ்சொல். சிவமும் மாயையும் வெவ்வேறு சத்துப்பொருள் களாயின் அவ்விரண்டுங் கண்டப்பட்டுப்போம். சிவத்துக்கு நேருங் கண்டத்தன்மையினுல் சிவம் பரிபூரணமென்ற சொல் லும் பழுதாம். கண்டப் பொருளுக்குப் பூரணத்தன்மை ஏது? இப்படி அவர் மறுத்தார். அதையும் பார்க்கலாம். இரண்டு சத்துப் பொருள்கள் ஏககாலத்தில் ஓரிடத்திலிரா என்பது வாதவிஷயம். ஒன்றிலொன்ருக இரண்டு பொருள்கள் இருக்க மாட்டாமைக்கு அவை கண்டப்பட்டிருப்பதேகாரணம். கண்டப் பொருள்களுள் மிகச்சிறியது, அணு. அதற்கும் அம்மாட்டாமை உண்டு. கண்டப்பொருளுக்குரிய இலக்கணந்தான் என்னே? அதுதான் அப்பொருள்கள் ஒன்றிலொன்றிருக்கமாட்டாமல் தடைசெய்வது. அவ்விலக்கணம் இன்றேல் அத்தடையும் இராது. அவ்விலக்கணமில்லாத பொருள் அகண்டம். பதி பசு பாசங்களில் அவ்விலக்கணமில்லாமையால் அவை அகண்ட மாம். அகண்டப்பொருள்கள் ஒன்றிலொன்றிராவென்பதற்கு ஏதுவோ திருட்டாந்தமோ அவர் சொல்லவில்லே. ஆகலின் அகண்டப்பொருள்கள் ஒன்றிலொன்றிருக்கலாம்.

இன்னும் ஒரு பொருளில் இன்னெரு பொருளிருக்குமாயின் அவ்விருப்புக்கு இடம் வேண்டுமென்ருரவர். இடமின்றி ஒரு பொருளுக்கிருப்பில்லே என்பதது. இடமாவதென்னே? அதற்கு அவர் விளக்கந்தரவில்லே. இடமாவது தேசம். காலமும் தேசமும் காரியம். அவையும் அழியும். காலாதீதனுகிய கடவுள் தேசாதீதனுமாவன். அங்ஙனம் இடமே இல்லேயானுல் அவ னுக்கு மாத்திரம் இருப்பு எங்ஙனம் கூடும்? கூடாதாகவே இருப்பதாகச் சொல்லப்படும் கடவுளென்னும் பொருளேயும் இல்லேயென்றே சொல்லவேண்டும். இடமின்மை என்னும் தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொள்கையால் மாயாவாதம் அப்படி நாஸ்திகத்திற்போய் முடிகிறது.' ஆனால் மாயாவாதர் கடவுளை நிராதாரன் என்பர். நிராதாரன் - இடமில்லாமலே இருப்பவன். அதுகொண்டு இடம்வேண்டாமலே பசுபாசங்களும் பதியில் அடங்கி வியாபித் திருக்கலாமே. அவரே வியாபகத்துக்கு

'எது காலத்தினா லந்தமுடையதோ, அது தேசத்தினாலும் அந்தமுடையது ... ... காலத்தினாலும் தேசத்தினாலும் அந்தமுடைய வியாபகம் அநித்தம்' (மு - மை 120)

'காலத்தானும் தேசத்தானும் எதற்கு முடிவில்லையோ, அது வியாபகமாம் என்னும் வியாபக விலக்கணத்தை யுணர்ந்திருந்தால் சையோக சம்பந்தத்தை வியாபக மெனக் கூறார் கூறார்' (மு - மை 177)

என இலக்கணங் கூறினார். அதனாலும் வியாபகப்பொருளின் இருப்புக்கு இடம் வேண்டாமென்பது புலனாம். பதி பசு பாசங்கள் முறையே வியாபக வியாப்பிய வியாத்திப்பொருள்கள். அவை காலதேசங்களைக்கடந்தவை. அவை தம்முட் கலந்திருத் தற்கு இடம் அநாவசியம். காலதேசங்களுக்குட்பட்ட பொருள் களிற்றான் நம்காட்சி செல்லும். அவ்விரண்டற்கும் அதீதமான நிலை நம்காட்சிக்கு வர வழியில்லை. ஆகலின் அங்குள்ள இருப்பும் இங்குள்ள இருப்புப்போன்றதேயென எண்ணல் ஏமாற்றமேயாம்.

வியாபகம், பூரணம் என்ற இரண்டு சொல்லை அவர் எடுத்தார். அவ்விரண்டும் வேறுவேறு பொருளுடையன. பிரமம் வியாபித்ததென்றால் வியாபித்தற்கு இடம்வேண்டும். பிரமந்தவிர இடமென ஒன்றில்லை. பிரமம் தன்னில் வியாபித்த தென்பதும் அர்த்தமற்றது. ஆகலின் பிரமம் வியாபித்த தென்பது பொய். மேலும் பிரமம் பூரணப்பொருள். பூரணப் பொருளாயுள்ளது வியாபிக்கமாட்டாது. ஆகையினாலும் பிரமம் வியாபித்தலில்லை என்றாரவர்.

'பிரமம் வியாபித்ததென்பது பொருளாகவல்ல; தோற்ற லாக. ... வியாபித்ததென்பது பூர்வபக்ஷம். வியாபிக்க வில்லையென்பது சித்தாந்தம். பிரமம் நீக்கமின்றி எங்கும் நிறைந்திருப்பதால் அது வியாபிக்கமாட்டாது; வியாபிக் கினறதென்னின் வியாபிக்க இடம்வேண்டும். வேறு இட மின்மையான் வியாபித்ததென்பது வியாவகாரிகமாம். வேதாதிகலைகளில் பிரமம் வியாபித்ததென்றும் சொல்லு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கின்றது. வியாபிக்கவில்லையென்றும் சொல்லுகின்றது. அவ்வாறே இரண்டையும் அத்வைதிகள் சொல்லுகின்றார்கள். இவர், பூர்வபக்க மின்னதெனவும் சித்தாந்த மின்னதெனவும் ஓராது ... வேதாந்தத்தை ஆபாசஞ் செய்யவருகின்றார். ... பிரமம் பரிபூரணமாயிற்றே, அது எப்படி வியாபிக்குமென்கிற ஐயம் நெடுநாளாய் இவருள்ளத்தில் குடிபுகுந்து வாட்டுகிறதுபோலிருக்கிறது' (ப - வி 7 - 19 - 152)

என்றது காண்க. காலதேசத்துக்குட்பட்ட அதாவது அநித்த வியாபகமொன்றும், காலதேசத்தால் முடிவில்லாத அதாவது நித்த வியாபகமொன்றும் ஆக மேலே இரண்டு வியாபகஞ் சொன்ன அவர் பிரமவியாபகத்தை உண்மையன்று, தோற்றம் அதாவது விவர்த்தமேயென இங்கே சொன்னார். ஒருக்கால் பிரம வியாபகத்தை அவ்விரண்டு வியாபகத்துள் முதல் வியாபகமாக அவர் கொண்டனர்போலும். அங்ஙனமாயின் நித்த வியாபகத்தை அவர் ஏன் விளக்கினார்? நித்த வியாபகப் பொருளே இல்லாதிருக்கையில் அவ்விளக்கம் மலடி மகனுக்குச் சாதகம் கணிப்பதுபோலிருக்கிறது. இன்னும் நித்த வியாபகமென்பது விவர்த்தமாகும்போது நித்தமென்பதும் விவர்த்தமாகலாம். அதனால்பிரமமென்பதும் விவர்த்தத்தோற்றமாய்முடியும். மேலும் பிரமம் பூரணப்பொருளென்றும், ஆகையால் வியாபியாதென்றும் அவர்சொன்னார். அஃதாயின் பிரமம் பிறிதொன்றைத் தன்பாற் கொள்ளாத ஒரு பிண்டந்தான். இமயமலை, கடல்நீர் முதலியவற்றினும் பெரும்பிண்டம் அது. அது அறிவுப்பிண்டமாயிருப்பதும் அறியாமைப் பிண்டமாயிருப்பதும் ஒன்றே. அப்பிண்டம் எதற்காக இருக்கிறதோ? அப்பிண்டமும் நிராதாரமாகவேயிருக்கிறது. அதில் மற்றவையும் ஏன் அப்படியேயிருத்தல் கூடாது? உண்மையில் பூரணமென்பதும் வியாபகமென்பதும் வேறுவேறுதானா? அறிஞர் சிந்திக்க.

மாயாவாதர் கூறிய பஞ்சபூதத் தோற்றம் முன் ஆராயப்பட்டது. ஆகாயமாவதென்னை? அதை அவர் அபாவம், சூனியம் என்றார்; சைவசித்தாந்தமோ பாவம், உள்பொருள் என்கிறது. பிறபூதங்களின் இருப்புக்கு இடங்கொடுத்தல் என்பது அதன்தொழில். அது தன்னின் வேருய அவற்றின் இருப்புக்கு இடங்கொடுத்துக் கொண்டே தானும் அவற்றில் இருக்கும். அவ்வாகாயம் போன்றது பிரமம். அதுவும் பசுபாசங்களுக்குத் தன்பாலிடங் கொடுத்து அவற்றில் அந்தரியாமியாயிருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மும்மதமுரண்

இந்நாட்டில் சாதிகள் பல. அவற்றுட் பிராமண சாதி முதன்மையானது. அது சாத்திரங்களில் மதிக்கப்பட்டு வருகிறது. சாதிவேறு, சாதியினர்வேறு. ஒரு சாதிக்குரிய மக்கள் தாழலாம். அதுபற்றி அச்சாதி தாழந்திடாது. ஒரு சாதிக்குரிய மக்கள் உயரலாம். அதுபற்றி அச்சாதி உயர்ந்திடாது. உயர்ந்தசாதி உயர்ந்தசாதிதான். தாழ்ந்தசாதி தாழ்ந்தசாதிதான். சாதியையும் சாதிக்குரியமனிதனையும் ஒன்றாகக்கொண்டு விவகரிப்பது மயக்கம். நானும் அம்முதல் வருணத்தை மதிக்கிறேன். ஆனால் அவ்வருணத்து மாந்தரின் நிலை வேறு. அது ஆராய்ச்சிக்குரியதே.

பார்ப்பனரனைவரும் ஒருகாலத்திற் சைவசமயத்தைச் சார்ந்தவராயிருந்தனர். பிராமண வருணம் முதல்தரமான வருணமாயிருப்பதுபோல் சித்தாந்த சைவமும் முதல்தரமான சமயமாயிருந்து வருகிறது. ஆகலின் அவ்வருணத்தால் அச்சமயத்தவராகத்தான் வாழ்ந்திருக்க முடியும். ஆனால் வினை சமூகத்தையுங்கூடப் பீடிக்கும். சிலநூறு வருடங்களுக்குமுன் சங்கரமுனிவர் தோன்றினார். மாயாவாத சமயத்தைப் பிரசாரஞ் செய்தார். அத்தனை பிராமணரும் அச்சமயத்திற்போய் வீழ்ந்தனர்.

சிலகாலஞ் சென்றது. இராமாநுஜ முனிவர் வெளிப்பட்டார். அவராற்பரவியது விசிஷ்டாத்வைத வைணவம். அது அப்பார்ப்பனருட் பலரைத் தன்பால் இழுத்துக்கொண்டது. பின்னர் வந்தார் மத்வமுனிவர். அவர் விளக்கிய சமயம் த்வைத வைணவம். அதையும் ஒருசார் பார்ப்பனர் பற்றினர். மேலும் பல மதங்கள் தோன்றின. அவற்றையும் தொகுதி தொகுதியாகப் பற்றிநின்றனர் அவ்வருணத்தார். அத்தனை சமயபேதங்களும் கேவலாத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்ற மூன்றிலடங்கும். அம்முப்பேதம் பற்றிப் பார்ப்பனரெல்லாம் தம்மைத் திரிமதஸ்தரெனச் சொல்லிக்கொள்வர். திரிமதஸ்தரென்பது அவருக்கொரு கூட்டுப்பெயர். அப்பேதம் அம்மதங்களின் அடிப்படையிலுள்ளதாகும். சங்கரமுனிவரின் கேவலாத்வைதமானது பிரமம் ஒன்றே சத்து. அது நிர்விசேஷம், சீவரும் சகமும் மித்தையெனக் கூறுவதும், இராமாநுஜ முனிவரின் விசிஷ்டாத்வைதமானது பிரமம் ஒன்றே சத்து, அது அனந்த கல்யாண குணங்களோடு கூடியது, சீவரும் சகமும் அதன் விசேஷணங்களே எனக்கூறுவதும், மத்வமுனிவரின் த்வைதமானது பிரமம் சீவர் உலகு ஆகிய மூன்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தனித்தனி சத்துக்களே எனக் கூறுவதும் அடிப்படைப் பேதந் தவிர வேறுயாதாகும்? ஆனாலும் அவரெல்லாம் பிராமணர். அச்சாதிப் பெருமையைப் பற்றிக்கொண்டே அவர் உலகிற் சஞ்சரிப்பர். அப்பேதம் அப்பெருமைக்குள் மறைக்கப்படும். மாயாவாதம், வைணவம் என்ற மதச்சார்பினர் பிறசாதியாருள்ளு மிருக்கின்றனர். அவர் அக்கூட்டுள் இடம்பெறார். அதனையுந் தெரிக. சித்தாந்த சைவ சமயத்தினருள் மிகப் பெரும் பகுதியினர் வேறு வருணத்தினர். அச்சமயத்தை யாசரிப்பவருள் பிராமணருள் ஒருவரிருந்தால் அது பெரியகாரியம். அவரும் அத் திரிமதத்தரால் கண்டபடி நிந்திக்கப்படுவர். ஆதிசைவ குலம்பற்றிய விசாரணை பின்னர் வரும். அம்மூன்று முனிவரும் தத்தம் மதத்தை நிலையிடுமுகத்தால் மற்றிரு மதங்களைக் கடுமையாக நிராகரித்திருப்பது அவரவரியற்றிய நூலுரைகளிற் பிரசித்தம். வடமொழிப் பயிற்சியும், சாஸ்திர பரிசீலனையும், சமயபேதங்களை யறியவேண்டுமென்கிற குதூகலமு முடையார் எவரேனுமாக. அவர் அம்மறைப்பைப் போக்கி உண்மையைக்கண்டு உலகினரைத் தெளிவிப்பார் என்பது உறுதி. அவ்வாற்றல் மிகப்படைத்தவர் சித்தாந்த சைவத் தெள்ளறிஞர்.

வேதப்பிரமாணம்

மாயாவாதர் இருக்காதி நான்கு வேதத்தையும் பரம பிரமாணமாகக்கொள்வர். மாயாவாதமே வேத இருதயமென்பது அவர் கருத்து. வேதம் கருமகாண்டம் ஞானகாண்டம் என இருபிரிவையுடையது. ஞானகாண்டம் உபநிடதமெனவும் படும். அது நூற்றெட்டு.

> ‘சாங்கியயோக துவித சைவர்களுக்கு...நூற்றெட்டு உபநிஷத்துக்களும் பாதகமாம்’ (பே - தி 54)

> ‘...அப்படிப்பட்ட உபநிடதங்கள் நூற்றெட்டில் ஒன்றேனு மின்றே’ (திரு - வி 11)

> ‘நூற்றெட்டு உபநிஷத்துகளெல்லாம் மாயையைப் பொய்யென்று தள்ளி...’ (திரு - வி 11)

என்றது காண்க. வைதிகராவார் யாரும் அந்நூற்றெட்டுள் எவ்வுபநிடதத்தையும் விலக்கி விவகரியார் என்பது தெரிகிறது. இனி வேதத்தைப் பற்றிய அவர் கொள்கையாவ தென்னை? பார்க்கலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'வேதம் வர்ண சமூகங்களாலாய நூல் எனவும், வர்ணங்களெல்லாமழிதன்மாலையவாதலால் நித்தியத்துவம் பெருதெனவும் சிவக்கொழுந்து தேசிகர் சித்தியாரில் விரித்துள்ளாரேயெனின், அது தவறென்பது சமரச ஞான பாநுவில் விளங்கக்கூறினும் ... சிவக்கொழுந்துதேசிகர், தந்த தாலோஷ்ட முயற்சியாலெழுந்த நாதத்தின் விகாரப்பாட்டையே வேதமெனக்கொண்டு மயங்கினர். ஆதலின் அவரது திரிபுணர்ச்சியே வேத மநித்தியம் எனற்குக் காரணமாயிற்று. ஆதலினது தவறென்க. சப்தமய பிரபஞ்சமெல்லாம் தன்னுள் இலயமாகிநிற்கத் தனக்கெஞ்ஞான்று மீறிலாது பரபிரமத்திலொடுங்கி விரியும் நாததத்துவமே ஈண்டு வேதமெனக்கொள்ளப் படுதலால் அவரது விவகாரம் பயன்பெருது என்க. சப்தமே பிரமமெனக்கொண்டு வழங்கும் சப்தபிரமவாதிகளும் பலருளர். அது பரசிவத்துக்கோர் சரீரமும் பரசிவசத்தியுமாதலாலது அநித்தியமாகாது. பரசிவத்திலொடுங்கிவிரியும் சிற்சத்தியுமவ்வாறே கொள்ளப்படும். படவே சற்காரியவாதம் நிலைதளர்ந்துபோம். ஆதலால் சப்தமய பிரபஞ்சத்துக்குக் காரணமாய நாதம் அநாதி நித்தியமே. அதன் காரியம் மறையும். தானீறிலாது நிலைபெறுமென்றே கொள்க' (ப் - வி 9 - 7 - 111)

'வேதம் பரமசிவ மூர்த்தியினிடத்திலிருந்து வெளிப்பட்டதுபோலவே கற்பபேதங்களில் பிரமாவிடமிருந்தும், விஷ்ணுவிடமிருந்தும், ருத்திரனிடமிருந்தும் வெளிப்பட்டதாகக் காணப்படுகின்றமையால், அதற்குக் கர்த்தா இவர்தானென்று குறிப்பிடக் கூடவில்லை. ஆதலாலது அநாதி நித்திய ஸ்வயம்புவென்று தீர்மானிக்கப்படும்' (ப் - வி 7 - 18 - 1)

'சிவபெருமானிடம் வேதம் தோன்றியது என்னும் வாக்கியம் யாதாவதோவெனின், ... அநாதி நித்தியமாயுள்ள வேதம் பரமசிவ மூர்த்தியினிடம் ஒடுங்கிப் பிரதம சிருஷ்டியில் அவரது முகத்தினின்றும் வெளிப்படும். அதனாலே அது சிவப்பிரணீத மென்பதும் குற்றமாகாது. அவ்வளவேயன்றிச் சிவபிரானால் சிருஷ்டிக்கப்பட்டதன்று' (ப் - வி 7-18-1)

'பரசிவனது வாக்கியமென வேதங்களைக்கூறிய பிரமாணம் பொய்யோவென ஓராசங்கையை நிகழ்த்தி ஸ்வரம், வர்ணம், சொற்றொடரிவைகள் மாருது ஓரே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழி ஒவ்வொரு கற்பத்திறுதியிலும் முற்கற்பத்திற்றன் னுளடங்கிய வேதங்களைக் கண்ணுதலார் வெளியிடுவா ராதலானும், அவ்வேதங்களைச் சிருட்டித்தல் பரமனது முயற்சியின்றியமைவதாலும் அவ்வேதங்கள் இயற்கையில் அபௌர்ஷேயமும், செயற்கையிற் பரசிவ முகோற்பன் னங்களு மாகின்றன எனவும், மற்றையவைகளெல்லாம் பௌருஷேயங்களேயாதலால் அவைவேதத்திற் பிந்திய பிரமாணங்களே யெனவும் ... கூறியிருக்கின்றார்' (ப் - வி 9 - 7 - 112)

'வேதமென்பதுதான் யாது? ... எத்தன்மைத்தோ எனின், முன்கூறியவாறே யநாதி ஸ்வயம்புவாய்ச் சப்தசொரூப மாய்நின்று, ... பரமபதியின் தன்மையை உள்ளபடி கூறியும், அதனையடைந்து நித்தியானந்தம் பெறுமுறை யும் விவரித்துக்கூறியும் உயிருக்குபகரிக்கின்ற சிவசத்தி யென்றே துணியத்தக்கது' (ப் - வி 9-7-144)

'என்று சிவமுள்ளதோ அன்றே சிவசத்தியாகிய வேத முள்ளது. சத்தியோகுணமேயாம். குணம் குணியின்றி யில்லை. குணி குணமின்றியில்லை. குணிகுணத்தை யுண்டாக்கிக் கொண்டதில்லை. குணம் குணியைச் சிருஷ் டித்துவிட்டதில்லை. அது சிவத்தோடநாதிதொடங்கி ஒன்றாயும், வேறாயும், அபேதாபேதமாக நிலைபெற்று நிற்பது' (ப் - வி 9 - 7 - 144)

'வேதங்களுக் காக்கியோன் சிவபிரான் என்பது எந்த முதுநூலிலும் காணப்படாததோர் விஷயம். இம்மகா பூதத்தின் உயிர்தலே ருக்கு. யஜுஸ் என்பதாதி வசனங் களால் கண்ணுதற்பிரான் உயிர்தலே வேதங்களென் றுபசரிக்கப்பட்டன' (ப் - வி 7-7-83)

'வேதம் பிரமேயத்தை நோக்கிமட்டு முயர்ந்ததன்று. ஸ்வதப் பிரமாணமாதலும், அபௌர்ஷேய மாதலும், சமஸ்த கலைகளுக்கும் தானே உற்பத்தி ஸ்தானமாய் நின்று, தானென்றினுந் தோன்றாது சுவயம்புவாதல் பற்றியும் மேன்மை யடைந்துள்ளது' (ப் - வி 7-15-8)

'சிவபரஞ்சுடர்க்குச் சரீரமாகக் கூறப்பட்ட வேதம் அச் சிவத்தைப் போலவே அநாதி நித்தியமங்களப் பொரு ளென்றே கொள்ளப்படும் ... பஞ்சாக்ஷரங்களும் ஷடா க்ஷரங்களும் சிவ என்னும் சொல்லும் பலன் தாராது போவதுண்டோ? மேற்குறித்த மந்திரங்கட்கு உயிராய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளது சிவமேயாம். மந்திரங்களெல்லாம் உடம்பு களேயாம். அவ்வுயிராகிய சிவத்தை அறிந்து தியானிப் பினும் அறியாமல் தியானிப்பினும் அம்மந்திரங்கள் பலனளிக்கும் என்பது சாஸ்திரசம்மதமும் அனுபவ ஸித்தமுமாம். அதுபோலவே வேதமாகிய சிவசரீரமும் பலன்கொடுக்கும் என்பதும் நூற்றுணிபும் அனுபவமு மாம். மகந்யாசமென்னும் வேதமந்திரத்தை ஜபிக்குங் கால் தீராத வியாதிகள் தீர்தலும், பேய் பிசாசுகள் விலகிப்போதலும் யாவரும் கண்கூடாகக் கண்டது. ஆண்டு சிவத்தியானமே முக்கியம் என்பதில்லை. மந்திரமே பிரதானமாம். ஏனெனில், உடம்பும் உயிரும் அபேதம் பாராட்டத்தக்கதே யாதலால் ஆண்டவ்வா ராய்ச்சி அநாவசியமாம் என்க. இதுகாறும் கூறியவாற் ருல் வேதமும் சிவமும் அபேதம் என்பது பிரகாசித் தலால்...' (ப்-வி 7 - 15 - 9)

'வேதம் அநாதி ஸ்வயம்புவாயுள்ள அபௌர்ஷேயப் பொருளாம். அதனை ஒருவரும் உண்டாக்கினதில்லை. கற்பங்கள்தோறும் சிவபிரான் முகமாக வெளிப்படுதலே யன்றிச் சிவசிருஷ்டியல்ல. அது சிவத்தைப் பிரதிபாதித் தல் மட்டும் உண்மை. வேதத்துக்கு ஆக்கியோனில்லை' (ப் - வி 7 - 15 - 9)

'வேதாந்த சூத்திர பாஷியகர்த்தர்கள் வேதம் அநாதி ஸ்வயம்புவென்றே தீர்மானங்கூறினுர்கள்' (ப் - வி 9 - 7 - 111)

என்ருரவர். அவர் வேதத்தை மதிக்கிருர். அது மகிழ்ச்சிக் குரியதே. ஆனுல் அம்மதிப்பு வகையற்றதாயிருக்கிறது. அறிஞர் அதைக்கண்டு வருந்தத்தான் செய்வர். அவ்வகையற்ற தன்மை இங்குச் சிறிதே காட்டப்படும். சித்தாந்தசைவர் பரம் பொருளைப் பரசிவம், பரமசிவமூர்த்தி, சிவபெருமான் முதலிய சிறப்புப்பெயர்களால் வழங்குவர். அப்பெயர்களே அம்மேற் கோள்களிற் பெரும்பாலும் எடுத்தாளப்பட்டுள்ளன. ஆனுல் அப்பெயர்களாற் குறிக்கப்படும் பொருள் பாரமார்த்திக சத்தையும் நிர்விசேஷ சைதன்ய வஸ்துவுமாகிய பிரமமா? அல்லது அப்பிரமத்தின் பிரதி பிம்பமும் மாயாசபளித மூர்த்தியு மாகிய ஈசுரனு? மாயாவாதர் அதைத் தெளிவுபடுத்தவில்லை.

நாதம் என்பது ஒரு தத்துவம். அதன் விகாரப்பாடே எழுத்துக்கள். அவ்விகாரப்பாடு பல் நா இதழ் ஆகியவற்றின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முயற்சியாலாவது. அவ்வெழுத்துக்களதுசமூகமே இருக்காதி வேதங்கள். அவ்வேதங்கள் அழியுந்தன்மைய. ஆனால் அவற்றிற்கு மூலமாயுள்ளது அந்நாதம். சப்தப்பிரபஞ்சமெல்லாம் ஒடுங்கி விரிவதற்கிடமாயுள்ளது அத்தத்துவம். அதுதான் மூலவேதம். அதற்கு எஞ்ஞான்றுமழிவில்லை. வேதம் நித்தம் என்பதற்கு அந்நாததத்துவம் நித்தம் என்பதே பொருள். அது பரப்பிரமத்தில் ஒடுங்கிவிரியும். அவ்வளவே என்றாரவர். நாததத்துவம் பரப்பிரமத்தில் ஒடுங்கிவிரியுமென்றால், ஒடுங்கிய நிலையில் அத்தத்துவமும் சத்தைதானா? ஆமெனில், பாரமார்த்திக சத்தைகள் பரப்பிரமமும் நாததத்துவமும் என இரண்டாகும். ஆனால் பரப்பிரமம் ஒன்றே. பாரமார்த்திக சத்தை யென்ற அவர் மதத்துக்கு அது மாறு.

அவர் மதத்தில் சிருட்டிப்படுதலென்பது உண்டா? பரப்பிரமம் மாயையில் பிரதிபிம்பித்து ஈசுரனும், கூடஸ்தபிரமம் அவித்தையில் பிரதிபிம்பித்துச் சீவன்களும், பிரகிருதியோடு கூடிப் பிரபஞ்சமுமாம் என்பது அவர் மதம். நாததத்துவம் விரிதலாவது ஸ்வரம், வர்ணம், சொற்றொடர் முதலிய வாதல். அத்தத்துவம் எதிற்பிரதிபிம்பித்து அப்படியாயிற்று?

வேதம் பரப்பிரமத்துக்கோர் உயிர்ப்பு, சரீரம், சத்தி. ஆதலால் அப் பரப்பிரமம்போல் அவ்வுயிர்ப்பு முதலியவும் அழியா. அங்ஙனமாக அவ்வுயிர்ப்பு முதலியவாயிருக்கும் அந்நாததத்துவமாகிய வேதமாத்திரம் எப்படி அழிவுடையதாகும்? அதுவும் அப்பிரமம்போல் நித்தமே. இப்படிச் சொன்னாரவர். பரப்பிரமத்துக்கு உயிர்ப்போ சரீரமோ சத்தியோ எதுவும் இருக்கமுடியாது. ஏன்? சத்தியை வைத்துஅதைக் காணலாம். வேதம் உயிருக்கு உபகரிக்கிற பரப்பிரம சத்தி. ஆகலின் வேதமும் அநாதியாகி அப்பிரமத்துக்கு ஒன்றாயும் வேறாயும் நிற்பது என்றாரவர். வேதமாகிய அப் பிரமசத்தி அப் பிரமத்துக்குப் பின்னாசத்தியா? அபின்னாசத்தியா? அநிர்வசனீயமா? நிர்வசனீயமா? நிர்விசேஷ சைதன்ய பிரமத்துக்கு நிர்வசனீய சத்தியிருக்க முடியாது. இருந்தால் குணகுணி அதாவது சத்தி சத்திமான் என்கிற இரட்டை தொனித்து நிர்விசேஷம் என்கிற அப்பிரம விலக்கணம் தொலையும். அப்பிரமம் குணியும் வேதம் குணமுமாகிக் குணிகுண சம்பந்தமாகிய தாதான்மிய சம்பந்தமே ஒன்றாயும் வேறாயும் நிற்பதென்பதற்குப் பொருள். அப்படியானால் நாததத்துவம் குணமும் அப்பிரமம் குணியுமாதல் தெரிகிறது. அப்பிரமமோ சைதன்யம். அத்தத்துவம் அசேதனம். சைதன்ய வஸ்துவின் குணம் அசேதன மாதலுமுண்டோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதமென்பது ஸ்வரம், வர்ணம், சொற்ருெடர்கள் மாருமல் முன்கற்பமுடிவில் கண்ணுதலாரிடம் ஒடுங்கிக்கிடக்கும். மறுகற்பத் தொடக்கத்தில் அவர் அதனை அப்படியே வெளியிடுவர். அவ்வளவுதான். அதனைச் சிருட்டிப்பவர் அவரல்லர். அவரது முயற்சியின்றியே அது உருப்பெற்று வெளியாம். அதனல் அது இயற்கையில் அபௌருஷேயம், நித்தம், சுயம்பு; செயற்கையில் பரசிவ முகோற்பன்னம். இஃதவர் கொள்கை. ஸ்வரம் முதலியன காரியம். நாததத்துவம் அதன் காரணம். காரியத்தின் சூக்குமநிலை காரணம். காரணத்தின் தூலநிலை காரியம். காரணத்திலிருந்து காரியத்தைத் தோற்றுபவனும், காரியத்தைக் காரணத்தில் ஒடுக்குபவனுமே கர்த்தா. ஸ்வரமுதலியவற்றை ஒடுக்கும்போது காரணரூபத்துக்கு மாற்றித்தான் அவன் ஒடுக்குவான். நாததத்துவம் நித்தம். அதில் வேதம் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும். கர்த்தா அதை ஸ்வரம்முதலியவாக மீளச்சிருட்டித்து வேதமாக்குவான். இதுதான் சற்காரிய வாதமென்பது. மாயாவாதரோ அசற்காரியவாதிகள். அவரால் வேதவிஷயத்தில் சற்காரியவாதத்தை தள்ளமுடியவில்லை. என்செய்வாரவர்? பாவம். வேதத்துக்கு முதற்காரணம் நாததத்துவமெனக் கொண்டாரவர். ஆனல் அதை அப்பிரமத்துக்கு ஓர் அநிர்வசனீய பின்னுசத்தியென்பது அவர்கொள்கையா? அன்றென்றுதான் சொல்லவேண்டும். அப்படியே பொருட் பிரபஞ்சத்துக்கும் அநிர்வசனீய பின்னுசத்தியாகிய மாயையைவிட்டு அப்பிரமத்துக்கு உயிர்ப்பு, சரீரம், சத்தி, குணம் போன்றதொரு மாயையை உபாதானமாக அவர் கொண்டிருந்தாராயின் அந்த அளவுக்காவது அவரது வாதம் அறிவின்பாற் பட்டதாயிருந்திருக்கும். அஃதில்லை. எவன் கர்த்தாவாயிருந்து நாததத்துவ வுபாதானத்தால் வேதத்தைக் காரியப்படுத்தி வெளியிட்டுப் பாரம்பரியத்தில் வைத்தானே அவனே 'வேதாந்த க்ருத்' என்றது உபநிடதம். அவன்ருன் சிவன்.

வேதம் ஒரு கற்பத்தில் பரசிவமூர்த்தியிடத்திலிருந்தும், இன்னெரு கற்பத்தில் பிரமனிடத்திலிருந்தும், பின்னெரு கற்பத்தில் விஷ்ணுவினிடத்திலிருந்தும், வேருெரு கற்பத்தில் உருத்திரனிடத்திலிருந்தும் வெளிப்படும். ஆகலின் வேதத்துக்குக்கர்த்தா இவர்தானென யாரையுஞ் சொல்லமுடியாது. அது பற்றியும் வேதம் அநாதி, நித்தம், சுயம்பு எனத்துணியப்படும். இப்படியும் அவர் சொன்னுர். வேதம் பிராமணரறிவில் இருந்தது. அவர் ஓதுகிருர். ஸ்வரம், வர்ணம், சொற்ருெடர் வடிவில் அது அவர்வாயிலிருந்து வெளிவருகிறது. அது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாரம்பரிய விஷயம். அப்படித்தான் அவ்வேதம் பிரமன் விஷ்ணு உருத்திரன் வாயிலிருந்து வந்திருக்கவேண்டும். அது கற்பாரம்ப விஷயம். வேதத்தின் உற்பத்திக்கு எப்படி அந்தப் பிராமணர்வாய் மூலமில்லையோ அப்படியே அந்தத் தேவர்களின் வாயும் மூலமில்லை. வேதத்துக்குக் கர்த்தா பிராமணர்களல்லாததுபோல் அத்தேவர்களுமல்லரென்பது கருத்து. அவ்வேதம் பரசிவமூர்த்தியிடத்திலிருந்தும் அப்படித்தான் வந்தது. அவர்வாயும் அந்தப் பிராமணர் வாய்போன்றதேயாம். இப்படி யிருக்கிறது அவரது வாதம். வேதத்துக்குக் கர்த்தாவாவார் இவர்தானென யாரையுஞ் சொல்லமுடியாதென்றொரு காரணத்தைக் கற்பித்துக்கொண்டு அதனால் வேதம் யாராலுஞ் செய்யப்படாததென முடித்தாரவர். நேரியமுறையில் வாதித்து வேதத்துக்குக் கர்த்தா இவர்தானென எடுத்துக் காட்டினால் அதை அங்கீகரிக்கக்கூடிய நன்மனமாவது அவருக்கிருத்தலவசியம். அஃதிருந்தால் அதுவே போதும். வேதத்தை யாக்கியோன் சிவனே. அதற்குப் பிரமாணமுண்டு. அதனை அவரும் அங்கீகரித்திருக்கிறார். அது மேற்கோளிற் காணப்படும். ஆனால் அதற்கவர் பொருந்தாப்பொருள் கொள்கிறார். அவர்பாலுள்ள மாயாவாத மருட்சியே அதன்காரணம்.

வேதம்போல் உயிர், ஆணவம், ஆதியவும் சிவனால் சிருட்டிக்கப்படாதனவே. ஆகலின் அவையும் அநாதி, நித்தம். ஆயினும் அவற்றுள் எதுவும் தானாக இயங்காது. அவையெல்லாம் பலபடியாலும் தொழிற்படுவது சிவனாலேயாம். அவனிடம் கர்த்திருத்துவமிருப்பதே அதற்குக் காரணம். அவனன்றி அணுவுமசையாது. அக்கர்த்திருத்துவம் பற்றியே அவனுக்குப் பரத்துவம் உளதாயிற்று. அவனே வேதத்தை உருப்படுத்தினானென்பது சந்தேகமற்ற உண்மை. வேதம் சிவன் தந்த விதிவிலக்கன்று. தனக்கெனச் சுதந்தரமுடையதென்றால், அவ்விதிவிலக்கை ஆன்மாக்களிடம் அவன் ஏன் வற்புறுத்தவேண்டும்? வற்புறுத்தும்படி அவனுக்கும் அவ்வேதம் கட்டளையிடுகிறதா? அக்கட்டளையை அவன் மறுத்தால் அவனை அவ்வேதம் என்ன செய்துவிடும்? வேதத்தை மதிக்கத் தெரியாமல் மதித்துச் சிவநிந்தையில் இறங்கினர் மாயாவாதர்.

மாயாசபளித ஈசுரனென ஒன்று அவர் மதத்திலுண்டு. அவ்வீசுரன் சிருட்டித்ததே வேதம் என்னலாமவர். அவ்வீசுர சிருட்டிப்பிரபஞ்சமுழுக்க விவர்த்தமென்பதே அவர் மதம். அதனால் வேதமும் விவர்த்தமென்றே முடியும். அந்த சப்தப் பிரபஞ்சமாத்திரம் நித்தமாதல் எப்படி ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதம் ஸ்வதப்பிரமாணம், சமஸ்த கலைகளுக்கும் உற்பத்தி ஸ்தானம் என்றுரவர். அது சரி. ஆனால் அபௌருஷேயம், சுயம்பு என்பவற்றின் பொருளை அவர் அறிந்திலர். புருஷனால் அதாவது மனிதனால் அதாவது உயிரால் செய்யப்படாத தாகலின் வேதம் அபௌருஷேயம் எனப்பட்டது. சிவபிரான் சுயம்பு எனப்படுவான். அவனே வேதத்தை ஆக்கியோன். கர்த்தாவின் பெயர் கிரந்தத்துக்காயிற்று. திருவள்ளுவர் செய்த திருக்குறளுக்குத் திருவள்ளுவர் என்ற பெயரிருப்பது போல் சுயம்பு ஆக்கிய வேதத்துக்குச் சுயம்பு என்ற பெயர் வரலாயிற்று.

சிவத்தியானமின்றியே வேதமந்திரங்கள் பலன் தரும் என்றுரவர். சிவசத்தி யதிட்டித்தாலன்றி வேதமந்திரமெதுவும் பலனளிக்கும் வலிபெறாது.

வேதாந்த சூத்திரபாஷ்ய கர்த்தாக்கள் வேதத்தை அநாதி, சுயம்பு எனக் கூறித் தீர்ப்பளித்தார்கள் என்றுரவர். அக் கர்த்தாக்கள் கொண்ட பொருளில் அத்தீர்ப்புச் செல்லாது. மேலே செய்த விசாரங்காண்க. அன்றியும் அப்பாஷ்யகாரருள் சங்கரமுனிவரை

'ஈஸ்வரன் மாயா பிரதிபிம்பர் ... இவரே சீவகாருணியத் தால் சங்கராசாரியராக அவதரித்தார்' (ப்-வி 6-21.382)

'நாம் துரியசிவன், சிவனடியாராகவாவது சங்கராசாரியா ராகவாவது தோன்றியதாய்க் கூறவில்லை. உருத்திர மூர்த்தியின் அம்சமே பிறந்ததாகக் கூறினோம். உருத்திர மூர்த்தி பிறந்தார் என்பதற்குப் பிரமாணமுங் காட்டி னோம். அப்படிப் பிறந்தாலும் பிறப்புத் துன்பமில்லை யென்றும் மாயாசம்பந்தமில்லை யென்றும் சீவகாருண் யத்தால் பிறந்தனரென்றும் கூறினோம்' (ப்-வி 6-22-397)

என்றதால் மூலப்பகுதியின் விகிருதமாய சத்துவகுண மென் னும் மாயையிற் பிரதிபிம்பமாய ஈசுரனுடைய அல்லது அம் மாயையிலிருந்துண்டாகிய தாமதகுணத்தில் அவ்வீசுரப் பிரதி பிம்பமாகிய உருத்திரனுடைய அல்லது அவ்வுருத்திரனின் அம்சத்தினுடைய அவதாரமென்பர் மாயாவாதர். அம்முனிவர் துறவுபூண்ட வரலாறும், சீவவர்க்கத்துட்பட்ட ஒருவரைக் குருவாகக்கொண்ட வரலாறும், அமரகம் என்னும் காமநூல் இயற்றிய வரலாறும், நோய்களுக் குள்ளான வரலாறும் பிறவும் பிரசித்தம். இராமாநுஜ முனிவரை ஆதிசேஷனுடைய அவதாரம் என்பர் வைணவர். மத்வமுனிவரை வாயுவினுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவதாரம் என்பர் மாத்வர். அப்பாஷ்யகாரர் ஈசுரனே, சேஷனே, வாயுவோ யாரேனுமாக. அவரெல்லாம் பாஷ்ய காரராயிருந்தபோது மாயாவாதப் பார்வையில் அவித்யோ பாதிகராகிய சீவன்களாகவேயிருந்தனர். ஆயினும் சாமானிய நிலையை அவர் ஒவ்வோரளவில் தாண்டியவராயிருக்கலாம். தர்க்கவியாகரண பாண்டித்திய முடையவராய் வேதவேதாந்த விற்பன்னராய் அவர் விளங்கினது வாஸ்தவம். அவருள் ஒவ்வொருவரையும் நாளிதுவரை பின்பற்றி வாழும் மாந்தரும் லட்சோப லட்சமாவர். அப்பாஷ்யகாரரின் தவமிருந்த அள வுக்கு அவர்பால் ஞானம் வெளிப்படலாயிற்று. அவர்க்குள் இருந்து அதைப் பிரகாசிப்பித்தவன் சிவபிரான். அவனுல் அவருக்குச் சீவசுபாவம் ஓரளவு மடங்கிற்று. அவ்வளவில் அவர் தம்பாஷ்யங்களையியற்றினர். அவையும் தம்முள்முரணிக் கிடப்பன. வேதம் சுயம்புவென அவர் சொன்னரென்பதற் காக அதனை மற்றவரும் சம்மதிக்கவேண்டுமா? வேதம்தான் சுயமே தோன்றியதென்னும் பொருளில் தன்னைச் சுயம்புவென யாண்டுஞ் சொன்னதில்லை.

வேதம் அபௌர்ஷேயம் என்ற அளவில் அவர்மதம் நின்றிலது. புராணங்களும் அபௌர்ஷேயம் என்றுரவர்.

> 'புராணங்கள் அபவுருஷேயமென்பதூஉம், சிவபெரு மானிடத்து நந்திதேவரும், அவரிடத்துச் சநற் குமாரரும், அவரிடத்து வியாதமுனிவரும், முறையே புராணங்களைக் கேட்டுக்கொண்டார்களெனக் காண்ட லால் வியாதமுனிவர் புராணங்களைச் செய்தவரல்லரென் பதூஉம், பெறப்படுதலினென்க' (ப்-வி 6-14-260)

என்றது காண்க. அபௌர்ஷேயம் என்ற சொல் இன்னும் எந்தெந்த நூல்களையெல்லாம் கொண்டுவந்து போட்டு வரம் பழியுமோ? தெரியவில்லை.

சிவாகமப் பிரமாணம்

பிராமணர் முதல் வருணத்தவர், ஆரம்பத்திற் சைவசமயத் தவர். ஆனல் இடைக்காலத்தில் போகூழ் அவரைப் பற்றியது. அதனுல் நிகழ்ந்த சம்பவம் ஒன்று,

> 'புரா தாருவநே புண்யேமுநயோ க்ருஹமேதிந:
> ஈச்வராராதநார்த்தாய தபச்சே ருஸ்ஸஹஸ்ரச: ||
> தத: கதாசிந்மஹதீ காலயோகே ந துஸ்தரா
> அநாவ்ருஷ்டி ரதீவோக்ராஹ்யாஸீத்பூத விநாசி நீ ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸமேத்ய: ஸர்வேமுநயோ கௌதமம் தபஸாம்நிதிம்
அயாசந்தக்ஷுதாவிஷ்டா ஆஹாரம் ப்ராணதாரணம் ||
ஸதேப்ய: ப்ரததா வந்நம் ம்ருஷ்டம் பஹுதரம்புத: ||'

'கோவத்யேயம் த்விஜச்ரேஷ்டம் யாவத் தவசரீரகா
தாவத்தேந் நந்ந போக்தவ்யம் கச்சாமோ வயமேவஹி||'

'பவிஷ்யந்தி த்ரயீபாஹ்யா மஹாபாதகிபிஸ்ஸமா:
பஹுசஸ்தே ததா சாபாஜ்ஜாயமாநா: புந: புந: ||

ஸர்வே ஸம்ப்ராப்ய தேவேசம் சம்கரம் விஷ்ணுமத்வயம்
தஸ்மாத்திவேத பாஹ்யாநாம் ரக்ஷணார்த்தாயபாபிநாம் ||

விமோஹநாயசாஸ்த்ராணிகரிஷ்யயாவோவ்ருஷத்த்வஜ
ஏவம் ஸம்போதிதோ ருத்தோ மாதவே ந முராரிணு ||

சகார மோஹ சாஸ்த்ராணி கேசவோ பி சிவேரித:
காபாலம் லாகுளம் வாமம் பைரவம் பூர்வ பச்சிமம் ||
பாஞ்சராத்ரம் பாசுபதம் ததாந்யாநி ஸஹஸ்ரச: ||'

(கூர்ம. பூர்வ. அத் 16) என்பதது.

"'முன்னோர்காற் கிரகஸ்தாச்சிரமிகளாகிய முனிவர்கள் ஆயிரக்கணக்காயினோர் திவ்யமாகிய தாருவனத்திலே சிவாராதனையின் பொருட்டுத் தவஞ் செய்துவந்தார்கள். காலபேதத்தினால் ஓர் காலத்துப் பெரிதாயதும், கடத்தற் கரியதும், அதிக உக்கிரமுடையதும், உயிர்களை வதைக் கற்பாலதுமாய ஓர் துர்ப்பிக்ஷம் உண்டாயிற்று; அப் போதுதபசுக்கு நிதியாயுள்ள கவுதமரை அம்முனிவரெல் லாம் அடைந்து பசியினால் வருந்திப் பிராணதாரமாகிய ஆகாரம் வேண்டுமென அவரை யாசித்தார்கள்; அம் முனிவர் அவர்கட்கு மிகுதியாகப் பாகஞ்செய்யப்பெற்ற அன்னமளித்தார்; பின்னர் அச்சம் யாதுமின்றி அவரது ஆச்சிரமத்தில் இருந்து பன்னிரு வருஷம் உண்டு வரு வாராக, துர்ப்பிக்ஷம் நீங்கிற்று; மழைபெய்து நாடு செழித்தமையால், அவர்கள் அவ்வாச்சிரமம் விடுத்துத் தம்முறைவிடம் போதற்கு முயன்று முனிவரிடம் வந்து அநுமதிகேட்க, அவர் பின்னும் சிலகாலம் தமது ஆச்சிரமத்திருந்து சுகமே உண்டு வாழுமாறு கூறி, அவர்களைப் போகாவண்ணம் தடுத்தார்; அப்போது அம்முனிவர்கள் மாயாரூபமான கரியபசு ஒன்றை (மந்தி ரத்தினால்) ஆக்கி, கவுதமர் சமீபத்தில்நிற்குமாறு செய்ய,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்முனிவர் அப்பசுவைக் கொட்டத்திற் கொணர்ந்து கட்டித் தொட்டமாத்திரத்தில் அது வீழ்ந்திறந்தது; இவ்விஷயத்தை முனிவர் அறியாது கோஹத்தி நிகழ்ந்து போயிற்றே என்று சோகித்தார். '(அம்முனிவர்கள் கவுதமரை நோக்கி) விப்பிரசிரேஷ்டரே! இது பசுக் கொலை; நுமதுசரீரம் நீங்கும்வரையும் நுமது அன்னம் புசிக்கற்பாலதன்று; நாங்கள் (இவ்விடத்தை விட்டுப்) போகின்றேம்' என்று கூறிப்போய்த் தமது தாரு வனத்தை அடைந்தார்கள்; இவர்கள் மாயத்தினுல் நேர்ந்த கோவதையைக் கவுதமமுனிவர் அறிந்து அவர் களைச் சபித்தார். 'மகா பாதகிகளை நிகர்த்து வேதபாகி யர்களாய் ஆவார்கள்' என. அவர்கள் அநேகமாய்ச் சாபத்தினுல் மீட்டும் மீட்டும் பிறந்து, (மாயாதத்துவ) உருத்திரரையும் அவ்வியயராகிய நாராயணரையும் ஸ்தோத்திரஞ் செய்தார்கள்; அப்போது மோக சாஸ் திரங்களைச் செய்வோம் என்று மாதவராகிய முராரி யினுல் உருத்திரர் வேண்டப்பட்டும், கேசவர் உருத்திர ரால் உஞற்றப்பட்டும் மோக சாஸ்திரங்களைச் செய் தார்கள்; காபாலம், இலாகுளம், வாமம், பைரவம், பாஞ்சராத்திரம், பாசுபத முதலிய மற்றைய ஆயிரக் கணக்காய (மோகசாஸ்திரங்களை) உண்டாக்கினுர்கள்''

என்பது அப்புராணத்துக்குத் தமிழ். இதைத் தந்தவர் காசி வாசி - செந்திநாதையர். அவரியற்றிய 'வச்சிரதண்டமும் தாந் திரிக துண்டகண்டன கண்டனமும்' என்ற நூல் காண்க. அச்சபிக்கப்பட்ட முனிவர்கள் பிராமணர்தாமென்பதை

'ப்ராஹ்மணு: கேசிதாலோக்ய விசிஷ்டா முநிஸத்தமா:
கௌதமஸ்யாச்ரமம் புண்யம்யயுஸ் ஸர்வே மஹத்தரம்,'

என்ற யஞ்ஞவைபவ கண்டத்து 32ஆம் அத்தியாயத்தாலறிக. அங்ஙனம் அவ்வருணத்தார்க்குக் கௌதம முனிவராற் சாபங் கிடைத்தது. கௌதமர்போல் ததீசி நந்தி முதலியோரும் அவரைப் பல சந்தர்ப்பங்களிற் சபித்தனர். அச்சாபம் அவரை வழிவழியாகவும் பற்றிக்கொண்டது. அவையெல்லாம் புராணப் பிரசித்தம். அப் பிராமணர் அதுமுதல் என்னவாயினர்? வேதப்பயன் சைவம். அவர் வேதத்தை ஓதிவரலாயினர். ஆனுல் அப்பயனைக் கைவிட்டார். அவர் சைவசமயத்தைவிட்டு விலகி, மேலே சொன்ன மோக சாஸ்திரங்களின் வழியொழுகி அவைதிக சமயங்களைத் தழுவநேர்ந்தது. அச்சாபத்துக் கிரையாகிப் போனவர் வைஷ்ணவப் பிராமணர் முதலியோரே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யன்றி மாயாவாதப் பிராமணராகிய தாமல்லரென்பார் சுமார்த்தர். அது தவறு. இமயத்தில் உமையம்மை செய்துவந்த தவத்தைச் சிவனுர் விபூதிருத்திராக்ஷ மணிந்த பிராமண முதியோர்வடிவில் வந்து அவ்வம்மையிடம் பொருந்தா வசனங்களைப்பேசினுர். அவரைப் பார்த்து அவ்வம்மை

> 'முறைபடு சுருதியெல்லா மொழியினு மதுவே சார்வா,
> வுறுகில ராகிப் பொல்லா வொழுக்கமே கொண்டு முக்
> கண், ணிறைவனை யிகழ்ந்து மூத்தி யெய்திடா துழல
> முன்னுண், மறையவர் பெற்ற சாப நின்னையு மயக்கு
> ருதோ' (கந்த. தவங். செய் 21)

என்றதால் அவரும் அதிலகப்பட்டவரே யென்க. ஆனுல் மோகசாஸ்திரக் கூட்டத்தில் மாயாவாத சாஸ்திரம் சேரவில்லையே யென்னலாமவர். அதுவுஞ் செல்லாது. மாயாவாதத்துக்குப் பிரச்சன்ன பவுத்தம் என்பது மற்றொருபெயர். பிரச்சன்ன - மறைந்த.

> 'மாயாவாத மதச்சாஸ்த்ரம் ப்ரச்சந்ந பௌத்தமுச் யதே' (பாத்ம. பக் 1834. அத். 263. சுலோ 70. பூனு நகரப் பதிப்பு)

என்றதும்,

> 'பாஞ்சராத்ரேச காபாலே ததா காளாமுகே பிச
> சாக்தேச தீக்ஷிதா யூயம் பவத ப்ராஹ்மணுதமா: ||
> பௌத்தேசார்ஹந்மதேசைவததா பாசுபதே பிச
> சாம்பவேதீக்ஷிதாயூயம்பவதப்ராஹ்மணுதமா:||' (ஸ-தெ)

> 'பாஞ்சராத்திரம், காபாலம், காளாமுகம், சாக்தம் என்பவற்றில் தீக்ஷிக்கப்பட்டு நீங்கள் பிராமண அதமர்களாவீர்களாக; பவுத்தம், ஆருகதம், பாசுபதம், சாம்பவம் என்பவற்றில் தீக்ஷிக்கப்பட்ட நீங்கள் பிராமண அதமர்களாகுக' (மேலதன் தமிழ்)

என்றதும் காண்க. மாயாவாதமும் மோகமென்பது விளங்கும்.

இருக்குமுதலிய நான்கும் வேதம். காமிகமுதலிய இருபத்தெட்டும் சிவாகமம். அவ்விரண்டும் ஏககாலத்தில் தோன்றியவை. அவற்றிற்கு வக்தா சிவபிரான். வேதம் சூத்திரம் போல்வது. அதன் பாஷ்யம்போல்வது சிவாகமம். அவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுத்தாத்வைதமே போதிப்பன. சிவாகமத்தை விட்டால் வேதம் துரர்த்தத்துக்கிடந்தரும். சங்கரமுனிவர் அவ்வாகமத்தைவிட்டார். ரிஷிப்ரோக்தங்களாகிய சில நூல்களைக்கொண்டு வேதத்துக்கு அர்த்தம்பண்ணியே அவரால் சாதிக்கப்பட்டது கேவலாத்வைதம். சிவவாக்காகிய சிவாகமத்தின் முன் ரிஷிவாக்குக்கள் அப்பிரமாணமாய் ஒதுங்கும். அவரது கேவலாத்வைதத்துக்குச் சிவாகமநிராகரணம் அவசியமாயிற்று. அதனால் வேதம் சுயம்பு. சிவாகமம் அங்ஙனமன்று, பௌருஷேயமே என அவர் சொல்லிவைத்தார். சிவபிரான் பரம கருணாசாலி. அக்கருணையின் விளைவே வேதம் என்பதைத்தானும் அவர் சம்மதித்திலர். ஆனாலும் மாயாவாத பண்டிதருட் சிலர் பலர் தம் நூலுரைகளில் ஆண்டாண்டு எடுத்தாண்டு மதித்த சிவாகமப் பகுதிகளுமுள. அப்படியிருந்தும் மாயாவாதப் பார்ப்பனரெல்லாம் சிவாகமத்தை அப்பிரமாணமாகக்கொண்டு உதாசீனஞ் செய்யத்தக்க நிலையை அம்முனிவர் உண்டாக்கி விட்டார். என்னே மேற்கண்ட சாபத்தின் வலி !

ஆகமம் மூன்றுவகை. அவற்றுள் வேதவிரோதமானது ஒன்று. வேதத்தோடு இயைந்தவை இரண்டு.

பாஞ்சராத்திரம், பாசுபதம், சாம்பவம், லாகுளம். வாமம் (சாக்தேயம்), பைரவம், காபாலம், பவுத்தம், ஆருகதம் என்பன முதல்வகை. ஆயுர்வேதம், தநுர்வேதம் என்பனபோல் பாஞ்சராத்திராகமம், பாசுபதாகமம் என்றே வழங்கப்படும். வேதம் என்ற மாத்திரத்தில் அது ஆயுர்வேத முதலியவற்றைச் சுட்டாது. அப்படியே ஆகமமென்ற சொல்லும் தான்மாத்திரமாய்நின்று பாஞ்சராத்திராகம முதலியவற்றைச் சுட்டுவதில்லை. வேதாகமம் என்ற அளவில் வேதம் இருக்காதியும், ஆகமம் காமிகாதியுமேயாம்.

இரண்டாம் வகை காமிகாதி. அது சிவாகமமென்றும், சித்தாந்தமென்றும் வழங்கப்படும்.

ருரு, ததீசர், அகஸ்தியர், உபமன்னியர் என்ற நான்கு முனிவராலும் செய்யப்பட்ட ஆகமம் மூன்றாம்வகை. அது நூறுகோடி விஸ்தரத்தையுடையது. நூறுகோடி என்பது நூறுகோடி வாக்கியம்போலும்.

புராண இதிகாசங்கள் ஆகமத்தைச் சிரௌதம் எனப் போற்றிப் புகழும். அச்சிரௌதாகமம் இம்மூன்றாம்வகையே என்பது மாயாவாதப் பார்ப்பனர் கொள்கை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'சதகோடி கிரந்தங்களுடன் அமைந்ததும் ருரு, ததீசர், அகஸ்தியர், உபமன்னியு என்னும் நான்கு மகரிஷிகள் வழி உலகிற் பிரசித்தி பெற்றதுமான சிரௌதாகமங் களையே வைதிகம் என்றனர்' (ப் - வி 6-16-294)

என்றது காண்க. ஆனல் காமிகாதியவற்றில் சில வாகமங் களாயினும் இன்றும் இருந்து வருகின்றன. அச்சதகோடி கிரந்தங்களிலோ ஒன்ருயினும் இப்போது கிடைத்திலது. சங்கரமுனிவராதியோரின் நூலுரைகளில் எடுத்தாளப்படவும் இல்லை. அக்கிரந்தங்கள் எவ்வுலகில் எக்காலத்தில் எப்பிரசித்தி பெற்றிருந்தனவோ? அன்றியும்,

'தமிழருக்குத் தமிழில் அபிமானமிருந்தால் ஆரியர்கள் வருவதற்குமுன் வழங்கிய சுத்தத் தமிழ் நூல்களை யெல்லாம் பாதுகாக்கமாட்டார்களா? இதனுல் ஆதி காலத்திலிருந்த தமிழருக்கே தமிழில் அபிமானமில்லை என்பது தெரியவில்லையா?' (மு - மை 80)

எனத் தொடர்ந்து தமிழரை அச் சுவடியில் குறைகூறிய அவர் அந்நூறுகோடி கிரந்தத்தையும் பறிகொடுத்தனரே. ஏன்? இல்லாத தமிழ்நான்மறை இருந்து கடல்கொள்ளப்பட்டுப் போயிற்று எனக்கூறி இருந்துவரும் வடமொழி இருக்காதி வேதத்தைப் பழிப்பர் தனித்தமிழ்ப்பற்றினர். அவர்போல் இருந்து அறவே மறைந்துபோன மூன்றும் வகையைப் புகழ்ந்து பேசி இன்றும் இருந்துவருகிற இரண்டாம்வகை யாகிய காமிகாதியவற்றைப் பழித்துவருவார் மாயாவாதப் பார்ப்பனர். மேலும் அச்சதகோடி வேறொரு முதலாகமத்தைச் சுருக்கியும் விளக்கியும் அந்த ருருவாதியரால் செய்யப்பட்ட தாக வாயு சங்கிதைத் தமிழ்ச்செய்யுள் கூறுகிறது. 'கடியதாகிய' 'விரியுமாகமம்' எனத் தொடங்கும் செய்யுட்கள் காண்க. அம்முதலாகமந்தான் காமிகாதி.

முதல்வகையிலுள்ள பாசுபதமோ சாம்பவமோ சித்தாந்த சைவமன்று. சித்தாந்தசைவம் அம்முதல்வகைச் சமயங்களைத் தனையும் நன்கு கண்டித்துளது. அதன் பாலபாடத்தைப் படித்தவரும் அவ்வுண்மையை யறிவர். சுமார்த்த பண்டிதரும் அதனை அறியாரெனச் சொல்லமுடியாது. மூன்றும் வகையும் உருத்தெரியாமற் போயிற்று. எஞ்சிநிற்பது இரண்டாம் வகைதான். அவ்வாகமந்தான் சித்தாந்தசைவப் பிரமாண நூல். மாயாவாதரின் தூஷணைக்கு இலக்காய் நிற்பதும் அக்காமிகாதிதான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாஞ்சராத்திரம் ஒருமதம். அதற்குரிய ஆகமம் பாஞ்சராத்திராகமம் எனப்படும். பாசுபதமென்னும் மதத்துக்குரிய ஆகமம் பாசுபதாகமம் என்பது. அப்படியே முதல்வகையில் உள்ள மற்றை மதங்களுக்குரிய ஆகமங்களும் அவ்வம்மதப் பெயரால் வழங்கப்படுவதை அறியலாம். மதங்களெல்லாம் வித்தியாசப்படும்போது அத்தனை மதங்களுக்கும் ஒரே ஆகமம் பிரமாணநூலென்பது அறியாமை. இரண்டாம்வகை யாகமம் எந்தமதப்பெயருங் கொண்டதில்லை. இருக்குவேதம், எசுர் வேதம் என்றல்போல் காமிகாகமம், காரணுகமம், வாதுளாகமம் எனத்தனித்தனி பெயர்பெறும். புராணேதிகாசங்களில் அவைதிகமென ஓதுக்கப்பட்ட ஆகமங்களெல்லாம் மேலே சொன்னபடி அவ்வம் மதப்பெயர் பெற்ற ஆகமங்களேயாம். அதுகொண்டு எங்காவது மதப்பெயரில்லாமல் ஆகமமென மாத்திரங்கூறி ஒதுக்கப்பட்டிருந்தால் அது அம்முதல்வகையாமென்றும், வைதிகமெனப் புகழப்பட்டிருந்தால் அது இரண்டாம் வகையாமென்றுந் துணியப்படும்.

இருளை உருத்தெரியாமல் அடக்கவல்லது சூரியனென்றே. அதுபோல் மாயாவாதத்தைச் சித்தாந்த சைவமொன்றே யடக்கவல்லது. அதனுல் மாயாவாதர் அச்சைவத்தின்மேற் சீறினர். அச்சீற்றமே அவ்விரண்டாம்வகை யாகமத்தை நோக்கி அவர் அள்ளிவீசிய தூஷணம். முதல்வகை யாகமத்தின்மேல் புராணேதிகாசங்கள் ஏற்றிய தூஷணத்தையெல்லாம் அவ்விரண்டாம் வகை யாகமத்தின்பால் அவர் திருப்பினர். முதல்வகை யாகமதூஷணம் புராணேதிகாசப் பிரசித்தமாகலின் தகும். ஆனுல் அதை அவர் இரண்டாம் வகையாகிய காமிகாதியின் மேற் சுமத்தியது தகுமா? அதைச் சிறிதே பார்க்கலாம். அவர் தமக்காதரவாக வாயுஸம்ஹிதை, பூர்வபாகம், 28-ம் அத்தியாயத்திலிருந்து எடுத்துக்கொண்ட வாக்கியம்.

'சைவாகமோபித் விவிதச்ச்ரௌதோச்ச்ரௌதச்ச கீர்த்தித:
ச்ருதிஸாரமய ச்ரௌத: ஸ்வதந்த்ர இதரோமத: ||
ஸ்வ தந்த்ரோ தசதா பூர்வம் ததாஷ்டாதசதா புந: ||'
(ப் - வி 11 - 4 - 80)

'காமிகாதி ப்ரபேதேந ஸித்தஸ் ஸித்தாந்த ஸஞ்ஜ்ஞிதா:
ச்ருதிஸார மயோந்யஸ்து சதகோடி ப்ரவிஸ்தர: ||'
(ப் - வி 11 - 5 - 63)

என்பது அவ்வாக்கியத்துக்கு அவர் கண்ட தமிழ்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'சைவாகமமும் வைதிகம் அவைதிகமென்று இருவகைப் படும். ஒன்று வேதசாரமயம். மற்றது சுதந்திரம். சுதந்திரம் முன் பத்தும் மீண்டும் பதினெட்டுமாகவுள்ளது. காமிகாதி வேற்றுமைபெற்றது சித்தாந்தம் என சஞ்ஞையுள்ளது. வேருன வேதசாரமயமோ சதகோடி கிரந்தமுள்ளது' (ப் - வி 11 - 5 - 63)

என்பது. காமிகாதி அவைதிகம், ஆகலின் தள்ளத்தக்கது; மூன்ரும்வகையே வைதிகம். ஆகலின் கொள்ளத்தக்கது என்பது அவ்வாக்கியத்துக்கு அவர்கண்ட பொருள். இனி அவ்வாக்கியத்துக்குச் செந்திநாதையர் கண்ட பொருளைப் பார்க்கலாம். அவர் முதலில் ஸநத்குமார ஸம்ஹிதையிலிருந்து ஒரு பிரமாணத்தை எடுக்கிருர்:

'ச்ரௌதா சரௌத விபேதேந த்விதஸ்து சிவாகம:
ச்ருதிஸாரமயச் ச்ரௌதஸ்ஸ புநர்த்விதோமத: ||
ஸ்வதந்த்ர இதரச்சேதி ஸ்வதந்த்ரோ தசதாபுரா
ததாஷ்டாதசதா பச்சாத் ஸித்தாந்த இதிகீயதே ||
இதரச் ச்ருதிஸாரஸ்து சதகோடி ப்ரவிஸ்தர: ||'

என்பது அது. அதற்கு அவர் கூறும் பொருளாவது:

'சிவாகம: ச்ரௌதாச்ரௌத விபேதேந த்விதஸ்து – சைவாகமமானது சிரௌதம் (வைதிகம்), அசிரௌதம் (அவைதிகம்) என இருவகைப்படும்; ச்ருதிஸாரமய: ச்ரௌத: - சுருதிசாரமாயுள்ளது சிரௌதம் (வைதிகம்); ஸ புநர் த்விதோமத: ஸ்வ தந்த்ர இதரச்சேதி - அது (வைதிகம்)பின்னர், சுவதந்திராகமமும் இதராகமமுமென இருவகைப்படும்; ஸ்வதந்திரோ தசதாபுரா ததாஷ்டா தசதா பச்சாத் ஸித்தாந்த இதிகீயதே - சுவதந்திராகமமானது முன்னர்ப் பத்தும் பின்னர்ப்பதினெட்டுமாய் (எனவே, இருபத்தெட்டாய்) சித்தாந்தம் என்று கூறப் படும்; ச்ருதிஸார இதரஸ்து சதகோடி ப்ரவிஸ்தர:— சுருதிசாரமாயுள்ள இதராகமமானது (மற்ற ஆகமமானது) நூறுகோடி விரிவினையுடையதாகும்'

என்பது. மூலத்தில் 'ஸ' என்பதும், அர்த்தத்தில் 'அது' என்பதும் வருகின்றன. அந்தச் சுட்டுத்தான் முக்கியம். அச்சுட்டு முன் வரியிலுள்ள 'சிரௌதம்' என்பதையே சுட்டலாயிற்று. அதனுல் சுதந்திராகமம் எனப்பட்ட காமிகாதியும், இதரமெனப் பட்ட சதகோடியுமே சிரௌதம் என்பது சித்தித்தது. இதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைத்துக்கொண்டு முன் 'சைவாகமோ பித்வித:' என்ற வாயு ஸம்ஹிதா வாக்கியத்துக்கு அவர்தந்த பொருள்:

'ஸ சைவாகம: அபித்வித: ச்ரௌத: அச்ரௌதச்ச ஸ்ம்ருத:– அந்தச் சைவாகமமும் வைதிகம், அவைதிகம் என இருதிறப்படும்; ச்ருதிஸாரமய: ச்ரௌத:– சுருதி சாரமாயுள்ள வைதிகாகமமானது; ஸ்வதந்த்ர: இதர: மத:– சுவதந்திராகமமும் இதராகமமும் என (இரு பிரிவாகக்) கொள்ளப்படும்; ஸ்வதந்த்ர தசதா பூர்வம் ததா அஷ்டா தசதா புந: காமிகாதி ஸமாக்யாபி: ஸித்தாந்த ஸம்ஜ்ஞித:– சுவதந்திராகமமானது முன்னர்ப் பத்தும் பின்னர்ப் பதினெட்டுமாய் (இருபத்தெட்டாய்) காமிகாதி நாமங்களோடு முடிந்த சித்தாந்தம் எனப் பெயர் பெறும்; ச்ருதிஸாரமய: அந்ய: து சதகோடி ப்ரவிஸ்தர:- சுருதிசாரமாயுள்ள இதராகமமானது (மற்ற வைதிகாகமமானது) நூறுகோடி விரிவினதாகும்'

என்பது. மாயாவாதரும், செந்திநாதையரும் எடுத்துப் பொருள் கூறிய அவ்வாயு ஸம்ஹிதாவாக்கியத்தில் ஒன்றிரண்டு பாடபேதமுண்டு. 'கீர்த்தித:' என்பது மாயாவாதர் பாடம். அவ்விடத்தில் 'ஸ்ம்ருத' என ஐயர் பாடங்கொண்டார். ஆனால் மாயாவாதர் தம் பாடத்துக்கு விசேடப்பொருள் ஒன்றுங்கூற வில்லை. அவர் 'ப்ரபேதேந' எனப் பாடங்கொண்டவிடத்தி லுள்ள 'ஸமாக்யாபி:' என்பது ஐயர் பாடம். இப்பேதங்களால் முக்கியப்பொருள் பாதிக்கப்படுவதாக இல்லை. மாயாவாதர் 'ஒன்று வேதசாரமயம்' என்று பொருள்கூறினர். ஒன்று என்பதற்கு மூலத்திற் சொல்லில்லை. ஆகலின் 'சுருதிசாரமா யுள்ள வைதிகாகமமானது சுவதந்திராகமமும் இதராகமமும் என (இரு பிரிவாகக்) கொள்ளப்படும்' என்ற ஐயர் பொருளே பொருந்துகிறது. அன்றியும் அப்பொருள் மேல் காட்டப்பட்ட 'ச்ரௌதாச்ரௌத' என்ற பிரமாணத்தில் வந்துள்ள 'ஸ' என்ற சுட்டோடு இயைந்தும் நிற்கிறது.

இனி அவ்வாயு ஸம்ஹிதா வாக்கியத்தில் அசிரௌதம் என்ற சொல்மாத்திரம் வந்திருக்கிறது. ஆனால் அசிரௌ தாகமம் இது இதுவென்ற விவரம் அங்கேயில்லை. ஏன்? சூதசம்ஹிதை, கூர்மபுராணம் முதலியவற்றில் அது பாஞ்ச ராத்திர முதலியனவாக விரிக்கப்பட்டுவிட்டது; அதனால் என்க. விளக்குவதற்கென இங்கே எடுத்துக்கொள்ளப்பட்டது சிரௌ தாகமமே. சிரௌதாகமம் இரண்டுவகை. ஒன்று காமிகாதி. அது இருபத்தெட்டு. சித்தாந்தமென்பது அதற்கு மற்றொரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கௌரவநாமம். அது சுவதந்திரமுமாம். மற்றது சதகோடி. அதற்குப் பெயருமில்லை, கௌரவமுங் காணப்படவில்லை. அவ்வளவுதான். அச்சதகோடியைக் கற்றவர்கள் அதிலிருந்து பிரமாணங்காட்டி அதன் பிரபாவத்தை விளக்கினுல் அப்போது அதை ஆராயலாம்.

காமிகாதியைச் சுதந்திரமென வாயுஸம்ஹிதை சொன்னதை மாயாவாதியர் பற்றிக்கொண்டு அக்காமிகாதியை அவைதிகமெனச் சாதித்துவிடலாமெனக் கருதுகின்றனர். பரிதாபம்! உண்மையில் காமிகாதி அசிரௌதமென்பது வாயுஸம்ஹிதையின் கொள்கையாயின், அச்சம்ஹிதை அச்சதகோடியைச் சுருதிசாரமெனச் சொன்னதுபோல் காமிகாதியையும் சுவதந்திரமெனச் சொல்லாமல் அசிரௌதமெனவே ஐயத்துக்கிடனின்றிச் சொல்லியிருக்கும். சுவதந்திரமென்பதற்கு அசிரௌதமென்ற பொருளுமில்லை. சுயம்புவாகிய சிவனுர் ஆக்கிய இருக்காதி சுயம்புவென அவர்பெயரால் அழைக்கப்பட்டமைபோல் சுவதந்திரராகிய அவரே யாக்கிய காமிகாதியும் சுவதந்திரமென அவர்பெயரால் அழைக்கப்படுவதாயிற்றென அம் மாயாவாதரறிக. ஸநத்குமார ஸம்ஹிதையும் அதனைச்சுவதந்திரமென்றது அக்கருத்துப் பற்றியேயாமென்க. மேலும்

> 'கர்ஷணுதிப் பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தாந்தம் என்பவற்றைச் சுருதியினின்று எடாது தானே சுவதந்திரமாய் எடுத்துக் கூறுதலின், காமிகாதி இருபத்தெட்டும் சுவதந்திராகமம் எனப்பட்டதென்ருர் தீக்ஷிதயோகியார்'

என ஐயர் எடுத்துக் காட்டியதையும் அவ்வாதர் ஓர்க.

> 'ஸாமாந்யம் வேதஜாலம் யச்சைவம் வைசேஷிகம் வச: உபநிடதங்கள் சூத்திரம்போலப் பொதுவுற நிற்றலாற் சாமானிய சுருதி என்றும், சைவாகமங்கள் பாஷ்யம் போற் சிறப்புற நிற்றலால் விசேஷ சுருதி என்றும் மோக சூரோத்தரத்திற் கூறப்பட்டது' (பிர. சி. உப. உப 9)

என்றதும் அறிஞர் மகிழ்ச்சிக்குரியதாகும்.

> 'வேதமொ டாகம மெய்யா மிறைவனூ
> லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே'

(திருமந்திரம்)

என்பதிலும் அம்முடிபிருப்பது காண்க.

'ஆஸ்ய மத்யே ஸ்திதா வேதா தேவ தேவஸ்ய பூஸுரா:
அக்ஷராணிச தந்தேஷு ஜிஹ்வாயாந்து சிவாகமா: ||
கேளீர் பூசுரர்காள்! எல்லா வேதங்களும் அந்தத் தேவாதி தேவருடைய முகநடுவில் (வாயில்) விளங்கி நிற்கின்றன; அக்ஷரமனைத்தும் அவர் பற்களினும், சிவாகமங்கள் (அவர்) நாவினும் இருந்தன' (சங்)

என்பதிலுள்ள சிவாகமங்கள் ருருவாதியோரின் சதகோடியா?

இன்னுென்று. இருக்குவேதம், எசுர்வேதம் என்று சொல்லப்படுமே தவிர இருக்காகமம், எசுராகமம் என்று சொல்லப்படாது வேதம். அப்படியே காமிகாதியும் காமிகாகமம், காரணுகமம் என்று சொல்லப்படுமே தவிரக் காமிகவேதம், காரணவேதம் என்று சொல்லப்படா. வேதம் ஆகமம் என்ற சொற்களுக்குப் பொருள் எதுவாயிருந்தாலும் அவற்றை வழங்குவது அப்படித்தான். அது மரபு. ஆகலின்

'ஆகமம் என்ற சொல் வேதத்துக்கும் பாஞ்சராத்திர பௌத்தாதிகளுக்கும் பொதுவாமென்க' (ப் - வி 11 - 4 - 77)

என்றதால் அவ்வாதர் சாதிக்கப்போவதொன்றுமில்லை. அன்றியும் அளவைகளுக்குச் சுருதி, யுக்தி, அனுபவம் என்றும், பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் என்றும் பெயர். சுருதியென்னும் சொல் இருக்குமிடத்தில் ஆகமமென்னும் சொல் இருக்கிறது. அதன் கருத்து சுருதியும் ஆகமமும் ஒரு பொருட் சொற்களென்பதன்று, சமானதரமுடையன என்பதேயாம்.

அவர் வைதிகாகமமெனக் கொண்டாடும் சதகோடி போன விடம் அன்றே தெரியவில்லை. அதற்கு மூலமாய காமிகாதியே இன்றும் இருந்து வருவன. ஆகலின்

'தத்ராத்யோய: பரோதர்ம்மச்ச்ரேஷ்டாநுஷ்டாநசப்தித:
இதிஹாஸ புராணுப்யாம் கதம்சிதுபப்ரும்ஹித: ||
சைவாகமைஸ்து ஸ புநஸ்ஸஹாம் கோபாங்கவிஸ்தர:
ஸம்ஸ்காராதிகாரச்ச ஸம்ய கேவோப ப்ரும்ஹித: ||
முதற்கண் உள்ளதாய் முக்கியமாய் அநுஷ்டிக்கற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாலதாம் எனக்கூறப்பட்ட (யோகபரியந்தமுள்ள) பர தருமம் இதிகாச புராணங்களினுற் பிரயாசையோடு (அஃதாவது சிற்சிலவற்றுக்கு) உபப்பிருங்கணஞ் செய்யப்படும் என்றும், அது பின்னர்ச் சிவாகமங்களினுற் சாங்கோபாங்க விஸ்தாரமாகச் சமஸ்காராதிகாரத்தோடு நன்கு உபப்பிருங்கணஞ் செய்யப்படும் என்றும்' (வாயு- பூர்வ- அத் 28)

என்றதிலுள்ள சைவாகமம் காமிகாதியேயென்க. இன்னுமவர்

'எல்லோராலும் பொதுவாகப்பிரமாணமாகக் கொள்ளப் பட்டவைகள்: வேதம் 4. வேதாங்கம் 6. நியாய நூல் 1. மீமாம்சம் 1. ஸ்மிருதிகள் 1. புராணங்கள் 1. ஆகப் பதினன்கு வித்தைகளாம். இவற்றினுடனே உபவேதங் களைச் சேர்த்து 18 வித்தைகள் என்றும் கூறப்பட்டிருக் கின்றது. புராணங்கள் 18-ம் சேர்ந்து ஒன்று; ஸ்மிரு தியுமங்ஙனமே' (ப் - வி 6-14-256)

என்ருர். காமிகாதி அப்பதினெட்டிற் சேர்க்கப்படாதது அவ ருக்கொரு மகிழ்ச்சி. வேதம் என்ற ஸ்தானத்தில் அக்காமிகாதி வைக்கற்பாலது. அதை அவர் அறிக. அன்றியும் அவர் சிரமேல் தாங்கும் ருருவாதியோரின் சதகோடியும் அப்பதி னெட்டிலில்லை. அதையும் அவர் காண்க.

மாயாவாதப் பார்ப்பனர் வேதத்தை ஓதுவர். ஆனல் அதிலிருப்பதை அறியார். அதனலன்றோ

'ஆகமசப்தமே வேதத்தில் கிடையாது' (ப் - வி 7-14-4) என்ருரவர்.

'ஸர்வாகம மயச்சிவ:' (நாரத)

'ஆகமஸ்யா விரோதேந ஊஹநம் தர்க உச்யதே' (அம்ரு)

என்பன சில வேதவாக்கியங்கள்.

நாளிதுவரை இத்தென்னுட்டிலுள்ள சைவக்கோயில்கள் அத்தனையும் காமிகாதி சிவாகமங்களின் ஆட்சியிலிருந்து வரு கின்றன. அவ்வாகமங்களின் வழி நிருமிக்கப்படாத கோயில் களும், நடத்தப்படாத நித்தியமாதி பூசைகளும் சைவசமயத துக்கு முற்றிலும் புறம்பாகும். அங்ஙனம் சர்வசக்தியுடையன வாய் அக்கோயில்களை யாண்டுவருகிற அச்சிவாகமங்களை அம் மாயாவாதப் பார்ப்பனர் பலபடியாலும் பழித்துரையாடினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'வைதிகராயுள்ளோர் இவர் கொண்டாடும் ஆகமவழி சென்றால் பதிதராவ ரென்பதிற் றடையில்லை' (ப் - வி 11-2-35)

'கலிகாலத்தின் கொடுமையால் எல்லா வைதிக மதங் களும் அங்ஙனமே குன்றுவனவாயினும் இதரமதங் களுக்கு இவ்வளவு சுத்தவைதிகப் பிராமண அனுதரவு கிடையாது' (ப் - வி 11-3-46)

'வைதிகப் பிராமணர் கை நழுவவிட்ட சைவசித்தாந் தத்தை' (ப் - வி 11-3-46)

'தந்திரங்களில் வைதிகனுக்கு வேண்டியது சிறிதுமில்லை' (ப் - வி 11-3-53)

'அவைதிகாகமாதிகள் பாப ஹேதுக்கள்' (ப் - வி 11-3-55)

'தாமஸாசுராதிகளுக்கே ஆகமாதிகாரம்'(ப் - வி 11-3-56)

'வைதிகனுயுள்ளான் அவைதிகாகமங்களைத் தழுவவேண் டிய தௌர்ப்பாக்கியம் என்றும் பெறான்' (ப் - வி 11-3-57)

'வைதிகரெவரும் எமக்கு வேண்டாமென்று விட்ட ஆகமத்தை' (ப் - வி 11-4-76)

'இவர்களது மூடசாஸ்திரத்துக்குச் சித்தாந்தமென்று பேராம். இது வெகு அழகிது. விளக்கெண்ணையும் கத்தாழைச் சோறுமாகவிருக்குமிவரது சாத்திரத்துக்குச் சித்தாந்தம் என்று பேரிட்டது விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சம் கட்டினதுபோலும்' (ப் - வி 9-8-128)

'வாமம், ஸோமம், லாகுளம் முதலிய சிவதந்திரங்களும் முற்கூறிய ஏதுக்களால் காமிகாதிகளோடொத்தனவே யாதலால்...அவற்றை ஆக்கியோன் கருணையை எவ்வள வென்போம்' (ப் - வி 7-2-21)

'வேதவிரோத சாஸ்திரங்களாய காமிகாதிகளையா சிவ னருளியது?' (ப் - வி 7-2-22)

'வேதங்களுக்குப் பிந்தியதே ஆகமங்கள் என்பது தோற்றமுறையாலென்க' (ப்-வி விஜய ஆனி - 2உ - 57)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'வேதங்களுக்கு ஆகமங்களை அதிகமுமல்ல, சமமுமல்ல, சேர்ந்ததுமல்ல, சேஷமும் அல்லவென்று இதுவரை முடிந்தது' (ப் - வி 7-9-103)

'தனக்கின்றியமையாததும், தனக்கு மாத்ருஸ்தானமாயுமுள்ள வேதத்தை நிந்தித்த ஆகமமே பெற்ற தாயை ஆழம்பார்ப்பது ஆதலால் ஆகமாதிகாரியாகிய நமது சாமக்குளத்தாரே பெற்ற தாயை ஆழம்பார்க்க துணிந்தார்க்கினமாய்ச் சிறந்தவர். மானங்கெட்ட சாமக்குளத்தார்க்கு மதி என்ன கூறுவது?...' (ப் - வி 7-14-4)

'ஆகமம் ஒன்றுக் கொன்று பொருத்தமே கிடையாது' (ப் - வி 7 - 15 - 10)

'சனகாதிகள் ஆகமத்திலே ஞானம் பெற்றார்களென்பது அபூதசைவர் கூறித்திரியும் பெரும்புளுகுகளில் இதுவும் ஒன்றென்று கழித்திடுவர் அறிவிற் சிறந்தோர்களென்க' (ப் - வி 7 - 19 - 126)

'இவ்வாதியார் கொண்ட சிவாகமங்கள் சுவதப்பிரமாணங்களா? அல்லது பரப்பிரமாணங்களா? முதல்வழி கூடாது. வேதங்களைப்போல்...சுயம்புவாகாமையானும் அந்தரவிப்பிரதிஷேதம் என்ற குற்றம் நிறைந்தமையானும் ஒன்றுக்கொன்று விரோதப்படுமாதலால், பரதப் பிரமாணம் எனில், புராணாதிகளில் நிந்தைகள் அளவிறந்து கிடத்தலால் அவைகளுக்குத் தப்பித் தலையெடுத்துப் பிழைக்கவேண்டி வேதநாயகன் திருவடி நிழலில் அடைக்கலம் புகுந்து தமக்குச் சிறிதும் சம்பந்தமற்ற வைதிகப் பெயரைக் கடன்வாங்கிக் கொள்ள வேண்டி அதனைப்பலவாறு வழிபடவேண்டும். கற்பழிந்து சூலடைந்த பேதை இவ்வுண்மை மணாளன் அறியாமல் அவனிடம் உள்ளபடி தனக்கில்லாத அன்பை வெளிக்காட்டி அவனை மயக்கி அவனை வழிபட்டுப் பலவழி புகழ்ந்து தனது சூலை அவன் தனதென நம்புமாறு நடித்து அவனைக்கொண்டே தனது சோரப் புருடனிடம் கிடைத்த புதல்வரைத் தமது பிள்ளையென சீராட்டச்செய்யும் தகைபோல இதுவாகும். ஆதலாற்றான் சிவபுராணம் ... இவைகள் முற்றிலும் வேதபாஹ்யம் என்றும் பலவிதமாகப் புறக்கணித்தொதுக்கிய காமிகாதி தந்திரங்களை யனுஷ்டிக்கும் தாந்திரிகரையும் வைதிக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

> அடைசேர்த்து சைவராக்கியும் அதிற்கண்டவவைதிக சித்தாந்தத்தையும் வைதிகவடைகொண்ட சைவமுமாக்கி இவ்வாதியராதி தற்கால சைவர் வழங்கி வருகிறார்கள்' (ப் - வி - 11-3-56)

என்பன அப்பழித்துரைகளுட் சில. கற்பழிந்து சூலடைந்த பேதைபோலும் சைவரும், சைவசித்தாந்தமும், அச்சூல் தன் மணாளன் தந்ததெனச் சொல்லி அவனை அவள் வஞ்சிப்பது போலும் வேதத்துக்குப் புறம்போன அச்சைவரும் சைவ சித்தாந்தமும் தம்மை வைதிகசைவர், வைதிகசைவம் எனக்கூறி வைதிகரை வஞ்சிப்பது என்பது இறுதிவாக்கியத்தின் கருத்து. அவ்வைதிகர் உயர்ந்த வருணத்தாராயிருந்தும் காமிகாதியை அப்படிப் பழித்துரைக்கக் காரணம் மேலே சொல்லப்பட்ட சாபமன்றி வேறெதுவாயுமிருக்கமுடியாது. ஆனால் அப்பழி மொழிகளை அறிந்துள்ள சைவர், அறியவேண்டுமென்ற ஆசைதானுமுள்ள சைவர் எத்தனைபேர்? சிவாகமநிந்தையும் சைவசமயநிந்தையும் ஒன்றே. சைவர் அந்நிந்தையை அறிந்து, அதனால் பாதிக்கப்படாத நிலையில் தம்மையும், தம் சமயத்தையும் சிவாகமத்தையும் பாதுகாத்துக்கொண்டு அந்நிந்தையிற் பராமுகமாயிருப்பாராயின் குற்றப்படார். அந்நிந்தையை அறியாமலிருந்துகொண்டு அதனால் தமக்கோ, தம் சமயத்துக்கோ, அச்சமய பிரமாணநூலுக்கோ வருங்கேட்டை உணராமல் அந்நிந்தகரை அனுசரிப்பதுஞ்செய்வராயின் அச் சைவரின் மதியை என்னென்பது?

ஆதிசைவர்

ஆதிசைவராவார் பட்டர், குருக்கள், சிவாசாரியார், சிவப் பிராமணர் எனவும்படுவர். அவர் சிவன் முகத்திலுதித்த பிராமணரெனச் சிவாகமங்கள் செப்பும். அவரனைவரும் வேத சிவாகமங்களைப் பிரமாணமெனக் கொண்டொழுகுபவர், சித்தாந்த சைவசீலர், சுத்தாத்வைதிகள், ஆன்மார்த்த சிவபூசை செய்துகொண்டு சைவாலயங்களில் பரார்த்தபூசை செய்து வருபவர். அப்பூசைக்கு அவரே உரியவர் என்கிறது சிவாகமம். பிரமன் முகத்தில் உதித்த பிராமணருள் பூர்வபுண்ணிய முதிர்ச்சியால் அவ்வப்போது ஒரு சில உத்தமர் தோன்றுவர். தம் முன்னோரின் செயலால் அச்சாதியினருக்கு வழிவழியாய் வந்த சாபம் அதனால் அவரிடம் வலியிழத்தலுண்டு. அவர் அவ்வாதி சைவரால் சிவாகமத்தின் வழி தீக்ஷிக்கப்பட்டுச் சைவசமயத்தவராய் ஒழுகிக் கதியுறுவர். அங்ஙனம் அப்பார்ப்பனருக்குங் குருவாதற் றலைமையுடையார் அச்சிவப்பிராமணர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுந்தரமூர்த்திகள், நம்பியாண்டார் நம்பிகள், அருணந்தி சிவம், திரிலோசனசிவம், கச்சியப்பசிவம், நீலகண்டர் ஆகியோர் அவ்வினத்தவர். அவர்போன்ருர் அளவற்றபேருளர். அவரெல்லாம் சம்ஸ்கிருத முதலிய பல பாஷா விற்பன்னராய்த் தர்க்க வியாகரண பண்டிதராய், வேத சிவாகமாதி சகலகலா நிபுணராய்ப் பரம சிவபக்த சிரேட்டராய், ஸஜ்ஜனோபகாரிகளாய்த் திகழ்ந்தனர். அவர்களை நான் வணங்குகிறேன். இன்றும் அவ்வினத்து மேதக்கோர் பலர் சைவபரிபாலனஞ் செய்து வருகின்றனர். அவர்பாலுள்ள சைவகலாஞானம் மேன் மேலும் வளர்வது நிசம்.

அவ்வினத்தார் தொகை இந்நாட்டில் மிகக்குறை. சராசரிக் கணக்கில் ஊருக்குப் பத்துக் குடும்பங்களிருப்பதே பெரிய காரியம். அவர் அனேகமாய்ப் பார்ப்பன வீதிகளிற் குடியிருந்து வருகின்றனர். அதனுற் பார்ப்பனரின் சகவாசமும் சகாயமும் அவருக்கு உள. ஆனுல் அதற்காக அவர்தம் சமயத் தனிமையையும் உயர்வையும் நழுவவிடலாமா? அவருட் சாமானியர்நிலை பிறசாதிச் சைவர் தலைகுனியுமளவுக்கு இறங்கி வருகிறது. சம்ஸ்கிருதஞானம், தமிழறிவு, சைவாபிமானம், அச் சமயாசார அனுஷ்டானம், கிரியா கலாப சாமர்த்தியம் எல்லாம் அவரைவிட்டுப் போய்க்கொண்டிருக்கின்றன. அவருக்குத் தம் சாதியின்தரமே நினைவிலில்லையென்றுகூடச் சொல்லலாம். பிரமுகப் பிராமணரே தம்மினும் இனத்தால் உயர்ந்தவரென்ற மயக்கமும் அவர்க்குண்டு. அவர் வீடுகளில் நடக்கும் சைவக் கிரியைகளில் அப்பார்ப்பனருக்கும் குருத்துவம் கொடுக்கப்படுகிறது. அப்பார்ப்பனர் மாயாவாதத்திலும் வைணவமாதி பிற புறச்சமயங்களிலும் வீழ்ந்து சிவாகமநிந்தை புரிபவர். தம்மை இன்னுரென்றே அறியாமல் காரியஞ்செய்பவர் எப்படிப் பட்டவர்? அதிகம் சொல்லவேண்டாம். சுமார்த்த சம்பிரதாயத்தில் தீவிரமான பற்றுக்கொண்ட அப்பார்ப்பனர் அவ்வாதி சைவர் விஷயமாய் என்ன சொல்லுகின்றனர்? அவற்றுட் சில இங்கே தரப்படும்.

'ஆதி சைவர்களான குருக்கள்மார் ... சிவஞானபோத உரையைத் தமது சித்தாந்தமாக அங்கீகரிக்கின்றனரா? (ப் - வி 6-6-103)

"ஒரு தீக்ஷிதசுவாமிகள் ... 'தீக்ஷிதசுவாமிகள் யாவரும் உத்தமவைதிகப் பிராமணர்களென்றும், ஆதிசைவர்களைத் தங்களுக்குச் சமத்துவமாகக் கூறுவதும் தங்களை ஆதிசைவரென்ருவது மகாசைவரென்ருவது அவர்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ளோடு சமத்துவமுடையவர்க ளென்ருவது கூறுவதாகிய சமான நாமமும், இவர்களும் ஆகமவழியாகப் பூசிக்கின்ருர்கள். அவர்களும் ஆகமவழியாகப் பூசிக்கின்ருர்கள் என்று கூறுவதாகிய சமான பூசகத்துவமும் ... தில்லைவாழ் அந்தணர்களாகிய தங்களை நிந்தித்ததாகின்ற தென்றும், வைதிகவழியாகச் செய்யும் தங்கள் தகரோபாசனையை ... அவர் கெடுக்க நினைக்கின்ருர் என்றும் ... தாங்கள் அதனை அங்கீகரிப்பதில்லை' யென்றும் ... வெளியிட்டார்'' (ப் - வி 6-10-181, 182)

'சிவாகமங்களிலே கூறிய ஆதிசைவர் பரம்பரை இப்பொழுது எங்கும் கிடையாது' (ப் - வி 6-10-186)

'குருக்கள் எனச்சிலர் இருக்கின்ருர். அவர்களைச் சிவாசாரியர் என்கிருர்கள். அவர் சிவ ஸ்ருட்டியில் பிறந்தவர் எனவும், பரமபதி ஐந்துமுகத்துக்கும் ஐவர் பிறந்தமையால், அவர் கோத்திரம் ஐந்து என்றும், பவபுராணங்களிலும் சிவாகமங்களிலும் சொல்லப்படுகிருர்கள். அம்மூலப் பிரமாணங்களில் அவர்களுக்கு எந்த ஆசாரம் எந்த கோசரம் எந்த கோத்திரம் எந்த சூத்திரம் எந்த மடம் குறிக்கப்பட்டனவோ, அவற்றுள் ஒன்றும் இக்காலத்துக் குருக்கள்களிடமில்லை. இவரிடம் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள சிவத்துவிஜ லக்ஷணம் பொருந்தாமையான் இவர் ஆதிசைவர் அல்லவென்பதும் அவர் நடுவில் விருத்திலாபத்துக்கெனச் சைவரானர் எனவும் ... நிரூபிப்பாம்' (ப்-வி 6 - 12 - நெ 13 - 229)

'அவர்களெல்லோரும் தாம் அனுட்டித்துவரும் சந்தியாவந்தனத்தில் தாம் பிரமகுலத்திலுதித்த கோத்திரப் பிரவரத்தைச் சொல்லி வருகிருர்கள். அதில் கௌதம வம்சத்தார் 'ஆங்கிரஸ ஆயாஸ்ய கௌதம' வென்றும், காசியபர் 'ஆபஸ்தார நைத்ருவ' வென்றும், கௌசிகர் 'வைசுவாமித்திர அகமர்ஷண கௌசிக' வென்றும், பரத்துவாஜர் 'ஆங்கிரஸ பாரகஸ்பத்திய பரத்துவாஜ' என்றும் தத்தம் பிரவரங்களைச் சொல்லி வருகிருர்கள். அகஸ்தியர் கோத்திரம் உலகத்திலில்லை என போதாயன மாமுனிவர் கூறியவாறு குருக்கள்மார் அகத்திய கோத்திரத்தார் பிரவரமுதலிய ஒன்றுமில்லாத இடுகுறிச் சொல்லாகிய 'அகத்திய கோத்திர' மென்னும் சொல்லை வழங்கி வருகிருர்கள். அவரையொதுக்கி ஏனைய நான்கு கோத்திரத்தவர்களை ஈண்டு விசாரிப்பாம். இவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாம் சிவமுக உத்பன்னரென வாக்கினல் மாத்திரமுரைத்துக் கிரியைகளில் ப்ரம்ம முகத்திலுதித்த ஏழு மகரிஷிகளின் சம்பந்தத்தையே சொல்லிவருகிறார்கள். இவர் சிவன்முகத்தில் பிறந்த துண்மையாளுல் ப்ரம்ம முகோத்பன்ன பிராமணர்களின் கோத்திரம் இவர்களிடம் வரக் காரணம் என்னே?' (ப் - வி 6-10 - நெ - 13-230, 231)

'இக்காலத்திலுள்ள சிவத்துவிஜர் சிவமுகோற்பன்னரல்லரென்பதூஉம், ப்ரம்மமுகோற்பன்னரே என்பதூஉம் ... நாட்டப்பட்டது' (ப் - வி 6-10 நெ - 13-232)

'இக்காலத்துச் சிவவிப்ரரிடம் சிறிதும் ஆகமாசாரானுஷ்டானம் இல்லை. இவருள் அனேகருக்கு வைதிகசந்தியாவந்தனமன்றிச் சைவ சந்தியாவந்தனமே தெரியாது. சிலருக்குத்தெரிந்தும் சைவத்தைப்பின்னும் வைதிகத்தை முன்னும் செய்வார்கள் ..... பிதுருசிராத்தத்தில் இவர் ஸ்கந்தசண்டகணுதீச பதங்களைச் சொல்லாது வசுருத்திராதித்திய பதங்களைப் போதாயனமுனிவர் கூறியபடி உச்சரிக்கிறார்கள் ... மேலும் சிலர் சிவத்துவிஜர் வம்சத்தில் பிறந்தமை ஒன்றால் தாம் சைவரானதாகக்கொண்டு தீக்ஷைமுதலிய எவ்வகைச் சமஸ்காரமுமின்றி உபநயனம் என்னும் வைதிக சமஸ்காரம் ஒன்றைப் பெற்றமட்டில் சிவாலய பூஜாதிகாரிகளாகப் பாவிக்கப்படுகிறார் ...... இவர்க்கு ... பிராசாதபீஜமும் தெரியாது ... குருக்கள் மாருக்கே அறிவிங்ஙனமாயின் இவர் சீடர் அடையும் கதியாதோ? ... இவ்விதம் ஆகமங்களைச் சிறிதுமறியாத இவர் குருமாராயின் சீடர் செய்த தவக்குறைவென்னே? (ப் - வி 6 நெ - 17 - 308 - 309)

'இவர்க்கு அக்குருத்துவம் பிறப்பால் கிடைத்ததல்ல' (ப் - வி 6 நெ - 21 - 373, 374)

'இக்காலத்துச் சிவவிப்பிரர் குருத்துவம் விருத்திக்கென்று வைத்துக்கொண்டதே' (ப் - வி 6 நெ - 21 - 375)

'இவர் உலகம் ஊக்கமற்றதறிந்து பெரும் பட்டம்வகித்து மோசஞ்செய்தனர். அவர்களுக்கு வேதங்களாலாவது ஏதுமில்லையாதலின் வேதங்களை அவர் ஓதார். ஆகமோக்த முத்திரைகளையும் நன்கறியார். ஏதோ பூஜை என்றென்றை முடித்திடுவார்' (ப்-வி 6 நெ - 21 - 375)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'சிவவிப்பிரர்க்கு ஆகமம் முக்கியப் பிரமாணம். வைதிகருக்கு வேதமே முக்கியப் பிரமாணம். அவர் மதம் சுத்தாத்விதம். இவர் மதம் அத்விதம். வைதிகருக்கு வேதத்தவ்வளவு ஆகமங்களில் மதிப்பில்லை. சைவப் பிராமணருக்கு ஆகமங்களவ்வளவு வேதங்களில் மதிப்பில்லை. அவர்கள் ஏதோ சோதனைக்கு நிற்காச் சிவ சிருஷ்டிதாமென்பர். வைதிகர் தாம் வேதத்திற்கண்ட பிரமசிருஷ்டியே என்பர். இவ்விருவர் சம்பந்தித்தல் கூடாத காரியமே' (ப் - வி 6 நெ. 21 - 376)

'ஆதிசைவர் பிராமணருக்குக் குருவாதல் யாண்டுப் பெறப்பட்டது? இது சுத்தப் பொய்யென்றொழிக. அவர்களைச் சிவனாரது மக்களென்றூர் ... ஆதி சைவர் சிவபெருமான் திருமுகத்தினின்றும் குண்டு குண்டாகக் குதித்து வந்தாரென்று சைவர் கூறுவது எந்தச் சுருதி ஆதாரங்கொண்டோ?' (ப் - வி அநு 7 - 1 - 2)

'ஆதி சைவர்கள் இக்காலத்தில்லை. இப்பொழுது கோயிலில் சிவபூஜை செய்பவர்களெல்லாரும் ஸ்மார்த்தர்களே யாவர். குருக்களென்றது, அவர்களை ஆசாரியராகக் கொண்டன்று. கோவில் பூஜைசெய்யும் ஸ்மார்த்த ஜாதியாருக்குக் குருக்கள் பெயரிட்டதேயாம். கம்மாளருக்கு ஆசாரியார்என்னும்பட்டப்பெயரிருத்தலால்,அவர்களைக் குருமாரென்று நமதன்பர் கொள்வாரா? கொள்ளாரன்றோ? அதுபோலவே குருக்கண்மாரையும் கொள்ளத் தக்கது. அது எதனல் விளங்குமென்னில் அவர்களது கோத்திரங்களை விசாரித்தால், ஆதி சைவர்க்குரிய பஞ்சரிஷி கோத்திரங்கள் காணப்படவில்லை. ஸ்மார்த்த பிராமணர்களுக்குரிய பல கோத்திரங் கேட்கப்படுகின்றனவாதலால் அவர்களெல்லாரும் ஸ்மார்த்தர்களேயென்றும், கோயில் பூஜைக்காகப் பரிந்து, குருக்களென்று பட்டப் பெயர்கொண்ட ஓர் கூட்டத்தாரே என்றும் தெற்றெனப் புலப்படுமென்க. சுஜாதியாகிய விருவருள் எவர்கள்கை மேற்பட்டிருந்தாலும் குற்றமில்லை. விபூதி வாங்கும்போது அவர்கள்கை மேலாக விருந்தால், தக்ஷிணை வாங்கும்போது ஸ்மார்த்தர்கள்கை மேலாகவிருக்குமாதலால் அது பயனற்ற வாதம். அன்றியும், குருக்கண்மார்கள் உபநயனதி ஸமஸ்காரம் பெறும்போதும், சிராத்தாதிகள் நடத்தும்போதும், போதாயன ஸூத்திர முணர்ந்த ஸ்மார்த்தர்களைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தங்கள் கிரகங்களுக்கு வரவழைத்து அவர்களைக் குருவாகக்கொண்டு நடத்திக்கொள்வார்கள். அப்பொழுது ஸ்மார்த்தப் பிராமணர்களுடைய திருப்பாதம் குருக்கள் சிரசின்மேலிருப்பதும் பிரத்தியட்சம். குருக்கள் ஸ்மார்த்தர்களையபேட்சிப்பதேயன்றி ஸ்மார்த்தர்கள் குருக்களையபேட்சிப்பதில்லை. கோவில் மடைப்பள்ளியில் ஸ்மார்த்தரிருந்து நைவேத்தியங்களைத் தயார்செய்வது யெதனுல் என்ருல், குருக்கள் சமைத்த சாதம் முதலானவை தேவார்ஹமாகாது. அதனை ஸ்மார்த்தர் ஸ்பரிசிக்கவும் கூடாது; உண்ணவும்கூடாது. அக்குறை நீங்கவேயாமென்று தெளிக' (ப் - வி 7-18 அநு 3 - 4)

'கோவிற் குருக்களும், பரிசாரகர்களும் சமமான வேலைக்காரர்களேயன்றி ஒருவரையொருவ ரதிக்கிரமியாரென்று தெளிக' (ப்-வி 7, 18. அநு 4)

'ஆதிசைவராவது இருபத்தெட்டாகமங்களையும் உருப்படியாக வைத்துக்கொண்டிருக்கின்ருர்களா? அல்லது ஒன்று அரையாவது, சரியாக வைத்திருக்கின்ருர்களா? அவர்களுக்காவது ஒரு ஆகமத்திற்கு முதல் முடிவு பதங்களாவது தெரியுமா? எந்தக் குருக்கள் எந்தக் கிரந்தத்தை யெழுதியிருக்கிருர்? எந்த ஆகமத்துக்கு பூரணமாகப் பாஷ்ய மெழுதியிருக்கிருர்? ஆகமங்களுக்குப் பாஷ்யமேயில்லையே. யாராவது எழுதி உலகத்துக்கு உபகாரஞ் செய்யப்படாதா? ... உத்தரகிரியைக்குரிய ஆகமமட்டும் கிடைத்திருக்கும். அதையும் முறை வழுவாமல் நடத்திவைப்பதற்கு குருக்களுக்குத் தெரியாது. ... மற்ற கிரியைகளெல்லாம் ஸ்மார்த்தர்களுக்குச் சொந்தமாகிய போதாயன சூத்திரத்தைக் கொண்டே செய்யப்படுகின்றன. இவர்களை ஆதிசைவ ரென்பது எதுகொண்டு?

அவர்கள் பேரில் தோஷமில்லை. அவர்களிடம் கல்வியறிவென்பதேகிடையாது. கோயிற்பூசைக்குரியமந்திரங்கள் அவருக்குச் சரியாகத்தெரியுமா? அதுவும் தெரியாது. பண்டாரங்கள் செய்வதுபோல ஒருகுடந் தண்ணீரைக் கொண்டுவந்து கொட்டி பச்சிலையைக் கிள்ளிப்போட்டுச் சோற்றைக் கொண்டுவந்து காட்டித் தூக்கிக்கொண்டு போய் விடுகிறதே சிவாராதனமென்று எண்ணியிருப்பவர்கள். சிறுபிள்ளைகளுக்குக் கற்பிக்கும் கல்வி, மணி ஆட்டக் கற்பிப்பதும் மானம் வெட்கமின்றி வந்தவரிடம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காசுபிடுங்கக் கற்பிப்பதுமேயன்றி வேறில்லை. சந்தியா வந்தனுதி அனுஷ்டானங்களும் தவறில்லாமற் றெரியாது. இவர்கள் சிவமுகோற்பவராவதும், பிராமணுதி நால்வருணத்தார்க்கும் குருவாவதும் வியக்கத்தக்கதேயாம். எந்தக் குருக்கள் புறமதஸ்தரோடு வாதிட்டு வைதிக சித்தாந்தமதத்தை நிலை நிறுத்தியிருக்கின்றூர்?... குருக்கள்மார் தாம் பூஜைசெய்யுங் கோவில் இன்ன ஆகமானுஷ்டான மேற்கொண்டதென்றுவது உணர்ந்திருப்பார்களா? அதுவுந்தெரியாதன்றே? இவர்களைக் குருமாரென்பது எதனுலேயோ தெரியவில்லை. ஸ்ரீகண்ட மூர்த்திகள் பாஷ்யஞ் செய்திருக்கின்றூரே; அவர் குருக்களன்றேவென்றுல், அது ஆகமபாஷ்யமன்று. அதுவும் நம்மாழ்வானம்மைக் கெடுத்தான் கூரத்தாழ்வான் குடியைக் கெடுத்தான் என்பதுபோலச் சிவாகமபங்கந் தேடிவைத்து எமது வைதிகநெறிக்குச் சார்பாய் நிற்றலால், ஸ்ரீ கண்டமூர்த்திகளும் வைதீகாசார சீலரென்றே கொள்ளப்படுவதாம்...... வேளாள சைவராவது ஆகமத்துள் ஏதேனுமோதியுணர்ந்துள்ளாரா ? அதுவுமில்லை. அவர்களைக் கூறுவதிற் பயனில்லை. அவர்களுக்குக் குருவாக விருந்துபதேசம் செய்யும் ஆதிசைவரும், மடபதிகளும் பரமார்த்த குருக்களாக விருக்கையில் அவர்களிடமுபதேசம் பெற்றுக் கொள்பவர்கள் தன்மையை நாம் விவகரிக்கவேண்டியதில்லை. ஆதிசைவர்கட்கும் மடபதிகட்கும் ஏதாவது சந்தேகம் நேரிட்டால் அந்தச் சமயம் ஸமார்த்தர்களைத்தேடி, அவர்களுக்குப் பாதபூஜை செய்து கேட்டுத் தெளிய வேண்டியிருக்கிறது. சைவமடங்களில் ஸமஸ்கிருத பண்டிதராயிருப்பவரும் ஸ்மார்த்தர்களாய்விட்டார்கள். ஆதிசைவபாடசாலையிற்கூட குருக்களில் உபாத்தியாயர் கிடைக்காமல் ஸ்மார்த்தர்களே உபாத்தியாயராக நேரிட்டது' (ப் - வி 7 அநு 20 - 133, 134)

'ஸ்மார்த்தர்களே குருக்களென்ற ஓர் கூட்டத்தாராகப் பிரிந்ததேயன்றி ஆதிசைவரென்று கூறும் அபூத ஜாதியாரன்று' (ப்-வி 7 அநு 21-138)

'பொன்னுக்கு காக்கைப்பொன் என்று அடைசேர்ந்தாப் போலும் முத்துக்கு கொட்டைமுத்து எனவடை சேர்ந்தாற்போலும் வயிரத்துக்குப் புளிவைரமென்ற விசேடண்ம் அமைந்தாற்போலும் கோத்திரம் கோசரம் சூத்திரந் தெரியாது ஆலம்பாயன கோத்திரமாதி அப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிராம்மண கோத்திரங்களுடன் சிவவிப்பிரர் என்ற பெயரை மெள்ளமெள்ளச் சொல்லிக்கொள்ள வேண்டுவது எமக்கோ' (ப்-வி 11 அநு 4-77)

'தாந்திரிகர்கள், பாசுபதர்கள், பாஞ்சராத்திரிகள், ஆசாரிகள், சாத்துவதர்கள் ... வைதிககோஷ்டிக்கு வரக்கூடாதென்று ... எல்லா ஸ்மிருதிகளும் சொல்கின்றன. அந்த தாந்திரிகர்களாகிய, சிவன்கோவில் விஷ்ணுகோவில் பூஜை செய்கிறவர்களை ஸ்மிருதிகளும் புராணங்களும் சங்கரஜாதியென்றே சொல்லி முறையிடுகின்றன. தவிர அவர்கள் சண்டிகேசன் விஷ்வக்ஸேனன் இவர்களுடைய பாகத்தைத் தின்று தொந்தி பெருத்தவர்களென்றும், பிறர்க்காக தேவபூஜை செய்கிறவர்களென்றும், தேவலகர்கள் என்றும் புராணங்களில் ஸ்பஷ்டமாய் சொல்லியிருக்கிறது' (ப்-வி விகாரி வைகாசி 3உ நெ. 22-407)

'சிவத்துவிஜர் எவரேனும் இதுவரை எந்த வேதத்தையாவது எந்த சாஸ்திரத்தையாவது படித்ததுண்டா? எந்த வைதிக வேதாங்க நூல்களையாவது இயற்றியதுண்டா?' (ப்-வி 12-2-33)

'ஆகமங்கள் இருபத்தெட்டின் பெயரும் அறியாதவர் குருக்களோ?' (ப்-வி 12-2-35)

'ஆலயங்களில் வயிற்றுப்பிழைப்புக்காக மகாபுண்யமாக சிவபுண்யத்தை மகாபண்ய (பெரியோர் விற்கக்கூடிய பண்டம்) மாக்கிவிற்று பெரியபாதகத்துக்காளாவதுடன் பரார்த்த பூஜாதிகாரம் எமக்கேயுரியது என்று சில வேளாளராதியோர் உபதேசத்தால் வாதாடிவரும் சிவத்துவிஜர் உண்டைக்கட்டிக்கு வேண்டிய விஷயங்களையாவது ஆகமங்களில் காப்பாற்றினரோ?' (ப்-வி 12-3-53)

'எந்தக் குருக்கள் ... தேவாரத் திருவாசகங்களை தனக்கு முக்கிய ஜபமாகக் கொண்டார்? மெய்கண்டார் கண்டரௌரவ சித்தாந்தம் தமதெனக் கொண்டு பரம்பரோபநேசம் செய்து வந்தார்? (ப்-வி 12-3-53)

'சிவாராதன மகாசிவபுண்யத்தை வயிற்றுக்கென கால் காசுக்கு விற்கும் கசடரை ...' (ப்-வி 12-5-93)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'தினம் ஒன்றுக்கு 500 - கலப் பருக்கைக்குமேல் அருந்தி ஏப்பம்விட்டிறுமாந்திருக்கும் உமது நிர்மாலிய விப்பிரர் களும் ... ..' (ப் - வி 12-5-94)

'பல்லாயிர வருஷங்களாய் இப்பரத கண்டத்தில் உமது நிர்மாலிய விப்ரர் தேவோத்ஸவங்களில் தேவாலயச் சிப்பந்திகளான உட்டுரைவெளித்துரைகளுடன் கலப்ப தன்றி இவர்களுக்கு மகாதானங்களுண்டா? மகாயாகப் பிரவேசமுண்டா? மகாயாக சன்னியாசாதிகாரங்கள் தானுண்டா? சிரௌத ஸ்மார்த்ததர்க்கிகள்தானுண்டா? ... ... வேதங்கள் நான்கிலுமதிகாரமுண்டா? ... ... ஐவேள்விகளுண்டா? வேறெதுதானுண்டு? சத்திரங் களிலேனும் இவருக்கு அன்னம் போடும் வழக்க மில்லையே' (ப் - வி 12-5-94)

'வ்ருத்யர்த்தம் பூஜயேத் தேவம் லோகஸ்ய ஹிதகாரகா:
ஷண்மாஸம் பூஜயேத் யஸ்து ஸவை தேவலகஸ்ம்ருத: ||
யதா தேவலகச் சைவ ததாஸௌ வைபவேதிஹ
தேவல கச்சய: ப்ரோக்தோ நாதிகாரேத் விஜஸ்யச ||
எவன் லோகத்துக்கு ஹிதஞ்செய்பவனாக இருந்தும் விருத்தியின் பொருட்டு ஆறுமாதம் சிவபூஜை செய்வா னாகில் அவன் தேவலகன் என்று சொல்லப்படுவான். ஜாதி தேவலகனைப்போலவே இவனும் ஆவான். தேவ லகனுக்கோ பிராமணாதிகாரமில்லை' (ப் - வி 12-5-96)

'ஜபம் அத்தியயனம் இரண்டுமில்லாத தேவபிண்டோப ஜீவிகள் தேவலகர்' (ப் - வி 12 - 6 - 113)

'சிவ மகாபுராணத்தில் துஷ்ட மகரிஷி கோத்திரத்தில் தேவலகோத்பத்தியைச் சொல்லி...உமது சமயத்துக்கும் உமது சமயாசாரியருக்கும் வருவித்த கஷ்ட நஷ்டங்கள் போதாதோ!' (ப் - வி 12 - 6 - 115)

'இவர்களில் எவர்கள் வேதாத்தியயனம் செய்தவர்கள்? எவர்கள் குருகுலவாசஞ் செய்தவர்கள்? இதில் எவருக் காவது நல்ல வித்வான்கள் நிறைந்த கோஷ்டிகளில் வாக்கியார்த்தஞ் சொல்ல வல்லமையுண்டா? அல்லது கூச்சமில்லாமல் அந்த இடத்துக்குப்போக யோக்கியதை உடையவர்களா? அவர்கள் கேட்கும் கேள்விக்குப் பதில் கூறச் சக்தியுடையவர்களா? ஆகமங்களிலேனும் வட நூல் முறைப்படி ஓரைந்தெழுத்தேனும் படித்தார்களா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவர்களில் எவர்களுக்காவது உத்தம கோத்திரம் சூத்திரம் முதலியவை உண்டா? பிராசீன மஹான்களின் பரம்பரையை ஒட்டியவர்களா? இவர்கட்கு வேதவார்த்தையும் வாயில் நுழையுமா? இவர்களாதி சைவர்களென்று கூறி பரிந்து பேசும் பேர்வழிகளுக்குக் கோத்திரம் தெரியுமா? சூத்திரந்தெரியுமா? வேதந்தெரியுமா? உபநிடதங்கள் தெரியுமா? சிவாகமங்களேனும் வழுவின்றிச் சிலவேனும் தெரியுமா?' (ப் - வி 13 - 2 - 31)

என்பன அவை. இப்போதுள்ள ஆதிசைவர் சிவஞானபோத உரையை அங்கீகரியார். தில்லைத் தீக்ஷிதர்களுக்குப் பலவகையிலுந் தாழ்ந்தவர்; சிவாகமங்களில் சொல்லப்பட்டவரல்லர்; அவ்வாகமங்களில் சொல்லப்பட்ட ஆசாரம், கோசரம், கோத்திரம், சூத்திரம், மடம் ஆகியவற்றுள் ஒன்றும் இல்லாதவர்; சிவமுகோற்பந்ந பிராமணரெனச் சொல்லிக்கொண்டு பிரமமுகோற்பந்ந பிராமணரின் கோத்திரத்தைக் கொண்டிருப்பவர்; பிதுரு சிராத்தத்தில் போதாயன முனிவர் கூறியபடி வசுருத்ராதித்த பதங்களையே உச்சரிப்பவர்; தீக்ஷைமுதலிய சம்ஸ்காரமில்லாதவர்; உபநயநமும் வைதிக சந்தியாவந்தனமுமே உடையவர்; குருத்துவத்தைப் பிறப்பால் கொண்டவரல்லர்; விருத்திக்கென்றே வைத்துக்கொண்டவர்; வேதங்களை யோதார்; ஆகமோக்த முத்திரைகளை அறியார்; ஸ்மார்த்தரோடு சம்பந்திக்கத் தகுதி யற்றவர்; ஸ்மார்த்தருக்குக் குருவாதல் யாண்டுமில்லை; தாமும் ஸ்மார்த்தரே; கோயிற்பூசை செய்யும் காரணத்தாலேயே குருக்களெனப் பெயர் கொண்டுளார்; தம் உபநயனாதி சம்ஸ்காரங்களில் ஸ்மார்த்த பிராமணரை அழைத்துவந்து தமக்குக் குருவாக வைத்துக்கொண்டு அவர் பாதத்தைத் தம் சிரசிலுந் தாங்குவர்; ஸ்மார்த்த பிராமணர் வீட்டு வைதிக காரியம் எதிலும் அபேக்ஷிக்கப்படார்; சமைத்த சமையல் கோவில் நைவேத்தியத்துக்கோ, ஸ்மார்த்த பிராமணர் தொடுதற்கோ, உண்ணுதற்கோ அருகதை அற்றதனால் மடைப்பள்ளி வேலை ஸ்மார்த்த பிராமணருக்கு இருந்துவரலாயிற்று. கோயிற்பல வேலைக்காரருட் சேர்ந்தவர்; கல்வி அறிவே இல்லாதவர்; வேதாகம சாத்திரஞான சூனியர்; கிரியைகள் நடத்திவைக்கவுந்தெரியார்; கோயில் பூசைக்குரிய மந்திரங்களையும் அறியார்; நைவேத்தியத்தைப்பண்ணிச் சோற்றைத் தூக்கிக்கொண்டு போய்விடவே தெரிந்தவர்; தம் குழந்தைகளுக்கு மணி ஆட்டவும், வருகின்றவர்களிடம் காசுபிடுங்கவுமே கற்பிப்பர்; அனுட்டானஞ்செய்யார்; சாத்திர சம்பந்தமாகப் புற மதத்தாரிடம் வாதம்பண்ணித் தம்சமயத்தைச் சித்தாந்தஞ்செய்யும் வல்லமை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறிதுமில்லாதவர்; தமக்கோ மடாதிபதிகளுக்கோ சாத்திர சம்பந்தமான சந்தேகமுண்டானல் ஸ்மார்த்தரின் கால்களில் தான் போய் விழுவர்; தமது பாடசாலைகளில் ஸ்மார்த்த உபாத்தியாயரையே வைத்திருக்கின்றனர்; ஆலம்பாயன கோத்திரமாதி அப்பிராமண கோத்திரத்தார்; வைதிக கோஷ்டிகளில் கலந்து கொள்ளக்கூடாது; சங்கரசாதியினர்; சண்டிகேசனுக்குள்ள சோற்றைத்தின்று தொந்தி பெருத்தவர்; தேவலகர் எனப்படுவார்; உண்டைக்கட்டிக்கு வேண்டிய விஷயங்களைக் கூட ஆகமங்களிலிருந்து தெரிந்துகொள்ளார்; தேவார திருவாசகங்களையேனுஞ் செபியார்; சிவபுண்ணியத்தைக் கால் காசுக்கு விற்குங்கசடர்; தினம் 500 கலம் பருக்கை தின்பவர்; இறுமாப்புடையவர்; மகாதானம், மகாயாகப்பிரவேசம் முதலியவற்றுள் எதுவும்பெற உரிமை யில்லாதவர்; சத்திரங்களிற் சோறுண்ணவும் இடம்பெருர்; விருத்திப்பொருட்டுச் சிவபூசை செய்து தேவலகரெனப்படுதலால் பிராமணுதிகார மில்லாதவர்; தேவபிண்டோப ஜீவிகள்; துஷ்ட மகாரிஷிகோத்திரத்தார்; பிராசீன பரம்பரையினர் அல்லாதவர். இத்தனையும் அம்மேற்கோள்களிற் கண்டபடி ஆதிசைவர்களுக்குக் கிடைத்திருக்கிற பட்டங்கள். இவற்றைக் கொடுத்தவர்கள் ஸ்மார்த்த பிராமணர்கள். இவை ஏன் கொடுக்கப்பட்டன ? ஆதிசைவர்கள் சிவமுகோற்பந்நர்களாகலின், பிரமமுகோற்பந்நர்களாகிய ஸ்மார்த்தப் பிராமணர்களைவிட உயர்ந்த குலத்தாரென்ற சாத்திரப் பகுதியை ஸ்மார்த்த பிராமணர்களால் சகிக்கமுடியவில்லை என்பதாலா ? ஆதிசைவர்கள் சித்தாந்த சைவசமயிகளாகலின் அச்சமயத்தினுயர்வை மாயாவாத சமயிகளாகிய ஸ்மார்த்த பிராமணர்களால் சம்மதிக்க முடியவில்லை என்பதாலா ? ஆதிசைவர்கள் சிவாகமாசார மூடையவர்களாகலின் அவ்வாகமத்தின் ஏற்றத்தை ஸ்மிருதியாசாரமுடைய ஸ்மார்த்த பிராமணர்களால் கண்டுகொண்டிருக்க முடியவில்லை என்பதாலா ? பரார்த்த பூஜாதிகாரம் ஆதிசைவர்களுக்கே உண்டு தமக்கில்லையென்பதில் அசூயை கொண்டு ஸ்மார்த்த பிராமணர்கள் அவ்வதிகாரத்தைச் சுவீகரிக்கும் ஆசையுடையார் என்பதாலா ? வேறு எதனுல் ? அதனைக் கண்டுகொள்வது ஆதிசைவர்களுக்கு முதற்கடமை. அப்பட்டங்களில் தூஷணைகள் எவை? ஆரோபங்கள் எவை ? சத்தியங்கள் எவை ? தூஷணைகளை விட்டிடுக. ஆரோபங்களை எடுத்துக்காட்டி விலக்குக. சத்தியங்களை நடைமுறையில் திருத்திக்கொள்க. அப்பட்டங்களை ஸ்மார்த்த பிராமணர் கொடுத்தனர். ஆதிசைவர் வாங்கினர். ஆயினும் அவர்களுக்குள் நட்புக்குக் குறைவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆனால் அதுகொண்டு ஆதிசைவருக்குக் கௌரவமிருக்க முடியுமா? நிந்திப்பவரோடு நிந்திக்கப்படுபவர் கைகுலுக்கித் திரிபவர் எவரேனுமாக. அவர் அடிமைகளும், நிந்திப்பவர் ஆண்டவருமே யாவர். ஆதிசைவர்களை ஸ்மார்த்தபிராமணர் களென்றும், சங்கரசாதியாரென்றும், தேவலகரென்றும், துஷ்டமகாரிஷி கோத்திரத்தாரென்றும் பலப்பல பேசுகின்றனர் ஸ்மார்த்தப் பிராமணர்கள். ஸ்மார்த்தப் பிராமணசாதியும், சங்கரசாதியும், தேவலகசாதியும், துஷ்டமகாரிஷி கோத்திரமும் ஒன்றுதானா? சைவாலயபூசை பரார்த்தமா? விருத்தியர்த்தமா? சைவாலயங்கள் சிலவற்றில் ஸ்மார்த்தப்பிராமணரும், போத்திகளும், சிதம்பரத்தில் தீக்ஷிதரும் பூசைசெய்து வருகின்றனர். அவர்களையும் சங்கரசாதியினர், தேவலகசாதியினர், துஷ்டமகாரிஷி கோத்திரத்தார் என்னலாமா?

ஸ்மார்த்தரிடம் அத்தகைய மாச்சரியம் அப்போது இருந்தது. ஆனால் இப்போது இல்லையே என்னலாம். அஃதெப்போதுமுள்ளதுதான்; இப்போது மறைந்துவேலைசெய்கிறது. அஃதப்போது வெளிப்பட்டு வேலை செய்ததற்குக்காரணம் எது? அது எதிர்காலத்தில் தலையெடா தென்பதை யார் கண்டனர்? அப்போது அப்பட்டங்கள் ஆதிசைவர்களுக்கு இன்னும் அதிகமாகச் சூட்டப்படும். இப்போதுள்ளவர்களின் அஜாக்கிரதையால் இனிவரும் ஆதிசைவ சந்ததிகள் மேலும் மானபங்கமடையும். இன்னொன்று. ஆதிசைவர்களைக் குருமாராகக் கொண்டு மதித்துவருவது சைவசமூகம். அப்பட்டங்களைக் கண்டு அச்சமூகமும் கலக்கமடைகிறது. ஏன்? அவர்கள் பெருமை அச்சமூகத்தையுஞ்சாரும். ஆகலின் அவர்கள் தங்கள் உணர்ச்சிக்குப் புத்துயிர் கொடுத்து விரைந்து ஆவனசெய்து தங்களுக்கு அன்றே உரிய கௌரவத்தை மீளப்பெற்று வாழ்வார்களாக.

சைவாசிரியன்மார்

ஒவ்வொரு சமயத்தலைவரும் பிறசமயங்களை நிராகரணஞ் செய்துபோந்தனர். நிராகரணமின்றித் தாபனஞ் சாத்தியமில்லை. ஆகலின் நிராகரணங் குற்றமாகாது. இந்தநூலே நிராகரணந்தான். நிராகரணம் பண்ணும்போது நிராகரிக்கப்படுஞ் சமயம், சமயத்தலைவர் பற்றிய சிலபல கடுஞ்சொற்பிரயோகங்களும் புத்தகங்களிற் காணப்படும். மாயாவாத சமயத்தினரும் சித்தாந்த சைவரை மறுத்துள்ளனர். அம்மறுப்பில் எப்படிப்பட்ட சொற்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன? அவை பொருந்துமா? அவற்றைச் சிறிதே இங்குக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தாந்தசைவ ஆசிரியன்மாருள் திருஞானசம்பந்தர் ஒருவர். அவ்வாசாரியருக்குச் சைவ சமூகத்தோடுள்ள தொடர்பு அவர் தோன்றிய நாள்முதல் நாளிதுவரை அழியாமல் இருந்துவருகிறது. சைவசமயிகள் அவருக்குக் குருபூசை நடத்திமகிழ்வர்; அவருடைய சரித்திரத்தைப் படித்துங்கேட்டுங் களிப்பர்; அவராற்றிய அற்புதங்களை நினைந்து வியப்பர்; அவரருளிய பாடல்களை வேதமெனக்கொண்டு போற்றிப் படித்து அறிவுவிளக்கம் பெறுவர்; அவரையே தியானித்து உய்திகூடுவர். அப்பெருமானைச் சங்கர முனிவருந் துதித்து வணங்கினர். ஆனால் அவ்வணக்கம் அம்முனிவரைப் பின்பற்றி யொழுகும் சுமார்த்தரின் உள்ளத்தைச் சிறிதும் வழிப்படுத்திலது. அச்சுமார்த்தர் சம்பந்தரை என்றும் தமக்கு அயலாராகவே கொண்டிருக்கின்றனர். நாடு முழுவதும் சைவர் சுற்றிப்பார்க்கட்டும். சம்பந்தரைப் போற்றி, அவர் பாடல்களைப் படித்து உரிமைகொண்டாடி உள்ளங்கரையுஞ் சுமார்த்தர் ஒருவரேனும் அகப்படாரென்பது உறுதி. ப்ரம்ம வித்யாப் பத்திரிகை நடந்துவந்த காலத்தில் தோன்றினர் சில சுமார்த்தபண்டிதர். அவர்செய்த கேவலாத்வைத பிரசாரம் வெகுதீவிரம். சம்பந்தர் பாடல்களிலுந் தங்கொள்கைக்கு மேற்கோள் காட்டுமளவுக்கு அவரிடந் துணிவுண்டாயிற்று. அச்சந்தர்ப்பங்களில் அவர் சம்பந்தரை வானளாவப் புகழ்ந்தனர். அப்புகழுரைகளுள்,

'அறுபத்துமூவருள் முதன்மைபெற்ற பரசமயகோளரியும் கௌண்டின்ய குல சூளாமணியும் ஸ்மார்த்தப்பிராமண குல பாலாழி கௌஸ்துபமாய எமது குலாசாரியரான ஸ்ரீஜகத் குருநாதன் புகழ்ந்த தமிழ் மதலையாய மாசிலாமாதேவ ரடியார்மணி ஸ்ரீஞானசம்பந்த மூர்த்திகள்' (ப் - வி 11-1-20)

'ஸ்ரீமத் சர்வஞ்ஞ சிகாமணியாய கவுணியபிரான்'. (ப்-வி 11 - 3 - 56)

'ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஞானசம்பந்தப்பிரான்' (ப் - வி 11 - 3 - 56)

'ஞானிகள் சிரமேற்கொள்ளும் ஆளுடையபிள்ளையார்' (ப் - வி 8 - 9 - 140)

'சுத்த வைதிக சிவாத்துவித சித்தாந்தப் பிரவர்த்தகாசாரியருள் ஒருவரான ஸ்ரீமத் கௌணியர்பிரான்' (ப்-வி 11 - 5 - 97)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பன சில. சம்பந்தர் சித்தாந்தசைவரல்லரோவென ஒரு சார் சைவர் வினவுமளவுக்கு அப்புகழ்கள் சென்றுவிட்டன. ஆனால் அது வஞ்சப்புகழ்ச்சி.

'உத்தரவேதமான திருக்குறளும், தேவாரம், திருவாசகம் ... என்னுந் திருமுறைகளும், தம் கொள்கைக்கு முழு மாறாகின்றதுகண்டு, அவற்றை அயலாகக்கருதி ஒதுங்கு நீரரான ஏகான்ம வாதிகளுட்பட்டார் சிலர் இக்காலத்து அவற்றின்கணுள்ள திருவாக்குகளில் ஓரோவொன்றை எடுத்து இங்ஙனம் போலியாக வுரைசெய்து, உரிமை கோடற்குக் காரணம், உயர்ந்தோரெல்லாம் இத்திரா விடச் சுருதிக டெய்வமொழியாத றோர்ந்து பாராயணஞ் செய்து திருவரு டலைக்கூட முயலாநின்றார். நாம் அவற் றைத் தழுவாது ஒதுங்குதலால், நம்மைப் பரமசிவன் றிருவருட் கயலானவரென்றும், நம் ஏகான்மவாதக் கொள்கை தம் உண்மை நாயன்மார் வைதிக சைவத் திருவருணெறிக்குப் புறம்பாயதென்றும், தமிழுலக நம்ம னோரைக் காணும்பொழுதெல்லாம் இகழ்ந்து அவமதித் தணுகாது செல்கின்றது. உத்தரவேதந் திருமுறை என்பவற்றின்கணுள்ள வோரோர் செய்யுட்களை எடுத்து நம்மதமாக்கி உரைசெய்து போற்றின், நம்மை இகழாது மதித்து நம்மோடு உரையாடவரும்; அன்னுழியதனை நம் மதத்திலீர்த்துக் கொள்ளலாமெனக்கொண்ட துரபி மானமே பிறிதில்லையென்றறிக'

என அவ்வஞ்சத்தைச் சபாபதிநாவலர் தம் 'திராவிடப் பிரகா சிகை'யில் எடுத்துக்காட்டி ஒழித்து அச்சைவருக்கு உபகரித் தார். சுமார்த்தர் நாயன்மாருள் எவரையுமே மதியார் இன்னும் காண்க.

'இவரு மிவரினத்தாரும் பௌஷ்கர சுருதி, திராவிட சுருதி என்பதாதி பல விவகாரங்களில் பௌருஷேயப் பிரபந்தங்களை அவற்றுக்கேலாத வேதப் பெயரிட்டு வழங்கினரா? அல்லது வேதாந்திக ளெங்ஙனம் செய் தாரா? இவர்கள் தந்திரங்களுக்கு சுருதிப் பெயரையும், தமிழ்ப் பாட்டுக்களுக்கு திராவிட வேதப் பெயரையும் கிறிஸ்தவர் தம்முடைய புஸ்தகத்திற்கு சத்யவேதப் பெய ரிட்டாரென்பதே ஒவ்வும். வேதாந்திகள் எங்கும் வேத மில்லாததற்கு வேதப்பெய ரிட்டாரில்லை. இவரும் இவ ரினத்தாரும் பெரியபுராண மென்பதாதி சொற்களால் புராணமல்லாத தமிழ்ப் பாட்டுகளுக்கு அப்பெயரேற்றி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

> வழங்கினுராயின், அது மகாபுராணம், ஸ்ரீ புராணம் என்று தன்னூலுக்குப் பெயரிட்ட ஜைனர் வழக்கத்தை... கைக்கொண்டாற்போல என்பது ஒவ்வும். வேதாந்திகள் எங்கும் புராணமல்லாததைப் புராணமென்ருர்களில்லை ... இங்ஙனம் வேதமல்லாததற்கு வேதமென்றும் புராணமல்லாததற்குப் புராணமென்றும் தோன்றியபடியெல்லாம் கற்பித்துப் பிறரை ஏய்க்க எத்தனித்தல் எவரிடத்துள்ளதென்பதை பண்டிதர் யாவரும் அறியாமல் போகார்' (ப் - வி 12 - 8 - 154)

என்ருரவர்; அதில் அவர் சைவத்திருமுறைகளைக் கீழ்நிலையில் இருந்துகொண்டு பழித்திருப்பது காண்க. வேதாந்தமாவது உபநிடதம். அதுவும் வேதமே. அவர்கருத்துப்படி அபௌருஷேயமே. வியாசசூத்திரமோ பௌருஷேயப் பிரபந்தம். அதை அவர் வேதாந்தசூத்திரம் என வழங்குவர். அதுதகுமா? வேதத்துக்கே பிரம்மம் என்பதும் ஒருபெயர் என்பாரவர். அங்ஙனமாகலின் அவ்வியாச சூத்திரத்துக்குப் பிரம்மசூத்திரமென்றுதான் அவர் பெயரிடலாமா? அவர் சம்பந்தரைப் போற்றுபவர்போல் நடித்தார். சம்பந்தர் பாடல்களில் திருவிருக்குக்குறள் எனச் சிலபாடல்கள் வருகின்றன. இருக்கு என்பது ருக்வேதம்; நான்கு வேதங்களுக்கும் பொதுப் பெயராகவும் வழங்கும். அப்பெயர் அப்பாடல்களுக்கிருக்கலாமா? அப்பெயரிட்ட சம்பந்தரை அவர் ஏன் முன்காட்டியபடி போற்றிப் புகழ்ந்தார்? ஆத்மபுராணம் என்ளெரு மாயாவாத நூலுண்டு. புராணங்களிற் சேராதது அது. அதற்குப் புராணமென அவர் ஏன் பேரிட்டார்?

இனிமெய்கண்ட தேவராதியோரையும், சிவஞான முனிவர் குமரகுருபரமுனிவர், திரிலோசன சிவாசாரியர் ஆகியோரையும் அவர்வாக்குக்களையும் அம்மாயாவாதர் கௌரவித்தவிதந்தான் யாது? அதனை,

> 'விகார ரூபமுள்ளவனுக்கு மன்மதன் என்று பெயரிருப்பது பற்றி அவன் அழகுள்ளவனுவனே? அதுபோல மெய்யினிலக்கண மின்னதென்றறியாத ஒருவருக்கு மெய்கண்டார் என்று பெயரிருப்பதுபற்றி அவர் மெய்யைக்கண்டவராவரோ?' (மு-மை 216)

> 'வடமொழியிலுள்ள (சிவஞானபோதம்) பன்னிரண்டு சிறிய சூத்திரங்களைத் தமிழில் சரியாய் மொழிபெயர்க்கவறியாது ஒன்று கிடக்க மற்ளென்ருய் மொழிபெயர்த்த மெய்கண்டாரா(?) ...... அத்துவிதம் எனுஞ் சொற்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மெய்ப்பொருளுரைக்கும் திறமுள்ளவராவர்! ஆ! ஆ! இது விந்தையிலும் மிகு விந்தையேயாம். ... ... மெய் கண்டார் அத்துவிதச் சொற்கு மெய்ப்பொருளுரைத் தருளினரென்பது சம்ஸ்கிருத அட்சரமே இன்னதென்று அறியாதவன் ஆரணத்தின் அரும்பொருள்களையருமை யாய் விளக்கினனென்பதற்கினமாய் நின்றதென்க' (மு - மை 217)

'இவர் கனவுகண்ட அருணந்தியார்சொல் மிக்க சிலாக் கியமான ஓர் பிரமாணமோ? ... எவன் எவ்வருணத்தில் பிறந்தான், அவன் அதிலேயே தீக்ஷைபெற்று ஆசாரி யாபிஷேகம் பெற்ருல் அவன் அவ்வருணத்திற்கேயா யினும் அதன் கீழ்வருணத்துக்காயினும் ஆசிரியனுகலா மேயன்றி ஈசாஞ்ஞையாகிய வருணுசிரமாசாரங்களை என்றும் கடக்கக்கூடாது என்றும் பலவிடங்களிலும் ... புகழ்ந்திருக்க அதற்கு நேர்மாருக அருணந்தியார் முதலிய இவர் குருசந்ததியார் எப்படிக் கீழ்வருணத் தார்க்குச் சீடரானுர்' (ப் - வி 11-3-56)

'அருணந்திசிவம் விரித்தவைகள் நிர்மூல மாதலாலும் ... அருணந்திசிவங் கொண்ட நிமித்தகாரண வாதத்தை அவைதிகமென்று சந்தேகமின்றிக் கூறுதலானும், அவை பிரமாணமாகா ... அவைதிகர்க்கே அவை சிறந்திடும்' (ப் - வி 7-15-7)

'பாஷ்யக்காரர்கள் அபிப்பிராயங்களைத் தழுவாது தமக்கு வேண்டியவாறே யெழுதிவைத்துச் சென்ற அருணந்தி முதலாயினர்' (ப் - வி 7-19-1)

'அருணந்திசிவாசாரியார் முதலாயினர் எழுதிய சைவ சித்தாந்தத்துக்கு எந்தப்பாஷியம் ஆதாரம்? ... ஆதா ரமேயில்லை' (ப் - வி 7-21-2)

'சிவஞான சித்தியார் முதலிய தாதப்பாட்டுக்களை யன்றி வேறெந்தப் பெருநூலையவர் படித்தவர்கள்' (ப்-வி 8 - 16 - 245)

'அருணந்திசிவாச்சாரியர் முதலாயினர் பட்சத்துக்கு யாதும் பிரமாணமில்லை. அவர்கள் அவதார புருஷர்க ளாகக் கூறப்பட்டவர்களுமில்லை. ... அருணந்தியார் முதலாயினர் வாக்கையாமொவ்வோம். ஏனெனில் நூல் களில் அவர்களை பிரஸ்தாபிக்கவில்லை. (ப்-வி 7-22-142)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'உமாபதிசிவாச்சாரியார்...தில்லை தீக்ஷிதரிடத்தும் அவர் மதத்தினிடத்தும் துவேஷம் அதிகமாய், அதை நிறைவேற்ற, கண்ட கண்டவாறு தூஷித்து நூல் எழுதி விட்டார். அவரது நூலினுலேயே அவர் அத்துவித சித்தாந்தத்தை உணராதவரென்று காட்டுகின்றது. அப்படிப்பட்ட நூலைக்கொண்டே இப்போது உள்ள சித்தாந்தசைவரும் சுயவாராய்ச்சியின்றி அத்துவிதிகளை இகழ்ந்து வருகின்ருர்கள் ... உமாபதி சிவாசாரியார் வாக்கு இவருக்கும் இவர் போன்ருருக்கும் குருவாக்கியமாயிருக்கலாம். மற்றவருக்குக் குருவாக்கியமாயிருக்கவேண்டிய அவசியமின்றே, நமக்கு உமாபதி சிவமும் ... பூர்வபக்ஷ கட்சியில் சேர்ந்தவர் ' (ப் - வி 6 - 18 - 347)

'அருணந்தி சிவமும், உமாபதி சிவமும் நாவில் நரம்பின்றி சிவாத்வைதிகளைத் திட்டியிருக்க ...' (ப் - வி 12 - 8 - 153)

'இவர் ... சிவஞ்ஞான பண்டிதரையுந்தான் ஒரு மகா பாஷ்ய கர்த்தாவென்றனர்' (ப் - வி 11 - 11 - 211)

'திருவாவடுதுறை ஆதீனம் சிவஞானத் தம்பிரானையே சைவ பாஷ்யகாரர் என்கிருர்போலும்! ... இவரது விதிவசம் சிவஞானத் தம்பிரானை பாஷ்யகாரராகக்கொண்டு அவர் பரம்பரையில் உபதேசம் பெற்றிருப்பாராயின்...' (ப் - வி 7 - 15 அனு 7)

'ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த, ஆரா வின்ப வருங்கனி பிழிந்த, சாரங்கொண்ட சைவ சித்தாந்தம் என்றும், வேதம் பசுவதன்பால் மெய்யாகமம் என்றும் பெரியோர் கூறியதாக மேற்கோள்கொண்டு புறப்பட்டார். வேதாந்தத்து உச்சியில் பழுத்த கனியின்சாரம் ஆகமமெனவே சக்கை வேதமென்ருயது. சக்கை வேதமாகவே யதினுற் பயன் யாதுமில்லை யென்றும் ஆகமமே பயன்படுவதென்றும் பொருள்படுகின்றது. இதனுலும் வேத நிந்தையே பெறப்பட்டது. இந்தத் திருட்டாந்தங் கூறிய பெரியவரும் பெற்ற தாயை ஆழம்பார்ப்போரில் அக்கிராசனுதிபதியாக வீற்றிருக்கத் தக்கவரேயாம் ... இவ்வளவுக்குப் புத்தியில்லாதவர்கள் மதஸ்தாபகர்களாக வேற்பட்டது கலிதர்மமே யாம். ... ஆகமங்கள் வேதசாரமாவது கண்ணில்லான் கண்டகாட்சியோடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒக்குமென்க. ஆதலால் முதல் எடுத்துக் காட்டுவது அறியாதார் கூற்றேயாமென்றொழிக. வேதம் பசு, அதன் பால் ஆகமமாமென்றதும் நமதன்பர்க்குச் சாதகமாயின தில்லை. ...' (ப் - வி 7-15 அனு 7)

'சித்தாந்த சாராவளிமுதலிய குருக்கள் சுவடிகளைப் போல ... பொருட்பொருத்தம் ஆகாயமலருக்கும் பொன் னூற்றத்துக்கு மொத்ததாய் நிற்பதும் ... ' (ப் - வி 12 - 11 - 2)

என்பவற்றாலறிக.

பௌஷ்கராகமம் மனிதவாக்கு. திருமுறை தமிழ்ப்பாட்டுக் களின் தொகுதி. அதுவும் மனிதவாக்குத்தான். அம்மனித வாக்குக்களை வேதமெனச் சொல்வது தகாது. பெரியபுராணம் புராணங்களுட் சேரவில்லை. அதனைப் புராணமென்பது தவறு. அங்ஙனம் வேதமல்லாதவற்றை வேதமெனவும், புராணமல்லா ததைப் புராணமெனவும் பேசுவது பிறரை ஏய்க்க எத்தனிப்ப தாகும்.

மெய்யின் இலக்கணம் அறியாதவர் மெய்கண்டார். அவர் வடமொழிச் சிவஞானபோத சூத்திரங்களைச் சரியாக மொழி பெயர்க்கத் தெரிந்திலர். அத்துவிதம் என்னுஞ் சொற்கு அவர் தானா சரியான பொருள்காண வல்லார்?

அருணந்திசிவத்தின் செய்யுட்கள் பிரமாணமாகா. அவர் உயர்ந்த வருணத்திற் பிறந்தும் தாழ்ந்த சாதியினராகிய மெய்கண்டார்க்குச் சீடரானார். அப்படியானது தவறு. அவர் விரித்த கருத்துக்கள் நிர்மூலமாகத்தக்கவை. அவரது நிமித்த காரணவாதம் அவைதிகம். அவைதிகர்க்கே அவ்வாதம் உகப்பைத் தரும். அருணந்தியாரும் அவரைச் சார்ந்தாரும் தம் மனம்போனபடி நூலெழுதினார்கள். சிவஞானசித்தியார் முதலிய நூல்கள் தாதப்பாட்டுக்கள். அருணந்தி முதலாயினோர் அவதாரபுருஷர்கள் அல்லர்.

தில்லைத் தீக்ஷிதருள் ஒருவராகிய உமாபதிசிவம் மற்றைத் தீக்ஷிதர்களிடத்தும், அவரது மதத்தினிடத்தும் துவேஷங் காட்டி நூலெழுதிவிட்டார். அவர் அத்துவித சித்தாந்தத்தை உணராதவர்.

அருணந்தியாரும் உமாபதியாரும் நாவில் நரம்பின்றிச் சிவாத்வைதிகளைத் தூஷிப்பவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவஞானமுனிவர் ஒருபண்டிதரே, ஓ நதம்பிரானே. அவர் எப்படியும் பாஷ்யகாரராக மாட்டார். அத்தகுதி அவருக்கில்லை.

குமரகுருபர முனிவர் பெற்றதாயை ஆழம்பார்ப்பவருள் தலைவர். புத்தியில்லாத அவர் மதஸ்தாபகராக ஏற்பட்டது கலி தர்மமே.

ஆதிசைவருள் ஒருவராகிய திரிலோசநசிவம் எழுதிய சிந்தாந்த சாராவளி பொருட் பொருத்த மற்றது.

இவையெல்லாம் அவ்வெடுத்துக்காட்டுக்களிற் கண்டவை. அவ்வெழுத்துக்களின் கர்த்தாக்களான மாயாவாதரின் காலத்திருந்த சோமசுந்தர நாயகர் முதலியோர் ஆக்கிய புத்தகங்களில் அத்தனையும் பலமான சாட்டையடி பெற்றுள்ளனதான். ஆயினும் அவற்றைமீண்டும் நான் இங்கெடுத்துக்காட்டினேன். ஏன்? சைவசமய ஆசிரியன்மாரையும், அவராக்கிய நூல்களையும் மாயாவாதர் அப்படிப் பேசியிருப்பதை இப்போதுள்ள சைவசமயிகள் கண்டிராரென்பது என் எண்ணம். இப்போது சைவப்பிரசாரகரும், எழுத்தாளரும் நூற்றுக்கணக்கில் புறப்பட்டுள்ளார்; சைவசமயிகளுள்ளும் உலககலையில் மேம்பட்டு உயரிய பட்டம் பதவி வகித்து வருபவரும் பலர்பல ராயினர். அவராவது அப்பேச்சைக்கண்டு, தம்சமயமானம் போவதை உணரவேண்டும். அதற்காகத்தான் அப்பேச்சு இங்கு இடம் பெற்றது. தம் சமயமேம்பாட்டை யறியாமையாலும், அதில் தாம் காட்டிவரும் அலட்சிய புத்தியாலும், அவைபோன்ற பிற காரணங்களாலும் அவர்ஏமாறுவது ஆபத்தானது. சைவசமய பிரமாண புருஷராகிய ஆசிரியன்மாரையும், அச்சமய பிரமாண வரம்பாகிய சத்சாத்திரங்களையும் மேற்கண்டவாறு பேசிய மாயாவாதரின் கால்மாட்டில் விழுவதும், அவர் கொடுக்கைப் பிடித்துக்கொண்டு அவர்வழிச் செல்வதுமே அவ்வேமாற்றமாகும். அதனல் அவர் கெடுவதோடு தம் சந்ததிகளும் அப்படியே புறம்போக வழிசெய்தவராவர்.

சங்கர, இராமானுஜ, மத்வமுனிவர் மூவரும் தம்முள் அத்வைதச் சொற்கு மாறுபட்ட பொருள்கொண்டு விபரீதமான பாடியங்கள் செய்து வெவ்வேறு மதத்தினராயினர். ஆனல் அம்மூவரும் பார்ப்பனர். அவர்வழியிற் சென்று மூன்று மதத்தினராகப் பிரிந்த பிராமணரெல்லாம் அம்மதங்களை இரண்டாமிடத்தில் தள்ளி அச்சாதியொருமையால் ஒருவரையொருவர் தழுவிக் கோடலாயினர். அதனேடு இன்னென்று முண்டு. அவருக்குக் கிருஸ்தவ இசுலாமியமாதி சமயப் பிராமண

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரெல்லாம் விலக்கு. ஏன்? அவரனைவரும் வேதத்தைவிட்டனர். மேலேசொன்ன அத்திரிமதப் பிராமணர் வேதத்தை விடுகிலர். வேதப்பொருள்பற்றித் தம்மூட் பிணங்கிக் கிடந்தாலும் வேத நூலைப் பற்றிக்கொண்டு இணக்கமுடையவராஞர். அவருக்கு வேதப்பொருள் அவசியமன்று, வேதநூலே அவசியம். அப் பொருள் பற்றியதே கேவலாத்வைத, விசிஷ்டாத்வைத, த்வைத மதவேற்றுமை. அச்சுமார்த்தர் சைவசமய ஆசிரியன்மாரைப் பலபட நிந்தித்தனர். அவரைத் தம்மவர் எனக்கொண்டு போற்றுவாரும், அவர்குருமாரைத் தம்குருமாரென மயங்கித் தம் பணச்செலவில் வரவேற்பு, ஊர்வலம், பாதபூசை முதலி யனசெய்து உபசரிப்பாரும் சைவசமூகத்துள் இருக்கலாமா? அச்சமூகத்துக்கு அவரால் அவமானமில்லையா?

சுமார்த்தரின் தெய்வம்

சுமார்த்தர் பிரமமொன்றே சத்தையென்பார். அப்பிரமம் நிர்விசேஷ சைதன்ய வஸ்துவுமாம். விசேஷணமில்லாத அதைச் சேதனமென்பதும், அசேதனமென்பதும் ஒன்றே. அதற்குச் சீவன்களைக் குறித்துக் கருணையால் எவ்வித சங் கற்பமுங் கிடையாது. விசேஷணமுடையதே சங்கற்பிக்கும். இன்னும் சொல்லே உண்மை, பொருள் கற்பனையேயென்பார் அவர். ஆகலின் அவருக்குப் பிரமமென்ற சொல்லே சத்தையும் பிரமப்பொருள் மித்தையுமாகும். அவருட் பிரமோபாசகரெல் லாம் அப்பொருளை உபாசியாரென்க. அவர் வணங்குவன வெல்லாம் மாயாப் பிரதி பிம்ப தெய்வங்களேயாம். அவ் வுண்மையை

> ' உருத்திராதியரோ மனோவாக்குக் கெட்டும் சத்துவமாயா சம்பந்தமான காரியப்பொருள். உமாமகேசுவரர், சந்திர சேகரர், தக்ஷிணாமூர்த்தி, காபாலி முதலியவைகள் சுத்த சத்துவ மாயாசம்பந்தமுள்ள மூர்த்தங்கள். இம்மூர்த்தங் கள்தான் பத்தர்களுக்கும் முமுட்சுகளுக்கும் வந்து காட்சிகொடுத்தும் ஞானேபதேசஞ் செய்தும் பற்பல திருவிளையாடல்கள் செய்தும்போயின ' (ப்-வி 9-5-78)

> ' உருத்திரன் முதலிய சத்துப் போலிப்பொருளைக் கடவுள் என...' (ப்-வி 9-5-78)

> ' ஆசாரியஸ்வாமிகள் (சங்கரமுனிவர்) கருத்து பிரமன், விண்டு, ருத்திரன் மூவரும் மாயாசபள மூர்த்திகளே என்பது சகலருமுணர்ந்த விஷயம் ' (ப்-வி 9-9-141)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'சீவர்க்கு உபாதி அவித்தை; மாயையன்று. மாயை பரமான்மாவுக்கு உபாதி; வேறொருவர்க்கல்ல. மாயையினது காரியமான குணங்களால் மறைவுபட்டவர் பிரம விஷ்ணு உருத்திரர். மாயோபாதியிலுள்ளவர் பரவியூகங்களாவர்; சீவவியூகத்திலிருப்பவர் அல்லர்' (ப் - வி 6-21-379)

'ஈஸ்வரன் மாயா பிரதிபிம்பர். அந்த மாயை சுத்த நிர்ம்மல ஜலம்போன்றது. அந்த மாயை மோகஞ் செய்வதன்று. அன்றி அம்மாயையோடு ஈஸ்வரன் கூடியும் கூடாதவராகும். மேலும் அவர் சர்வஞ்ஞத்துவாதி குணங்களுள்ளவரும் சிருஷ்டியாதி தொழிற்செய்பவருமாம். இந்தத் தொழில் செய்வது ஜீவகாருணியத்தின் பொருட்டேயாம். இவரே ஜீவகாருணியத்தால் சங்கராசாரியராக அவதரித்தார். ரஜோகுணப் பிரதிபிம்பர் ஜீவர்கள். ரஜோ குணத்துக்கு அவித்தையென்று பேர். அது மோகஞ்செய்வது. அம்மோகத்துக் குட்பட்டுக் கிஞ்சிக்ஞராயும் பிறப்பிறப்புக்களை அடைந்து அவ்வீஸ்வரனை உபாசிப்பவர்கள்' (ப் - வி 6 - 21 - 382)

'வெண்டலை விழிகை காலில் விளங்கிட நின்றவரும் வெண்ணீறு பூசிக் கங்கையைத்தாங்கினவருமான உருத்திரன் அல்லது உருத்திர பேதத்தைக் கொண்டவரும் அநிர்வசனீயமாகின்றனர். ... மூவரும் மாயாப் பிரதிபிம்பர். ... நாமரூபங்களெல்லாம் மாயா சகிதம்' (ப்-வி 7 - 14 - 12)

என்பவற்றுல் அறிக. சைவாலயங்களில் உள்ள சிவலிங்கப் பெருமான், நடராஜர், உமாதேவியார், தக்ஷிணாமூர்த்தி, விநாயகர், ஸ்கந்தர் முதலிய தெய்வங்களும், வைணவாலயங்களில் உள்ள விஷ்ணுவின் மூலவர் முதல் அனைத்து மூர்த்திகளும் பிரமத்தின் மாயா சபளங்களென அவர் கொண்டவராஞர். வைணவசமயம் அக்கொள்கையை எவ்வளவில் மதித்திருக்கிறதென்பதை அச்சமய வல்லாரிடங் கேட்டுத்தெளிக. சைவாலயங்கள் அனைத்தும் சிவாகமங்களில் விதித்தபடி நிருமிக்கப்பட்டன. ஆண்டுப் பிரதிஷ்டை, பூசை, விழா முதலியவும் அவ்விதிப்படியேயாம். அங்குள்ள மூர்த்திகளெல்லாம் ஞானவடிவங்கள், மாயாதீதங்கள் என்கின்றன அவ்வாகமங்கள். அவற்றைப் பிரமாணமாகக்கொண்டது சைவசித்தாந்தம். அந்நூல்கள் சொல்லளவே அச்சமயத்துக்கும் கொள்கையாம். மாயா சபள மூர்த்திகளென்பதும் ஞானமூர்த்திகளென்பதும் சொல்லளவிற்ருன் வித்தியாசமுறுவன, பொருளளவில் ஒன்றுதான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பவர் தமக்கென ஒன்றிலாதவரே. சைவசமூகத்தின் சமய ஞான சூனியத்தைப் புகலாக வைத்துக்கொண்டு அம்மூர்த்தி களை அங்ஙனம் மாயா சபளங்களெனப் பேசலாயினர். அம் மாயாவாதர்.

அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன்வாயில் மண்ணு என்றொரு வசனம் சாமானியர் வாயிலுண்டு. அரி வைணவ சமய தெய்வம். சிவன் சைவசமய தெய்வம். ஆகலின் அரியும் சிவனும் ஒன்று என்னுங்கொள்கை வைணவத்துக்கோ சைவத் துக்கோ சிறிதும் உடன்பாடன்று. மேலும் பிரமன் இந்திரன் முதலியவும், அல்லா ஏசு முதலிய இன்னும் எத்தனையோ சமய தெய்வங்களிருக்கின்றன. அவற்றை மாத்திரம் வேறு என்ன லாமா? ஆகாது. அச்சாமானியர் கருத்துப்படி அவ்வசனத் திலுள்ள அரி, சிவன் என்பன பிறதெய்வங்களையுங் கொண்ட உபலக்கணமே. ஆகலின் எல்லாத் தெய்வங்களும் ஒண்ணு தான். அவ்வுண்மையை அறியாதவன் வாயில் மண்ணுதான். அவ்வசனத்துக்குத் தாற்பரியம் அது. ஆனால் அதனை இசு லாமிய கிறிஸ்துவ மாதியவும் அங்கீகரியா. ஆகலின் அச் சாமானியரின் வசனம் மத்தமென்பதறிக.

ஆனால் மாயாவாதத்துக்கு அது உடன்பாடு. மாயா வாதியர் பிரதிபிம்ப தெய்வங்களையே வணங்குவரென்பது முன் சொல்லப்பட்டது. பொருளைவிட்டு நிழலை வணங்குகிறவர்க்கு எந்தநிழலாயிருந்தாலென்ன? முள்ளுத்தான் குத்தும். முள்ளின் நிழலுமா குத்தும்? பூத்தான் கமழும். பூவின் நிழலுமா கமழும்? மனிதன்றான் அறிஞன். அவனது நிழலுமா அறிவுடையது? எந்தப் பொருளின் தன்மையும் அதன் நிழலுக்கில்லை. எல்லாப் பொருள்களின் நிழலும் ஒரே தன்மையதுதான். அந்நிழல் போன்றனவே எல்லாத் தெய்வங்களும். ஆகலின் எந்த தெய்வத்தை வணங்கினாலுங் குற்றமில்லை. அத்தெய்வங்க ளாகிய நிழல்களுக்கெல்லாம் பொருளாயிருப்பது பிரமம். அது வெறும் பூரண பிண்டம். மாந்தர் அத்தெய்வங்களை வணங் குதல் வணங்காமைபற்றிய பிரஞ்ஞை அப்பிரமத்துக்குக் கிடை யாது. ஆகலின் தெய்வ வணக்கத்தில் அவருக்கு வரன் முறையே இல்லை. உதாசீன புத்தியே யுண்டு என்க. ஆகை யாற்றான்

'வேதம் புகழ்ந்தோதிய தேவர்களுள் யாரையேனும் உபாசனை செய்துஜன்மத்தை ஈடேறச்செய்வதேயன்றோ மானிடர் கடமை. அதனை நிந்திப்பது நியாயமாமோ?... ஸ்மார்த்தருட் பெரும்பாலார் சிவபக்தர்களேயாவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

> சிலர் விஷ்ணு பக்திமான்கள். அனேகர் சிவவிஷ்ணுக்களைச் சமமாகப்பாவிக்கின்றவர்களாவார். அத்வைதமே மோட்ச சாதனமார்க்கத்துட் சிறந்ததாகையால் அதனையே யாவருமொப்பி நடக்கின்றூர்கள். ஆயினும் சகுணேபாஸனை பயனற்றதெனப் பற்றறக் கழித்து விட்டாரில்லை. தத்தமக் கிசைந்த தேவதையையாராதித்தே வருகின்றூர்கள்' (ப் - வி 7 - 14 அனு 1)

என்றூரவர். 'வேதம் புகழ்ந்தோதிய' என்பது ஒரு வரம்பு. வாம சாக்த காபால பாஞ்சராத்திராதி தந்திரங்களுள. அவற்றின் வழியே தெய்வ வழிபாடுசெய்வார் பலர். அவ்வழிபாட்டு முறை அவைதிகமென்பது இருக்கட்டும். அச்சமயங்களின் தெய்வங்கள் வேதத்தாற் புகழ்ந்தோதப்பட்டனவே. அத்தெய்வங்கள் பற்றியாவது அவ்வாமாதி சமயங்களை வைதிகமென அச்சுமார்த்தர் சம்மதிப்பாரா ? அவர்

> 'பலர் விஷ்ணு மதஸ்தரும் கருப்பண்ணனுக்குப் பலியிடுவாரும், பாவாடைராயனைப் பணிந்தொழுகுவாரும், காட்டேரிக்குப் பூசைசெய்வாருமாய் இருக்கின்றூர்களே ...' (ப் - வி 7 - 14 அனு 2)

எனப் பிறரைக் குறைபேசுகின்றனர். அவற்றை வணங்கினுல் என்ன ? சிறு தெய்வங்களின் பிரஸ்தாபமே வேதத்தில் கிடையாதா? வேதம் புகழ்ந்தோதிய தெய்வங்களுக்கும், இகழ்ந்தோதிய தெய்வங்களுக்கும் அவர் விவரங் கூறுவாரா? பரம்பொருளென ஒரு தெய்வத்தைத்தான் வேதம் புகழ்ந்தோதியிருக்கும், அது சிவபரம்பொருளே. பிறதேவரெல்லாம் சிறு தெய்வங்களே, பசுக்களே. சாபவசப்பட்ட அவருக்கு அச்சிவபத்தியின் முக்கியத்துவம் தோன்ருதது வியப்பன்று.

> 'அவர்கள் (சங்கரமுனிவர்) சிவநிந்தகராயிடின் அவர்களால் ஸ்தாபிக்கப் பெற்றுள்ள மடங்களில் சந்திர மௌளீசுவர பூசை இன்று நடந்துவருகின்றதேனே?' (ப் - வி 7 - 14 அனு 2)

என்று தம்மைப் பிரஸ்தாபித்துக்கொண்டார் சுமார்த்தர். அச்சந்திரமௌளீசுவரரும் மாயாசபள மூர்த்தியாகிய ஈசனே. அவன்பாலுள்ள எட்டுக்குணமும் ஐந்து தொழிலும் பிரமத்துக்கில்லை. ஆகலின் பிரமத்தைவிட ஈசன் உயர்ந்தவன். பொருளைவிட நிழலே ஆதிக்கம் பெறுவதாயிற்று. ஆகலின் சங்கரமுனிவர் அவ்வீசனை ஈசனுகவே பூசித்தவரானூர். பிரமமாகக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டு அவனைப் பூசிக்கமுடியாது. ஏன்? பிரமத்தினிடம் அக்குணமுந் தொழிலும் சூனியம். சந்திரமௌளீசுவரனை அச்சூனியபிரமமாகக்கொண்டு பூசிப்பது பொய்ப்பூசையாகும்.

'அந்தச் சாக்தா பஹிச் சைவா
வ்யவ ஹாரேது வைஷ்ணவா
நாநாரூப தரா: கௌளா:
ப்ரசரந்தி மஹிதலே...

...(இதன்பொருள்) வாமசாக்தர்கள் இதயத்திலே சாக்தர்களாகவும் வெளிக்குச் சைவர்களாகவும் வியவகாரத்திலே வைஷ்ணவர்களாகவும் (இவ்வாறு) பல பல வேஷம்பூண்டு உலகத்தில் சஞ்சரிப்பார்கள் என்பதேயாம். இதனால் வாமசாக்தர்கள் நடிக்கும் பொய் வேஷத்தைத் தெரிவித்து அவர்களது மாயவலையில் சிக்கி அழியாதபடி ஸ்மார்த்தர்களை எச்சரித்தாயிற்று. இதற்கு வாமசாக்தர்கள் வேறு பொருள் கூறுவதும் உண்டு. அதனை யாமிங்கே எழுதவேண்டியதில்லை' (ப் - வி 7 - 14 அனு 1)

என்றார் அவர். அவ்வாக்கியம் சுமார்த்தருக்குப் பொருத்தமாகவேயிருக்கிறது. அப்படியிருந்தும் பிறர் அவ்வாக்கியத்தை எடுத்துக் காட்டும்போது

'அந்தச் சாக்த ... என்றதோர் அபஸ்மார வசனத்தை எழுதிவிடுத்தார். இவருக்கு நாணமென்பதே இல்லை' (ப் - வி 7 - 14 அனு 1)

என்றாரே அவர். அந்த வாக்கியம் எந்தவகையில் அபஸ்மாரம்? அவரே அப்பொய் வேடதாரிகளென்பதற்கு அஃதெடுத்துக் காட்டப்பட்டதாலா? வாமசாக்தர் இங்குஅகப்படுவது அருமை. சுமார்த்தரோ விபூதி ருத்ராக்ஷங்களாகிய சிவசின்னம் அணிந்துகொள்வர்; அச்சுதா, வாசுதேவா, கோவிந்தா என விஷ்ணு நாமங்களை உச்சரிப்பர். சுமார்த்தசுமங்கலிகள் உத்தூளனமாகவோ, திரிபுண்டரமாகவோ விபூதியை யணியார். குங்குமப்பொட்டே அவர்நெற்றியில் இடப்பட்டிருக்கும். குங்குமம் சாக்தசமயச் சின்னமாம். சுமார்த்தர் அவ்வேடப் பன்மையிலிருப்பதை இன்றும், எங்கும், யாருங்காணலாம். வாமசாக்தர் அத்தகைய பொய்வேடரென்பது உண்மையானாலும் சுமார்த்தரும் அத்தகையரே யென்பதில் ஐயமில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதம் தமக்கே உரியது என அவர் சொல்லிக்கொள்வது முன்காட்டப்பட்டது. வைதிகர், சிரௌதிகள், சாஸ்திரிகள், சுமார்த்தர் என நூற்பெயராலேதான் அவர்தம்மை விளம்பரஞ் செய்வர். சைவர் என்ற சமயப் பெயரால் அவர் வெளிவரார் அதனுலும் தெய்வ வணக்கத்தில் அவருக்கு உதாசீன புத்தியே யுண்டென்பது அறியப்படும். வேதத்தை அவர் எவ்வளவு உயர்த்திப் பேசினுலும் அப்பேச்சில் அர்த்தமில்லை. ஏன்? ஒருவன் கனவு காண்கிருன். அக்கனுவுலகில் ஒரு சுமார்த்தன் வேதத்தைப் பயபக்தியோடு அத்தியயனம் பண்ணுவதுபோல் தோன்றுகிறது. அந்தப் பிராமணன் மெய்யான பிராமணனு? அந்த வேதம் மெய்யான வேதமா? அந்த அத்தியயனம் மெய்யான அத்தியயனமா? அந்தப் பிராமணன் அவ்வத்தியயனத்தால் மறுமை வாழ்வு பெறுவானு? அவ்வினுக்களுக்கு இல்லை என்பதே விடையாகும். ஏன்? அந்தப் பிராமணன் முதலிய எல்லாம் கனவு கண்டவனது கற்பனையே. அச்சொப்பனவுலகு போன்றதே இச்சாக்கிரவுலகும். ஆனுல் சொப்பனவுலகு கனவு கண்டவனது மனேகற்பனை, சிறிது பொழுதேநிற்பது. இச்சாக்கிரவுலகு பிரமகற்பனை, சற்றதிகநேரம் நிற்பது. வித்தியாசம் வேறில்லை. அவ்விரண்டு உலகங்களும் மித்தை. இது மாயாவாதப் பிரசங்கம். இந்தநிலையில் சாக்கிரவுலகிலுள்ள வேதமும் மித்தை. அதனை அத்தியயனம் பண்ணுவதும் மித்தை. அதற்குப் பலனுக மறுமை வாழ்வு கிடைக்கும் என்பதும் மித்தைதான். சுமார்த்தர் வேதத்தைப்பற்றிப் புகழ்வதெல்லாம் நாடகமே. அவரது தெய்வவணக்கமும் அப்படியே. அம்மாயாவாதம் மக்களுயிர்க்கு இதஞ்செய்வதெப்படி?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடிப்புரை

அத்வைதம் என்பது ஒருசொல். அதன் பொருள்பற்றிய விசாரணை இப்புத்தகம். இது வடிவிற்சிறியது. இதனை மேலும் விரிக்கலாம். அதற்கான கருத்துக்களும் உள. ஆயினும் இவ் வளவில் இது நிறுத்தப்பட்டது. இதனில் வந்துள்ள விசிஷ் டாத்வைத த்வைத மறுப்புச் சிறிதே. அது போதுமென்பது என் எண்ணம். கேவலாத்வைதமே விரிந்த விசாரணைக்கு உரியது. அது செய்யப்பட்டிருக்கிறது. பிரபஞ்சம் மித்தை, சீவன் மித்தை, வேதம் மித்தை, தெய்வம் மித்தை, புண்ணியம் மித்தை, பாவம் மித்தை, சுவர்க்கம் மித்தை, நரகம் மித்தை, ஆசாரம் மித்தை, அனுஷ்டானம் மித்தை, பூசை மித்தை. எல்லாம் மித்தை. இப்படிச் சொல்கிறது கேவலாத்வைதமாகிய மாயாவாதம். அம்மதப் பிரவர்த்தகர்தான் சங்கர முனிவர். ஆனால் பிரமம் ஒன்று சத்தையென்பாரவர். அது வெறும்பேச்சு. அப்பிரமமும் அவரது மதப்போக்கில் மித்தையாய்த்தான் முடி கிறது. அதை இப்புத்தகத்துட் காண்க. ஒருவன் கனவில் நல்லதுஞ்செய்கின்றான், கெட்டதுஞ்செய்கின்றான். அவற்றின் பயன் அவனுக்கு அங்கேயே வருவதுமுண்டு, வராமலும்போம். அவன் சாக்கிரத்துக்கு வந்ததும் அதாவது விழித்தவுடன் அவையெல்லாம் மாயமாய் மறைந்துவிடும். அவன் தன்மானத் தையே போக்கக்கூடிய செயலைக்கூட அக்கனவில்செய்யக்கூடும். விழித்தவுடன் அதனை வெளியிடக் கூசுவானவன். அம்மதப் படி கனவு வாழ்க்கை பொய். அப்படியே இச்சாக்கிரவுலகுமாம். இங்கு மாத்திரம் வாழ்க்கைக்கு வரன்முறையேன்? கனவு வாழ்க்கையும் நனவுவாழ்க்கையும் ஒன்றே,மித்தையே. மரணத் தின்பின் அவனுக்கு எஞ்சி நின்று பலன்தருவது எதுவுமில்லை. இது அச்சமயத்தின் அந்தரங்கக்கொள்கை. பகிரங்கமாகஅவர் கொள்ளும் மதாசாரங்களெல்லாம் நடிப்பே. சாமானியர்அதனை அறியார். பிரபஞ்சம் பிரமமயமென்கிறது அச்சமயம். பூதமய மென்கிறது நாஸ்திகம். உயிர்கள் உலகில் வாழ்வதோடு சரி. உலகைக்கடந்த வாழ்க்கை அவற்றுக்கில்லை. அவ்விரு சமயங் களும் சொல்வதது. அவையே இக்காலப் பிரபஞ்சத்தை ஆண்டுவருகின்றன. அவ்வாட்சியின்விளைவு எப்படியிருக்கும்? அறிஞர் சிந்தித்து விடைகாண்க.

சமயங்களுள் தலையாயது சைவம். அஃதநாதி. அதில் வழிபடப்படும் தெய்வம் சிவபரம்பொருள். இருக்காதி நான்கு வேதங்களும், காமிகாதி இருபத்தெட்டுச் சிவாகமங்களும் அச் சிவபெருமானது திருவாக்கு. அவையே ஞானநூல். அவையே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அச்சமயத்துக்குப் பரமப் பிரமாணம். முற்பிறவிகளில் ஈட்டிய புண்ணிய விசேடத்தால் அந்தப் பிரமாணவழியொழுகிச் சிவ பிரானே பரமாத்மா என்கிறவுண்மையை அனுபவத்திற்கண்டு சான்ருய் நின்ற அநுபூதிமான்கள் திருஞானசம்பந்தமூர்த்தி கள் முதலியோரும், மெய்கண்டதேவர் முதலியோரும், சிவ ஞான முனிவருமாவர். அவரருளிச்செய்த செய்யுட்களனைத்தும் அருளநுபவநூற்கள். அவையும் அச்சமயத்துக்குப் ப்ரமாண சாத்திரங்களாகும். பதி பசு பாசம் என்பன அநாதி நித்தம். அவ்வுண்மை அவ்வேத சிவாகம வழித்தாயது. அதனைக் கண்டது அச்சமயம். பசு சிவோபாசனையால் பாசத்திலிருந்து விடுபடும். அப்போது பதியின்குணம் அவ்விடுபட்ட ஆன்மா வின் மாட்டு விளங்கித்தோன்றும். ஆன்மா அவ்விளக்கத்தில் அழுந்தி அதுவாய்நின்றறியும். அதுவே பேரின்பம், பரமுத்தி. அம்முத்தியிலும் அவ்வான்மாவுக் கழிவில்லை. அதனால் இரண் டறக் கலந்து நிற்றலாகிய சுத்தாத்வைத முத்தியென்றும் அம் முத்தி பேசப்படும். வேதாகமோக்த அத்வைத முத்தி அதுவே. அதனை உயிருக்கு எய்துவிக்கும் சாதனங்கள் நான்கு. அவை சரியை முதலியவாம். அவை மித்தையல்ல, சத்தியம். இருவினை, இம்மை மறுமை, மறுபிறப்பு எல்லாம் சத்தியம். கேவலாத் வைதமே மித்யாவாதம். சுத்தாத்வைதம் சத்தியவாதம். இவ் வேறுபாட்டைச் சைவர் அறிந்துகொள்ளவேண்டும். அவ்வறி வற்றுச் செய்யுஞ் சைவசேவையெல்லாம் சைவசமய துரோக மாய் முடியும்.

பிராமணசாதி முதல் வருணம். அது வேதாகம சம்மதம். ஆதலின் அதனை இகழ்ந்து பேசுவதாகாது. ஆனல் எல்லாச் சாதிகளும் உடலோடழியும், ஒழியும். சமயங்கள் அப்படியல்ல. அவை உயிரைப்பற்றி அதனுடன்சென்று பலனளிப்பன. வைணவ சமயிகளாகிய விசிஷ்டாத்வைத பிராமணரும் த்வைத பிராமணரும் வேதாகமோக்தமான சைவசமயத்தை நிந்தித்து வெளியேறினவர். பிராமணருக்குக் கௌதமராதியோராற் கிடைத்த சாபப்பயன் வைஷ்ணவம். ஆகலின் அவர் அதனை விட்டு மீள்வது துர்லபம். அச்சாதியை அவ்வவைதிக சமயப் பிரவேசத்தால் அவரே தாழ்த்திக்கொண்டவரானர். சைவ சமயிகள் அவரைச் சாதிபற்றி மதிப்பதுண்டு. ஆனல் சமய விஷயம் வரும்போது தம் சமயவிஷயத்தில் அவர் எச்சரிக்கை யாக இருக்கவேண்டும். சுமார்த்தப் பிராமணரும் அச்சாபத் தால் பாதிக்கப்பட்டவரே. அவராசரிக்குங் கேவலாத்வைத மாயாவாதமும் வைணவம் போன்று அவைதிகம். ஆனல் அவருள் சைவாலயங்களில் ஊழியம் செய்வாருமுளர். அது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பற்றி அவருஞ் சைவசமயத்தவரென மயங்குஞ் சைவசமயிகள் பலர். அச்சுமார்த்தர் பிராமணராயினும் அவரது சமயம் சைவ சமயிகளால் ஏற்கப்படுவதன்று. அச்சுமார்த்தரும் சைவசமயத் துக்கு மீள்வது அருமையே. அவரும் புறச்சமயிகளே என் பதைச் சைவசமயிகள் கண்டுகொள்ளவேண்டும்.

ஆனல் சைவசமயிகளுள் உலககல்வியிற் பயிற்சியுடையார், உயரிய பதவிவகிப்பவர், பட்டதாரிகள், கட்சிகளின் பிரமுகர், செல்வமுடையார், செல்வாக்கினர், எழுத்தாளர், பிரசாரகர், தீக்ஷாவான்கள், சிவபூசகர், சிவசின்னதாரணி, விரத வுபவாசாதி அனுட்டானபரர். சைவாலய சேவகர், பூசைவிழா நடத்துவிப்பவர், அஷ்டபந்தன கும்பாபிஷேகங்கள் செய்விப் பவர், மடபதிகள் எனப்பலபடியாலும் மேம்பட்டவர் பலருளர். அவரிடம் சைவசாஸ்திரப் பயிற்சி வரம்பழியாத நிலையில் மிக்கிருத்தல் அவசியம். இன்றேல் அம்மேம்பாடு சைவசம யத்தைச் சரியாகப் பரிபாலியாது. அம்மேம்பாடேபற்றி அவர் அச்சமயத்துறையிலும் வல்லவரெனக் கருதிக்கொண்டு தருக்கு வது ஆபத்து. அவர் சைவபரிபாலனஞ்செய்ய முற்படுவது குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோலாம். அவர் ஒன்றுகிடக்க ஒன்று செய்துவிடுகின்றனர். அவர் செய்யும் சைவ துரோகங்கள் பல. சைவசமயத்துக்குக் கிறிஸ்தவராதி யோர்தாமும் அவ்வளவு செய்யமாட்டார். அத்துரோகங்கள் எதிர்காலத்துச் சைவ சந்ததிகளுக்கு மிகுந்த அவமானத்தை யும், சுலபத்தில் நீக்கிக்கொள்ளமுடியாத பல சங்கடங்களையும் தந்துவிடுகின்றன. தமக்குச் சைவசாஸ்திரப் பயிற்சியில்லை யென்றகவலை அவருக்கிராது. தெரிந்தவர்போல் நடிப்பாரவர். இலௌகிகப்பெருமிதமென்னும் பேய்அவரை ஆட்கொண்டது. அந்நிய சமயத்தாரைத் திருப்திசெய்யவேண்டும், அவருக்கு நல்லபிள்ளைகளாக வேண்டும், தாமும் சமய விற்பன்னரெனக் காட்டிக்கொள்ள வேண்டும், தம் அந்தஸ்தை நீட்டிக்கொள்ள வேண்டும் என்பனவாதி சிற்றெண்ணங்களில் அவர் நெஞ்சம் ஊறிக்கிடக்கிறது. அவர் செய்கிற துரோகங்களனைத்தையும் சைவசமூகம் தெரிந்துகொள்ளவேண்டும்.

சிவாகம நூலாராய்ச்சியே அவ்வாற்றலை உண்டாக்கும்.

வடமொழி தமக்கே சொந்தமெனப் பேசிவருகிற ஒரு சாரருளர். அவருள்ளும் பாஷ்யகாரரெனப் பலர் பிரசித்தி பெற்றிருக்கின்றனர். அத்வைதம் என்ற வடசொல் அவர் எல்லாரையுமே பதம்பார்த்துவிட்டது. அவரனைவரும் அந்தச் சொற்கு மெய்ப்பொருள் காணமாட்டாதவராயினர். பாஷ்ய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காரர். எனப்படுவாருள் அதன் மெய்ப்பொருளைச் சிவஞான முனிவரொருவரே கண்டனர். அவர் சைவத் தமிழ் வேளாள குலோத்தமர். அவர் திருவவதரித்த தவஞ்செய்சாதி, அவரிடமுள்ள வைதிக சைவசீலம், சிவபரம்பொருளின் திருவருள் விளக்கம், சித்தாந்த சைவ சற்குரு பரம்பரையில்வந்த நல்லாசானது உபதேசவழி நிற்றல்; அப்பரம்பரையின்பாற்கொண்ட நிலைகலங்காத விசுவாசம், தமிழ் மொழிகளில் நிகரற்ற அறிவாராய்ச்சி முதலிய நலன்களையெல்லாம் துணையாகக் கொண்டதனாலேயே அவரால் அம்மெய்ப்பொருளைக் காணமுடிந்தது. அவர் கண்டனர், சிவஞானபோத திராவிட மஹாபாஷ்யத்தில் எஃபோல்வார்க்குக் காட்டிச் சென்றனர். அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சித்தாந்த சைவச் செந்நெறியொழுகிச் சிவபெருமான் திருவருளின்பத்துக்குச் சைவத் தமிழராகிய நாமும் பாத்திரராவோமாக.

அத்வைதம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க

ஸ்ரீ சிவஞான சுவாமிகள் திருவடி வாழ்க

T. R. NATARAJA IYER MEMORIAL LIBRARY & PUBLICATIONS
Curators:
Kavingar Trilokasitaram &
T. N. Ramachandrra.
Date 15/1885
14-A SELVAM NAGAR,
THANJAVUR.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரி)

பாகம்-13



வெளியீடு
சிவாசார்யர் அறக்கட்டளை
207/101, தம்பு செட்டி தெரு, சென்னை-1